
பாலகுமாரன்
முல்லை
ரூ.10
குடும்ப நாவல்
கடவுள் வீடு

# முல்லை

புத்தம்புது மணம் வீசி 'முல்லை' மலரும்போதே
எழுத்துலக மேதை, தெய்வீக சிந்தனையாளர்
திரு.பாலகுமாரன் அவர்களின் படைப்பு
'கடவுள் வீடு' ஆக மலர்ந்திருப்பதே சந்தோஷமான விஷயம்தான்.
நாவல் என்றாலே நடுத்தர வயதினர் படிக்கும் பொழுதுபோக்கு
கைப்பிரதி என்ற போக்கை மாற்றி, நாவல் என்பது நவரசங்களும்
பொதிந்த பெட்டகமாக இருக்கவேண்டும், அதில் தலையான ரசம்,
பக்திரசம் என்னும் கருவெடுத்து இதிகாச தேன் குடுவையில்
மூழ்கடித்து, கனிந்த கனியான அனுபவத்தை கதையாக்கி
ஞானிகள் கொடுத்துச் சென்ற பொக்கிஷத்திலிருந்து
கதாபாத்திரங்களை தேர்ந்தெடுத்து,
'கடவுள் வீடு' என்னும் தலைப்பிட்டு
வாசகர்களான உங்களுக்கு படையலாக்கி மகிழ்ந்திருக்கின்றார்
திரு.பாலகுமாரன் அவர்கள்.
இந்தப் படையலில் பசிதீர பழரசமும் உண்டு, மகிழ்ந்து மயங்க
மதுரசமும் உண்டு, அறிந்து அரங்கேற ஞானரசமும் உண்டு.
'கடவுள் வீடு' நாவலைப் படிப்பதுடன் பத்திரப்படுத்தி வையுங்கள்.
மறக்காமல் விமர்சனங்களும் எழுதுங்கள்.
அடுத்த 'முல்லை'யில் ஆன்மீக அலைவரிசை,
அவதார எழுத்தாளர் நமது பாலகுமாரன் எழுதும்
'குங்குமத் தேர்' தீபாவளி நன்னாளில்
உங்கள் கரங்களில் இருக்கும்.

- ஆசிரியர்



## 1

அது அத்திமரத்தின்மீது சாய்ந்து தொலைதூர வானம் பார்த்த படி மிக சந்தோஷமாய் நின்றுகொண்டிருந்தது. அது என்றுதான் அவரைச் சொல்லமுடியும். உடம்பில் ஒரு சிறிய துணி கூட இல்லாமல் முதுகுவரை புரளும் சடாமுடியோடு வருடக்கணக்கில் உணவே சாப்பி டாத மெல்லிய உடம்போடு வயிறு உட்குழிந்து கிடக்க, விலா எலும்புகள் வரிவரியாய் தெரிய உருவிவிட்ட மூங்கில் போன்ற கை கால்களோடு ஜ்வலிக்கின்ற கண்களோடு தன் பெயர் மறந்து, தன் ஊர் மறந்து, தன் உறவுகள் மறந்து, பரப்பிரும்மமாய் அவர் இருந்தார்.

அவர் நிற்பதில் நிச்சயம் ஒரு சந்தோஷம் தெரிந்தது. மக்கள் நிறைந்த ஒரு சபையைப் பார்ப்பது போல அரசனின் அலட்சியத் தோடும்; பிரியத்தோடும் அவர் நீலவானத்தைப் பார்த்துக் கொண்டிருந் தார். யாராவது அவரைப் பார்ப்பது தெரிந்தால் சட்டென்று மறைந்து போனார். ஒளிந்துகொள்ளும் அளவுக்கு மெலிந்து இருந்தாலும் அவர் வேகமாக நடந்தார். சிலசமயம் காற்றுக்கு இணையாய் ஓடினார். ஓடும் போது அந்தக்காற்றையே உடம்பு முழுவதும் உள்வாங்கி உணவாக்கி னார். காற்றையே உணவாக்கி மனிதன் வாழமுடியும் என்பதை அவரும் நிரூபித்துக் காட்டினார்.

கிட்டத்தட்ட மூன்று மாதங்களாய் தேடித்தேடி அலுத்துப்போய் ஊர் திரும்பலாம் என்று முடிவு செய்தபோது தர்மபுத்திரனின் கண் களுக்கு ஒரு விடியற்காலை வேளையில், மெல்ல வெளிச்சம் பரவிய நேரத்தில் விதுரர் அவர் கண்களுக்குத் தென்பட்டார்.

தர்மபுத்திரருக்கு விதுரர் அருகே போக பயமாக இருந்தது. விதுரர் ஏதேனும் செய்துவிடுவாரோ என்கிற பயம் இல்லை. தான் இடைஞ்ச லாகி விடுவோமோ என்கிற பயம் இருந்தது.

தொலைவிலிருந்தபடியே கைகூப்பினார்.

"ஐயனே, என் சிற்றப்பனே, என் ஞானத்தந்தையே, என் பிழை பொருத்தருள வேண்டும். உம்மைப்பார்க்கவே முடியாதோ என்று பயந் திருந்தேன். அவ்வளவு பெரிய பாவியா என்று உள்ளுக்குள் கதறினேன். கதறிய மறுநாள் எனக்குக் காட்சி கொடுத்திருக்கிறீர். உமக்கு அருகே வந்து உம்முடைய தனிமையை, அந்தத் தனிமை தரும் ஆனந்தத்தை, நான் கலைக்கப் போகிறேன். என் சுயநலத்திற்காக உங்கள் அருகே வந்து உங்களை நமஸ்கரிக்கப்போகிறேன். என்னை எனக்கு உணர்த்தும் படி வேண்டப்போகிறேன்.

என்னை ஞானி என்று ஊர் கொண்டாடுகிறது. பலம்மிக்க என்

தம்பிகள் போற்றுகிறார்கள். அண்டைதேசத்து அரசர்கள் புகழ்கிறார்கள். ஆனாலும் நான் ஞானி அல்ல. என் குறைகள் எனக்குத் தெரிகின்றன. உறவுகள் மீது வைத்துள்ள பற்றை விடமுடியாது ஊசலாடிக் கொண்டிருக்கிறேன். தனித்துப் போய் தவம் செய்ய முடியாத தரித்திரனாய் இருக்கிறேன். வைராக்கியம் இல்லை. விவேகம் மிகக்குறைவு. அரச போகம் பழக்கப்பட்டு அதிகாரமே மனதுக்குள் பொங்கிப் பொங்கி வருகிறது.

"விதுரரே, இவை எல்லாவற்றையும் ஒரே வீச்சில் உன்னால் எப்படி துடைக்க முடிந்தது. மகாபுருஷனே, அப்போது இல்லாத ஆனந்தத்தை இப்போது எப்படி பிடித்தீர். இது என்ன சூட்சுமம். யார் உதவி. எது மந்திரம்? குருநாதா, எனக்கு உபதேசிக்கக்கூடாதா?

"உங்களைப் பார்க்கிறபொழுதெல்லாம் உங்களைப் போல நான் இருக்கவேண்டும் என்கிற ஆசை வருகிறதே, இது ஏன் நீங்களே என் ஆதர்சம் என்று தோன்றுகிறதே, இது ஏன். மற்றவர்களைப் பார்ப்பதை விட கூடுதல் கனிவோடு நீங்கள் என்னைப் பார்ப்பதை நான் அறிவேன். பாண்டவர் மீது உங்களுக்குண்டான தனித்த பிரியத்தை நாங்கள் பல முறை அனுபவித்திருக்கிறேன். அப்படி அனுபவித்த உரிமையில் கேட்கிறேன். எனக்கு என்னைக் காட்டக்கூடாதா. எது அது என்று விளக்கக் கூடாதா?"

தர்மபுத்திரர் கூப்பிய கைகளோடு தபஸ்வியைப் போல் இருந்த விதுரரின் அருகில் போனார். விதுரர் பேசுவதை நன்கு மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்தோடு போனார். அருகே போய் நெடுஞ்சாண்கிடையாய் நமஸ்கரித்தார்.

விதுரர் வாய்க்குள் ஒரு பாறைக்கல் அழுத்தமாய் அடைபட்டுக் கிடந்தது. அந்த வாயைச் சிறிதுகூட அசைக்க முடியாது, ஒரு சொல் கூட அந்த வாயிலிருந்து வராது.

தர்மபுத்திரர் திகைத்தார். இது என்ன கொடுமை என்று மிரண்டார்.

விதுரரின் தொண்டை அடியிலிருந்து ஒரு சப்தம் வந்தது. காடு முழுதும் அது எதிரொலித்தது. ஒரு சிங்கத்தின் கர்ஜனை போல அந்த சப்தம் இருந்தது. அவர் வருகைக்கு எதிர்ப்பு இல்லை. மாறாய் வரவேற்பிருந்தது.

தர்மபுத்திரர் நிம்மதியானார்.

அருகே போக அனல் அடித்தது. தீப்பற்றி எரிகின்ற காட்டுக்கு நடுவே போவது போன்று மேனியெங்கும் தர்மபுத்திரருக்கு ஒரு வேதனை ஏற்பட்டது. ரிஷிகளுக்கும் யோகிகளுக்கும் அருகே போகும்போது அவர்களுடைய சக்தியைத் தாங்குகின்ற வலிவுபெற்றவர் மட்டுமே அருகே போகமுடியும் என்பதை தருமபுத்திரர் அறிந்திருந்தார்.

உடம்பில் ஏற்பட்ட மாற்றங்களை மௌனமாக தாங்கினார். பணிவாக ஏற்றார். இன்னும் அருகே நடந்து போய் அவருக்கு முன்பு நெடுஞ்சாண்கிடையாக விழுந்தார். நான் செய்வது என்ன என்று எனக்குத் தெரியவில்லை. உன்னுடைய தவத்தைக் கலைக்கிறேனோ உனக்கு



உபத்திரவமாக இருக்கிறேனோ என்று தெரியவில்லை. என் பேராசையின் காரணமாய் என் சுயநலத்தின் காரணமாய் நான் இங்கே உன்னை தொந்தரவு செய்ய வந்திருக்கிறேன். நான் செய்யும் இந்த உபத்திரவத்தை தயவுசெய்து மன்னித்து விடு.

கண்கள் குருடானவன் சூடான கம்பி கிடைத்தாலும் அதைப் பற்றிக் கொண்டு எப்படி நடப்பானோ, எறும்புகள் இருக்கும் மூங்கிலைக் கடித்தாலும் எப்படி விடாது இருப்பானோ அதுபோல இந்தத் தவச் சூட்டைப் பொறுத்துக்கொண்டு வேறு வழியில்லாமல் உங்கள் முன்பு நிற்கிறேன். என்னை அறியும் ஆசையால் உங்கள் முன்பு கைகூப்பி நிற்கிறேன்.

என் பிழைகளை மன்னித்து என்னை ஆசீர்வதிக்க வேண்டும். எனக்கு வழிகாட்ட வேண்டும் என்று கீழே விழுந்தபடியே மனதுக்குள் பேசினார். எழுந்து நின்றார்.

அது மௌனமாய் அவரையே பார்த்தபடி இருந்தது. மெல்லிய தாய் ஒரு சப்தம் வாயில் வைத்துள்ள கூழாங்கல் இடுக்கிலிருந்து வந்தது. அந்த கண்கள் இப்பொழுது தருமபுத்திரரையே ஊடுருவிப் பார்த்தது.

தருமபுத்திரர் கண்களைத் தாழ்த்திக் கொண்டார். தலையைக் குனிந்து கொண்டார்.

"நீதிமானே, ஞானவானே, என்னைத் துரத்தாமல் ஆதுரத்துடன் நீ பார்க்கிறாயே இதுவே எனக்கு போதுமானது. இது ஆயிரம் ஆசிர்வாதங்களுக்கு சமம். நூறு பொன்மொழிகளுக்கு இணை. ஆயினும் இன்னும் நெருங்கிவந்து உங்களிடம் பாடம் கேட்க விரும்புகிறேன்" மனதில் நினைத்தபடி மறுபடி கைகூப்பினார்.

மறுபடியும் எதிரிலிருந்த உருவத்தின் தொண்டையிலிருந்து ஒரு வினோத சப்தம் எழுந்தது. அதில் வரவேற்பு போல் ஒரு த்வனி இருந்தது. அந்த உருவத்துக்கு சொந்தக்காரரான விதுரர் புல்வெளியில் மெல்ல நடக்கத் துவங்கினார்.

தருமபுத்திரர் பின்தொடர்ந்தார்.

காற்று சுழன்று அடித்தது. மலைப்பாங்கான அந்த இடத்தில் மிக மூர்க்கத்துடன் எவரையும் மலையேறவிடாது தடுக்கின்ற வேகத்துடன் சீறிப்பாய்ந்து தாக்கியது.

விதுரர் எந்த சிரமமும் இல்லாது மலையேறி ஒரு உச்சிக்கு வந்தார், தருமபுத்திரர் மிகுந்த வலிவோடு அவரைப்பின் தொடர்ந்து சற்று இடைவெளிவிட்டு கைகட்டி நின்றுகொண்டார்.

சட்டென்று விதுரர். திரும்பினார். என்ன வேண்டும் என்பது போல் பார்த்தார்.

'என்னை அறியும் ஞானம் வேண்டும். நான் என் மனதை அறிந்திருக்கிறேன். என் புத்தியை அறிந்திருக்கிறேன். என் உடம்பு பற்றிய சூட்சுமங்களை அறிந்திருக்கிறேன். வாழ்க்கை பற்றிய தத்துவங்களை அறிந்திருக்கிறேன். ஆனால் இதையெல்லாம் அறிந்த நான் யார் என்று எனக்குத் தெரியவில்லை. என்னைக் கற்றுக்கொள்ள தூண்டுவது எது என்று தெரியவில்லை. எது என் புத்தியையும் மனதையும் இயக்குகிறது

என்று தெரியவில்லை. ஏதோ இருக்கிறது என்று தெரிகிறதே தவிர அதை என்னால் உணரமுடியவில்லை. உள்ளிருந்து வெளிக்கொண்டு வர முடியவில்லை. என் புத்தி, என் மனம், என் உடம்பு எல்லாம் அழிந்துவிடப்போகிறது. அதுமட்டுமே எஞ்சப் போகிறது. எஞ்சுவதை இப்போது தெரிந்துகொள்ளாமல் வேறு எப்போது நான் தெரிந்து கொள்வது. அதனுடைய சுயரூபத்தை என் உடம்பால், புத்தியால் மனதால் ஸ்பரிசிக்க விரும்புகிறேன். எனவே என்னால் முடியாத, நான் தேடி கிடைக்காத இந்த விஷயத்தை உங்களிடமிருந்து பிச்சை பெற வந்திருக்கிறேன்' என்று கைகூப்பி பேசினார்.

விதுரர் வியப்போடு அவரையே பார்த்துக்கொண்டிருந்தார்.

மறுபடி தொண்டையிலிருந்து சப்தம் வந்தது. இது கற்றுக் கொடுத்து வருவதல்லவே என்பதுபோல் அந்த சப்தம் இருப்பதாக ஒரு எண்ணம் தருமபுத்திரருக்கு தோன்றியது.

எனக்குத் தெரியாது சித்தப்பா. இது கற்றுக்கொடுத்து வருவதா அல்லது வேறு ஏதேனும் ஒருவகையில் வருவதா என்பது எனக்குப் புரியவில்லை. ஆனால் இது என்ன என்று தெரிந்துகொள்ளும் ஆவல் மட்டும் வெகுவேகமாக இருக்கிறது.

இது என்னவென்று தெரியாமல் உயிரோடு இருந்து புண்ணியமில்லை என்று தெளிவாகப் புரிகிறது. இது அறிந்துகொள்ளத்தான் எல்லா படிப்பும் எல்லா அறிவும் எல்லா வித்தையும் என்று தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. ஆடலும், பாடலும், கூத்தும், கவிதையும் தத்துவமும், யாகமும், ஹோமும் நான் யார், என் உண்மையான வடிவு என்ன என்று தெரிந்து கொள்ளத்தான் இருக்கிறதே தவிர வேறு எதற்காகவும் இல்லை. இங்கு வாழ்க்கை என்றும், திருமணம் என்றும், குழந்தை பெறல் என்றும், ம[illegible]ணம் என்றும் பல்வேறு விஷயங்கள் நம்மைத் தாக்குகின்றதே, இதை படிப்பிப்பதற்காகவே தவிர வேறு எதற்காகவும் இல்லை என்பது புரிகிறது.

இது பயிற்சியின் மூலமும் பெறுவதல்ல. ஆன்மாவை அறிவது வித்தையல்ல. அது ஒரு நிகழ்ச்சி. இது ஏன் ஏற்படுகிறது என்கிற சூட்சுமம் யாருக்கும் சொல்லப்பட்டதில்லை. நீ சொல்வதுபோல ஹோமமும், யாகமும், நல்லொழுக்கமும், புலனடக்கமும், தானமும், தயையும், நீதியும் உள்ள மனிதர்களிடம் ஆத்மஞானம் தோன்றுகிறது. தானாகவே தோன்றுகிறது எந்தக் காரணமுமின்றி.

கண் இரைப்பைகள் மூடிக்கொண்டிருந்த நாய்க்குட்டி ஏதோ ஒரு கணத்தில் கண் இரைப்பைகள் பிரிந்து, கண்சுருக்கி உலகத்தைப் பார்ப்பதுபோல மனம் பற்றிய எண்ணங்கள் மறைந்து உண்மையான காட்சி தோன்ற ஆரம்பித்து விடுகிறது.

தர்மபுத்திரருக்கு வாழ்வின் ரகசியம் சொல்லாமல் சொல்லித் தரப்பட்டது.

வாழ்க்கையின் எல்லா வசதிகளையும் அரண்மனையில் உட்கார்ந்து அனுபவித்த நீங்கள் இந்த கானகத்தில் எதுவுமற்று இப்படி இருப்பதற்கு எவ்விதம் இயலுகிறது. நான் எப்போது ஊர்திரும்புவோம், எப்போதும் அரண்மனைக்குள் நுழைவோம் என்று தவித்துக் கொண்



டிருக்கிறேன்.

தர்மபுத்திரர், வசதிகள் தான் வாழ்க்கை என்று நினைப்பவன் முட்டாள். வசதிகளை புலன்கள் அனுபவிக்கவில்லை. மனம் அனுபவிக்கிறது. புலன்களின் மூலம் மனம் அனுபவிக்கிறது. மனம் எல்லா விஷயத்தையும் அனுபவிக்க பழகிக்கொண்டால், என்ன கிடைக்கிறதோ அதை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ள தெரிந்துகொண்டால் வேண்டுவது, வேண்டாதது என்பது விலகி விடுகிறது. அரண்மனையை எப்படி அனுபவித்தேனோ அப்படியே இந்த கானகத்தையும் அனுபவிக்கிறேன். அரண்மனையையும், கானகத்தையும் நான் ஒப்பிட்டுப் பார்க்கவில்லை. அரண்மனையின் வசதி, கானகத்தின் வசதியின்மை கானகத்தின் சௌந்தர்யம் அரண்மனையின் இருட்டு என்று நான் எடைபோட்டுப் பார்ப்பதில்லை. என்ன எதிரே இருக்கிறதோ அதோடு நான் ஒன்றிவிடுகிறேன்.

எதிரே இருப்பதை மனம் ஊடுருவி பார்க்கத் துவங்கியதும் புலன்கள் அதை அனுபவிக்கத் துவங்கி விடுகின்றன. புலன்களுக்கு விருப்பு வெறுப்பு இல்லை. மனதுக்கு விருப்பு வெறுப்பு இருக்கிறது. விருப்பு வெறுப்பு இல்லாது எதிரே இருக்கிற விஷயத்தில் மனதை லயிக்கப் பழகிவிட்டால் அது எதையும் அனுபவிக்கத் துவங்கிவிடுகிறது.

மனம் கட்டளையிட்டால் புலன்கள் எதையும் அனுபவிக்கும். தீயின் வழவழப்பை உணர்ந்திருக்கிறாயா. நான் பலமுறை தீயைத் தழுவி உணர்ந்திருக்கிறேன். தீ என்னை எதுவும் செய்ததேயில்லை.

மழை சாட்டையாய் சொடுக்குவதை ரசித்திருக்கிறாயா? மழையின் வேகத்தை மனம் லயித்துப் பார்க்கத் தெரிந்துவிட்டால் உடம்பு ஒவ்வொரு அடியையும் அழகாக வாங்கிக்கொள்ளும். அடேயப்பா – என்ன சுகமாக அடிக்கிறது மழை என்றுதான் சொல்லத்தோன்றும்.

மரத்தோடு மரம் உராய்வதும் இசை. காய்ந்த விதைகள் வெடிப்பதும் இசை. பறவைகள் கூச்சலும் இசை. மனம் ஓசையில் லயிக்கத் துவங்கிவிட்டால் சகலமும் இசை. மனதை எதிரே உள்ள விஷயத்தோடு பிரிவுபடாமல் ஒன்றாய் பார்ப்பதற்குக் கற்றுக்கொள்.

ஒரு உதாரணம் சொல்லட்டுமா, தர்மபுத்திரா. மனம் எப்படிப் பார்க்கவேண்டும் என்பதை உனக்குக் கற்றுத்தரட்டுமா. ஒரு கொக்கு மேலே பறந்துகொண்டிருக்கிறது. நீ பார்க்கிறாய். நீலவானம். வெள்ளை வெளேரென்ற ஒரு கொக்கு. அழகாக மேகம் போல மிதப்பாய் பறந்து போய்க் கொண்டிருக்கிறது. கீழே ஒரு கொக்கு வேகமாகத் திரும்புகிறது. தண்ணீரில் ஏதோ பார்த்துவிட்ட ஒரு கூர்மையோடு ஒரு குறிப்பிட்ட இலக்கு நோக்கி அது போகிறது.

அது போகின்ற அழகும் உன்னைக் கவர்கிறது. இதுவரை பறந்து கொண்டிருந்த கொக்கு திசைமாறி ஒரு அம்புபோல தன் உடம்பைக் குறுக்கிக்கொண்டு ஒரு இலக்கு நோக்கி போகின்ற விஷயத்தை வியப்போடு பார்க்கிறாய்.

சட்டென்று நீரின் மேற்பரப்பில் வந்த ஒரு மீனை கொக்கு கௌவிக் கொள்கிறது. கொக்கின் அலகில் மீன் படுகிறது. மீனை தூக்கிக் கொள்கிறது. வானை நோக்கி பறக்கிறது. இறக்கைகளை அடித்து அடித்து சேர்த்து அசைத்து அசைத்து கனத்தோடு மேலே [illegible] வாய

நிறைய மீன். துடிதுடிக்கிற மீன். சூடான, இளம்சூடான இரத்தத்தோடு அற்புதமான உணவு துடித்துக் கொண்டிருக்கிறது.

கொக்கு ஒரு மலைப்பாறையில் அமர்கிறது. மீனின் கழுத்தில் நச்சென்று குத்தி அதன் துடிப்பை நிறுத்துகிறது. மெல்ல சதையைப் பிய்த்து அதனுடைய கொழுத்த பாகங்களை அமைதியாக சுவைத்து சுவைத்து ஒவ்வொரு துண்டமாக விழுங்கி தொண்டை வழியே அந்த மாமிசம் இறங்கி வயிறு அடைபட பசி குறைய மறுபடி ஜிவ்வென்று பறக்கிறது.

கொக்கைப் பார்த்தாய் அல்லவா. மீனையும் பார். மீன் தண்ணீர் குளிர்ந்த நீருக்குள் போய்க்கொண்டு ஒருமுறை குளிர்ந்த காற்றை உள் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று வெளியே வந்து நிற்கிறது. கண நேரத்தில் எதிரே கொக்கு, சட்டென்று கொக்கினுடைய அலகுக்குள் மீன், துடிக்க ஆரம்பிக்கிறது. முறுக்குகிறது, உதறுகிறது, ஆடுகிறது, அதறி அதறி வெளியே வந்துவிட வேண்டுமென்று தவிக்கிறது. ஆனால் அதிர அதிர கொக்கின் பிடி இறுகுகிறதே தவிர வேறு வழியில்லை என்று துவண்டு ஏக்கத்தோடு கீழே இருக்கின்ற ஏரியை பார்க்கிறது. இனி இந்த ஏரிக்கு திரும்பமாட்டோம் என்று மீனுக்குத் தெரிந்துவிடுகிறது. பாறையில் போடப்படும்போது கடைசி மூச்சு, கடைசி துள்ளல். நச் சென்று நெற்றியில் ஒரு உலக்கை அடி. மீன் இறந்து போகிறது.

இதைப் பார்க்கின்ற உன் மூன்றாவது பார்வை. அழகாக இருந்த கொக்கு உயிர்ப்பலி கொள்கின்ற விஷயமாக மாறுகிறது. இப்பொழுது கொக்கு செய்தது கொலையா...அல்லது உணவா. கொலையென்று பார்ப்பது ஒருவித பார்வை. உணவென்று பார்ப்பதும் ஒருவித பார்வை. கொக்கின் வழியே பார்ப்பது ஒரு பார்வை. மீனின் வழியே பார்ப்பது ஒரு பார்வை. இவையெல்லாம் தாண்டி வெறும் சாட்சியாய் கொலையென்றும் சொல்லாது, உணவென்றும் சொல்லாது, அழகென்றும் சொல்லாது மரணமென்றும் சொல்லாது வாழ்வென்றும் சொல்லாது வெறுமே ஒரு நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற சாட்சியாய் இருக்க உன்னால் முடியுமா. உன் மனதை சாட்சியாக இருப்பதற்குப் பழக்கு. சாட்சியாக இருப்பதற்கு பழகுவதற்கு முன் உன் மனம் எப்படியெல்லாம் ஒரு விஷயததைப் பார்க்கிறது என்றும் யோசித்துப்பார். உன்னை உற்றுப் பார்க்கும்போது, உன் மனம் எத்தனை விதங்களாக ஒரு விஷயத்தைப் பார்க்கிறது என்பதை ஒரு சாட்சியாக இருந்து நீ பார்ப்பது ஒரு கண நேரத்தில் உனக்குத் தெரிந்து போகும். சாட்சியாக இருக்கப் பழகி விட்டால் வாழ்க்கை எளிது தர்மபுத்திரா.

தர்மபுத்திரர் திகைத்துப் போனார்.

“தர்மபுத்திரா, நான் கொக்காகவும் இல்லாமல், மீனாகவும் இல்லாமல், விருப்பேதும் இல்லாமல் வெறுப்போடும் இல்லாமல் வெறுமே அரண்மனையில் சாட்சியாக இருந்தேன். இங்கும் அவ்விதமே இருக்கிறேன். எங்கும் சாட்சியாக நீ இருக்க சந்தோஷமாய் இருப்பாய். உனக்கும் இந்தப்பார்வை வரட்டும் தர்மபுத்திரா” என்று விதுரர் ஆதரவாக மனக்குரலில் பேசினார்.

“சாட்சியாக இருப்பதுதான் உத்தமமென்றும் சாட்சியாக இருப்ப



தற்கான உத்திகள் யாவையும் நீங்கள் உங்கள் மனதுக்குள் சொல்ல நான் புரிந்துகொண்டேன்.

உங்கள் சன்னதியில் வாய்திறந்து பேசக்கூட வேண்டிய அவசியமில்லாததை உணர்ந்துகொண்டேன். நீங்கள் சாட்சியாக இருப்பதினால் என் மனதுக்குள்ளும் சாட்சியாக இருப்பது பற்றி ஒரு தெளிவு ஏறபட்டு விட்டது. ஆனாலும் சித்தப்பா, முழுமையாய் அதுபற்றி தெரியவில்லை.

ஹஸ்தினாபுரம் எங்கே இருக்கிறது என்பது தெரிந்தால்தானே ஹஸ்தினாபுரத்தை எப்படி அடைவது என்று யோசிக்க முடியும். ஹஸ்தினாபுரம் இந்த திசையில் இருக்கிறது என்று தெரிந்தால்தானே அந்த திசைநோக்கி பயணப்பட முடியும். சாட்சியாக இருப்பது என்றால் என்ன. அந்த மனோநிலை எவ்விதம் இருக்குமென்று தெரிந்தால்தானே நான் சாட்சியாக இருக்கிறேனா இல்லையா என்று என்னால் புரிந்து கொள்ள முடியும். சாட்சியாக இருக்கின்ற மனோநிலை எவ்விதம் இருக்கும். அந்தப் பார்வை எப்படி பிரகாசிக்கும். அந்த மனத்தன்மை என்ன விதமாக இருக்கும். அப்பொழுது என் இயல்பு என்ன என்று நான் எப்படி தெரிந்து கொள்வது, எதை வைத்துப் புரிந்துகொள்வது. தெரியவில்லையே சித்தப்பா.

தர்மபுத்திரர் மிகப் பணிவாகக் கேட்டார்.


விதுரர்தான் இருந்த இடத்தைவிட்டு மெல்ல நகர்ந்தார். தர்மபுத்திரரை நோக்கி ஒரு மெல்லிய பூச்செடியைப் போல் நடந்துவந்தார். தோளில் கை வைத்தார். உற்று கண்களைப் பார்த்தார். மெல்ல தலையைத் தடவினார். பிடரியை வருடினரார். இன்னும் நெருங்கி மறு தோளிலும் கை வைத்தார். சற்று நகர்ந்து கன்னத்தோடு கன்னம் வைத்தார். தர்மபுத்திரரை ஆரத்தழுவிக் கொண்டார். இறுக்கிக் கொண்டார். இன்னும் இறுக்கி தன்னை மறந்த நிலையில் தர்மபுத்திரரை அணைத்துக் கொண்டார்.

தான் அணைக்கப்படுகிறோம். தான் விதுரரால் அணைக்கப்படுகிறோம் என்று நினைக்கும்போதே விதுரர் தன்னை அணைப்பது பற்றியும் தர்மபுத்திரர் உற்றுப்பார்த்தார். விதுரராக அணைத்துக்கொண்டார். தர்மபுத்திரராக அணைப்பை ஏற்றார். இரண்டுமாக இருந்து தள்ளி நின்று, இரண்டுக்கு அப்பாலும் தள்ளி நின்று பார்த்தார். இரண்டும் ஒன்றே. ஒன்றை ஒன்று தழுவிக்கொள்கிறது என்று தெரிந்தார்.

விதுரருக்குள் இருந்த அதிர்வுகள் அத்தனையும் தர்மபுத்திரருக்குள் பரவின. தர்மபுத்திரர் தழுவியவரை மறந்து போனார். தன்னை மறந்து போனார். தழுவலின் சுகம் மட்டுமே அங்கு இருந்தது. தாகம் எடுத்த ஒருவன் நீர்ச்சுனையைப் பார்த்ததும் விரைவாகப் போய் உள்ளங்கை நிறைய தண்ணீர் எடுத்து அது யாருடைய குளம் என்று சிறிதும் யோசிக்காமல், யார் தடுத்தும் கேளாமல் மொத்த தண்ணீரையும் உதடு வைத்து உறிஞ்சி, உள்ளுக்குள் இழுத்து உள்ளுக்குள் முழுவதும் தண்ணீர் பரவ ஹா என்று நிற்பானே....அப்போது தண்ணீரோ தானோ தெரியாமல் தாகம் தீர்ந்த நிலை மட்டுமே தெளிவாக இருக்குமே அதுபோல உணர்வு நிலை மட்டுமே உயர இருக்க, உணர்வை அனுபவிக்கிற விஷயங்கள் மறந்துபோயின. உணர்வு மட்டுமே முழுமையாய் அங்கு நின்றது.

தர்மபுத்திரருக்கு சாட்சியாய் இருத்தல் என்றால் என்ன என்பது தெளிவாய் புரிந்தது. அவர் நிமிர விதுரர் சுருண்டு கீழே விழுந்தார். விதுரருடைய உடம்பில் உயிர் இல்லை. விதுரர் உடம்பு மட்டும் கீழே கிடந்தது. தருமபுத்திரன் உள்ளே, தருமபுத்திரன் உடம்பு முழுவதும் விதுரருடைய சக்தி பரவியது. நான் வேறு நீ வேறு அல்ல. நானே நீர். நீரே நான் என்பதை விதுரர் மிக எளிதாய் தருமபுத்திரனுக்கு நிரூபித்துக் காட்டினார். நிரூபித்த வேகத்தில் தன் உடலை விட்டு தர்மபுத்திரருக்குள் புகுந்து தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டார்.

தருமபுத்திரருக்குத் தன் பெயர் மறந்துபோயிற்று. விதுரன் என்ற நினைப்பே நின்றது. தன்னை மறந்து விதுரன் என்ற அந்த கிழவரை உணரத்துவங்கினார். அந்த மனிதரின் பிறப்பிலிருந்து இறப்பு வரை பல் வேறு விஷயங்கள் தரும்புத்திரருக்கு மிகமிகத் தெளிவாய் மனசுக்குள் தெரிந்தன.




அந்த அரசனுடைய அரண்மனையில் இரவோடு இரவாக இருபது ஆட்கள் உள்ளே புகுந்து குதிரை லாயத்தை உடைத்து திறந்து சேணமில்லா குதிரைகளுக்கு சேணம் கட்டி சப்தமில்லாமல் அதை வெளியே திருடிக்கொண்டு போவதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் பண்டகசாலையை உடைத்து நெல் மூட்டைகளை சிறிய தேரில் கட்டி குதிரையைப் பூட்டத் துவங்கியிருந்தார்கள். இன்னும் மூன்று பேர் அரசனுடைய ஆயுதங்களைக் களவாடிக் கட்டுக் கட்டாய் குதிரையின் குறுக்கே சுமையாக ஏற்றிக்கொண்டிருந்தார்கள். மெல்ல இருட்டில் பதுங்கிப் பதுங்கிக் குதிரைகளை நடத்தி அரண்மனை வாசலுக்கு வந்தார்கள்.

குதிரைகள் புதிய ஆட்களைப் பார்த்து திமிறின. பலமுறை குரல் கொடுத்தன. இரவில் எது அசைந்தாலும் குதிரைகள் குரல் கொடுக்கும் வழக்கம் என்பதால் காவலர்கள் உறங்கிக்கொண்டே குதிரைகளுக்கு பதில் குரல் கொடுத்தார்கள். மூன்று நான்கு குதிரைகள் அரண்மனை வாயிலைத் தாண்டின.

விடிந்துவிட்டதா என்று வாயிற்காவலன் கேட்க இல்லை, இன்னும் சிறிது நேரம் இருக்கிறது. நீ தூங்கு, நான் பார்த்துக்கொள்கிறேன் என்று திருடன் சொன்னான்.

இந்த வார்த்தையைக் கேட்பதற்கு காத்துக் கொண்டிருந்தது போல வாயிற்காப்போன் சௌகரியமாய் சாய்ந்துகொண்டு வாய் திறந்து தூங்கத் துவங்கினான்.



எல்லா குதிரைகளும் தாண்டியபிறகு கடைசி குதிரை தாண்டும்போது முரண்டுபிடித்து தூங்கிக் கொண்டிருந்த வாயிற்காப்போனை இடித்தது.

காவலன் சரிந்து விழுந்தான். முழங்கை கல்லில் பட்டு கடுமையாய் வலி ஏற்பட்டது. விழித்துக்கொண்டான். யார் தள்ளியது என்று சிறறத்துடன் பார்த்தான். கதவு அகல திறக்கப்பட்டிருப்பதும் குதிரைகள் வெளியே போய்க் கொண்டிருப்பதும் கண்டு திடுக்கிட்டான்.

யாரது...யாரது என்று தீப்பந்தத்தைப் பெரிதாக்கினான். மற்ற தீப் பந்தங்களைக் கொளுத்தினான். உறங்கிக் கொண்டிருந்த மற்ற காவலர்கள் திடுக்கிட்டு துள்ளி எழுந்தார்கள்.

யார் யார் என்று கத்தலாய் கேட்டார்கள். அதற்குள் திருடர்கள் குதிரை ஏறினார்கள். தேர்களில் அமர்ந்து கொண்டார்கள். விரைவாக அரண்மனை விட்டு வெளியே கிராமத்துக்குள் புகுந்து கிராமங்களை விட்டு வெளியேறி வயல்வெளிகளுக்குத் தாண்டி வயல்வெளிகளிலிருந்து காடுகள் நோக்கி வெகுவேகமாகப் போனார்கள். வீரர்களுக்குப் பின் தொடர்வதற்கு சற்று நேரமாகி விட்டது.

காட்டின் அடர்த்தியான பகுதிக்குப்போன பின் அவர்கள் சட்டென்று நின்றார்கள். 'இனி ஒரே குழுவாக போவது உத்தமமல்ல. திருட்டு நல்ல முறையில் நடந்துவிட்டது. இனி பங்கிட்டுக்கொண்டு பிரிந்து போவதுதான் நல்லது' என்று உரத்துச் சொன்னார்கள். திருடிய எல்லாவற்றையும் நடுவே வைத்தார்கள். மடமடவென்று பங்கிட்டுக் கொண்டார்கள். அவரவர்க்கு உரிய குதிரையை தேடிப்பிடித்து 'இது எனக்கு, இது உனக்கு' என்று உரத்த குரலிலே சண்டையிட்டுக் கொண்டார்கள்.

குதிரைகள் குரல் பழக்கமின்மையாலும், அவர்களின் உரத்த சண்டையாலும் மிரண்டன. அதில் ஒரு குதிரை தன் இணையை விட்டு வந்திருந்தது. அது திரும்பி மறுபடியும் வயல்வெளி தாண்டி அரண்மனைக்குப் போக தேரோடு திரும்பி நின்றது.

அந்தக் குதிரையை திருடர் தலைவன் தனக்கு வேண்டுமென்று ஒதுக்கி வைத்திருந்தான். பிடிக்கும் தன் மகனுக்கு இந்த குதிரை என்று நினைத்துக் கொண்டான். இரவு நேரத்தில் அதை சரியாக கவனிக்காமல் தன் பங்காக அதை மாற்றிக்கொண்டிருந்தான். கீழே குவிக்கப்பட்ட நெல் மூட்டைகளும், ஆயுதங்களையும் எடுத்து சிறுதேரில் வைத்து அதில் அந்த குதிரையை பிணைத்திருந்தான். குதிரை இடைவிடாது நகர்ந்து தேரையும் அசைத்துக் கொண்டிருந்தது. கோபமடைந்த அவன் குதிரையின் முகத்தில் சவுக்கால் வேகமாக அடித்தான். குதிரை பயந்து, மிரண்டு மரத்தோடு மரமாய் ஒட்டிக்கொண்டது.

அவனுடைய ஆட்கள் அவனிடமிருந்து விடைபெற்று போனதும் அவன் தேரில் ஏறினான். குதிரையைச் சொடுக்கி திரும்பினான். குதிரை திரும்பவில்லை. பலமாக அடித்தான். குதிரை எகிறி வண்டியைக் கவிழ்த்தது.

மறுபடியும் வண்டியைப் பூட்டி, சாமான்களை ஏற்றி குதிரையைத்

தடவிக் கொடுத்தான். அதன் இஷ்டப்படி சற்றுநேரம் போகவிடலாம் என்று தீர்மானித்து தேரில் ஏறிக்கொண்டு மெல்ல காட்டிலிருந்து வெளியே வந்தான்.

வயல்வெளியை நோக்கி குதிரை நகர்ந்தது. சற்று போகட்டும் என்று தீர்மானித்தான். எதிரே படைவீரர்கள் தீப்பந்தங்களோடு வருவது தெரிந்தது. முழுபலத்தோடு குதிரையைத் திருப்ப முயன்றான். குதிரை திரும்பவில்லை. கண்மூடித்தனமாக குதிரையை அடித்தான். குதிரை பயந்து திரும்பியது. காட்டுக்குள் ஓடாது, குறுக்கே சேற்றில் இறங்கி தடதடவென்று பச்சைப்பயிர்களை அழித்துக்கொண்டு ஓடியது.

இருட்டின் பின்புலத்தில் ஒரு சிறு தேர், குதிரை பூட்டிய தேர் ஓடுவதைக் காவலர்கள் பார்த்து விட்டார்கள். அப்படியே அந்தக் குதிரையை நோக்கி வேகமாகத் திரும்பினார்கள். குதிரை மேடு, பள்ளங்கள் தாண்டி ஓடியது. மறுபடியும் ஒரு காட்டினுடைய வேறொரு பகுதியில் நுழைந்தது. வேகமாக தேரை இழுத்துக்கொண்டு முன்னேறியது.

ஒரு மண் மேடைமீது உட்கார்ந்திருந்த மாண்டவ்யர் என்கிற முனிவர் ஏதோ சத்தம் கேட்டு கண்விழித்தார். என்ன என்று நின்று பார்த்தார்.

புதருக்குப் பின்னாலிருந்து ஒரு குதிரை தாவி ஓடி அவரை இழுத்துத் தள்ளி, மண் மேடை மீது மோதி, சக்கரங்கள் உடைய குடை சாய்ந்தது. வண்டியிலிருந்த ஒரு முரட்டு ஆள் மரத்தின் மீது நச்சென்று மார்புமோதி தரையில் விழுந்தான். எழுந்து ஓட முற்பட்டான். ஓட முடியவில்லை. அடி பலமாக இருந்ததால் மயக்கமாகி கீழே விழுந்தான்.

மாண்டவ்யர் அவனுக்கு அருகே போனார். அவனைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டார். கையிலிருந்த ஜலத்தால் அவன் முகத்தை துடைத்தார்.

காவலர்கள் மாண்டவ்யரை சூழ்ந்து கொண்டார்கள்.

'தூங்கிக் கொண்டிருக்கவா கூலி வாங்குகிறீர்கள்? சோம்பேறி நாய்களே' அரசன் எழுந்து வந்து முகத்தில் அடிப்பான் என்ற பயம் அவர்கள் எல்லோருக்கும் இருந்தது. வாட்களை உருவி படுத்துக் கிடந்த வரையும், படுத்துக் கிடந்தவரை மடியில் போட்டுக் கொண்டிருந்தவரையும் சூழ்ந்து கொண்டார்கள். வேகமாய் நெருங்கி கட்டித் தூக்கினார்கள். திருட்டுப் போன குதிரையைக் கைப்பற்றினார்கள். உடைந்த தேரை தோளில் தூக்கிக் கொண்டார்கள். திருடப்பட்ட சாமான்களை வாரிக் கொண்டார்கள். மற்றவர்களைத் தேடினார்கள். அரசன் கேட்டால் ஒருவருக்கு இருவராக கைது செய்து விட்டோம் என்று சொல்லலாம் என்று அவர்களை கொட்டடியில் அடைத்து வைத்தார்கள்.

மாண்டவ்யர் எதுவும் சொல்லாமல் அமைதியாக இருந்தார். ஏதும் கேட்டால் சொல்லிக்கொள்ளலாம் என்று மௌனமாக இருந்தார். அவரை அவர்கள் எதுவும் கேட்கவில்லை. திருடர் என்று தெளிவாய் தீர்மானித்தார்கள். மாண்டவ்யர் இது விரோதிக்கூட்டங்களின் சதி என்று அமைதியாக இருந்தார்.

அரசன் என்னென்ன களவு போயிருக்கிறது என்று கணக்கெடுத்து கோபத்தில் துடித்தான். காவலர்களை கண்மூடித்தனமாக அடித்தான்.






காஞ்சி ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின்
அருளாசியுடன் அன்னதானம் காசியில் செய்வோம்
ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் அருளைப் பெறுவோம்!



மாதாமாதம் அமாவாசை அன்று புண்ணிய ஸ்தலமான காசியில்
அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்கேற்கலாம்...

காசி நகரத்தைப் பற்றியும் காசியின் புனிதத்தைப் பற்றியும் அறியாதவர்கள் இருக்க முடியாது. இந்துக்களின் புனித மண்ணில் புண்ணிய பூமியில் 'அன்னபூரணி' தாயே கோவில்கொண்ட திருத்தலத்தில் அன்னதானம் செய்வது தானத்திலேயே சிறந்த தானமாகும். 1999 புரட்டாசி மாதம் மஹாளய அமாவாசை அன்று முதல் காசியில், மாதாமாதம் அமாவாசையில் அன்னதானம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதோடு இந்தப் புனிதப்பணியில் நீங்களும் பங்குகொள்ள வேண்டுமென்று அன்புடன் அழைக்கிறோம்.

"பசி என்று வந்தால் ஒரு பிடி சோறு
புசியென்று தந்து பாரப்பா...
பசியற்ற உன் நெஞ்சில் இன்பம் உண்டாகும்..."

என்ற - பாரதிதாசன் வரிகள் அன்றாட வாழ்வில் நிலைவூட்டிக் கொண்டிருப்பதை மறுக்க முடியாது. ... இப்புனித ஸ்தலத்தில் அன்னதானம் செய்ய எண்ணம் கொண்டவர்களின், பிரார்த்தனை செய்து கொண்டவர்களின், வேண்டுதல் ... தொண்டவர்களின் எண்ணங்களை நிறைவேற்ற "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான அறக்கட்டளை" என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம்.

புண்ணிய ஸ்தலமான காசியில் அன்னதான திருப்பணியை செய்து புண்ணியத்தைப் பெற ஆன்மீக அன்பர்கள், பக்தர்கள், பெரியவர்கள் அனைவருக்கும் இது ஒரு நல்ல வாய்ப்பு. இந்த அன்னதான பணியில் பங்குபெறும் அன்பர்கள் எல்லோருமே ஏதேனும் ஒரு வகையில் நன்மை அடைந்து வருகின்றனர். அவரவர் வாழ்வில் முன்னேற்றங்களும், நற்பலன்களும் ஆண்டவன் அருளால் தேடி வரும்.

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர், திருமணநாள், பிறந்தநாள் மற்றும் திதி நாள் போன்றவற்றையும் தெரிவித்தால் தாங்கள் விரும்பும் மாதத்தில் அமாவாசை அன்று அன்னதானம் செய்து, பிரசாதத்துடன் காசி ஸ்ரீ அன்னபூரணியின் மண்ணைப்பட்டும் அனுப்பி வைக்கப்படும்.

நன்கொடைகள் அவரவர் விருப்பத்திற்கேற்ப பணமாகவோ அல்லது பொருளாகவோ (அரிசி, நெய், பருப்பு வகைகள், ...) கொடுக்கலாம்.

அன்னதான சேவையில் கலந்துகொள்ளும் ஆன்மீக அன்பர்கள் நன்கொடையை M.O/ D.D Cheque வாகவோ "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான அறக்கட்டளை" (Sri Annapoorani Annadhana Arakkattalai, Chennai-4.) என்ற பெயருக்கு எடுத்து ... அனுப்பி வைத்து ரசீது அஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

பொருள்கள் அனுப்புவோர் ABT / TVS ... சென்னை-4க்கு அனுப்பி வைத்து எங்களுக்கு தெரிவித்தால் நாங்கள் உடனே Delivery எடுத்துக்கொள்வோம்.

★ தாங்கள் கொடுக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் ஏற்றுக்கொள்கிறோம்.
★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பிவைக்கிறோம்.
★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கிறோம்.
★ ரூ.2000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் நான்கு ஆண்டுகளுக்கு அனுப்பிவைக்கிறோம்.
★ ரூ.5000/- அனுப்பும் அன்பர்கள் சார்பாக ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்து வாழ்நாள் முழுவதும் பிரசாதமும் 'ஆன்மீகம்' மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம். மேலும் தாங்கள் விரும்பும் காலத்தில் சந்ததியரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தொடர்ந்து பிரசாதம் மற்றும் 'ஆன்மீகம்' மாத இதழ் அனுப்பி வைக்கிறோம்



Cheque / D.D / M.O அனுப்ப வேண்டிய முகவரி :
ஸ்ரீ அன்னபூரணி அன்னதான அறக்கட்டளை
SRI ANNAPOORANI ANNADHANA ARAKKATTALAI (Regd.)
31/1, Nadu Street, ( Opp. Kapaleeshwarar Koil )
Mylapore, Chennai - 600 004. Ph : 4958086

கோபம் மட்டுப்பட்டு கைதானவர்களை நோக்கித் திரும்பினான்.

"என் தேசத்தில் திருட்டு நடக்கிறது என்றால் அதை தடுத்து நிறுத்தியே ஆகவேண்டும். நாலு தெரு கூடும் இடத்தில் கழுமரம் நட்டு, அந்தக் கழுமரத்தின் மீது இவர்களை ஏற்றுங்கள்" என்று கட்டளை யிட்டான்.

கூர்ப்பான முனையை ஆசனவாயில் சொருகி மெல்ல உடம்பு கனத்தால் அந்தக் கூர்மை உள்ளுக்குள் போக அனேகமாய் அது கழுத்தைக் குத்திக்கொண்டோ, நெஞ்சை குத்திக்கொண்டோ, முதுகைக் குத்திக்கொண்டோ, தலையைக் குத்திக்கொண்டோ அந்த கூர்மை வெளியே வரும்வரை, அந்த கழுமரத்திலுள்ளவர்கள் ரத்தப்போக்காலும், வலியாலும் துடித்து துடித்து அலறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். உலகத்திலேயே மிகக் கொடுமையான தண்டனை கழுமரம் ஏற்றுவது தான்.

'உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் மற்ற திருடர்களையும் உயிரோடோ, பிணமாகவோ கொண்டு வாருங்கள். கொண்டு வருபவர் களுக்கு தக்க சன்மானம் தரப்படும்' என்று பறையறிவித்தான்.

என்ன நடந்தது என்று எவரையும் விசாரிக்காமல் மாண்டவ்யரை யும், அந்த திருடர் தலைவனையும் கழுவில் ஏற்றினான். உண்மையைச் சொல்லக்கூட ஆளில்லாமல் காவலர்கள் நகரத்தை விட்டு வெளியே தொலைதூரத்திற்கு திருடர்களை தேடிப்போக மாண்டவ்யர் மெல்ல மெல்ல கழுவில் இறங்கினார். கழுவில் இறங்கிய சிறிது நேரத்திலேயே திருடர் தலைவன் இறந்துபோனான். அவன் வயிறு வழியே கழுமரம் குத்தி வெளியே வந்தது. மாண்டவ்யர் நேராக கழு மரத்தில் இறங்கினார். அவர் தொண்டை வழியே கழுமரம் வெளியே வந்தது. ஆனாலும் உயிர் போகவில்லை.

வெகுநாள் திருடர்கள் பல பேரை கைது செய்து, ஊருக்கு கொண்டு வந்து அவர்களை அடித்து விசாரிக்க, அவர்கள் திருடுவதை ஒப்புக்கொண்டார்கள். அவர்களும் கழுமரத்தில் ஏற்றப்பட்டார்கள். அருகே உள்ள கழுமரத்தில் ஒருவர் தொண்டை வரையும் இறங்கிக் கொண்டிருப்பதை பல திருடர் பார்த்தனர்.

'இவரைப்போல் உன்னையும் கழுவில் ஏற்றப்போகிறோம் என்று சொல்ல இவருக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை' என்று விளக்கினார்கள்.

காவலர்கள் பயந்தார்கள். 'தவறாக யாரையேனும் கழுவில் ஏற்றி விட்டோமோ' என்று கலங்கினார்கள். ஆனாலும் அரசனிடம் சொல் லாமல் இருந்தார்கள். சொன்னால் இதற்கு வேறு தண்டனை இருக்கும் என்று பயந்தார்கள். ஆனால் அடிக்கடி 'தவறு செய்து விட்டோமே' என்று மாண்டவ்யரின் கழுமரத்தை உற்றுப்பார்த்துக் கொண்டிருந் தார்கள். கழுவில் பிறகு ஏற்றப்பட்ட மற்ற திருடர்கள் இறந்துவிட, எல்லா கழுமரத்தையும் வெட்டி கிழிறக்க வீரர்கள் முயற்சி செய்ய, மாண்டவ் யரின் கழுமரத்தை வெட்டியபோது மாண்டவ்யர் கண்திறந்து பார்ப்ப தும், முனகுவதும் அவர்களுக்கு தெரிந்தது.



இத்தனை நாள் கழுமரத்தில் இருந்தபோதும் இறக்காத ஒருவரை அவர்கள் இதுவரை பார்த்ததில்லை. கேள்விப்பட்டதும் இல்லை. எனவே பயந்துகொண்டு அரசனிடம் ஓடினார்கள். அரசனிடம் 'இவர் எந்த சம்பந்தமும் இல்லாதவர்' என்று ஒரு திருடன் சொன்னான் என்று விளக்கினார்கள்.

அரசன் பயந்துபோய் அவருக்கு அருகே வந்து நின்றான். 'தவறு செய்யாதவரை தண்டித்து விட்டோமோ' என்று பயந்தான். மெல்ல தொண்டை வழியே வந்த அவருடைய கழுமரத்தை உடைத்து எடுத் தான். அவரை விடுவித்தான். காலில் விழுந்து மன்னிப்பு கேட்டான். யாரென்று அவரை விசாரித்தான்.

தான் தவம் செய்து கொண்டிருந்ததாகவும், திருடர் தலைவன் தன்மீது மோதியதாகவும், அவனுக்கு உதவி செய்தபோது, கைது செய்யப் பட்டதாகவும் அவர் சொன்னார். அவன் பலமுறை மன்னிப்பு கேட் டான்.

மாண்டவ்யர் "நீ செய்தது சிறிய பிழை. உன்மீது எனக்கு எந்தக் கோபமும் இல்லை. ஆனால் எந்த பாதகமும் செய்யாமல், தவம் மட்டுமே சிறுவயதிலிருந்து செய்து கொண்டிருக்கிற எனக்கு இவ்வளவு பெரிய தண்டனை ஏன் தரப்பட்டது? இதை நான் விசாரித்தே ஆக வேண்டும்" என்று மறுபடியும் தவத்தில் இறங்கினார். இதற்கு காரணமானவர் யார் என்று தேடினார். நீதிமானாகிய தர்மதேவனை கூப்பிட்டார். தர்மதேவ னான எமதர்மராஜன் அவருக்கு முன்தோன்றினார்.

"தெளிவுள்ளவனே, எமதர்மராஜனே தவறு செய்யாதவன் என்ற பெயர் உனக்கு உண்டு. ஆனால் எனக்கு இவ்வளவு கடுமையான தண்டனை கொடுக்க காரணமென்ன?" என்று அவர் ஆதங்கத்துடன் கேட்டார். எமதர்மராஜன் முன்னிலே பணிந்தார்.

"பறவைகளின் ஆசனவாய் வழியாக குச்சியை சொருகி நீங்கள் சந்தோஷப்பட்டதுண்டு. ஆகவேதான், அதற்காக இந்த தண்டனை உங்களுக்கு வழங்கப்பட்டது. இது தவறு இல்லை" என்று தன் பக்கத்து நியாயத்தை எமதர்மராஜன் சொன்னான்.

"அப்படியா நான் அவ்விதம் செய்ததாக ஞாபகம் இல்லை. இது எப்போது செய்தேன்?" என்று எமதர்மராஜனை மாண்டவ்யர் கேட் டார்.

"எமதர்மராஜன் சிறுவயதில் ஏழு, எட்டு பிராயத்தில் இம் மாதிரி யான விளையாட்டு நீங்கள் விளையாடி இருக்கிறீர்கள்" என்று மறு மொழி கூறினான்.

"தர்மம் அறிந்தவரே, பன்னிரெண்டு வயதுவரை ஒருவன் செய் கின்ற எந்த விஷயத்துக்கும் அவன் பொறுப்பு அல்ல. அறியாமல் செய் கிற ஒரு பருவத்தில், நான் செய்த ஒரு பாவத்திற்காக எனக்கு இவ்வளவு பெரிய தண்டனை கொடுத்து விட்டாயே? விபரம் தெரிந்தவயதில் செய் திருந்தால், இந்த தண்டனையை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண் டிருப்பேன். தெரியாமல் செய்த பிழைக்காக என் உடம்பில் கழுமரம் ஏற்றினாயே, எனவே நீ மானுடனாய் மறுபடி பிறந்து தனிமையை

முழுவதுமாக அனுபவித்து, உலகத்திற்கு நீதிநெறிகளையும் சொல்லி, மறுபடியும் மேலுலகம் வருவாயாக. என்னைச் சித்திரவதை செய்தத னால், தேவனான உனக்கு மனிதப்பிறவி நிச்சயம் கிடைக்கும். கழுமரம் ஏறுவதும், மனிதனாய் பிறப்பதும் ஒன்று" என்று முடித்தார்.

எமதர்மராஜனின் ஒரு சக்தி, தனியே உருவெடுத்து பறக்கத் தயாராகக் காத்திருந்தது.

உலகத்தில் அதர்மங்கள் அதிகரித்து விட்டன. எமதர்மா, நீ மட்டும் பிறந்தால் போதாது. நீ மட்டும் தர்மம் சொன்னால் போதாது. உன்னுடைய இன்னொரு சக்தியை வேறொரு காலகட்டத்தில் தர்ம புத்திரர் என்ற உருவத்தோடு உலவ விடு என்று படைப்புக்கடவுள் கேட்க, தர்மராஜன் சரியென்று தலையசைத்தான். எமனின் இருவேறு சக்திகள் விதுரராகவும், தர்மபுத்திரராகவும் பூமிக்கு வந்தன.

தன்னுள் கலந்த விதுரசக்தியை தர்மராஜ சக்தியை முற்றிலுமாக ஏற்றுக்கொண்ட தர்மபுத்திரர், விதுரர் எப்படி பிறந்தார் என்று ஆவலாக கவனிக்க ஆரம்பித்தார்.




அவர் பிறந்ததும் வளர்ந்ததும் கங்கைக்கரையோரம் உள்ள காசி தேசம். காசி தேசத்து செழிப்பும், படிப்பும், கேளிக்கைகளும், கொண்டாட்டங்களும் அற்புதமானவை. காசி தேசத்து மக்கள் மிக நாகரீகமானவர்கள். பண்டிதர்களுக்கு அடங்கிப்போகிற அரசர்கள் இருந்ததால் காசி தேசம் சுபிட்சமாக இருந்தது. காசி தேசத்தில் பெண்கள் பயமில்லாமல் நடமாட முடிந்தது.

அவள், அம்பை, அம்பிகை, அம்பாலிகை என்கிற அரசகுமாரிகள் வாழும் அந்தப்புரத்தில் தாதியாக இருந்தாள். குறிப்பாய் அம்பை, அம்பாலிகைகள் சொல்லும் ஏவல்களை கருத்தோடு செய்து முடித்தாள். அவள் பிறந்தது முதலே தாதியாக இருப்பவள். அவள் மட்டுமல்ல அவள் தாயும் தாதி. அவள் தாய்க்குத் தாயும் தாதியாகத்தான் இருந்தாள்.

அரண்மனையில் வேலைசெய்யும் அழகிய பெண்களை இரவு நேரம் அரசகுடும்பத்து ஆண்கள் உபயோகப்படுத்திக் கொள்வார்கள். திருமணம் நடத்தாமல், எவருக்கும் வெளியிடாமல், தோளின் மீது கைபோட்டு 'வா' என்று அழைத்து, படுக்கைக்கு கூட்டிக்கொண்டு போய் விடுவார்கள். தாதிகள் மறுப்பதில்லை. மறுப்பதில் பயன் ஏதுமில்லை. மறுத்தால் நிச்சயம் கலவரம் ஏற்படும். மறுக்காது போனால் நல்ல மரியாதை கிடைக்கும்.



"உனக்கு என்ன வேண்டும்? சொல். தருகிறேன்" என்று அரசகுடும்பத்து ஆண்கள் சொல்வார்கள். நகைகளோ, பட்டாடைகளோ, நல்ல உணவுப்பொருட்களோ கேட்டால் உடனே ஏற்பாடு செய்வார்கள். மனைவி என்கிற ஸ்தானத்தைக் கொடு என்று சொன்னால் போதும். தலையைக் கொய்து விடுவார்கள். சிறையில் போட்டு உடல் சிதையும் வரை அடிப்பார்கள். அந்த தாதிக்கு குழந்தை பிறந்தால் கொண்டாடுவார்கள். அதற்கு நல்ல படிப்பும், உயர்ந்த உணவுவகைகளும் நிச்சயமாகத் தருவார்கள். பெண்ணாக இருந்தால் அரண்மனையிலேயே தாதியாக இருக்க ஏற்பாடு செய்வார்கள். ஆணாக இருந்தால் அரண்மனை சுற்றியுள்ள லாயத்தில் வேலையாளாக சேர்த்து விடுவார்கள்.

அரசனுக்கும், அரசிக்கும் பிறந்ததுதான் அரசாள முடியும். அரசனுக்கும், தாதிக்கும் பிறந்தது அரண்மனையில் இருக்க முடியுமே தவிர வேறு எதுவும் கிடைத்து விடாது.

காசி தேசத்து அரசருக்கும், அரசிக்கும் பிறந்த மூன்று பெண் குழந்தைகள் அம்பை, அம்பிகை, அம்பாலிகை. காசி தேசத்து அரசருக்கும், ஒரு அரண்மனை தாதிக்கும் பிறந்த இன்னொரு பெண் குழந்தை இவள். இது அந்த அரசகுமாரிகள் மூவருக்கும் தெரியும். தன் தந்தையால் உண்டானவள் என்று அரசகுமாரிகள் தெளிவாக அறிந்ததினால் ஒரு சகோதர பாசத்தையே அந்த தாதி மீது காட்டினார்கள். சிறிய வேலைகளை ஏவி அவர்களுக்கு அருகே வைத்துக்கொண்டார்கள். அவர்கள் சாப்பிடும் உணவையே அவளுக்கும் கொடுத்தார்கள். அவர்கள் அணியும் உடையையே அவளுக்கும் அணிவித்தார்கள். அவளுக்கு அருகே படுத்துக்கொண்டு தூங்கினார்கள்.

அரசர் வரும்போது அந்தக் குழந்தைகள் மூன்று பேரும் ஓடிப் போய் அரசரை 'அப்பா' என்று கட்டிக்கொள்ள முடிந்தது. இந்த தாதி மட்டும் அவ்விதம் செய்ய முடியாது. செய்யக்கூடாது. ஒருவேளை அரசர் மனம் நெகிழ்ந்து அருகே அழைத்தாரென்றால் போய் வணங்கி விட்டு காத்திருக்க வேண்டும். அரசர் தலையைத் தடவி, முதுகு தடவி, 'உனக்கு ஏதும் வேண்டுமோ?' என்று கேட்டால், அப்போதுதான் பதில் சொல்ல வேண்டும்.

காசி தேசம் வளமானது. பலமானது என்பதால் சிறிதுகூட பயமில்லாமல் மக்கள் சந்தோஷமாக வாழ்ந்தார்கள். குறிப்பாய் அம்பை, அம்பிகை, அம்பாலிகை என்ற இந்த மூன்று பெண்களும் அரச குமாரர்களைப் போல சகல வித்தைகளும் கற்றுக்கொண்டார்கள். மிகத் திறமையாகப் பாடினார்கள். மிக அருமையாக ஆடினார்கள். மிக நுணுக்கமாக எல்லா போர் கலைகளையும் கற்றுக்கொண்டார்கள். அவர்களைப் பற்றிய செய்தி பரதகண்டம் முழுவதும் பரவியது. அவர்களை திருமணம் செய்துகொள்ள பல மன்னர்கள் இடைவிடாது ஓலை அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

காசி மன்னன் தன் மூன்று பெண்களுக்கும் சுயம்வரம் ஏற்பாடு செய்தான். மன்னர்கள் வந்து குழுமியிருந்தார்கள்.

பீஷ்மர் பெரும்படையுடன், ஒரு தனி தேரில் சுயம்வரத்தில் வந்து கலந்துகொண்டார். 'திருமணமே செய்துகொள்ள மாட்டேன்' என்ற

பீஷ்மருடைய சபதம் எல்லோருக்கும் தெரியும். பீஷ்மரை எல்லா மன்னர்களும் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். 'அம்பை, அம்பிகை, அம்பாலிகையால் மனம் பேதலித்து திருமணம் செய்ய திட்டமிட்டு விட்டாரோ, சத்தியத்தைக் காற்றில் பறக்க விட்டுவிட்டாரோ' என்று கேலி பேசினார்கள்.

மூன்று பெண்களில் மூத்தவளான அம்பை சாலுவ தேசத்து இளவரசனைக் காதலித்தாள். அவர்கள் இருவரும் ஒரு கானகத்தில் சந்தித்து தங்கள் மனத்தை பரிமாறிக் கொண்டார்கள். ஒன்றாக பல நாட்கள் சுற்றி வேட்டையாடினார்கள். தனித்தனியே ஊருக்குத் திரும்பினார்கள். சுயம்வரத்தின்போது அவனுக்கு மாலையிடத் தீர்மானித்து, சாலுவ இளவரசனுக்கு தம்பிமார்களோடும், சிறிய வாலிபமான படையோடும் காசிக்கு வந்து இறங்கியிருந்தான். அம்பை ஆட்களை ஏவி அவனுக்கு பலமான உபசாரம் செய்யச் சொல்லியிருந்தாள். ஜாடைமாடையாய் அம்பையை சாலுவ இளவரசன் தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறான். சாலுவ இளவரசனுக்குத்தான் அம்பை மாலையிடப் போகிறாள். மற்ற இரண்டு பெண்கள் யாருக்கு மாலையிடப் போகிறார்கள் என்று தெரியவில்லை என்று பேச்சு பரவியிருந்தது.

பீஷ்மர் சுயம்வரத்தன்றும் முதல் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். அவருடைய திறன் கருதியும், உயர்வு கருதியும் அவருக்கு அந்த இடம் மறுக்காமல் தரப்பட்டது. அவர் பெண்களைப் பார்க்கின்ற ஆவல் எதுவுமில்லாமல், மிகக்கூர்மையாக வெட்டவெளியைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் மனதிற்குள் வேறு திட்டம் இருக்கிறது என்று எல்லோருக்குமே புரிந்தது.

அம்பையும், அம்பிகையும், அம்பாலிகையும் மாலைகளோடு தங்களுக்குப் பிடித்த இளவரசனைத் தேர்ந்தெடுக்க படியிறங்கினார்கள். எல்லா இளவசரர்களும் ஆவலோடு அவர்களை நோக்கினார்கள்.

சாலுவ இளவரசன் மிக அழகாக இருந்தான். பீஷ்மருக்கு அடுத்த படி உட்கார்ந்திருந்தான். அம்பை பீஷ்மரை தாண்டிப் போகும்போது பீஷ்மர் அம்பையை வழிமறித்தார்.

"இந்த சுயம்வரம் நடக்காது. உங்களுக்கு தேர்ந்தெடுக்கிற உரிமையை உங்கள் த்தகப்பன் உங்களுக்கு வழங்கியிருக்கலாம். நான் அதை தடுத்துக்கொள்கிறேன். உங்களை அஸ்தினாபுரத்துக்கு அழைத்துப்போய் எங்கள் குலத் தோன்றலான விசித்திரவீரியனுக்கு நான் திருமணம் செய்து வைக்கப் போகிறேன். நீங்கள் மூவருமே அவருக்கு மனைவியாக வேண்டும். எனவே எந்த மறுப்பும் சொல்லாமல் என்னோடு கிளம்புங்கள். எனக்கு அருகே நெருங்கியதுமே இந்த சுயம்வரம் முடிந்துவிட்டது. இங்குள்ள அரசர்கள் கலைந்து போகலாம்" என்று கம்பீரமாகச் சொன்னார்.

சபை திடுக்கிட்டது. அரசர்கள் வாளை உருவினார்கள். பீஷ்மர் வாள் உருவிய அரசர்களையெல்லாம் கூர்மையாகப் பார்த்தார்.

"நல்லது. நான் போருக்கும் தயாராகத்தான் வந்திருக்கிறேன். இந்த பெண்களை நான் அரண்மனையை விட்டு வெளியே அழைத்துப் போகிறேன். பொதுமக்களுக்கு எந்த இடையூறும் விளைவிக்காமல் என்னை



நீங்கள் அங்கேயே மடக்கி, இந்தப்பெண்களை என்னிடமிருந்து கவர்ந்து போகலாம். ஆனால் அது முடியாத காரியம். நீங்கள் மிக பலமாக தாக்கப்படுவீர்கள். இந்த மூவரையுமே என்னுடைய தம்பியான விசித்திர வீரியனுக்கு நான் திருமணம் செய்ய நிச்சயித்து விட்டேன்" என்று உரக்கச் சொன்னார்.

க்ஷத்திரியர்கள் கோபமானார்கள். சாலுவ இளவரசன் வாள் உருவிக்கொண்டு பீஷ்மரை நோக்கி ஓடிவந்தான். பீஷ்மர் அவன் கையைப் பற்றி இழுத்து தரையில் உருட்டினார். வாள் ஒருபக்கம் உருள அவன் ஒரு பக்கமாகவும் உருண்டான்.

அவன் மறுபடியும் எழுந்து நின்றான். பீஷ்மர், "அடுத்த முறை என்னைத்தாக்க முயற்சித்தால் நீ பிணமாவாய். உன்னுடைய கதை எனக்குத் தெரியும். உன் காதலி எதிரிலேயே உன்னை நான் ஒரே வீச்சில் கவிழ்த்துவிட்டேன். மறுபடியும் நீ முயற்சி செய்வது வீண். எனவே என்னோடு மோதாமல் உயிர்பிழைத்துப் போ. இந்த இடத்தில் ரத்தம் சிந்த நான் விரும்பவில்லை. போய்விடு" என்று கட்டளையிட்டார்.

சாலுவ இளவரசன் யோசித்தான். பீஷ்மரை தன்னால் எதுவும் செய்ய முடியாது என்று தெள்ளத்தெளிவாக அவனுக்குப் புரிந்து விட்டது. அதேநேரம் அவரிடம் மோதி உயிர் இழக்கவும் அவன் தயாராக இல்லை. அவன் முகத்தில் பட்ட தூசியை துடைத்துக்கொண்டான். நெஞ்சில் பட்ட அவமானங்களைப் புதைத்துக்கொண்டான். உள்ளுக்குள் இருந்த அம்பையின் உருவத்தையும் அறவே அழித்தான். தோள்மீது போட்டுக்கொண்டிருந்த துண்டை எடுத்து தரையில் வீசிவிட்டு தோல்வியை ஒப்புக்கொண்டவனாய் அரண்மனையை விட்டு வெளியேறினான்.

பீஷ்மர் திரும்பி அம்பையைப் பார்த்தார். அம்பை துடித்துப் போனாள். தன் கண்ணெதிரிலேயே தன் காதலனை அவமானப்படுத்தி, தன் வாழ்க்கையின் திசைமாற்றிய பீஷ்மரை சுட்டெரித்து விடுவது போல் பார்த்தாள். பீஷ்மர் அந்தப்பார்வையை மதிக்கவே இல்லை.

சபை திகைத்து நின்றது. சாலுவ இளவரசன் அரண்மனை தாண்டி ஓடியதும், அம்பை கையிலிருந்த மாலையை வீசி தரையிலடித்து விட்டு, 'இளவரசே' என்று கத்திக்கொண்டு அவன் பின்னால் ஓடினாள். வீரர்கள் அவளைத் தடுக்க முற்பட, பீஷ்மர் 'தடுக்க வேண்டாம்' என்று சொல்லி விட்டார்.

அவள் நகரைத் தாண்டி, குதிரையில் ஏறிப்போய் சாலுவ இளவரசனை வழிமறித்தாள். "என்னை விட்டுவிட்டுப் போகிறீர்களே, என்னை கைபிடிப்பதாய் சத்தியம் செய்தீர்களே. இப்போது நீங்கள் மட்டும் தனியாகப் போனால் இதற்கு என்ன அர்த்தம்?" என்று கதறலாய் கேட்டாள்.

"அம்பை, சுயம்வரத்தில் நீ எனக்கு மாலையிட்டால் உன்னைக் கைபிடிப்பேன் என்று சொன்னது நிச்சயம். ஆனால் பீஷ்மர் என்பவரோடு போராடி உன்னை ஜெயிக்க வேண்டும் என்ற ஒரு நிலை எனக்கு முன்பே சொல்லப்பட்டிருப்பின் உன்னை நான் காதலித்திருப்பேனா என்பதும் சந்தேகம். அம்பை, சபை முன்பு நான் அவமானப்படுத்தப்

பட்டேன். உனக்காக வந்திருந்த நான் தரையில் உருட்டிவிடப்பட்டேன். இனி உன்னை மணக்க வேண்டுமென்றால் என்னை உருட்டியவன் கையை வெட்ட வேண்டும். அவன் மரணத்திற்கு பிறகுதான் உன்னை மணக்கவேண்டும். இனி அது முடியாத காரியம். பீஷ்மரின் சுண்டு விரலைக்கூட என்னால் ஒன்றும் செய்ய முடியாது. பீஷ்மர் நினைத்தால் என் குலத்தையே அழித்துவிட முடியும். உன்பொருட்டு, என் பொருட்டு என் குலம் நாசமாவதை நான் விரும்பவில்லை. இது அவமானம்தான். தீராத சோகம்தான். உன்னை நான் உயிருக்குயிராக காதலித்தது உண்மையாயினும் உன்னைத் திருமணம் செய்துகொள்ள முடியாது. நாளை நீயே கூட, நீ தரையில் உருண்டவன்தானே என்று சொல்லிவிடலாம். அதற்குப் பிறகு உன்னை நான் தொட்டுத்தழுவ முடியாது. மானமில்லாத காதலனாக இருப்பதைவிட, போட்டியிலிருந்து தோல்வியை ஒப்புக்கொண்டு வெறும் நடைப்பிணமாய் வாழும் இளவரசனாய் நான் இருக்க விரும்புகின்றேன். இந்த தியாகத்தையும் பீஷ்மரையும் எதிர்த்து, என் குலத்தை நாசமடையச் செய்யாமல் இருப்பதற்காகவே செய்கிறேன்.

இனி உனக்கும் சந்தோஷமில்லை. எனக்கும் சந்தோஷமில்லை. நான் பீஷ்மரை எதுவும் செய்ய முடியாது. என்னிலும் வலியவர் அவர். அவர் வலிமைக்கு தலைவணங்குகிறேன். உன்னுடைய காதலுக்கு தலை முழுகுகிறேன்'' என்று சொல்லிவிட்டு குதிரையேறி தென்திசை போனான்.

அம்பை கதறிக்கொண்டு அரண்மனைக்குள் வந்தாள். 'இப்படி செய்துவிட்டீர்களே' என்று பீஷ்மரை நோக்கி கதறினாள். சபை முழுவதும் அவள் அலறலை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது.

விசித்திரிவீரியன் பீஷ்மரை நோக்கி கைகூப்பினான். ''என் பொருட்டு இந்த மூன்று பெண்களையும் வரித்ததாக நீங்கள் சொன்னீர்கள். இதற்காக போரிட தயாராய் இருப்பதாய் நீங்கள் அறிவித்தீர்கள். ஒரே ஒரு திருத்தம். இந்த மூன்று பெண்களில் அம்பை தவிர மற்ற இரண்டு பெண்களையும் நான் மனைவியராக ஏற்க தயாராக இருக்கிறேன். பத்து பேருக்கு நடுவே இந்த இடத்திலிருந்து ஓடிப்போய், தன்னுடைய காதலனைப் பார்த்து கெஞ்சி, அவனால் புறக்கணிக்கப்பட்டு, மறுபடியும் அரண்மனைக்குள் வந்திருக்கிற பெண்ணை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. தன் மனதுக்குள் ஒரு காதலனை வைத்துக் கொண்டிருக்கிற பெண்ணை நான் கலந்து கூடி சந்தோஷப்படுத்த முடி யாது. எனவே அம்பையை நான் மணக்க விரும்பவில்லை. அவளை அவள் காதலனோடு நீங்கள் சேர்த்து விடலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் அம்பிகையையும், அம்பாலிகையையும் மணந்து கொள்கிறேன்'' என்றான்.

பீஷ்மர் சரியென்று தலையசைத்தார். அம்பையை நோக்கி, "நீ உன்னுடைய காதலனோடு சேர்ந்துகொள்ளலாம். சபை கலையட்டும்'' என்று உத்தரவிட்டார். சபை கலைந்தது. அம்பையின் மனமும் கலைந்தது.

சுயம்வரத்திற்கு வந்த அரசர்கள் மறுகினார்கள். அம்பிகையும், அம்பாலிகையோடும் வெளியே வந்த பீஷ்மரை சூழ்ந்துகொண்டார்கள்.



போருக்குத் தயாரானார்கள். விசித்திரவீரியன் தேரில் நின்று வெறுமே வேடிக்கை பார்க்க பீஷ்மர் தன்னுடைய ஒற்றைத்தேரை முன்னே செலுத்தி, வில் வளைத்து, சரமாரியாக, எதிர்த்த அரசர்களை அடித்தார். அரசர்கள் மழைபோல பொழியும் அம்புகளுக்கு பயந்து வழிவிட்டார்கள்.

பீஷ்மர் முன்னே போக, மூடிய தேரில் விசித்திரவீரியனும், அம்பிகையும், அம்பாலிகையும் காசி தேசத்தைக் கடந்தார்கள். அஸ்தினாபுரம் போனார்கள். அவர்களை பின்தொடர யாருக்குமே வலுவில்லை. அஸ்தினாபுரம் அவர்கள் போன மூன்று நாட்களில் காசி தேசத்திலிருந்து நிறைய சீர்வரிசைகளுடன், வேலையாட்களுடன், யானைகள், குதிரைகளுடன், தாதிகளும் போனார்கள். அரண்மனைக்கு போய் நின்று பீஷ்மரைப் பணிந்தார்கள். தான் ஜெயித்துக்கொண்டு வந்த பெண்களுக்கு சீர்வரிசை வந்திருக்கிறதென்று கேள்விப்பட்டு பீஷ்மர் வாசலுக்கு வந்தார். 'நலமே வாருங்கள்' என்று கைகூப்பி வரவேற் றார்.

அம்பிகைக்கும், அம்பாலிகைக்கும் மிகப்பெரிய மாளிகை ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கே அம்பாலிகையின் தாதியாக அவள் போய் சேர்ந்து கொண்டாள். அம்பாலிகையும், அம்பிகையும் அவளைப் பார்த்ததும் ஓடிவந்து கட்டிக்கொண்டார்கள். நடந்ததை நினைத்து வருத்தப்பட்டார்கள். அம்பையை நினைத்து அழுதார்கள்.

"எங்களுக்கும் பிடிக்கவில்லை. என்ன செய்வது? பீஷ்மரின் தம்பியான விசித்திரவீரியனை பார்க்கும்போதே எங்களுக்கு பிடிக்கவில்லை. ஆயினும் பீஷ்மருக்கு பயந்து, பீஷ்மரால் காசி தேசம் தண்டிக்கப்படுமோ என்று கலவரமாகி, ஜெயித்து கைப்பற்றிக்கொண்டு வந்துவிட்டார்களே என்பதால் வேறு வழியின்றி திருமணத்திற்கு இசைந்து விட்டோம். இன்னும் சில நாட்களில் திருமணம் நடக்கும். காசி தேசத்தின் நாகரீகம் எதுவும் ஹஸ்தினாபுரத்தில் கிடையாது. பண்டிதர்களோடு பெண்கள் உரையாட முடியாது. யானை மீது ஏறி பவனி வர முடியாது. எனவே, அரண்மனைக்கிளிகளாக நாம் இருக்கவேண்டும். அம்பையை நினைத்துக் கொண்டு துக்கப்படுவதைத் தவிர, வாழ்க்கையில் இனி செய்வதற்கு எதுவுமில்லை'' என்று அவர்கள் அழுதார்கள். கடந்த காலங் களில் எப்படியெல்லாம் சந்தோஷமாக இருந்தார்கள் என்று நினைத்து மருகினார்கள். தாதியாகி வந்து சேர்ந்த அவளிடம் சொல்லி சொல்லி புலம்பினார்கள். இதில் தாதியென்ன அரசியென்ன நாம் எல்லோரும் ஒரே குப்பைகள். ஆண்களுக்கு முன்னால் பயந்து நடுங்கி நிற்கின்ற கோழைகள், என்றார்கள்.

ஹஸ்தினாபுரம் காசியைப் போல் ஒரு நாகரீகமான இடம் இல்லை. அங்கு ஆண்களின் கொக்கரிப்பு அதிகமாக இருந்தது. எல்லா குடும்பங்களிலும் பெண்களினுடைய வேதனைகள் உச்சகட்டத்தில் இருந்தன. எந்த தேசத்தில் பெண்கள் அதிகம் வேதனைப்படுகிறார்களோ, அந்த தேசத்தில் வெகுநிச்சயமாக யுத்தம் வரும். பெண்களை அழிக்க ஆண்கள் முற்பட்டால் பெண்கள் ஆண்களை அழித்துவிடுவார்கள். நேரடியாக அல்ல. ஆண்களை விட்டே ஆண்களை அழிக்கும் வேலையை பெண்கள் துவங்கிவிடுவார்கள்.

பெண்ணை மனைவி என்ற போகப்பொருளாக மட்டுமே ஆண் நினைப்பது ஒரு முட்டாள்தனம். பெண்ணிடம் இன்னொரு ஒரு கூரிய ஆயுதம் இருக்கிறது. அதற்கு தாய்மை என்று பெயர். காதலனை அணைத்து, 'எனக்காக இவன் தலையைக்கொண்டு வா' என்று சொல்லும்போது அந்த கட்டளை நிறைவேற்றப்படுவது போல, ஒரு தாய் தன் மகனின் கையைப்பிடித்துக்கொண்டு, 'எனக்காக இவன் தலையைக் கொண்டு வா' என்றாலும் அது நிறைவேற்றப்படும் என்று பல ஆண்களுக்கு தெரியவில்லை. காதலியாகத் தொட்ட பெண் தாயாக ஜெயித்து விடுகிறாள். தன்னைக் கவர்ந்து போனது ஒரு ஆண் என்று தெரிந்ததும் அவனுக்கு எதிராக சூழ்ச்சிகளை ஆரம்பித்து விடுகிறாள்.

இரண்டு அரசகுமாரிகளும் பீஷ்மர் மீது கடும் வெறுப்பு வைத்திருந்தார்கள். "எதற்காக எங்களை இங்கே கொண்டு வந்தாய்" நல்ல வம்சம் வேண்டுமென்றா? அதற்காகத்தான் விசித்திரவீரியனை எனக்கு திருமணம் செய்து கொடுத்தாயா? இல்லை. நீ நினைத்தது நடக்காது. விசித்திரவீரியன் மூலமாக எங்களுக்கு குழந்தைகள் பிறக்காது. பிறந்தாலும் அதை இருக்க விடமாட்டோம்" என்று தெளிவானார்கள்.

இந்த இடத்திலெல்லாம் பெண்களை ஆண்களால் ஜெயிக்கவே முடியாது. அவள் நினைத்தாலொழிய அவள் தாயாக மாட்டாள். அவளுக்கு விருப்பமில்லையெனில் அவள் தன்னை மரமாக மாற்றிக் கொள்ளக்கூட தயங்கமாட்டாள்.

விசித்திரவீரியன் வேகமான ஆண்மகன் அல்ல. அவனால் போரும் செய்ய முடியாது. பெண்களின் மனதைக் கவரவும் முடியாது. ஒரு சாதாரண ஆண்மகனாக, படகோட்டியின் உயரத்தோடு, அந்தவிதமான உடம்போடு விசித்திரவீரியன் இருந்தான். கடும் குளிரினால் விசித்திர வீரியனுக்கு க்ஷயரோகம் ஏற்பட்டது. அந்த க்ஷயரோகம் அதிகரித்தது. ஏழு ஆண்டுகள் எந்த சுகமும் அனுபவிக்காமல் எந்த மரியாதையும் இல்லாமல் அம்பிகையும், அம்பாலிகையும் விதவை யானார்கள்.

அம்பை எங்கோ பீஷ்மரை எதிர்ப்பதற்காக ஆள் தேடி அலைந்து கொண்டிருப்பதாய் செய்தி வந்தது. பீஷ்மர் நினைத்தபடி அந்த சந்ததி வளராது வெறுமே மொட்டை மரமாய் நின்றது.

பீஷ்மரின் தந்தையின் காமக்கிழத்தியான சத்தியவதி என்னும் பரிமளகந்தி வியாச முனிவரை மனதில் நினைத்து பூஜித்தாள். சந்ததி அழிந்து போகாமல் இருக்க வேண்டுமென்பதற்காக அரண்மனைக்கு வந்த அவரை விழுந்து வணங்கி வரவேற்றாள். "சத்தியவதி என்னை எதற்காக நினைத்துக்கொண்டாய்" என்று வியாசர் கேட்க, விஷயம் சொன்னாள். வியாசர் தன் மூலம் அம்பிகைக்கும், அம்பாலிகைக்கும் கர்ப்பதானம் செய்ய சம்மதித்தார்.

"வெறும் கௌபீனதாரியாய் காட்டிலேயே வசித்தவர். மழை, குளிர், வெயில் என்று எதற்கும் பயப்படாமல் ஒரு போர்வையின்றி சஞ்சரித்தவர். பாறையிலும், கல்லிலும் படுத்தவர் தலை ஒழுங்காக வாராமல் சடைகள் கூடியவர். ஆனால் மிகப்பெரிய ஞானி. கடவுள் தரிசனம் பெற்றவர். எல்லாக் கலைகளிலும் வல்லவர். சகலமும் தெரிந்தவர்" என்று ஹஸ்தினாபுரத்து பெண்கள் அவரைப்பற்றி அம்பிகைக்கும்,



அம்பாலிகைக்கும் சொன்னார்கள். தாதியும் அருகிலிருந்து கேட்டாள். அவளைப்போய் நேரடியாக வியாசரைப் பார்த்து வருமாறு அம்பிகையும், அம்பாலிகையும் கட்டளையிட்டார்கள்.

அவள் இருட்டில் மறைந்து, மெல்ல மெல்ல அரண்மனைக்கு வெளியே வியாசர் தங்கியிருக்கும் குடிலுக்குப் போய் அங்கு ஜன்னல் வழியே பார்த்தாள். ஒரே ஒரு விளக்கு எரிய, கண்மூடி மான்தோலில் கௌபீனதாரியாய், சடாமுடியும் தாடியுமாய் வியாசர் உட்கார்ந்திருந்தார். தாதிக்கு அவரைப் பார்த்ததும் பிடித்துப்போயிற்று. தாடிக்கு அப்பால் அந்த முகத்திலிருந்து கருணை சிந்திற்று. அந்த இடத்தில் ஒரு அமைதி நிலவியது. நறுமணம் சூழ்ந்திருந்தது. ஒரு வெம்மை பரவியிருந்தது. 'ஏன் ஹஸ்தினாபுரத்து சேடிகள் இவரை கோரசொரூபியாக வர்ணித்தார்கள்?' இதுபோன்ற பல சாதுக்களை இந்தத் தாதி சந்தித்திருக்கிறாள். அவர்கள் பார்ப்பதற்கு ஆஜானுபாகுவாய் உடையில்லாது உக்கிரமாக இருப்பார்களே தவிர, பேசத்துவங்கினால் பழுத்த பழமாய் இருப்பார்கள், மிகப்பிரியமாய் பேசுவார்கள். எல்லா உயிர்கள் மீதும் அன்போடு இருப்பார்கள். பெண்கள், ஆண்கள், குழந்தைகள், கிழவர்கள் என்று வித்தியாசம் பாராமல் அவரவர்க்குத் தக்கபடி உதவிகள் செய்வார்கள்.

அந்த தாதி குடிலைச்சுற்றி மூன்றுமுறை வலம் வந்தாள். குடிலின் வாசலில் விழுந்து வணங்கினாள். 'சர்வேஸ்வரா' என்று தொலைதூரத்திலிருந்து கண்மூடியிருந்த வியாசரை நோக்கி கைகூப்பினாள்.

"நான் அண்டியுள்ள அந்த இரண்டு அரசிளங்குமாரிகளும் நன்கு படித்தவர்கள். மிக கெட்டிக்காரிகள் நாகரீகம் உள்ள பெண்கள். அவர்கள் வாழ்க்கை பீஷ்மரால் சிதைந்து விட்டது. அவர்கள் விரும்பிய வண்ணம் வாழவில்லை. இத்தனை தெளிவும், திறனும் கொண்ட அந்தப் பெண்கள் வாழும் வகையற்று வெறும் மரமாய், கனியில்லாத தாவரமாய் போய்விடக்கூடாது. வாழையடி வாழையாய் அவர்கள் வம்சம் வளர வேண்டும். தாய்மை என்னும் மிகப்பெரும் பேற்றை அவர்கள் அடைய வேண்டும். எனவே ஞானியே, சூரியனே, இறையருளாளா உன்னை நமஸ்கரிக்கிறேன். என் எஜமானிகளுக்கு நீ ஆசீர்வாதம் செய். உன்னால் அவர்கள் இந்த உலக சரித்திரத்தில் மறக்க முடியாதவர்களாய் ஆகட்டும். அவர்கள் அறிவும் அழகும் அர்த்தமுள்ளதாகட்டும் என்று விழுந்து வணங்கினாள்.

வியாசர் மனதுக்குள் அவள் வேண்டுதல் தெள்ளத்தெளிவாய் தெரிந்தது. தனக்கென்று வணங்காது, தன் எஜமானிகளுக்காக வணங்கும் தாதியை அவர் வாழ்த்தினார். மறுபடி தனக்குள் அமிழ்ந்தார்.

"ஹஸ்தினாபுரத்து பெண்கள் சொல்வது தவறு. வியாசர் மிகப் பெரியவர். மிகுந்த மனோபலம் உடையவர், கடவுள் தெரிந்தவர். அவர் உடம்பிலிருந்து அற்புதமான நறுமணம் வீசிக்கொண்டிருக்கிறது. அவர் பார்ப்பதற்கு சற்று வித்தியாசமாக இருக்கிறாரே தவிர, அவர்கள் சொல்வது போல் கோர சொரூபம் உடையவரல்ல. அவர் சகலமும் தெரிந்தவர். அவருடைய சுற்றுப்புறம் மிக அமைதியுடையதாகவும், தெளிவான அதிர்வுகள் உடையதாகவும் இருக்கிறது. அங்கு போனதும் வெகு இயல்பாய் எனக்கு பணிவு ஏற்பட்டது. அவரை நமஸ்கரித்ததும் மனதுக்குள்

ஒரு நிம்மதி ஏற்பட்டது. ஒரு நம்பிக்கை வந்தது. நான் சொல்கிறேன் அம்பிகை, அம்பாலிகை, நீங்கள் அவர்மூலம் பெறப்போகும் குழந்தைகள் வெகு நிச்சயம் உலகை ஆள்வார்கள். உங்கள் வாழ்க்கை வெற்றுப் பாலைவனமாய் முடியாமல் அர்த்தமுள்ளதாய் ஆகும். நீங்கள் அற்புதமான தாயாய் விளங்கப் போகிறீர்கள். இது நிச்சயம்" தாதி அரசகுமாரிகளுக்கு இதமான வார்த்தை சொன்னாள்.

அரசகுமாரிகள் இவளுடைய பேச்சால் வியாச முனிவர் மிக அழகான அரசிளங்குமரன் என்று நினைத்துக் கொண்டார்கள். சத்ய வதியின் கட்டளையால், கட்டில் மீது வியாச முனிவருக்காக காத்திருந்தார்கள்.

தாதி, வியாச முனிவர் அரண்மனைக்கு வந்ததும் கால் கழுவ நீர் கொடுத்தாள். தன் மேல்துணியால் பாதங்களைத் துடைத்து விட்டாள். பூக்கள் தூவி அவரை வழிநடத்திச் சென்றாள். அவளுடைய ஒவ்வொரு செய்கையிலும், அன்பு இருந்தது, அக்கறை இருந்தது, மரியாதை இருந்தது; உண்மையான பணிவு இருந்தது.

வியாசர் அவளை புன்சிரிப்போடு ஆசீர்வதித்தார். அம்பிகையின் அறைக்குள் நுழைந்தார். வலக்கையில் தண்டமும், இடக்கையில் கமண்டலமும், மேலே கழுத்தில் மாலையாக உருத்திராட்சமும், மேலே சுருட்டிக்கட்டப்பட்ட சடைமுடியும், நீண்ட தாடியுமாய் காட்டில் வாழும் வேடனைப் போன்ற உருவத்தோடு அங்கு வந்த வியாசரைப் பார்த்து 'ஐயோ'வென்று அம்பிகை கண்மூடிக்கொண்டாள்.

வியாசர் சிரித்தார். அம்பிகைக்கு அருகே போனார். அம்பிகையின் அறையைவிட்டு வெளியே வந்ததும் மறுபடியும் தாதி வியாசருக்கு கால் கழுவ நீர்வார்த்தாள். உடம்பைத் துடைத்துக் கொள்ள வாசனை தடவிய துணிகளைக் கொடுத்தாள். மறுபடியும் பூக்களைத் தூவி வழிநடத்தி அம்பாலிகையின் அறைக்கு அழைத்துப் போனாள்.

அம்பாலிகை அரைத்தூக்கத்தில் கண்மூடி உட்கார்ந்து கொண்டிருந்தாள். வியாசர் அருகே போய் அவள் தோளில் கைவைத்தாள். அவள் கண்விழித்து வியாசரைப் பார்த்தாள். அந்த உருவத்தை பார்த்ததும், மனம்கூசி உடம்பு சிலிர்க்க, பயத்தாலும், அருவெறுப்பாலும் அவள் உடம்பு சட்டென்று வெளுத்துப் போயிற்று. வியாசர் சிரித்தார். அவளுக்கு அருகே அமர்ந்தார்.

வியாசர் வெளியே வர மறுபடியும் குடிலைச் சுற்றிவந்து நமஸ்கரித்தாள். 'எங்கள் குலம் விளங்க, எங்கள் அரசகுமாரிகளின் பெயர் சிறக்க வந்து நின்ற தெய்வமே, உங்களை நமஸ்கரிக்கிறேன்' என்று விழுந்து வணங்கினாள். அரண்மனைக்கு போனாள்.

படித்தவர்களாக இருந்தபோதும், ஒரு தலைமுறை நன்கு விளங்க வேண்டுமென்றால் அதற்காக என்ன தியாகம் வேண்டுமானாலும் செய்யலாம் என்று அந்தப்பெண்களுக்கு தெரியாது போயிற்று. அரசகுமாரிகளான அம்பிகையும், அம்பாலிகையும் தங்களுடைய சொந்த சுக போகத்தை மனதில் நினைத்து தாங்கள் மனதில் சித்திரம் எழுதியிருந்த இளவரசனைப் போல வியாசர் இல்லையே என்று மனம் பேதலித்து, எவ்விதம் நடந்து கொண்டார்களோ, அவ்விதமே அவர் களுக்கு குழந்தைகள், பிறந்தன.



அம்பிகை வியாசரைப் பார்த்து கண்மூடிக்கொண்டதால், கண்ணில்லாத திருதராஷ்டிரன் மகனாகப் பிறந்தான். அம்பாலிகை அவளைப் பார்த்து பயத்தில் வெளுத்துப் போனதால் உடம்பெல்லாம் வெண்குஷ்டம் பரவிய, பாண்டு பிறந்தான்.

பெண், ஆணை சந்தோஷமாக ஏற்கவில்லையெனில் பிறக்கும் குழந்தைகள்தான் கடுமையாக பாதிக்கப்படுவார்கள்.

சந்துருவின் மனைவியான சத்தியவதி மனம் நொந்தாள். 'தான் திட்டமிட்டபடி நல்ல, வம்சாவளி வரவில்லையே, அங்கஹீனமுள்ள குழந்தைகள் பிறந்திருக்கிறார்களே, ஒரு குழந்தை குருடன், இன்னொரு குழந்தை வெண்குஷ்டக்காரன். வியாச முனிவரிடமிருந்து ஒரு அற்புதமான, முழு லட்சணமுடைய ஒரு ஆண்மகன் அல்லவா பிறக்க வேண்டும், அவனல்லவா ஹஸ்தினாபுரத்தை ஆட்சி செய்ய வேண்டும். இந்த பெண்களால் இப்படி தவறு ஏற்பட்டு விட்டதே' சத்தியவதி வருந்தினாள். மறுபடியும் வியாசரை நினைத்து பூஜை செய்தாள்.

வியாசர் மீண்டும் அரண்மனைக்கு வந்து, "சத்தியவதி எதற்கு என்னை நினைத்தாய்?" என்று கேட்டார். சத்தியவதி தன்னுடைய மனக் கிலேசத்தை சொல்லி, மறுபடியும் அம்பிகைக்கு அறிவுரை சொல்லி அனுப்புகிறேன். அவளை ஏற்று நல்ல ஒரு வம்சாவளியை நீங்கள் தோற்றுவிக்க வேண்டும் என்று பணிந்து கேட்டாள். வியாசர், 'இதுவே கடைசி முறை' என்று சொல்லி சம்மதித்தார்.

அம்பிகைக்கு சத்தியவதி புத்திகள் சொன்னாள். 'ஆண் என்பவன் அழகனாக இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. ஆண் என்பவன் அரசகுமாரனாக இருக்கவேண்டிய அவசியமில்லை. ஆண் என்பவன் இளமையானவனாகவும், சுத்தத்தோடும் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆண் என்பவன் ஞானியாக இருக்க வேண்டும். ஆண் என்பவன் தெளிவாக இருக்கவேண்டும். ஆண் என்பவன் உயர்ந்த சிந்தனைகள் கொண்டிருக்க வேண்டும்' என்று ஆணைப்பற்றிய பல வேறு விஷயங்களை அம்பிகைக்கு எடுத்துச் சொன்னாள். அம்பிகை 'சரி சரி'யென்று சத்தியவதி சொல்வதற்கெல்லாம் தலையாட்டினாள். 'மறுபடியும் வியாசரை உன்னிடம் அனுப்புகிறேன்' என்று சத்தியவதி சொல்ல, அம்பிகை சம்மதித்தாள்.

வியாசர் உள்ளே நுழைய, தாதியை தன் உடுப்புகளை அணியச் சொல்லி, கட்டிலில் அமரவைத்து விட்டு அம்பிகை தோட்டத்திற்கு ஓடிப்போனாள். வியாசர் உள்ளே நுழைந்தார். அம்பிகை என்று நினைத்து அறைக்குள் காலடி எடுத்து வைத்தார். தன்னுடைய முகத்திரைகளை விலக்கிவிட்டு, தாதி வியாசரைப் பணிந்தாள். என்ன நடந்தது என்று தெளிவித்தாள். 'தோட்டத்திற்குப் போய் அரசியைக் கூட்டிக் கொண்டு வரட்டுமா' என்று கேட்டாள். 'தேவையில்லை நீ வா' என்று மெல்ல வியாசர் தாதியை அணைத்துக் கொண்டார்.

"நீ என்மீது கொண்ட அக்கறையும், அன்பும் எனக்குப் பிடித்துப் போயிற்று. உனக்கு என்ன கொடுப்பது என்று தெரியாமல் நான் யோசித்துக்கொண்டு இருந்தேன். இறையருள் உனக்கு என்னையே கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறது. என் மூலம் உனக்கு

பிறக்கும் மகன் உலகம் உள்ளளவும் ஜீவிப்பான். அவன் மிகப் பெரிய நீதிமானாக விளங்குவான். எல்லோருக்கும் பிரியமுள்ளவனாய் வளர்வான். அவன் மிகச்சிறந்த வீரனாய், நல்லவனாய், வல்லவனாய் இருப்பான். உன் மகனை நீ பணிந்து, இந்த உலக வாழ்க்கையில் இருந்து கரையேறும் வித்தையை தெரிந்துகொள். உனக்கு அவன் பல விஷயங்கள் கற்பிப்பான். அவனைப் புரிந்துகொண்டு, எனக்கு செய்தது போல, அவனுக்கும் உபசாரங்கள் செய்து வளர்த்து வா. உன்னுடைய மோட்சப் பதவி அவனால் உனக்கு கிடைக்கும்' என்று ஆசீர்வாதம் செய்தார்.

தாதி அவரை கட்டிலுக்கு அழைத்துப்போனாள். தாதியும், வியாசரும் உலக வாழ்க்கை குறித்து, உலகத்தின் நீதிநெறிகள் குறித்து, உலகத்தில் இனி ஏற்படப்போகின்ற மாற்றங்கள் குறித்தும் பேசி அந்த இரவை சந்தோஷமாகக் கழித்தார்கள். தாதி மனம் நிறைந்தாள். வியாசர் விடியற்காலையில் அவளை ஆசீர்வதித்து விட்டு வெளியேறினார்.

சாபத்துக்கான காலம் பார்த்துக் கொண்டிருந்த தர்மராஜன் மெல்ல ஒரு சக்தியாக நகர்ந்து தாதியின் கருப்பைக்குள் அமர்ந்து கொண்டார். விதுரர் அந்த தாதிக்கு மகனாகப் பிறந்தார்.

விதுரர் எந்த ஆசிரியரும் இல்லாமல் ஒரு ஞானவானாய் வளர்ந்தார். யாரும் சொல்லித் தராமல் சகல வித்தைகளும் கற்றார். அவரால் அந்த தாதிக்கு மிகப்பெரிய மரியாதை ஏற்பட்டது. அவர்கள் இருவருக்கும் தனியே ஒரு பெரிய வீடு தரப்பட்டது.

தாதி வேலைக்காரியாக நடத்தப்படாமல் அரசகுடும்பத்தின் ஒரு முக்கியமான பெண்ணாக மதிக்கப்பட்டாள். வியாச முனிவரால் ஆசிர்வதிக்கப்பட்டவள் என்று கௌரவிக்கப்பட்டாள். சத்தியவதி அவளுக்கு பொன்னும் பொருளும் கொடுக்க, பீஷ்மர் அவளை கைகூப்பி நமஸ்கரிக்க, விதுரர் அம்மாவின் அரவணைப்பில் சந்தோஷமாக வளர்ந் தார்.

பெரிய வீடு, நல்ல உணவு, ஆதரவான அம்மா, அக்கம்பக்கத்திலுள்ள நல்ல மனிதர்களின் இதமான பேச்சு, பீஷ்மரின் தலைமையில் நடக்கும் தெளிவான அரசியல் இவை விதுரரை நன்கு வளர்த்தன.

அம்மாவும், பிள்ளையும் விடியற்காலை எழுந்து கொள்வார்கள். அம்மாவை அரண்மனைக்கு வெளியே கட்டிய குடிலில் உட்கார வைத்து மூச்சுப்பயிற்சி சொல்லிக் கொடுத்தார். ஆழ்ந்து உள்ளே பார்க்கும்படி தியானம் சொல்லிக் கொடுத்தார். அங்கங்களை சரியாக அசைத்து ஜீரண சக்தியை அதிகரிப்பதற்கும், தசைகள் சுருக்கமின்றி இருப்பதற்கும், உடம்புக்குள் உற்சாகம் ஓடுவதற்கும் அவர் கற்றுக் கொடுத்தார். நல்ல உணவுப்பழக்கங்களை ஏற்படுத்தினார். ம்றைகளுக்கு அர்த்தம் சொன்னார். இனிய பாடல்களை அம்மாவுக்கு பாடிக் காட்டினார். விடிந்து உணவு முடித்தபிறகு அம்மா கேள்விகள் கேட்பார். விதுரர் பதில் சொல்வார்.

"விதுரா, நான் உன்னைப்போல் படித்தவளல்ல. ஆனாலும் நீ காலையில் எனக்கு மூச்சுப்பயிற்சி சொல்லிக்கொடுத்து, பிறகு தியானம் கற்றுக்கொடுத்து, அதற்குப்பிறகு வேதத்தை முறைப்படி சொல்லி,.அதற்கு அர்த்தமும் எனக்கு சொல்லிக் கொடுக்கிறாய். இவையெல்லாம் செய்வ



தற்கும், கேட்பதற்கும் சந்தோஷமாக இருக்கிறது. ஆயினும், விதுரா, சிறுசிறு கேள்விகள் எனக்கு அவ்வப்போது எழுந்து கொண்டிருக்கின்றன. நான் இதை யாரிடம் கேட்பது? உன்னை நீதிமான் என்று உலகம் கொண்டாடுகிறது. எனவே என் வெட்கத்தை விடுத்து, உன்னிடம் அந்தக் கேள்விகளைக் கேட்கிறேன். என் கேள்விகள் முட்டாள்தனமாக இருந்தாலும், தயவுசெய்து அவற்றை பொறுத்துக்கொண்டு, அதற்கு உண்டான பதிலை எனக்கு சொல்லிக்கொடு' என்று பணிவோடு கேட்டாள்.

அம்மாவின் பணிவு பற்றி விதுரர் மனம் நெகிழ்ந்தார். 'இது என் கடமை. நீ என்ன கேட்டாலும் கேலி இல்லாமல், கோபம் இல்லாமல் உனக்கு நான் பதில் சொல்வேன். எந்த தயக்கமுமின்றி உனக்கு வேண்டியதை என்னிடம் கேள்' என்று அவளை பிரியத்துடன் பார்த்தார்.

'விதுரா, நான் சாதாரண தாதி. எனக்கு வரம்போலும் நீ வந்து பிறந்திருக்கிறாய். ஆனாலும் நான் ஏதாவது சம்பாதிக்க வேண்டுமா? இதுவரை அரசகுடும்பத்தாருக்கு உழைந்திருக்கிறேனே தவிர, எதுவும் சம்பாதித்ததே இல்லை. நான் என்ன சம்பாதிக்க வேண்டும் என்று எனக்கு சொல்.'

"அம்மா இரவில் சுகமாக வாழ்வதற்குத் தேவையானவைகளைப் பகலில் தேடிக்கொள்ள வேண்டும். மழைக்காலத்தில் சுகமாக வாழ்வதற்கு வேண்டியவைகளை மற்ற எட்டு மாதங்களில் தயார்செய்து கொள்ள வேண்டும். அதுபோல முதுமைக்காலத்தில் சுகமாக வாழ்வதற்கு வேண்டியவைகளை இளமைக்காலத்திலேயே தயார் செய்து கொள்ள வேண்டும். ஜென்மாந்திரத்தில் சுகமாக வாழத் தேவையானவைகளை உயிரோடு இருக்கும் வரை நாம் செய்துவரல் வேண்டும்.

அம்மா, நான் சொன்னது அரிசி, பருப்பு போன்ற தானியங்களையோ இரவில் குளிர் காய்வதற்கு வேண்டிய சுள்ளிகளையோ அல்லது திரண்ட செல்வத்தையோ அல்ல என்பதை ஆழ்ந்து யோசித்தால் புரிந்துகொண்டிருப்பாய். இரவு நன்றாக தூக்கம் வர வேண்டுமென்றால்-பகலில் உண்மையாக உழைத்திருக்க வேண்டும். நிறைய பேருக்கு உதவிசெய்திருக்க வேண்டும். பலர் வாழ்ந்த பகலில், வாழ்ந்திருக்க வேண்டும். பகல் முழுவதும் வம்பும், அரட்டையும், வீண் சண்டையும் செய்துவிட்டால் அந்த நினைவுகள் இரவில் வந்து உம்மைப் பாடாய் படுத்தும். பகலில் தர்மத்தைக் கடைபிடித்தால் இரவில் நன்கு தூங்கலாம். அம்மா, பரதகண்டத்தில் மழைக்காலம் ஒரு அற்புதமான வேளை. சதுப்பு நிலங்கள் நிறைந்த இந்த நிலத்தில் மழைக்காலத்தில் அதிகம் பயணம் செய்யாது, தொடர்ந்து, இரவும் பகலுமாக இறைவனைத் துதிக்க கற்றுக்கொள்ள வேண்டும். அப்படித் துதிக்க கற்றுக்கொள்வதற்கு மற்ற காலங்களில் இடைவிடாது முயற்சி செய்ய வேண்டும்.

அம்மா, இன்னொன்றும் புரிந்துகொள். இளமையில் இறைவனை போற்றக் கற்றுக்கொள்ளவில்லையெனில் முதுமையில் இறைவனுக்கு அருகே கூட போக முடியாது. எனவே முதுமைக்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப்போடாமல், இளமையிலேயே இந்த

தியானத்தையும், மூச்சுப்பயிற்சியையும் கற்றுக்கொள்ள வேண்டும்.

அம்மா, இந்த மனிதப்பிறவியில் இவைகளைக் கற்றுக்கொள்ளாது, பிசாசாகவோ அல்லது மறுபிறப்பில் புழு, பூச்சியாகவோ பிறந்தால் இவைகளைத் தெளிவாகக் கற்றுக்கொள்கின்ற ஞானம் வராது போய் விடும். ஆகவே, இந்த மனிதப்பிறவி கிடைத்திருக்கிறபொழுதே இறை பற்றிய விஷயங்களை நன்றாகக் கற்றுக்கொண்டு, அடுத்த ஜென்மத்தில் சுகமாக வாழ்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். நான் தேடிக்கொள் என்று சொன்னது செல்வத்தை அல்ல தாயே, இறைபற்றிய ஞானத்தை.''

''விதுரா, உலகத்தில் ஒருவர் எப்படி வாழவேண்டும்?''

''அம்மா, பிறர் போற்றும்படி வாழவேண்டும். சாப்பிட்ட உணவு ஜீரணமானாலும், ஆனபிறகும் அதைப் போற்றுவார்கள். நல்ல மனைவியை இளமை கடந்தபிறகும் போற்றுவார்கள். போர்க்களத்தில் வெற்றியடைந்த சூரனை சகலரும் போற்றுவார்கள். தத்துவத்தை அறிந்து ஞானம் உணர்ந்த தவசியை எல்லா மக்களும் போற்றுவார்கள்.''

''விதுரா, எது கேட்டாலும் தெரிந்தவன் போல் பேசுகிறாயே. இப்படி ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்ல முடியுமா? எது தெரிந்து கொள்ள முடியாதது?''

''அம்மா ரிஷிகள், நதிகள், மகான்கள் இவர்களின் பிறப்பு தெரிந்து கொள்ள முடியாதது. பெண்களின் கெட்ட நடத்தைக்கான மூல காரணத்தை நம்மால் தெரிந்துகொள்ள முடியாது.''

''விதுரா, யாரால் நல்ல செல்வத்தை சம்பாதிக்க முடியும்?''

''சூரன், கற்றறிந்தவன், வேலைசெய்யும் முறை தெரிந்தவன். மூவருக்கும் செல்வம் எளிதில் கிடைக்கும்.''

''விதுரா, நான் எதைக் கேட்டாலும் பதில்களை பயமுறுத்தலாகவே சொல்கிறாய். வாழ்க்கை பயனற்றது என்று அதை உதறச் சொல்கிறாய். ஆனால் விதுரா, இதோ நீ எனக்கு மகன். இது என் வீடு. இந்த வீட்டில் அமர்ந்துகொண்டு, உன்னெதிரே நான் பேசிக்கொண்டு இருக்கிறேன். நான் சந்தோஷமாகத்தானே இருக்கிறேன். என் சந்தோஷத்திற்கு எந்தக்குறையும் இல்லையே? நீ ஏன் இந்த வாழ்க்கையை அபத்தமானது, ஆபாசமானது என்று சொல்கிறாய்? இந்த வாழ்க்கை பற்றி உன்னுடைய கருத்து என்ன? எனக்கு தயவுசெய்து சொல்லிக்கொடு'' அம்மா இந்த முறை கைகூப்பிக் கேட்டாள்.

''சிறுசிறு விஷயங்களில் திருப்தி அடைந்துவிட்டாயே அம்மா. அந்த விஷயங்களைப்பற்றியே மறுபடி, மறுபடி யோசித்துக் கொண்டு இருக்கிறாய். வாழ்க்கை மொத்தமும் உணர்ந்து பார்க்க உனக்கு கற்பிக்கப் பட வில்லை.

அடர்ந்த காடு ஒன்றை ஒரு மனிதன் தாண்டிப்போக வேண்டியதாயிற்று. அந்த காட்டிற்குள் கொடிய மிருகங்கள் அலைந்தன. மிக மோசமான ஒரு ராட்சஸி அந்தக்காட்டை யார் தாண்டினாலும், அடித்து துன்புறுத்திக் கொண்டிருந்தாள். பிடித்துத் தின்னக் காத்திருந்தாள். மனிதரைக் கண்டதும் அவரை மடக்கி அவன் கைகளைக் கட்டிப் போட்டாள்.

அவன் அவளிடமிருந்து தப்பித்துக்கொண்டு காட்டில் இங்கு





மங்கும் அலைந்தவான். தவறிப்போய் ஒரு கிணற்றில் தடுக்கி விழுந்தான். விழுகிறபோது, அங்கே தொங்கிய ஒரு மரத்து வேரை இறுகப் பற்றிக் கொண்டான்.

காட்டில் அந்த கோரமான அரக்கி அவனைத் தேடத் துவங்கினாள்.

கிணற்றில் கீழே ஒரு பாம்பு விஷத்தை கக்கியபடி காத்துக் கொண்டிருந்தது. கிணற்றுக்கு மேலே மிருகங்கள் அலைந்து கொண்டிருந் தன. ஆறு தந்தங்கள் உடைய ஒரு யானை அவனை எட்டி தலைமயிரை பிடித்து இழுக்க முயற்சி செய்து கொண்டிருந்தது. அதற்கு தலை கொடுக்காமல் இடதும், வலதும் ஆடியபடி அவன் தப்பித்துக் கொண்டிருந்தான். அப்படி ஆடுகிறபோது ஒரு தேனடை மீது வேர்பட்டு தேன் சிந்தத் தொடங்கியது. ஊற்றுகிற தேனை நாக்கு நீட்டி அந்த மனிதன் சுவைக்கத் துவங்கினான். அப்போது அந்த வேரினுடைய மேல்பகுதியை கறுப்பும், வெளுப்புமான எலிக்ள் அறுக்கத் துவங்கின.

கீழே பாம்பு, மேலே ஆறு தந்தமுள்ள யானை, அதற்கு பன்னிரெண்டு கால்கள், வேரை கருப்பும், வெளுப்புமான எலிகள் கடித்துக் கொண்டிருக்க தேனை அந்த மனிதன் குடித்துக் கொண்டிருக்கிறான். மேலே அவனுக்காக அரக்கியும், மற்ற மிருகங்களும் காத்துக் கொண்டிருந்தார்கள். அந்த மனிதன் தேன் மிக அற்புதமாக இருக்கிறது என்று சொல்வது போலத்தான் நீயும் இந்த வாழ்க்கை சுகமாக இருக்கிறது என்று சொல்கிறாய்'.'

"விதுரா, நீ பேசுவது எனக்கு விளங்கவில்லை. எல்லாவற்றையும் உவமானமாகவே சொல்கிறாய் என்று நினைக்கிறேன். எதெது எதற்கு உவமானம் என்று சொல்."

அம்மா, அம்பிகை, அம்பாலிகையின் தாதியான விதுரரின் அம்மா, ஆவலோடு தன் மகனைப் பார்த்துக் கேட்டாள்.

"அம்மா காடு என்பது இந்த உலக வாழ்க்கை. அதாவது சம்சாரம். இங்கே இந்த வாழ்க்கையில் மனிதனை துரத்தி துரத்தி பயமுறுத்துவது வியாதி என்கிற காட்டு மிருகங்கள். அவனை மடக்கி கைகள் கட்ட வருவது முதுமை என்ற அரக்கி. அம்மா முதுமையைப் பற்றி யோசிக்காத நாள் மனிதனுக்கு உண்டா? ஒவ்வொரு நாளும் மெல்ல மெல்ல முதுமையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும்போது மனிதனுக்கு எவ்வளவு பெரிய கவலை? அந்த முதுமை என்ற அரக்கியின் ஞாபகம் அவனுக்குள் இடைவிடாது எப்போதும் இருக்கிறது. கிணறு என்பது வீடு. அந்த வீட்டிற்குள்ளும் பாம்பு இருக்கிறது. எமன் என்கிற பாம்பு. அந்த வேர் ஆசை. மனிதன் ஆசையால்தான் தொங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறான். அந்த வேர்களை எது அறுத்துக் கொண்டிருக்கிறது தெரியுமா? கருப்பும், வெளுப்புமான எலிகள் என்பது இரவும், பகலுமான விஷயங்கள். அதற்கு மேலுள்ள ஆறு தந்தம், பன்னிரெண்டு கால்கள் உள்ள யானை எது தெரியுமா? பன்னிரெண்டு மாதங்களும், ஆறு பருவங்களும் உள்ள வருடங்கள். தேன் எது தெரியுமா காமம். காமச் சுவை.

ஆக, மனிதன் உயிர்வாழ்வதற்கு அடிப்படையான விஷயம் ஆசை. அந்த ஆசையை எது தூண்டுகிறது என்றால் காமம் தூண்டுகிறது. எனவே காமம் ஒரு நல்ல விஷயம் என்று நினைத்துக்கொண்டு நாம்



வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். வேர் என்பது உயிர்வாழும் ஆசை. காமம் என்பது உலகத்தில் உள்ள பொருள்கள் மீதுள்ள ஆசை. ஆணுக்கு பெண் மீதும், பெண்ணுக்கு ஆண் மீதும் உள்ள ஆசை.

நீ இந்த அரசபோகத்தை, வீட்டை, உணவை, உடையை உன்னைக் கண்டு மற்றவர்கள் நமஸ்கரிப்பதை விரும்பி ஏற்கிறாய். வாழ்க்கை நன்றாக இருக்கிறது என்று நினைக்கிறாய். இந்த தேன்சுவையை மட்டும் பார்க்கிறாயே தவிர, ஒவ்வொரு நாளும் உன் உடம்பை காலம் தின்று கொண்டிருப்பதை நீ பார்க்கவில்லை. உன் காலுக்குக்கீழ் எமன் உட்கார்ந்து கொண்டிருப்பதை நீ அறியவில்லை. உன்னை முதுமை என்ற அரக்கி துரத்திப் பிடித்திருக்கிறாள் என்பது புரியவில்லை. வியாதிகள் உன்னைத் துரத்திக் கொண்டே இருக்கிறது என்பதை நீ மறந்துவிட்டிருக்கிறாய். இப்போதைக்கு தேன்சுவை மட்டுமே உனக்கு தெரிகிறது."

"விதுரா, வாழ்க்கையை எவ்வளவு பயங்கரமாக வர்ணிக்கிறாய். உலக வாழ்க்கையில் சந்தோஷமே இல்லை என்று எப்படி பேசுகிறாய்?

விதுரா, இப்படிப்பட்ட சம்சார பந்தத்தில் சிக்கிக்கொள்ளாமல் இருக்கவேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்?"

"தேன் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு என்ன நடக்கிறது என்று சுற்றிப்பார்க்க வேண்டும். எங்கே நிற்கிறோம் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். யார் நம்மை துரத்துகிறார்கள் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அப்போது தேன் சாப்பிடுவதிலிருந்து வெகு நிச்சயமாய் விலகிவிட முடியும். தேன் சாப்பிடுகின்ற ஆசை போய்விட்டால் போதும். மறுபடியும் காட்டிற்குள், சம்சார பந்தத்திற்குள் நுழைய வேண்டிய அவசியமில்லை.

இன்னும் தெளிவாகச் சொல்கிறேன் அம்மா. அற்பமான சுகங்களை திரும்ப, திரும்ப யோசிப்பதிலிருந்து விடுபட்டு, ஒட்டுமொத்தமாய் சுற்றி இருக்கிற உலகத்தை நாம் உற்றுப்பார்க்க கற்றுக்கொண்டால் மறுபடியும் இந்த காட்டிற்குள் வருவதை தவிர்த்து விடலாம். மரணத்திற்கு பிறகு மறுபடியும் பிறக்காமல் இருக்கலாம்.

அம்மா ஆசையோடு இறக்கிறவர்கள் மறுபடியும் ஆசையோடு பிறக்கிறார்கள். ஆசையை அகற்றியவர்கள் பிறப்பு என்பதிலிருந்து அகண்டு போகிறார்கள். ஆசைதான் பிறப்புக்குக் காரணம். ஒரு பிறவியில், ஆசை என்பதை சுத்தமாக அறுத்தவனுக்கு மறுபடியும் பிறவி இல்லை. சொட்டு சொட்டாய் விழும் சிறு தேன்துளிகளை குடிப்பதற்காக வேரில் தொங்கி, பாம்புக்கு பயந்து, மிருகங்கள் துரத்த, அரக்கி சுற்றி சுற்றி தேட, யானை துதிக்கையால் கேசத்தைப் பற்றி இழுக்க, நாம் ஆடிக்கொண்டே சாப்பிட வேண்டியது அவசியம்தானா என்று யோசித்துப் பார்க்க வேண்டும்."

தாதி திகைத்துப் போனாள். சின்ன சின்ன சந்தோஷங்களை உதறி, உள்ளுக்குள் பார்க்கத் துவங்கினாள். ஒட்டுமொத்தமாய் வாழ்க்கையில் எவையெல்லாம் தன்னை துரத்துகின்றன, எதற்கெல்லாம் தனக்கு பயம் என்று பட்டியலிட்டாள். அது சந்தோஷத்தை விட மிக பிரம்மாண்டமாய் இருந்ததை உணர்ந்துகொண்டாள். கண்மூடினாள். உள்ளுக்குள் தோன்றிய ஆசைகளை அறுத்தெறிந்தாள். விடுதலையான சந்தோஷத்தில் அவள் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது.

"விதுரா, என் அருமை மகனே. உடுத்துகிற சந்தோஷம், உண்கிற சந்தோஷம், வீடு, மாடு என்கிற அற்ப செல்வங்களின் சந்தோஷம் இவையெல்லாம் என்னிடமிருந்து விலகின. நான் வாழ்க்கையின் உயரத்திலிருந்து ஒட்டுமொத்தமாய் பார்க்க ஆரம்பித்து விட்டேன். எத்தனை செல்வமிருந்தாலும், எவ்வளவு அறிவிருந்தாலும், எவ்வளவு ஞானமிருந்தாலும் முதுமை மனிதனை இடைவிடாது துரத்தி ஒவ்வொரு நாளும் மெல்ல மெல்ல அவனை கொன்று கொண்டிருக்கின்றன. இரவும் பகலும் நடந்து நடந்து அவன் உயிரை எமனை நோக்கி தள்ளிக் கொண்டிருக்கின்றன. எமன் திட்டவட்டமாக கீழே காத்திருக்கிறான். வேர் அறுந்து விட போகிறது. எமன் வாயில் மனிதன் நிச்சயம் விழப்போகிறான். பிறந்தவுடனேயே இறப்பு என்பது நிச்சயமாகி விட்டது. இறப்பு நோக்கிதான் அத்தனை பேரும் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறோம், என்பது எனக்கு புரிந்துவிட்டது. இறப்பு என்று ஒரு விஷயம் தெள்ளத்தெளிவாக இருக்கிறபோது இங்கே பெருமை கொள்வதற்கு எதுவும் இல்லை என்பது புரிந்துவிட்டது.

விதுரா, என் கண்களைத் திறந்து விட்டாய் இன்னும் ஏதாவது எனக்கு சொல்ல வேண்டியிருக்கிறதா?"

"அம்மா, குடிப்பிறப்பு என்கிற ஒரு அபத்தம் இந்த உலகத்தில் இருக்கிறது. அரசன் உயர்வு என்றும், ஆண்டி தாழ்வு என்றும் மக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அம்மா, இறந்தபிறகு எல்லோரையும் தரையில் சமமாகப் படுக்க வைக்கிறார்கள். யாரையும் உயர்த்தி வைத்து விடுவதில்லை.

அம்மா, குடிப்பிறப்பால் உனக்குள் தோன்றியிருக்கிற சோகத்தையோ அல்லது உயர்வையோ தூக்கி அடி. பிறப்பு, குடிப்பிறப்பு என்பது முக்கியமேயில்லை என்று தெளிவாகத் தெரிந்துகொள். மரணம் நிச்சயம் என்று தெரிந்தபிறகு இதில் உயர்வு, தாழ்வு என்பது மிகப்பெரிய மூடத்தனம். குடிப்பிறப்புதான் மனித மூடத்தனத்தின் உச்சக்கட்டம். தன் குலத்தைப் பற்றியோ, தன் மதத்தைப் பற்றியோ, தன் குடியைப் பற்றியோ, ஒருவன் பெருமையோ சிறுமையோ கொண்டிருந்தால் அது நகைப்புக்கிடமான விஷயமே தவிர, வேறு எதுவும் இல்லை. அறிவற்றவன்தான் இந்த உயர்வையும், தாழ்வையும் திரும்ப திரும்ப பேசுகிறான்."

"விதுரா நீ சொல்வது புரிகிறது. இதிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்றால் ஒரு மனிதன் என்ன செய்ய வேண்டும்?

நான் இங்கு பிறந்துவிட்டேன். அறியாமையினாலோ, சாபத்தினாலோ நான் இங்கு மனித உரு எடுத்துவிட்டேன். இந்த மனித உரு மறுபடியும் எடுக்காமல் இருப்பதற்கு நான் என்ன செய்ய வேண்டும். ஆசையை விட்டுவிடு என்று மேலோட்டமாக சொன்னால் என்னைப் போன்ற பாமரர்களுக்குப் புரியுமா என்ன செய்தால் எந்தவித நேமத்தைக் கடைபிடித்தால், எந்தவிதமான வாழ்க்கை வாழ்ந்தால் ஆசையை விட முடியும் என்று எனக்கு அறிவுறுத்துவாயாக" அம்மாவின் குரலில் மிகப்பெரிய வணக்கம் இருந்தது.

"அம்மா, புலனடக்கம்தான் முதல்படி. புலன்கள் கண்டபடி



சுத்துவதற்கு அனுமதிக்கக்கூடாது. நிறைய உண்பவன், நிறைய குடிப்பவன், நிறைய பெண்களோடு சம்போகம் செய்யவேண்டும் என்ற ஆசை உள்ளவன், நிறைய உடுத்திக்கொள்ள வேண்டும் என்று விரும்புபவன் இவர்களெல்லாம் எடுத்தவுடனேயே ஆசையால் அடிபட்டுப் போகிறார்கள்.

நிறைய தின்று கொழுத்தவனுக்கும், அதிகம் உடுத்தி பகட்டித் திரிபவனுக்கும் என்ன புத்தி சொன்னாலும் ஏறாது. அவர்கள் ஒரு அரை மயக்கத்தில் இருப்பார்கள். அரைமயக்கத்தில் உள்ளவர்கள் அநேக தவறுகள் செய்வார்கள். அவர்களை ஆசைகள் வேகமாக வந்து பற்றிக்கொள்ளும். பல நூறு ஆசைகளுக்கு ஆட்படுவார்கள். பல ஆயிரம் ஜென்மங்கள் மறுபடி மறுபடி இந்த உலகத்தில் வெவ்வேறு ஜீவ ராசியாய்ப் பிறந்து பெரிய அவஸ்தைக்குட்படுவார்கள்.

அம்மா, ஒரு மனிதன் புலன்களை அடக்கினால் மட்டும் போதாது. கோபத்தை அடக்க வேண்டும். கோபம் என்பது பிறர்மீது நாம் கொண்டுள்ள பொறாமை. அவனுடைய மனைவி அழகாக இருக்கிறாளே, அவனுடைய வீடு உயரமாக இருக்கிறதே, அவனுக்கு அற்புதமான தேர் கிடைத்திருக்கிறதே, என்று தன்னோடு பிறருடைய செல்வ நிலையை, தகுதிகளை வைத்து பொறாமைப்படுபவன் மறுபடியும் ஆசையில் அகப்பட்டுக் கொள்கிறான். சம்சார பந்தத்தில் மீள முடியாமல் சிக்கிக் கொள்கிறான்.

அம்மா, பிறர்மீது பொறாமை தவிர்த்து விட்டால் மட்டும் போதாது. அள்ளி அள்ளி கொடுக்கின்ற வள்ளல் தன்மை ஒருவனுக்கு வர வேண்டும். தன் பொருள் தன்னுடையது என்று சேமித்து வைத்துக் கொள்கின்றவனையும் ஆசை விடுவதில்லை. அது அவனை சேற்றில் அமிழ்த்து விடும். எனவே தன்னிடமிருப்பது, தன்னுடையதல்ல என்கிற நினைப்பு எவனுக்கு வருகிறதோ அவனால்தான் கொடுக்க முடியும். கொடுக்க முடிந்தவன் எவனோ அவனாதான் அமைதியாக வாழ முடியும். குரோதமற்று, வள்ளல் தன்மையோடு புலன்களை அடக்கி வாழ்பவன் மனசாந்தியைப் பெறுகிறான். மன அமைதி உள்ளவனுக்கு தியானம் எளிதில் கைகூடும். தியானத்தில் அமர்ந்தவனுக்கு மரணத்தின் நிச்சயம் தெளிவாய்ப் புரியும். மரணத்தின் நிச்சயம் புரிந்தவனுக்கு வியாதிகளும், முதுமையும் மனிதனை வேட்டையாடுவதை உணர்ந்து கொள்ள முடியும். வியாதிகளாலும், முதுமையாலும் காலத்தாலும் வேட்டையாடப்படுகிறோம் என்று தெரிந்த மனிதன் ஆசையிலிருந்து அறவே நகர்ந்து போகிறான். உலகத்திலுள்ள பொருள்களில், வாழ்க்கையில் உள்ள சுகங்களிலிருந்து ஆசைகள் அகன்றால்தான் மிகப் பெரியதான, நிச்சயமான கடவுள் என்கிற சக்தியோடு சேர முடிகிறது. கடவுள் என்கிற சக்தியை உணர்ந்து சேர்ந்தவனுக்கு மறுபடியும் பிறவி இல்லை.

அம்மா, இவற்றையெல்லாம் கேட்பதற்கே ஒரு கொடுப்பினை வேண்டும். கேட்க வேண்டும் என்றே பலபேருக்குத் தோன்றாது. கேட்டாலும் சிரித்துவிட்டு, 'இதெல்லாம் முட்டாள்தனமான விஷயங்கள்' என்று உதறிவிட்டுப் போவார்கள். சுகத்தை நாடி பின்னே ஓடுவார்கள். சுகமாக இருப்பது என்பது இன்னது என்று தாங்களாகவே தீர்மானித்துக்

கொண்டு விடுவார்கள்.

அம்மா, மனிதனை இந்தத் துயரத்திலிருந்து பணமோ, பொருளோ, நட்போ, அரசோ விடுவிக்காது. வைராக்கியம் என்கிற மன உறுதிதான் துயரத்திலிருந்து ஒரு மனிதனை விடுவிக்கும். வைராக்கியத்திலிருந்து ஒழுக்கம் என்ற அமைதி கிடைக்கும். ஒழுக்கம் என்ற அமைதியினால் தீயதிலிருந்து விடுதலை பெற்று, விலகி ஜாக்கிரதையாக வாழ மனிதன் தெரிந்துகொள்கிறான். இப்படி தீயதிலிருந்து விலகி ஜாக்கிரதையாக வாழ்பவனுக்கு மரண பயம் இல்லை. உடம்பை விடுதல் என்பது மிக எளிதான, சாதாரணமான விஷயமாக இவனுக்கு மாறிப்போகிறது. இவனே கல்விமான். இவனே கடவுள் என்கிற பேரமைதியை அடைய முடிகிறது.''

விதுரரின் அம்மா, அம்பிகை, அம்பாலிகையின் தாதி விக்கி விக்கி அழுதாள். முகம் பொத்தி அழுதாள். சகலமும் புரிந்துபோன நிம்மதி கிடைத்தது. வாய்விட்டு அரற்றினாள். எழுந்து நின்று மகனெதிரே கைகூப்பினாள். அவளுக்கு பதினைந்து வயது சிறுவன் முன் மண்டியிட்டு அவன் பாதங்களை முத்தமிட்டாள்.

"என் குலம் விளங்க பிறந்தவனே, என் குருவே உன்னை நமஸ்கரிக்கிறேன்" என்று அவன் முழங்கால்களை ஆரத்தழுவிக்கொண்டாள்.

"மகனே விதுரா, எனக்கு இனி பிறப்பு மீது ஆசை இல்லை. வாழ்க்கை மீது பிடிப்பு இல்லை. நான் இறக்க விரும்புகின்றேன். மரணம் என்கிற பயத்தை உதறிவிட்டு மரணத்தை, இறப்பைத் தழுவ விரும்புகின்றேன். அந்தப்பேரமைதியில் கலக்க விரும்புகின்றேன்.

விதுரா, எனக்கு உன்னால் அந்த பாக்கியத்தைத் தரமுடியுமா? என் குலம் விளங்க் பிறந்த பசுங்கொடியே, உன் தாய்க்கு இப்படியொரு வரம் தர முடியுமா. இத்தனை சொன்னபிறகும் இதுபற்றிய தெளிவோ, அறிவோ இல்லாமல் வெறும் பிரமிப்பு மட்டும் மிகுந்தவளாய் நான் உன்னெதிரே அமர்ந்திருக்கிறேன். இந்த முயற்சிகள் ஏதும் தெரியாமல் வெறுமே விடுபட்டவளாய் நான் உட்கார்ந்திருக்கிறேன். விதுரா என்னை மரணபயம் நீக்கி, அந்த பேரமைதியில் சேர்ப்பதற்கான ஏற்பாடைச் செய்.''

ஞானத்தை மகனாகப் பெற்றவள் ஞானியானாள். அந்தக் குடிசையிலேயே அமைதியாக உட்கார்ந்து ஆழ தன்னுள் தோன்றிய ஆன்ம ஒளியை கவனித்துக் கொண்டிருந்தாள். அந்த பிள்ளையும் அம்மாவின் ஒளி பெருகுவதற்காக தவம் செய்தான். தாயும், பிள்ளையும் எதிரெதிரே அமைதியாய் வெகுநாட்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

ஒரு நல்ல முகூர்த்தத்தில் விதுரரின் தாய் கண்திறந்து மகனைப் பார்த்தாள். 'நல்லது. விடைகொடு' என்றாள். விதுரர் எழுந்து கைகூப்பி தான் கர்ப்பவாசம் செய்த பெண்ணை நமஸ்கரித்தார். 'நல்லது' என்று அவரும் வாய்திறந்த சொன்னார். அவர் சொன்ன கணத்தில் அவர் தாயின் உடலிலிருந்து உயிர்பிரிந்து வான் நோக்கிப் போயிற்று. உடல் சரிந்து மண்ணில் விழுந்தது.

விதுரர் தன் தாயின் மறைவை முறைப்படி கொண்டாடினார்.

'அடடா, விதுரரின் தாய் மறைந்துவிட்டாளா, விதுரருக்கு ஒரு திருமணம் செய்துவிட்டு, அந்த தாதி இறைவனடி சேர்ந்திருக்கலாம், பிள்ளைக்கு நல்லது செய்யாமல் போய்விட்டாளே' உலகம் வழக்கப்படி



பேசத் துவங்கியது. விதுரரிடம் எதிரே வந்து, பணிவாக இவ் வார்த்தைகள் சொல்லி அவரை சந்தோஷப்படுத்த நினைத்தது. விதுரர் வாய்விட்டுச் சிரித்தார்.

"ஞானத்திற்கும், பிறப்புக்கும் சம்பந்தமில்லை என்பதை தெரிவிக்கவே என் பிறப்பு இங்கு அமைந்தது. பெண்களுக்கும் ஞானம் நிச்சயம் கிடைக்கும் என்று தெரிவிக்கவே என் தாயின் இறப்பு அமைந்தது. இனி வரப்போகும் காலங்கள் மிக மோசமானவை. மனிதர்கள் வைராக்கியம் இழந்து, ஒழுக்கம் குறைந்து, அமைதியிலிருந்து வெளியேறி ஆரவாரமாகவும், ஆபாசமாகவும் வாழப்போகிறார்கள். இறைவனுக்கு எதிராக மாறப்போகிறார்கள். இந்த நேரத்தில் உலகத்தை இவ்விதமே விட்டுவிடக் கூடாது என்று தீர்மானித்து, உலகத்து மக்களுக்கு நன்மையைச் சொல்ல நான் பிறந்திருக்கிறேன். என் வேலை நீதி சொல்வது. எந்த தவறு நடந்தாலும் வாய்திறந்து கண்டிப்பது. ஒழுக்கம் எது என்பதை திரும்ப திரும்ப மனிதனுக்கு சொல்லிக்கொண்டுதான் இருக்க வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில், கலி ஆரம்பிக்கின்ற இந்த நேரத்தில் நான் சொல்கின்ற ஒழுக்க நெறி மனிதர்களுக்கு புரிந்துவிட்டால் மனிதர்கள் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும். என்னால் முடிந்த அளவுக்கு எளிமையாய் நான் நீதியை சொல்லத்தான் போகிறேன். நீதி சொல்லத்தான் நான் பிறந்திருக்கிறேன். எனவே எனக்கு திருமணம் என்றோ, குடும்பம் என்றோ, பிறப்பு என்றோ, இறப்பு என்றோ சொல்லப்படுகின்ற விஷயங்கள் முக்கியமேயில்லை. என்னைவிட, என் சொற்கள் முக்கியம். என் வேலை முக்கியம்.

ஆக, என்னைப்பற்றிக் கவலைப்படாமல் நான் சொல்கிற விஷயம் பற்றி நீங்கள் கவலைப்படுங்கள். அதுபோதும்" என்று சொல்லி முடித்தார்.

ஜனங்கள் விதுரரைப் புரிந்துகொள்ளாமல் விலகிப் போனார்கள். புரிந்துகொண்டவர்கள் அவரைப் பார்த்தபோதெல்லாம் எழுந்து நின்று கைகூப்பினார்கள்.




அரசகுடும்பத்தில் பிறந்தவராக இருந்தாலும் விதுரர், பீஷ்மருடைய நட்பை நெருக்கமாக பெற்றவராயிருந்தாலும் அந்த அழ கிய, உறுதியான சிறிய வீட்டில் தன் கைப்பட தானே சமைத்துக் கொண்டு எளிமையாய் வாழ்ந்து வந்தார்.

சூரியன் ஒரு நாள் பூமிக்கு மிக நெருக்கமாக வந்து பூமியை தகிப்பது தெரிந்தது. ஜனங்கள் வெப்பம் தாங்காமல் அலறினார்கள். ஆனால் அதேசமயம் ஒருவருக்கொருவர் குடைபிடித்து, நிழல் கொடுத்து ஒருவருக்கொருவர் நீர் கொடுத்து, உண்ண உணவு கொடுத்து இளைப்பாற இடம்

கொடுத்து உதவினார்கள். விதுரர் கர்ணன் பிறந்ததை தெரிந்து கொண்டார். அவன் பிறந்த வேளையை வைத்து கணக்கிட்டு அவன் எப்போது ஹஸ்தினாபுரம் வருவான் என்பதை புரிந்துகொண்டார்.

நாட்கள் நகர்ந்தன. விதுரரின் மூத்த சகோதரர்களான திருதராஷ்டிரனுக்கும், பாண்டுவுக்கும் முறைப்படி திருமணங்கள் நடந்தன. திருதராஷ்டிரனுக்கு காந்தாரியும், பாண்டுவுக்கு குந்திதேவியும் மனைவியாக அமர்ந்தார்கள்.

ஹஸ்தினாபுரத்து அரண்மனையில் வேலையாட்களோடு விதுரர் சந்தோஷமாக காலம் கழித்தார். அவர்களில் ஒருவராக வளைய வந்தார். அவர்களைத் தன்னிடம் நெருங்க அனுமதித்தார்.

"எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் வந்து பேசுங்கள்" என்று ஊக்கப்படுத்தினார். இரவுநேரம் உணவுக்குப்பிறகு விளக்குகளுக்கு அருகே அமர்ந்து அவர்களுக்கு நீதிநெறி கதைகள் எடுத்துச் சொன்னார். எதுபற்றி கேள்வி கேட்டாலும், அவர்களுக்கு தர்மத்தை தெளிவாக எடுத்துரைத்தார்.

"கலிகாலம் பிறக்கப் போகின்ற இந்த சூழ்நிலையில் குலப் பெருமையும், செல்வமும் தான் மக்களுக்கு முக்கியமான விஷயங்களாகப் போகும். மனிதர்களை மனிதர்கள் இழிவுபடுத்துவதும், அடிமைப் படுத்துவதும் பெண்களை கேவலப்படுத்துவதும் வெகுவேகமாக நடைபெறும். இதனால் மனிதகுலம் தூக்கமில்லாமல் தவிக்கும். ஆபாசத்தின் எல்லைக்கு போகும். மனிதகுலம் தர்மத்தை அழிக்க, தர்மம் மனித குலத்தை அழிக்கும். இந்த கோரக்காட்சியை இங்கு உள்ளோரில் பல பேர்கள் காணப்போகிறீர்கள். நான் உங்களுக்குள் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம் குறைவாக குழந்தைகள் பெற்றுக்கொள்ளுங்கள். ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுக்கு மேல் எந்தக் காரணம் கொண்டும் பெற்றுக் ‾காள்ளாதீர்கள். இல்வாழ்க்கை என்பது குழந்தை களைப் பெறுவதற்காகவே இருக்கிறது. இல்லறசுகம் என்பது ஜனன உற்பத்திக்காகவே இருக்கிறது. இடைவிடாது ஜனன உற்பத்தி செய்து கொண்டிருந்தால் நீதிநெறியோடு குழந்தைகளை வளர்ப்பது கடினம். அவர்களை தெருவிலே வளரவிட்டு வன்முறையும் வெறித்தனமும் அடிப்படைக் கலாச்சாரங்களாகக் கொண்டு உலகத்தை இம்சை செய்வார்கள். எனவே நல்ல குழந்தைகளை பெற்றெடுக்க நீங்கள் நல்லவர்களாக மாறவேண்டும் என்பது மிக முக்கியம். இந்திரிய ஒழுக்கம்தான் மிகச்சிறந்த ஒழுக்கம். மனைவி என்பவள் ஒருகாலும் அடிமையல்ல. அவளுடைய விருப்பமின்றி உங்களால் செய்யப்படுஞ் எந்தக்காரியமும் உருப்படாது."

"ஒவ்வொரு யுகத்தின் முடிவிலும் இறைவன் ஜனிப்பார் என்று சொல்லப்படுவது உண்டு. இது யுகத்தின் முடிவு என்றால் விஷ்ணு வின் அம்சம் இங்கு பிறக்குமா?"

"ஆமாம். அப்படித்தான் சொல்லப்படுகிறது நண்பரே. இந்த யுகத்தின் முடிவில் கடவுள் தோன்றுவார் என்று ஜோசியம் சொல்கிறது.

"கடவுள் தோன்றிவிட்டார் என்பதின் அறிகுறி என்ன?"

"கடவுள் தோன்றும்போது பிரளயம் நிகழும். மிக பலத்த மழை பொழியும். அப்படிப்பட்ட கடுமையான மழையை பூமி இதுவரை சந்தித்திராது. நதிகளில் வெள்ளம் பெருகும். ஊர் முழுவதும் குளிர்ந்து காணப்படும். வானத்தில் பெரிய சுடர் ஒன்று தோன்றி ஒரு நாள் முழுவதும் இருந்து பிறகு மறையும். பாம்புகளால் பூமிக்குள் இருக்க முடியாது. அவைகள் சுதந்திரமாக வெளியே நடமாட ஆரம்பித்துவிடும்."



"விதுரரே, கடவுள் எங்கு தோன்றுவார் என்று நினைக்கிறீர்கள்?"

அது தெரிந்தால் நான் ஏன் இங்கு உட்கார்ந்து கொண்டு உன்னோடு பேசிக்கொண்டு இருக்கிறேன். விதுரர் பதில் சொல்ல அனைவரும் வாய்விட்டு சிரித்தார்கள்.

"குலம் முக்கியமில்லை என்று சொல்கிறீர்கள் விதுரரே, குடிப்பிறப்பு முக்கியமில்லையெனில் எது முக்கியம்?"

"ஒழுக்கம்தான் முக்கியம். ஒழுக்கமுள்ளவர்களைத்தான் மக்கள் விரும்புவார்கள். நல்ல குடிப்பிறப்பு இருந்தால் மட்டும் அவன் போற்றுதலுக்கு உரியவனாக ஆகிவிட மாட்டான். ஒழுக்கம்தான் மிக முக்கியம்."

"விதுரரே, ஒழுக்கம், ஒழுக்கம் என்கிறீர்களே, எது ஒழுக்கம்?"

கள்ளுண்ணாமை, பொய் சொல்லாமை, திருடாமை, பிறன் மனை நோக்காமை, கொலை செய்யாமைதான் ஒழுக்கத்தின் அடிப்படையான விதிகள். இதிலிருந்து பல நூறு விதிகள் பிரிகின்றன.

வட்டமாக உட்கார்ந்து கொண்டிருந்த ஜனங்களின் இருட்டான பகுதியிலிருந்து சிரிப்பு சத்தம் கேட்டது. அந்த சிரிப்பு வித்தியாசமாக இருந்தது. எல்லோரும் அமைதியாக இருக்க ஒருவர் மட்டும் சிரிப்பானேன் விதுரர் அருகிலிருந்த தீப்பந்தத்தை எடுத்து உயர்த்தி யார் சிரித்தது என்று கேட்டார்.

சிரித்தது ஒரு இளைஞன். அவன் எழுந்து நின்றான். கைகூப்பினான். பந்தத்தை மறுபடியும் நட்டுவிட்டு விதுரரும் கைகூப்பினார். எதற்கு சிரித்தாய் இளைஞனே என்று கேட்டார்.

"நீங்கள் சொல்கின்ற இந்த பாவமான செயல்களை இங்குள்ள ஒவ்வொரு அரசனும் செய்துகொண்டு இருக்கிறார்கள். நீங்கள் எங்களுக்கு உபதேசம் செய்துகொண்டு இருக்கிறீர்கள் என்று நினைத்தேன் சிரிப்பு வந்துவிட்டது."

"அரசன் எவ்வழி, மக்கள் அவ்வழி' என்று ஒரு பழமொழி உண்டு நண்பனே. அரசர்களைப் பார்த்து அவர்களின் பின்னால் அவர்கள் போலவே உனது வாழ்க்கையை நீ அமைத்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த விஷயங்களை உனக்கு சொல்கிறேன். நான் அவர்களுக்கும் சொன்னேன். சொல்லிக்கொண்டும் இருப்பேன். காதுள்ளவர்கள் கேட்கட்டும் என்றுதான், இடைவிடாது சொல்லிக்கொண்டு இருக்கிறேன். எல்லோருக்கும் காது இருப்பதில்லை தோழனே, ஒருசிலருக்கே காதும், காதில் விழுவதை உள்வாங்கி ஜீரணிக்கின்ற புத்தியும் இருக்கின்றன.

பலபேருக்கு நான் பேசுவது புரிவதே இல்லை, யாருக்கு புரிகிறதோ அவர்களுக்கு நடுவில்தான் நான் பேசத் துவங்குகிறேன். மற்ற இடத்தில் பார்வையாளனாகத்தான் இருக்கிறேன்."

"அய்யா, இன்னொரு கேள்வி..."

"கேளுங்கள் பெரியவரே."

"அரசர்களே இப்படி ஒழுக்கக்குறைவாக இருந்தால் ஒரு தேசத்தினுடைய நலன் என்னாவது?"

"கடவுள் இருக்கிறார் பெரியவரே, தேசத்தை ஆள்வது அரசனோ, மந்திரியோ, படைவீரர்களோ, வணிகர்களோ அல்ல. ஒவ்வொரு தேசமும் கடவுள் அருளால் செழிப்பாகிக் கொண்டிருக்கிறது. உங்களையும், என்னையும் கருவியாகக் கொண்டுதான் கடவுள் இந்த தேசத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார். வினை விதைத்தவன் வினை அறுப்பான். இப்படிப்பட்ட ஒழுக்கக்கேடுகளை அரசர் செய்தாலும், அந்தணர் செய்தாலும் தகுந்த தண்டனை வெகுவிரைவில் கிடைக்கும் என்பது நிச்சயம். ஏனெனில் இனி கலிகாலம். கலிகாலத்தில் கைமேல் பலன்."

"விதுரரே, பஞ்சமாபாதகங்கள் என்று ஐந்து விஷயங்களைச் சொன்னீர்கள். துரோகமான காரியங்கள் எவை? உங்களால் பட்டியலிட முடியுமா?" ஒரு அந்தணர் எழுந்து கேட்டார்.

"வீட்டில் தீ வைப்பவன், விஷம் வைப்பவன், மனைவியை தவறான நடவடிக்கையில் ஈடுபடுத்தி அதன்மூலம் பிழைப்பவன். காமத்திற்கு உதவும் மூலிகை விற்பவன், ஆயுதம் செய்பவன், கோள் சொல்பவன், நண்பனுக்கு துரோகம் செய்பவன், மாற்றான் மனைவியை விரும்புபவன், சிசுவைக் கொன்றவன், குருவின் மனைவியை அடைந்தவன், நாத்திகன், வேத நிந்தை செய்பவன், உயர்ந்த பழக்க வழக்கங்கள் இல்லாதவன், அரசாங்க உத்தியோக பலத்தால் எல்லா வியாபாரிகளிடமும் லஞ்சம் வாங்குபவன், ஆடு மாடுகளை ரகசியமாகத் திருடி விற்பவன், பலமிருந்தும் காப்பாற்று என்பவனை இம்சை செய்பவன் இத்தனை பேரும் உயர்ந்த துரோகிகள் என்று சொல்லலாம்."

"விதுரரே, நல்ல விஷயங்களை எங்களுக்காக நீங்கள் சொல்லித் தருகிறீர்கள். ஆனால் உங்களைத் தவிரவும் நல்லவர்களோடு நான் தேடிப் பழக விரும்புகிறேன். யாரோடு நட்பாக இருக்கலாம். அதற்கு ஏதேனும் இலக்கணம் உண்டா?" ஒரு இளைஞன் எழுந்து நின்று கேட்டான்.

விதுரர் அவனைப் பார்த்து பதில் சொன்னார். "நன்றி அறிந்தவன், தர்மம் செய்பவன், சத்தியம் தவறாதவன், அல்பத்தனம் இல்லாதவன், உறுதியான பக்தி உடையவன். இந்திரியங்களை வென்றவன். நண்பர்களை ஒருநாளும் கைவிடாதவன் இப்படிப்பட்ட மனிதரோடு நட்புறவு கொள்ளுங்கள். அந்த நட்பு உங்களைப் பலப்படுத்தும்."

"விதுரரே, சற்று முன்பு கடவுள் இங்கு மறுபடியும் பிறப்பார் என்று பேசப்பட்டது. கடவுள் பிறப்பதால் உலகத்திற்கு என்ன நன்மை?"

"மனித குலம் அகங்காரப்பட்டு அலையும்போதெல்லாம் அங்கே கடவுள் தோன்றுகிறார் நண்பரே. மனிதகுலத்தை திசைதிருப்பி மறுபடியும் நல்ல வழியில் செலுத்த கடவுள் இடையறாது முயற்சி செய்து கொண்டிருக்கிறார். மனிதர்கள் தங்களது புத்தியாலும், உடல் வலிவாலும், கர்வம் பிடித்த மனதாலும் நீதியின் போக்குகளை மாற்றுகிறார்கள். தருமத்தை திருத்த சொல்கிறார்கள். தாங்கள் செய்வதே 'சரி' என்று சொல்வதற்கு தங்களைச் சுற்றி பெரும்படை வைத்திருக்கிறார்கள். 'இல்லையென்று யார் சொல்ல முடியும்' என்று எகத்தாளமாய் பேசுகி



ஹெல்த் & Beauty

அக்டோபர் இதழில்...

கர்ப்பகால பிரச்சனைகள் களைய வழிகள்...

சித்தத்தில் தடுப்பு மருந்துகள்!



முதலிரவில் பேய் ஆட்டம்!

எந்த எண்ணெய் சிறந்தது?

மருத்துவம் தெரிந்து கொள்வோம்!

வாங்கிப் படியுங்கள்!

ஆன்மீகம்

அக்டோபர் '99

நவராத்திரி சிறப்பிதழ்

வண்ணமயமான அட்டைப்படத்துடன்

★ஸ்ரீ ஜெயேந்திரர் சுவாமிகளின் கேள்வி பதில்கள்



★அறிவொளி, சுகிசிவம், வே.லட்சுமணன், தென்கச்சி சுவாமிநாதன்

★ஓவியர்கள் எஸ். ராஜா, சில்பி, தாமரை ஆகியோரின் எண்ணப் பொலிவில்...

படிக்கத் தவறாதீர்கள்!

றார்கள். அப்படிப்பட்ட மனிதர்களிடமிருந்து நல்லவர்களைக் காப்பாற்ற தர்மத்தை இரட்சிக்க கடவுள் பிறக்கிறார். கடவுள் பிறக்காது போனால் அதர்மம்தான் தொடர்ந்து ஆட்சிசெய்யும்.

அதர்மம் என்பது எளியவர்களை அடித்து நொறுக்கும். அபலையான பெண்களை வேதனைப்படுத்தும். உயிரினங்களை கடும் துன்பத்துக்கு உள்ளாக்கும். உலகம் முழுவதும் அன்பும், பிரேமையும் தழைத்து ஓங்க, அதர்மத்தைச் சாய்க்க கடவுள் இங்கு வந்துதான் ஆகவேண்டும். அதற்காக மட்டும்தான் அவர் இங்கு வருகிறார். மற்றபடி கடவுளுக்கு பூமியில் ஆகவேண்டிய காரியம் எதுவும் இல்லை."

"மறைமுகமாக ஒன்று சொல்லிவிட்டீர்கள் விதுரரே." ஒரு கிழவர் உட்கார்ந்த வண்ணமே விதுரரைப் பார்த்துப் பேசினார். எல்லோரும் அவரைப் பார்த்துத் திரும்பினார்கள். "அதர்மம் அதிகரித்து விட்டது என்பதை கடவுள் வருகையின் மூலம் நாம் தெரிந்துகொள்ளலாமா அதைத்தான் நீங்களும் ரகசியமாகச் சொல்கிறீர்களா?"

"எல்லாவற்றையும் வார்த்தையாகச் சொல்ல எனக்கு விருப்பமில்லை. சொல்ல வேண்டிய அவசியமுமில்லை. அதர்மம் அதிகரித்துக் கொண்டு தான் இருக்கிறது. அரசர்களின் அட்டகாசம் ஒவ்வொரு நாளும் பெரிதாகிக்கொண்டு வருகிறது. இது வெகுவேகமாக உச்ச கட்டத்தை அடையும். அந்த அவலத்தை நீங்கள் பலபேர் காண்பீர்கள். எதுவும் செய்ய முடியாமல் மௌனமாக இருப்பீர்கள். எதிர்க்க முடியாமல் தவிப்பீர்கள். ஆனால், கடவுள் தட்டிக்கேட்பார். தண்டிப்பார்."

"விதுரரே, இன்னொரு கேள்வி" ஒரு நடுத்தர வயதினன் எழுந்து நின்றான்.

"கேளப்பா" விதுரர் அவன் பக்கம் திரும்பினார். கூட்டம் அமைதியாய் அவர்களையே பார்த்தது.

"கடவுள் ஏன் கடவுளாக வராது மனிதனாக வருகிறார்?"

"மனிதர்களுக்கு உண்டான தர்மத்தை மனிதனாகச் சொல்வது தானே சிறப்பு. கடவுளாக சொன்னால், வெறும் கட்டளைக்கு கீழ் படும் படியாக மனிதர்கள் அதை கேட்கலாம். ஆனால் தானே புரிந்துகொண்டு தன் புத்தியால் தர்மத்தை காப்பதுதான் சிறப்பு. அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்சொல்லும் அளவுக்கு அவனே தர்மத்தை பழக்கிக் கொள்வது தான் நல்லது. தர்மவானாக இருக்க முடியாது என்று நமக்குள் பேச்சுக்கள் வரலாம். தர்மவானாக நின்று கடவுள் உங்களுக்கு காட்டுவார். வாழ்வது எப்படி என்பதை விளக்குவார். பேச்சாலோ, செய்கையாலோ உங்களுக்கு அதை புரியவைப்பார்."

"விதுரரே, சமீபத்தில் நடந்த அதர்மத்தை சுட்டிக்காட்ட முடியுமா, அது என்ன செய்யும் என்பதை விளக்க முடியுமா, சுத்தமாக தெரிந்துகொள்வதற்காக உதாரணத்தோடு கேட்கிறேன்."

விதுரர் கண்களை மூடிக்கொண்டார். "அம்பிகை, அம்பாலிகைகள் சுயம்வரத்தில் புகுந்து விசித்திரவீரியனுக்காக பீஷ்மர் அவர்களை எடுத்து வந்தது என்னளவில் ஒரு அதர்மம். தேவையற்ற விஷயம். இதில் அம்பை என்ற பெண் சிக்கிக்கொண்டாள். மனப்பிறழ்ச்சி ஏற்பட்டு பாதைகளில் அநாதையாக திரிந்து கொண்டிருக்கிறாள். அவளை காதல



னும் ஏற்காமல், விசித்திரவீரியனும் மறுத்துவிட்டு, பீஷ்மரும் ஏற்க முடியாமல் தனித்துப் போயிருக்கிறாள். தனித்துவிடப்பட்ட பலம் வாய்ந்த பெண்கள் ஒரு குலத்தையே நாசம் செய்வார்கள்.

அம்பிகையும், அம்பாலிகையும் சிறிது உற்சாகமானவர்கள். விசித்திரவீரியனை முன்நிறுத்தி அவன் பலத்தையும் பொருளையும் காட்டி அவர்களை தன்வயப்படுத்தியிருக்கலாம். மாறாய் பிரம்மச்சரிய விரதம் பூண்டு, திருமணப் பருவத்தைத் தாண்டிய பீஷ்மர் தன் படை வலிமையால் ஆயுத வலிமையால் அந்த பெண்களை ஹஸ்தினாபுரத்துக்கு கொண்டு வந்தது நல்லதல்ல. அந்தப்பெண்கள் உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் திருதராஷ்டிரனும், பாண்டு வும் பிறந்தார்கள். இந்த இரண்டு பிறப்புக்களுமே தவறாகி விட்டன. என் பிறப்பு வீணாகி விட்டது. வெறும் பேச்சாகி விட்டது.

எனவே இந்த கணம் இந்த தேசத்தை ஆள்வதற்கு சரியான அரசர் இல்லை. ஆளுவதற்கு சரியான அரசு இல்லாதபோது, அடக்குவதற்கு சரியான அரசு இல்லாதபோது, தர்மம், அதர்மம் காட்டுவதற்கு சரியான தலைவன் இல்லாதபோது தான்தோன்றித்தனங்கள் அதிகமாகும். இதோ திருதராஷ்டிரன் பிள்ளைகள் பெறத்துவங்கி விட்டான். பாண்டுவோ குந்தியிடம் சாபம் பற்றி பேசிவிட்டான். விதுரரின் வெளிப்படையான பேச்சு அந்த மக்களை அதிரச் செய்தது. அவர்கள் இப்படிப் பேசுகிற அரசகுடும்பத்தவரை இதுவரை பார்த்ததே இல்லை. அவர்கள் திகைப்போடு விதுரரை வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள்.

"ஆனால் என்னாலோ, திருதராஷ்டிரனாலோ, பாண்டுவாலோ இந்த பரதகண்டத்திற்கு எந்த ஆபத்தும் வந்துவிடாது. இதற்கு அடுத்து வரப்போகும் தலைமுறை இப்படியே இருக்கும் என்று சொல்வதற்கு இல்லை. அவர்கள் வேறுவிதமாக இருக்கலாம். உங்களை வேறுவிதமாக நடத்தலாம். எனவே நீங்கள் கவனமாக இருப்பது நல்லது."

ஜோசியர் எழுந்தார். "கிரகங்கள் பலதும் தவறான பாதையில் இருக்கின்றன. சில சங்கமங்கள் அரசை பலவீனமாக்க முயற்சிக்கின்றன. அந்த கிரக சங்கமங்களினால் மக்களின் நிம்மதி குறையும் என்பது என்னுடைய கணிப்பு. ஆயினும் மிகச்சரியான ஒரு நேரத்தை என்னால் கணிக்க முடியவில்லை. தவறான அரசர்கள்தான். தவறான அரசாங்கம் தான் மக்களின் வேதனைகளுக்கு காரணம் என்று சொல்கிறீர்கள். ஒரு தவறான அரசாங்கம் அல்லது தவறான அரசனுடைய பிறப்பு எந்தவிதமான சங்கேதங்களைக் கொண்டிருக்கும்?"

"வௌவால்கள் கத்தும். கழுகுகள் தரை நோக்கிப் பாயும். புறாக்களும், கிளியும் ஓரிடத்தில் நிற்காமல் உயரே கிளம்பி, கிளம்பி கதறிக் கொண்டிருக்கும். கோடைகாலத்தில் திசைகள் இருட்டாகும் அளவுக்கு மழைமேகங்கள் சூழ்ந்து கொள்ளும். மழையின்றி இடிஇடித்து கூரை மீது விழுந்து பற்றிக்கொள்ளும். சூரைக்காற்று வீசும். ஓநாய்கள் நகரத்தில் அலையும். இவையே மோசமான அரசைச் சொல்லும் சங்கேதங்கள்."

"நாய்கள் ஊளையிட்டாலும் ஓநாய்களின் வருகைக்கு சமம். ஆயினும் இவைகளைத் தெரிந்துகொண்டு என்ன செய்யப்போகிறீர்கள். துக்கமான காலத்தில் இறைவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வ தும்,

இறைவன் நாமத்தை இடையறாது சொல்வதும்தான் நல்லது."

"ஐயனே, விதுரனே, நான் தொண்டு கிழவி. வேலைசெய்யக்கூட சக்தியற்றவள். என் குழந்தைகளும் மந்திரியான என் எஜமானரும் எனக்கு உணவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு ஒரு விண்ணப்பம் உங்களிடம் சொல்வதற்கு இருக்கிறது."

"சொல்லுங்கள் 'தாயே, நீங்கள் என்னை சீராட்டியிருக்கிறீர்கள் உங்களை நான் நன்கு அறிவேன். உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்கள்."

"கடவுள் பிறந்தாரென்றால், அவரை ஒருமுறை நான் பார்க்க வேண்டும். நமஸ்கரிக்க வேண்டும். தயவுசெய்து, எனக்கு கடவுளை அறிமுகப்படுத்துவீர்களா, கடவுள் பிறந்து வளரும்வரை நான் உயிரோடு இருப்பேனா?"

"இருப்பீர்கள் தாயே. உங்களுக்கு தொண்ணூறு வயதுதானே ஆயிற்று. இன்னும் முப்பது வயது வரை நீங்கள் தாராளமாக இருப்பீர்கள். கலிகாலத்திற்குப் பிறகுதான் மனிதனின் ஆயுசு மிகவும் குறையப் போகிறது. நூற்றியிருபது வயதுவரை தெம்போடும், தெளிவோடும் நீங்கள் நடமாடிக் கொண்டிருப்பீர்கள். கடவுளைத் தரிசிப் பீர்கள். அவர் கரம் பட்ட பிறகு மெல்ல ஹஸ்தினாபுரத்தை விட்டு காட்டுக்குப் போய் தவம் செய்து கரையேறுவீர்கள். கடவுளைத் தரிசிக் கும் பாக்கியம் உங்களுக்கு உண்டு. இதை என் உள்மனம் சொல்கிறது" விதுரர் சொல்ல அந்த கிழவர் விதுரருக்கருகே போய் அவரை பணிய முற்பட -விதுரர் அந்தக்கிழவரைத் தழுவிக்கொண்டார்.

.எல்லோரும் அந்தக் காட்சியைப் பார்த்து எழுந்து நின்றார்கள். விதுரரை வலம்வந்து நமஸ்கரித்தார்கள். தங்களிடத்திற்கு உறங்குவதற்கு போனார்கள்.

விதுரர் மெல்ல பூந்தோட்டத்தில் உலாவப் போனார். சிறிய மணிமண்டபத்தில் உட்கார்ந்து கொண்டு கடவுள் பிறப்பைப் பற்றி யோசிக்கத் துவங்கினார்.

ஒருநாள் குந்தியின் மூலம் இரகசியமாய் பாண்டுவுக்கு ஏற்பட்ட சாபம் பற்றி விதுரருக்கு தெரிய வந்தது. கின்தவமுனி என்பவர் மான் வடிவெடுத்து தன் மனைவியோடு சந்தோஷமாய் கூடிக்கொண்டிருக்கையில் அது யாரென்று தெரியாமல் பாண்டு நாணை குறிபார்த்து அடிக்க அம்பு பெண்மானின் நெஞ்சில் ஊடுருவி பின்னாலிருந்த ஆண்மான் மீதும் தைத்து நின்றது. மானாக இருந்தவர்கள் மனிதராக மாறினார்கள்.

"இரண்டு ஜீவன்கள் சந்தோஷமாக இருக்கும்போது அதைப்பற்றி சிறிதும் சிந்தியாமல் உன்னுடைய மாமிசத்தோல் ஆசைக்காகவே அம்படித்துக் கொன்றாயே, நீ எப்படி அரசனாக இருக்க முடியும். நீ எப்படி சந்தோஷமாக வாழ முடியும். கலியுகம் பிறந்துவிட்டது என்பதற்கு இதோ இன்னொரு சாட்சி. மிகப்பெரிய கொலைபாதகங்கள் இதுபோல் பலதும் நடக்கப்போகின்றன.

ஒரு முனிவர் தன் பிரிய மனைவியோடு விதம்விதமான உருவெடுத்து வனத்தில் அலைய, மான்களாக சிலகாலம் அவர்கள் வாழ பாண்டு அவர்களை அம்பால் அடித்தான். முனிவர் சுய உருவானார்.



பாண்டுவே, இதோ நான் சந்தோஷமான நேரத்தில் நெஞ்சு ரணத்தோடும் நிற்பது போல, நீ உன் சந்தோஷமான நேரத்தில் எதுவும் செய்ய முடியாமல் சரிந்து கிடக்க வேண்டும். மீறி முயன்றால் மரணமடைய வேண்டும். கூடலுக்கு சிறிதும் தயாராக இல்லாத ஆண்மகனாக நீ வளைய வரவேண்டும். இது உன் மனைவிக்கு துக்கத்தைத் தர, உனக்கு அவமானத்தைத் தரும்" என்று கூச்சலிட்டார்.

பாண்டு தவறு உணர்ந்து மன்னிப்பு கேட்டு அவர் இறந்தபிறகு அவருக்கு ஈமக்கடன்கள் செய்தான்.

விதுரர் இதைக் கேள்விப்பட்டதும் வம்சாவளிக்கு மறுபடியும் ஆபத்து வந்துவிட்டதே என்று வருந்தினார். ஆனால் குந்தி இன்னொரு ஓலை அனுப்பியிருந்தாள்.

தனக்கு கிடைத்த வரத்தின் உதவியால், தான் பிள்ளைப்பேறு அடைய முடியும் என்று தெரிவித்திருந்தாள். இளம் வயதில் துர்வாச முனிவருக்கு பணிவிடைகள் செய்ததால் அவர் மகிழ்ந்து போய் பல மூலமந்திரங்களை சொல்லிக் கொடுத்ததாகவும், அதன் மூலம் அந்த தேவதைகளை வரவழைத்து அவர்களுடைய சக்தியை கருவில் ஏற்றி மிக பலமுள்ள், தெளிவுள்ள குழந்தைகளை பெறமுடியுமென்று விதுரருக்கு விளக்கியிருந்தாள்.

பாண்டுவின் சம்மதத்தோடு குந்தி எமதர்மனை அழைத்தாள். தர்ம நீதி தவறாத ஒரு பிள்ளை வேண்டுமென்று வேண்டினாள். அவளுக்குள் எமதர்மனின் சக்தி இறங்கியது. தர்மராஜனின் இன்னொரு அம்சம் பூமியில் பிறந்திருப்பதைக்கண்டு விதுரர் மகிழ்ந்தார்.

அப்படியென்றால் என்ன அர்த்தம்? நான் போதாதென்றல்லவா அர்த்தம். வெறும் நீதி உபதேசம் பயன்தராது என்றல்லவா அர்த்தம். அதர்மம் தலைவிரித்தாடுகிறபோது போதனைகள் உதவாதென்றல்லவா அர்த்தம். அப்பொழுது யுத்தம் செய்யத் தகுதியான இளைஞர்கள் இங்கே உற்பத்தி செய்யப்பட போகிறார்கள். தர்மகுணமுள்ள இளைஞர்கள் பிறக்கப்போகிறார்கள். அப்படியானால் தர்மத்திற்கும், அதர்மத்திற்கும் சண்டை துவங்கிவிட்டது என்று அர்த்தம். நல்லது. இந்த சண்டையை நாம் சந்தித்துத்தான் ஆகவேண்டும் என்று அமைதியானார்.

தருமர் பிறந்த சிறிதுநேரத்தில் உலகத்தில் கடும் மழை பொழியத் துவங்கியது. விதுரருக்குக்கீழே வேலை செய்த வேலைக்காரர்கள் ஓடி வந்தரர்கள்.

'கடவுள் பிறந்து விட்டாரா, பிறந்து கொண்டிருக்கிறாரா, அல்லது பிறக்கப்போகிறாரா' என்று ஆவல் பொங்க விசாரித்தார்கள்.

"குந்திக்கு தருமபுத்திரர் என்ற மகன் பிறந்திருக்கிறான். இவர் பிறந்த பதினாறாவது நாழிகை கடவுள் பிறப்பார். அதற்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்து விட்டன"என்று விதுரர் தன் வேலையாட்களுக்கு பதில் சொன்னார்.

வேலையாட்கள் வேலைக்கு நடுவே கரம் குவித்து மனம் ஒடுங்கி கடவுள் வருகைக்காக பிரார்த்தனை செய்தார்கள் 'வருக வருக' என்று இடைவிடாது கோஷமிட்டார்கள்.

ஹஸ்தினாபுரத்திலிருந்து கிழக்கே வெகுதொலைவில் கடவுள் பிறந்தார். பிறந்த இடத்திலிருந்து கடவுள் இடம் மாறினார். வானத்தில் மழை மேகங்களுக்கு நடுவே மிகப்பெரிய சுடரொன்று பளிச்சென்று தோன்றியது. ஒரு நாள் கழித்து மறைந்தது. அதை ஹஸ்தினாபுரத்தில் எல்லா வேலையாட்களும் பார்த்தார்கள். விதுரரிடம் ஓடிவந்து சொன்னார்கள். விதுரர் அவர்கள் பார்த்தது கடவுளுக்கான அறிகுறிகள் என்று உறுதி செய்தார். அவர்கள் சந்தோஷமானார்கள்.

கடவுள் வளர்ந்து வாலிபனாக எப்போது தங்கள் தேசத்துக்கு வருவார் என்று ஆவலோடு காத்திருந்தார்கள். அவர் வருகையைப் பற்றியே தினம் தினம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"இந்நேரம் கடவுள் குப்புறப்படுத்திருப்பாரல்லவா, இந்நேரம் கடவுள் தவழ்ந்து போயிருப்பார் அல்லவா. இந்நேரம் கடவுள் ஓடி விளையாடியிருப்பாரல்லவா, இந்நேரம் கடவுள் குதிரையேற்றம், யானையேற்றம் என்று கற்றுக்கொண்டிருப்பார் அல்லவா, இந்நேரம் கடவுள் குருகுல வாசம் செய்திருப்பாரல்லவா" என்று ஒவ்வொரு நாளும், கடவுளைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். அமைதியாகவும், அன்பாகவும், ஒற்றுமையாகவும் கடவுளின் எதிர்பார்போடும் ஹஸ்தினாபுரத்து வேலைக்காரர்கள் இருக்க, அங்கு பிறந்த இராஜகுமாரர்கள் அட்டகாசமாய், ஆவேசமாய், ஆக்ரோஷமாய் வளர்ந்தார்கள்.

அரண்மனையில் உள்ள வேலைக்காரர்களும், தாதியும்தான் இந்த இராஜகுமாரர்களிடம் படாதபாடுபட்டார்கள். திருதராஷ்டிரன் தனக்கு கண் தெரியவில்லை என்ற கவலையினால், தன்னால் பார்க்க முடியவில்லை என்கிற வருத்தத்தினால் தன் குழந்தைகளை யாரும், எதுவும் சொல்லிவிடக்கூடாது என்பதில் மிக கவனமாக இருந்தான். தன்னுடைய சுய பச்சாதாபத்தை, தன் குழந்தைகள் மீது ஏற்றினான். அப்பாவிடம் போனால் அதிக சலுகைகள் கிடைக்கும் என்பதால் அந்த இராஜகுமாரர்களும் அரசரை நோக்கி ஓடினார்கள். தொட்டதற்கெல்லாம் பலரை குற்றம் சொன்னார்கள். அரசனிடம் தந்திரமாகப் பேசி மற்றவர்களை பயமுறுத்தினார்கள். இரவு பகல் பாராமல் வேலையாட்களை கசக்கிப் பிழிந்தார்கள். சிறு தவறுக்கும் கடுமையாக தண்டித்தார்கள். அவமானப் படுத்தினார்கள்.

விதுரரால் பொறுமையும், நீதிநெறிகளும் போதிக்கப்பட்ட வேலையாட்கள் கடவுள் மீது அசைக்க முடியாத நம்பிக்கையோடு மிகுந்த அமைதி காத்தார்கள். எத்தனை துன்பம் வந்தாலும் மெல்ல கண்ணீரைத் துடைத்துக்கொண்டு கடவுள் வருவார், காப்பாற்றுவார் என்று தங்களைத் தாங்களே சமாதானப்படுத்திக் கொண்டார்கள். தாங்கள் தவறாக தண்டிக்கப்பட்டோம் என்றுகூட எவரோடும் பேசாமல் இருந்தார்கள்.

யாரும், எங்கும், எந்தவித எதிர்ப்பும் காட்டாததால் இந்த இராஜகுமாரர்களின் பிடிவாதங்கள் அதிகமாயின. குழந்தைகளாக இருந்த போதும், அவர்களுக்குள் ஏற்பட்ட பிடிவாதங்கள் பெரிதாகி பொது மக்கள் நடுவே புழங்கும்போது வெளிவந்தன.

காலம் தனக்குத்தானே சூதாட்டம் ஆடிக்கொள்ளும் வல்லமையைப் பெற்றது. தானே எதிரும் புதிரும் ஆடி இரண்டு பக்கமும் அமர்ந்து பாய்ச்சிகையை உருட்டி சந்தோஷப்பட்டுக்கொள்ளும் விசித்திர குணம் உடையது. காலம் இடைவிடாது விஷயங்களை கலைத்துப் போடும் ஆற்றலுள்ளது.



காலம் சோம்பலுடையது. காலம் கோபமுடையது. காலம் பூமியில் குதூகலத்தையும் கவிழ்க்கிறது. பணியாட்களுக்கு நீதிநெறி புகட்டி நிறைவாக்கிய காலம் இராஜகுமாரர்களை கட்டுப்பாடின்றி திரிய வைத்தது. பணியாட்களின் அமைதியை இராஜகுமாரர்கள் தவறாக எடுத்துக் கொண்டார்கள். தங்கள் வீரத்தை கண்டு பயம் என்று கற்பனை செய்து கொண்டார்கள்.

கௌரவர்களின் கூட்டம் அதிகமாகி விட்டது. எல்லோரும் உட்கார்ந்து கொண்டு முன்னோர்களின் வீரக்கதைகளை கேட்டார்கள். ஒவ்வொருவரும் அதுபோல ஆக முயற்சித்தார்கள். தன் குழுவை சேர்ந்த அடுத்தவருக்கு தன் பலத்தைக் காட்ட எண்ணினார்கள். பாராட்டு பெறத் துடித்தார்கள்.

வெளிப்பார்வைக்கு சகோதர ஒற்றுமையும், அவர்களுக்குள் கேவலமான அடிதடியும் கொண்டிருந்தார்கள்.

துரியோதனன் தம்பிகளுக்குள்ளே இருக்கும் அடிதடியை குறைக்க அவர்களை பாண்டவர்கள் மீது திசைதிருப்பினான். முரட்டுத்தனமும், முட்டாள்தனமும் நிறைந்த சகோதரர்களை பாண்டவர்களின் செழுமையை காட்டி பயமுறுத்தினான். மித்ர தவம் செய்யத் துவங்கினான். அவர்களைக் காட்டி அதிகம் பொறாமையை வளர்த்தான்.

அவர்கள் பலத்தை அதிகம் சொல்லி கலவரப்படுத்தினான். 'உங்களை காப்பாற்ற நான் இருக்கிறேன்' என்று தொடைதட்டினான். எப்போதெல்லாம் அவர்களுக்குள் இணக்கம் குறைகிறதோ அப்போது பாண்டவர்களை வம்புக்கு இழுத்து அவர்களைத்தாக்க வைத்தான். பிறகு குறுக்கே புகுந்து தடுத்தான்.

"என் தம்பிகள் எனக்கு அடங்கமாட்டேன் என்கிறார்கள். சற்று அடக்கி வையேன்" பீமனைக் கெஞ்சினான். பீமன் அடித்து அடக்க, அவனை இழுத்து விலக்கி அடிபட்ட தம்பிகளை அப்புறப்படுத்தினான்.

துரியோதனன் தம்பிகள் பாண்டவர்களை வெறுத்தார்கள். பாண்டவர்கள், பீமனை குறைசொன்னான். கௌரவர்களின் முட்டாள்தனமான ஒற்றுமை பார்த்து சிரித்தார்கள்.

எந்த இனத்தில் ஆள் கூட்டம் அதிகமாகிறதோ அது ஜெயிப்பது போல் ஆரம்பத்தில் தோன்றினாலும் இறுதியில் சிதறி நாசமாகும். உண்மையில் வலுவேற்றிக் கொள்ளாத கூட்டம், பொய்வீரம் காட்டுகிற கூட்டம், மிகப்பெரிய யுத்த நாசத்திற்கு காரணமாகும்.

உலகத்தின் மிக அபத்தமான விஷயம் வன்முறை. வன்முறை தீர்வு சொன்னதே இல்லை. வன்முறை வன்முறையைத்தான் தூண்டியிருக்கிறது. வன்முறை அகந்தையின் வெளிப்பாடு. அகந்தை பேராசையின் கிளை. பேராசைக்கு பொறாமை அடிவேர். பொறாமை என்பது அறிவீனத்திலிருந்து கிளம்பியது. அறிவீனம் என்பது 'எனக்கு என்ன வேண்டும்' என்று பார்க்கத் தெரியாதது. தான் யார் என்று நோக்கத்

தெரியாதது.

கௌரவர்களும், பாண்டவர்களும் எதிரிகளாயினர். பொறாமையால் கௌரவர்களும், தற்காப்புக்காக பாண்டவர்களும் வன்முறையில் இறங்கினார்கள்.

தருமபுத்திரருக்கு விதுரர் யோசிக்கக் கற்றுக்கொடுத்தார். எமதர்மனின் அம்சமான தருமருக்கு ஆழ்ந்து யோசித்தல் எளிதில் கைவந்தது. இது இப்படியே போனால் எங்கு போய்முடியும் என்பது தெளிவாகப் புரிந்தது.

துரியோதனன் தன் சகோதரர்களைக் காப்பாற்றுவது போல் தானும் தன் சகோதரர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று தீர்மானித்தார். குறிப்பாய் நகுல, சகாதேவர்கள் மீது அவருக்கு மிகப்பெரிய அன்பிருந்தது. பீமனையும், அர்ஜுனனையும் யாரும் எதுவும் செய்ய முடியாது என்பது அவருக்கு தெளிவாகத் தெரிந்தது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ரகளை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குற்றச்சாட்டு. ஒவ்வொரு நாளும் நீதி விசாரணை. பெரியவர்களுக்கு அலுத்துப் போயிற்று. எதிர்காலம் பயமுறுத்தியது.

அவர்கள் குழந்தைகள்தான், விவரமறியாத பாலகர்கள்தான். வாலிபத்துக்கு நகர்ந்து கொண்டிருக்கும் இரண்டுங்கெட்டான் பிள்ளைகள் தான். அவர்கள் பொறாமையும், பிடிவாதமும் பிரமிப்பாய் இருந்தன. பீமன் ஈவு இரக்கமின்றி அடிப்பதைப் பார்த்து கலவரமாக இருந்தது. இந்த பலம் நல்லதா என்று கேள்வி வந்தது.

கனவும், நனவும் அவருக்கு சண்டையிலேயே கழித்தன. உறங்கும் நேரத்தில் கூட பல் கடித்தும் முஷ்டி மடக்கியும் உறங்கினார்கள். திடுக்கிட்டு எழுந்து அலறினார்கள். பீமன் தூக்கத்தில் எழுந்து போய் தூணை அடித்தான். பூட்டிய கதவுகளை பிளந்துகொண்டு வெளியே வந்தான். அர்ஜுனனுடைய அமைதி பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்தது. நகுல, சகாதேவர்கள் தங்களுக்குள் இடைவிடாது பல விஷயங்களை சுட்டிக் காட்டி இரகசியம் பேசிக்கொண்டார்கள்.

துரியோதனன் எல்லாரையும்விட உயரமாக இருந்தான். அதனாலேயே அந்த முட்டாள் தன்னை தலைவனாக நினைத்துக்கொண்டான். தலைவனாக வாழ்ந்தால் வெற்றி பெற்று விட முடியும். அந்த நிர்மூடன் தலைவனாக நடித்தான். நடப்பதிலும், நிற்பதிலும் அரசனாக அலட்டினான்.

தருமபுத்திரர் மட்டுமே உண்மையான அமைதியை விரும்புபவராய் இருந்தான். விதுரரை எங்கு பார்த்தாலும் நீண்ட நெடுந்தண்டமாய் விழுந்து நமஸ்கரிப்பான். பல சமயங்களில் எழுந்திருக்க மறந்து போவான். அவன் தூங்கிவிட்டான் என்று கௌரவர்கள் கேலி செய்வார்கள். வாய் விட்டு சிரிப்பார்கள். பீமன் கவலையாவான். தருமபுத்திரனை உலுக்கி எழுப்ப வேண்டியிருக்கும்.

விதுரரைப் பார்த்தால் இவ்விதம் நேருகிறது. வேறு எங்கேயும் இப்படி நேரவில்லை. விதுரரை நமஸ்கரித்தவுடன் விதுரர் எனக்குள் வந்துவிடுகிறார். நானும் அவரும் ஒருவரையொருவர் இயக்கத் துவங்கி



விடுகிறோம்.

"நீ என்ன சொல்கிறாய் அண்ணா" பீமன் கவலையோடு விசாரித்தான்.

"விதுரர் எப்போதும் எனக்குள் இருக்கிறார். நான் நினைப்பது விதுரருக்குத் தெரிகிறது. விதுரர் நினைப்பது எனக்குத் தெரிகிறது. நாங்கள் வேறுபட்டிருந்தாலும் ஏதோ ஒரு இடத்தில் ஒன்று."

கௌரவர்கள் இந்த பதிலுக்கும் சிரிப்பார்கள். "இவன் மூக்கில் சிறகு நுழைத்தால் விதுரர் தும்முவாரா... இது என் முதல் பரிசோதனை" துச்சாதனன் சொல்வான்.

இரண்டாவது பரிசோதனை என்ன? துரியோதனன் கேட்பான்.

தருமபுத்திரனை ஒரு அறையில் போட்டு வைத்துவிட்டு விதுரருக்கு வயிறு நிறைய சோறு போடுவோம். தருமபுத்திரன் ஏப்பம் விடுகிறாரா என்று பார்ப்போம் என்று இன்னொரு கௌரவர் எகத்தாளம் செய்வார்.

விதுரருக்குக்கூட இந்த கேலிகள் லேசான சினத்தை தரும். ஆனால் தருமபுத்திரர் சினம் கொள்ளவில்லை.

தனியே பேசும்போது விதுரர் தருமபுத்திரரை விசாரித்தார். உள் காயம் பட்டிருக்குமோ என்று ஆராய்ந்தார்.

நெல் முனையளவு கூட வலியில்லை. கேலி செய்தது தம்பிகள் தானே...செய்துவிட்டு போகட்டுமே...துரியோதனன் அடிதடி ரகளைக்கு வரும்போதுதான் சற்று கவலையாக இருக்கிறது. மற்றபடிக்கு என்ன கேலி செய்தாலும் எந்த வலியும் இல்லை.

அடிதடி ரகளையின்போது கூட மனம் என்ன நினைக்கிறது தெரியுமா சித்தப்பா...ஏன் ராஜகுமாரனாக பிறந்தோம். ஒரு முனிவருக்கு மகனாக, ஒரு படகோட்டியின் பையனாக, ஏழை அந்தணனாக, பாட்டுப் பாடி ஜனங்களை மகிழ்விக்கும் பாணனாக பிறந்திருக்கலாமே என்று தோன்றும்.

இப்போதும் ஒன்றும் கெட்டுப்போய் விடவில்லை. அரசபதவியை, யுவ ராஜ பதவியை உதறிவிடலாம் என்று தோன்றுகிறது. அப்படி பல பேர் போயிருக்கிறார்கள். யயாதியின் அண்ணன் யதி ஒரே ஒரு முறை சிரித்துவிட்டு விடைபெறாமல் போய்விட்டாராம். எங்கு தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லையாம். பதினேழு வயதுவரை யுவராஜனாக இருந்து விட்டு பதினெட்டாவது வயதில் பிச்சைக்காரனாக இருப்பது எப்படி சாத்தியம். எவ்வளவு உறுதியான நெஞ்சம் வேண்டும். எனக்கும் அந்த ஆசை இருக்கிறது. சகோதரர்களிடம் சொன்னேன். சகாதேவன் தவிர மற்ற எல்லோரும் கோபப்பட்டார்கள். சகாதேவன் கோபப்படவில்லை. உங்களால் துறவியாக முடியாது என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

'தருமன் துறவியானால் நான் தற்கொலை செய்துகொள்வேன்' என்று அம்மாவிடம் பீமன் பயமுறுத்தியிருக்கிறான்.

ஆனால் இவர்கள் சண்டையை பார்க்கும்போது, ஒவ்வொரு விஷயத்திலும் யார் பெரியவர் என்று நிரூபிக்க இவர்கள் அலையும் போது எந்தவிதத்திலும் நான் பெரியவனில்லை என்றுதான் உடனே எனக்குத் தோன்றுகிறது.

தருமரை. நினைக்க நினைக்க பெருமையாக இருந்தது. விதுரர்

தருமரை மனசுக்குள் தத்தெடுத்துக் கொண்டார்.

குந்தி பீமனை கூடுதலாய்க் கவனித்தாள். யாதவ குலத்து இளவல் கிருஷ்ணன் அர்ஜுனனை பேணி வளர்த்தான். நகுல சகாதேவர்கள் இந்த மூன்று சகோதரர்களால் அரவணைக்கப்பட்டார்கள்.

விதுரர் ஆழ யோசித்தார். பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் உள்ள பிரிவு பெரிதாகும் என்று புரிந்துகொண்டார். இந்த சண்டை வந்தால்தான் நல்லது என்பதையும் புரிந்துகொண்டார்.

மக்கள்தொகை அதிகரித்து விட்டது. இரண்டு வகையில் அது குறையும். ஒன்று இயற்கை உற்பாதம். அல்லது மிகப்பெரிய யுத்தம். இப்போதைக்கு இயற்கை உபாதம் வர வாய்ப்பு இல்லை. ஏனெனில் ஹோமங்களும் யாகங்களும் இடைவிடாது நடைபெறுகின்றன. சாதுக்களை யாரும் துன்புறுத்துவது இல்லை. ஆனால் பாமர மக்களை அதிகம் துன்புறுத்துகிறார்கள்.

பாமர மக்களை அதிகம் துன்புறுத்தினால் வெகு நிச்சயமாய் யுத்தம் வந்துவிடுகிறது. சாதுக்கள் இயற்கையோடு தொடர்புகொண்டவர்கள். பாமர மக்கள் அரசர்களோடு தொடர்பு உள்ளவர்கள்.

ஒரு அரசனைத் தாக்கினால் இன்னொரு அரசன் பக்கம் அவர்கள் ஓடிவிடுவார்கள். உயிர் வாழ்வதற்காகவும், துன்புறுத்தப்படாமல் இருப்பதற்காகவும் துன்புறுத்தும் அரசனைவிட வலிவுள்ள அரசனிடம் அவர்கள் போய்விடுவார்கள்.

நல்ல அரசன் பாமர மக்களை பகைத்துக் கொள்ளவே மாட்டான். அவர்களிடம் தொழில் இருக்கிறது. பந்தல் கட்ட வேண்டும் என்றாலும் சரி, வில் கட்ட வேண்டும் என்றாலும் சரி அவர்கள்தான் செய்ய வேண்டும். தேர் சக்கரம் கழண்டாலும் சரி, கோட்டைக்கதவை மாட்ட வேண்டும் என்றாலும் சரி அவர்கள் தான் ஈடுபட வேண்டும்.

இந்த மக்கள் அரசனிடம் அதிகம் எதிர்பார்ப்பதில்லை. பரிவான வார்த்தைகள்தான் முதலில் அவர்களுக்கு வேண்டும். மிகக்குறைந்த அளவு செல்வம் போதும். அரசனுடைய அரவணைப்பு இருந்தால் அவனுக்காக எதையும் செய்வார்கள்.

தேசத்தின்மீது வெறி உள்ளவர்கள், மொழியின் மீது காதலுள்ளவர்கள், படித்தவர்களிடம் வணக்கமுள்ளவர்கள். ஒரு அரசனை வேண்டாம் என்று உதறி ஓடுகிறபோது தேசத்தில் மிகப்பெரிய கலவரம் ஏற்பட்டு விடுகிறது.

பாண்டுவின் புத்திரர்களுக்கும், கௌரவர்களுக்கும் உண்டான சண்டை பரத கண்டம் முழுவதும் நாறிற்று. தொழில்தெரிந்த பாமரர்கள் வெகு எளிதில் தருமபுத்திரர் பக்கம் போனார்கள். பீஷ்மரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு சிலபேர் கௌரவர்களின் பக்கம் இருந்தார்கள்.

மக்கள் இரண்டாக பிரிந்து கிடப்பதுதான் ஒரு அரசாட்சியின் பலவீனம்.

மக்கள் பாண்டவர்கள் பக்கம் போனதை கௌரவர்கள் புரிந்து கொண்டார்கள். மறுபடியும் பாண்டவர்கள் மீது கோபப்பட்டார்கள்.

விதுரர் தன் வாழ்க்கைச்சூழல் பற்றி ஒட்டுமொத்தமாய் சிந்திக்க



துவங்கினார். 'இது அரசர்கள் காலம். வேத காலம் என்றழைக்கப்படும் அந்தணர்கள் காலம் ஒன்றிருந்தது. அந்தணர்கள் சகலவிதமாகவும் பலம் பொருந்தி ஒரு உச்சநிலையில் வாழ்ந்து வந்தார்கள். ஈர்க்குச்சியை கிள்ளி மந்திரம் ஜெபித்து போ என்று சொன்னால் அது கூரிய அம்பாக மாறி எதிரியை துளைத்து வீழ்த்தியது. மழையில்லை என்று சொன்னால் மூன்று நாள் ஹோமத்தில் கனத்த பெரிய மழை அவர்களால் வரவழைக்க முடிந்தது. அதே மழையை நிறுக வைக்கவும் மக்கள் அவர்களைக் கைகூப்பி வேண்டினார்கள். மறுபடி ஒரே ஒருநாள் உட்கார்ந்து ஜெபம் செய்தால் போதும். மழை விட்டு வானம் வெளுக்கத் துவங்கிவிடும். இதைச் சொல்லிவிட்டே அந்தணர்கள் செய்வார்கள்.

'நானிருக்க மழை பற்றி என்ன கவலை?' என்று பரிவாகப் பேசுவார்கள். தலைமுறை தலைமுறையாய் இந்த வித்தைகள் கைமாறின. மிக எளிதாக இந்த வித்தை கற்றுக்கொடுக்கப்பட்டபோது பனிச்சென்று அந்த வித்தையை விட கர்வம் முக்கியமாகி விட்டது. தகுதி உள்ளவர்க்கு வித்தைகள் கற்பிக்கப்பட வேண்டும் என்பது போய் மகனுக்கு வித்தை கற்பிக்கப்பட வேண்டும் என்று முடிவாயிற்று.

தான் ஆண்ட இடத்தை, தான் அதிகாரம் செலுத்திய ஆஸ்ரமத்தில், தான் கட்டியுள்ள பர்ணசாலைகளில் தன் மகனே மறுபடியும் ஆட்சி செய்ய வேண்டும் என்று தந்தை நினைத்திருக்கிறார். அப்படி நினைக்க தாய் காரணமாக இருக்கிறாள். தந்தைக்கு பிறகு உயிரோடு இருப்பின் தன்னை மகன்தான் பாராட்டி நடத்துவான். மற்றவர்கள் அப்படி நடத்து வார்களா என்று சந்தேகப்பட்டிருக்கிறாள். பெண்ணுக்கு அஸ்திர வித்தைகள் சொல்லித்தரப்படவில்லை.

"நீ எனக்கு துணையாக இரு" என்று வித்தையிலிருந்து அவளை ஒதுக்கிவிட்டார்கள். அவள் வித்தை புருஷனுக்கு சுகம் கொடுப்பது, சோறு சமைப்பது, அவனுக்குண்டான உபகரணங்களை சேகரித்து கொடுப்பதுமே வாழ்க்கையாகி விட்டது. ஒரே இனத்தில் அவள் இரண்டாந்தர பிரஜையானாள். இந்த இரண்டாந்தர பிரஜையாக பெண் மாறியதும் அவள் தன்னுடைய பத்திரம் பற்றி, தன்னுடைய பாதுகாப்பு பற்றி சிந்திக்கத் தொடங்கினாள். அன்பினால் கட்டிப்போட்டாள். தான் தனியாக இருக்க முடியாதோ என்று பயந்தாள். கட்டிப்போட்ட அன்பை இன்னும் அதிகமாக இறுக்கினாள். திணற வைத்தாள். அவளுக்கு ஒரு வித்தையும் சொல்லித் தரப்படவில்லையே' என்று ஓடி ஆடுகிற பிள்ளையை தந்தைக்கு முன் நிறுத்தினாள்.

"இவனுக்கு பேசவருகிற அளவுக்கு மற்ற ஆற்றல்கள் குறைவு. எனவே அஸ்திர வித்தையை என் சீடருக்கு சொல்லிக்கொடுத்துவிட்டு இவளுக்கு வேதம் ஓதுதலை சொல்லித்தர இருக்கிறேன்" என்று முனிவர் சொல்ல அவர் மனைவி கடுங்கோபம் கொண்டாள், மகளுக்கு அஸ்திர வித்தை சொல்லிக்கொடுக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு உபாயங்களை கையாண்டாள். தகுதியில்லாத மகனுக்கு, தகுதியில்லாத பரம்பரைக்கு வித்தைகள் கைமாறின. மகன் என்ற ஒரே காரணத்தால் அவன் முடிசூட்டிக் கொண்டான். தன்னை ஆசிரமத்தின் தலைவன். பர்ணசாலையின் முதல்வன் என்று பிரகடனப்படுத்திக் கொண்டான்.

அரசன்கூட சற்று மந்த புத்தி உள்ளவனாக இருந்துவிடலாம். அரசனுக்கும் மேல் இருக்கின்ற, ஆட்சியை செம்மைப்படுத்த வேண்டிய, மந்திரி போன்ற அந்தணன் அரைகுறையாக இருந்தால் மிக ஆபத்தான விஷயமாகிப் போய்விடும்.

இந்த ஆபத்து ஏற்பட்டு வேதகாலம் மெல்ல மெலியத் துவங்கி விட்டது. பலமில்லாத அந்தணர்கள் தோன்றினார்கள். வாழ்க்கையை இலகுவாக எடுத்துக்கொள்ளாமல், தத்துவ ரீதியாகப் பார்க்காமல் அந்தணர்களும் ஆசையாகப் பார்த்தார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளோடு அரசகுடும்பத்துக் குழந்தைகளைப் பழக விட்டார்கள்.

'அரசகுமாரரை கூட கூட்டி வந்து, பொன், பொருள், பசு, குதிரை; யானை, தேள் போன்றவைகளோடு வேலையாட்களும் வரவழைத்து, தர்மசாலைகளைப் பெருக்கி பலருக்கு தங்க இடம் கொடுத்து, தான் வாழ்ந்த இடத்தை ஒரு கிராமமாக மாற்றிக்கொண்டு அரசர்களுக்கு வித்தைகள் சொல்லிக்கொடுத்தார்கள். அரசர்களோடு பழகிய அவர்கள் பிள்ளைகளுக்கும் கர்வமும், கோபமும், வாய்துடுக்கும், கைநீளமும் ஏற்பட்டன.

ஒற்றர்கள் மூலம் சமீப நிகழ்ச்சியொன்றை விதுரர் கேள்விப் பட்டிருந்தார். அரசனும், அந்தணனும் நண்பர்கள். ஆசிரமத்தில் ஒன்றாகப் படித்தவர்கள். பால்ய கால சிநேகிதர்கள். அரசன் படிப்பு முடித்து நாட்டிற்குப் போனான். அந்தணர் வேறு நாட்டிற்குப் போனார். திருமணம் செய்து கொண்டான். ஒரு மகன் பிறந்தான். அவர் வளர்த்து வந்த இரண்டு பசுக்களும் திடீரென்று இறந்துவிட பாலுக்கு பெரும் அவஸ்தை ஏற்பட்டு விட்டது. குழந்தை நல்ல உணவில்லாமல் ஏங்கி அழுதது. மனைவி புருஷனைக் கடிந்துகொண்டாள். உடனே அந்த அந்தணர் தன் பால்ய கால நண்பனிடம் போய் உதவி கேட்கலாம் என்று அவன் அரண்மனைக்குப் போனார்.

தொலைதூரத்தில் அவனைப் பார்த்ததும் சந்தோஷமானார். அழுக்கு ஆடையுடனும், கலைந்த தலையோடும், வியர்வை வழியும் உடம்போடும் அரண்மனைக்குள் நுழைந்து சிங்காதனப் படியேறி அரசன் பெயரை ஒருமையில் உரக்கக்கூறி, கைப்பற்றி நலம் விசாரித்தார். அரசன் 'நலம்' என்று ஒரு வார்த்தை சொன்னான். என்ன வேண்டும் என்று கேட்டான். குழந்தைக்காக சில பசுக்கள் வேண்டுமென்று கேட்டார்.

"தாராளமாகத் தருகிறேன். ஆனால் இன்னொரு முறை இப்படி அரண்மனைக்குள் நுழைந்து, என்னை ஒருமையில் அழைத்து, என் கைகளைப் பற்றிக் கொள்ளாதீர்கள்.

அந்தணர் அந்தணராக இருங்கள். அரசனிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று முன்மாதிரியாக நடந்துகொள்ளுங்கள்" என்று கடிந்து கொண்டான். நண்பரான அந்தணர் துடித்துப் போனார். பசுக்கள் வேண்டாமென்று திரும்பி வந்தார். அவர் கோட்டை வாசலில் சபதம் செய்தார்.

'சிறுவனாக இருந்தபோது உண்டான சிநேகத்தை இப்போது முன்வைத்து எப்படிக் கொண்டாடலாம் என்று கேட்கிறாயா....ஒரு சிறுவனை வைத்தே உனக்கு பாடம் புகட்டுகிறேன். நீ மிகப்பெரிய வீரன்



என்று நினைக்கிறாயா. என்னிடம் பாடம் கற்ற ஒரு சிறுவனை வைத்து உன்னை ஓட ஓட விரட்டுகிறேன். உன்னை தேர்க்காலில் கட்டி இழுத்து வரச்செய்கிறேன்' என்று சபதம் செய்தார்.

இதில் அரசனின் குறையும் இருக்கிறது. அந்தணரின் குறையும் இருக்கிறது. இடம், பொருள், ஏவல் தெரியவில்லையென்றால் அவர் அந்தணரே இல்லை. அறிவில் குறைந்தவர். அந்தணனுக்கு உண்டான பொறுமையும் இல்லை. இத்தனை வருடங்களாக இவர் கற்றது ஆத்திரம் மட்டுமே.

அரசன் ஒரு நண்பனின் அன்பை புரிந்து கொள்ளவில்லையெனில் அவன் பயத்திலிருக்கிறான் என்று அர்த்தம். அவன் தன்னைத்தவிர வேறு யார் நெருங்கினாலும் சந்தேகப்படுகிறான் என்று அர்த்தம். இது ஒரு வியாதி என்று பொருள்.

இப்படி பயப்படுகிற அரசனால் தேசத்தில் கலவரம்தான் உண்டாகும். நண்பர்கள் பகைவராகப் போவார்கள். மனைவி கூட துரோகம் செய்துவிட நேரும். புத்திரர்கள் எதிரிகளாக மாறுவார்கள். அந்த அரசன் வேகமாக வந்த ஒரு நல்ல நண்பனை தேவையில்லாமல் அவமானம் செய்தான். இது இவர்கள் தவறு. இவர்கள் தவறு என்று சொல்வதைவிட இன்னும் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால் இது காலத்தின் கோலம் என்று தான் சொல்ல வேண்டும்.

கோபமுள்ள அந்தணர், அலட்சியம் செய்யும் அரசன் இவர்கள் அதிகரித்து விட்டார்கள். எல்லா கௌரவர்களும், அலட்சியம் செய்கிற கர்வமிக்க இளைஞர்கள். நல்ல சக்திகளோடு பிறந்த பாண்டவர்களுக்கு பொறுத்துக்கொண்டு போகத் தெரியவில்லை. அவர்களும் அடிக்கடி வேகப்படுகிறார்கள். குறிப்பாய் அர்ஜுனனும், பீமனும் அதிகம் ரோஷப் படுகிறார்கள். தருமபுத்திரர் மட்டுமே நடுநிலையிலிருக்கிறார். இது போதும் என்று மிகச்சாதாரணமாக இருக்கிறார். மக்களோடு நெருங்கி வாழ்கிறார். பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் ஒற்றுமை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அடிக்கடி வனங்களுக்கு போய் வேட்டையாடுகிறார். பரஸ்பரம் உணவுகள் பரிமாறச் சொல்கிறார். ஆனால் ஒவ்வொரு முறை வேட்டைக்கு போய் வரும்பொழுதும், பிரிவினைகள்தான் அதிகமாகிறதே தவிர ஒற்றுமை ஏற்படக் காணோம்.

துரியோதனன் கெட்டிக்காரனாக இருந்தால் தருமனையும், பீமனையும் நட்பாக்கிக் கொண்டிருக்க வேண்டும். புகழ்ந்து பேசி, சிலசமயம் பணிந்து அவர்களிடம் ஆதரவு கேட்டிருக்க வேண்டும். பீமன் முரடனே தவிர மிக இளகிய மனம் கொண்டவன். நல்லவன். குழந்தைபோல் குணம் கொண்டவன். தருமபுத்திரர் எது சொன்னாலும் உடனே பணிந்து செய்பவன்.

அர்ஜுனனோ இரண்டு அண்ணன்களும் எந்தப்பக்கம் இருக்கிறார்களோ, எந்தக் கேள்வியும் இல்லாமல் அந்தப்பக்கம் நிற்கும் தன்மை உடையவன். நகுல, சகாதேவர்கள் நிறைய கௌரவர்களுக்கு சொல்லிக் கொடுத்து அவர்களை வெகு எளிதில் நல்வழிப்படுத்தியிருப்பார்கள்.

துரியோதனனுக்கு பொறுமையில்லாமல் போய்விட்டது. பொறாமை அதிகரித்து விட்டது. பொறுமையின்மையும், பொறாமையும்

ஒரு மனிதனை படுகுழியில் தொண்டு போய் விட்டுவிடும். பொறுமையின்மைக்கும் பொறாமைக்கும் அடிப்படையாக இன்னொரு விஷயம் இருந்தது. அது குடிப்பழக்கம்.

கௌரவர்களின் மது அருந்தும் பழக்கம் அவர்களை மிக மோசமான இடத்திற்கு கொண்டு போயிற்று. இந்த மது அருந்தும் பழக்கத்தை அவர்கள் மிகச்சிறிய வயதிலேயே ஆரம்பித்து விட்டார்கள். உற்சாகமாக இருக்க வேண்டுமென்று அனுமதிக்கப்பட்ட அந்த பானத்தை இவர்கள் இடைவிடாது குடித்தார்கள். அதற்கு என்ன காரணம் என்று யோசித்த போது வேலையாட்கள் காரணம் என்று தெரியவந்தது. ஆண், பெண் வேலையாட்களை இந்த இராஜகுமாரர்கள் அதிகம் அடித்து துன்புறுத்தினார்கள். மிக மோசமாக அவமானப்படுத்தினார்கள். சிறிய தவறுகளுக்கும் பெரிய கடுமையான தண்டனைகள் கொடுத்தார்கள். விசாரணை என்ற பெயரில் சவுக்கை கையில் எடுத்து அவர்களை மிரட்டினார்கள். அந்த இளவரசர்கள் தூங்க வேண்டுமென்பதற்காக, மற்றோர்கள் யாரும் கசையடி படக்கூடாது என்பதற்காக, கனமான மது காடிகளை வேலையாட்கள் வேண்டுமா, வேண்டுமா என்று கேட்டு அவர்கள் ஏமாந்த சமயம் பார்த்து அவர்கள் கையில் திணித்து விட்டார்கள்.

அதிகம் குடித்ததால் அதிகமாக தூங்க வேண்டி இருந்தது. அதிகம் தூங்கியதால்தான் நல்ல வாய்ப்புகளை தவற விட்டுவிட்டோமோ தான் பயிற்சி செய்யாமல், தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோமோ என்ற குற்ற உணர்வு பெருகியது. குற்றஉணர்வு அதிகம் பெருகியதால் யார் அதிகம் பயற்சி செய்கிறார்களோ அவர்கள் மீது பொறாமை ஏற்பட்டது.

அவர்கள் ஜெயிக்காமல் இருப்பதற்கு என்ன செய்யலாம் என்ற எண்ணங்கள் ஏற்பட்டன. குறுக்குவழியில் புத்தி போயிற்று. அதை செயல்படுத்த முகம் கருத்துப் போயிற்று. பேச்சில் உளறல் அதிகம் இருந்தது. நடையில், நிற்றலில், நகர்தலில் படபடப்பு அதிகமாயிற்று. கண்கள் இடைவிடாது நாலாபக்கமும் அலைந்தன. குரல் எப்போதும் உரத்து ஒலித்துக் கொண்டிருந்தது.

வாள் உருவி தாக்குவதற்கு முன்பாகவே கொன்று விடுவேன் என்று கோஷம்போட வைத்தது. 'கொல்லத்தானே வாள் எடுத்திருக்கி றாய்.... பேசுவானேன்...கொலை செய்...'என்று அவர்களுக்கு சொல்லப் பட்ட போது அதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. செயலை விட சொற்கட்டுகள் அதிகமாகி விட்டன. திறமையை விட கோஷங்கள் மிகப்பெரிதாகி விட்டன. தனித்தனியே தன்னுடைய திறமை களை காண்பிப்பதை விட ஒற்றுமையாக நூறு பேர் இறுக்கிப் பிடித்துக் கொண்டு தாக்கலாம் என்ற கோழைத்தனம் வந்துவிட்டது.

பெண்களை மிரட்டுவதும், சாதுக்களோடு சண்டை இழுப்பதும் சகஜமாகி விட்டன. வாழ்க்கையில் என்ன சாதிக்கப் பிறந்திருக்கிறோமோ அதை நோக்கி ஒரு நூலிழை கூட நகரவில்லை. அதற்கு உண்டான மனப்பயிற்சியும் உடற்பயிற்சியும் இல்லை. வெற்றி பெற்றதாய், வெற்றி பெறப் போவதாய் கனவுகள் மட்டுமே அவர்களைச் சுற்றி இருந்தன.

காரியம் செய்யாமல் கனவுகளைக் காண்பவன் விஷவிருட்சமாகி



விடுகிறான். அவன் எது செய்தாலும் தவறாய்த்தான் முடிகிறது. கனவு காண்பவன் கனவு நனவாக வேண்டும் என்றால் உழைக்க வேண்டும் என்று தீர்மானித்து கனவை அப்புறப்படுத்தி நன்வில் நிற்க வேண்டும். அது மிகக் கடினமான காரியம். ஒழுக்கமுள்ள மனதிற்குதான் அது எளி தாக கைகூடும்.

ஒவ்வொரு நாளும் அரசகுமாரர்களால் பொதுமக்களுக்கு ஏற்படுகிற துன்பங்களைப் பார்க்க பார்க்க விதுரருடைய வாழ்க்கை பதட்டமாகி விட்டது. அந்த பதட்டத்தை குறைக்க அதிகம் தியானம் செய்ய வேண்டி இருந்தது. மனதிற்குள் இடைவிடாது இறைவழிபாடு நடத்த வேண்டியிருந்தது. இதை சரிசெய்வதற்காக துரியோதனனிடம் போய் மெல்ல பேசக்கொடுத்தார்.

துரியோதனனுக்கு யாரோ விதுரரைப்பற்றி தவறாகச் சொல்லி கொடுத்திருந்தார்கள். துரியோதனனுக்கு புரிய வைக்க வேண்டும் என்று திருதராஷ்டிரனிடம் சொன்னார். திருதராஷ்டிரனுக்கும் கூட பொறாமைகளும், தன் பிள்ளை என்கிற அதீத பாசமும் இருந்தன.

மது அருந்தி காமக்களியாட்டம் ஆடுகின்ற கூட்டத்திற்கு நடுவே மது அருந்தாமல் பிரம்மச்சரிய விரதம் காப்பது போல விதுரர் தனித்து இயங்கினார். தனக்குள்ளேயே அதிக நேரம் மூழ்கினார். இவர்களை எப்படி சரிசெய்வது என்று இடைவிடாது யோசித்தார். உள்ளுக்குள் கடவுள் வருகைக்காக காத்திருந்தார்.

பீமனுக்கு விஷம் வைத்துவிட்டார்கள் என்று அர்ஜுனன் மூலம் கேள்விப்பட்டார். தேரேறி அவர்கள் சென்ற வனத்திற்கு ஓடினார். கௌரவர்களை அதட்டி விசாரித்தார். விஷமருந்திய பீமன் மயங்கிய போது அவனைத்தூக்கி நதியில் வீசி விட்டதாக கௌரவர்கள் சொன்னார்கள். அவருக்கு நிம்மதியாயிற்று.

விஷமருந்தியவன் உடனே நீரில் இறங்குவது நல்லது. குளிர்ந்த நீர் இரத்த ஓட்டத்தை நிதானப்படுத்தும். அதுவும்தவிர, பீமனுக்கு இந்த நதி ஏதேனும் உதவிசெய்யலாம் என்று நினைத்தார்.

அவர் நினைத்ததுபோலவே நாகலோகத்து வாசிகள் விஷத்திற்கு விஷம் கொடுத்து பீமனை சரிசெய்து, அதிக உரமூட்டி, கரைக்குக் கொண்டுவந்து விட்டார்கள். கரைக்குவந்த பீமன் இன்னும் பொலிவோடும், அழகோடும், வெண்மையான துடிப்போடும் இருந்தான். நாகலோகத்தில் கண்டதை எல்லோரிடமும் உரைத்தான். சிவந்த அவனுடைய உள்ளங்கைகள் இப்போது நீலமாக இருந்தன.

காலம் பாண்டவர்களுக்கு சாதகமாக இருக்கிறது என்பதை இந்த நிகழ்ச்சியின் மூலம் விதுரர் புரிந்துகொண்டார். துரியோதனை நினைக்க அவருக்கு வருத்தமாக இருந்தது.

துரியோதனன் தனக்கே அடங்காத தன் சகோதரர்களை அடக்கி, தன்னையும் இழிவுபடுத்திக்கொண்டு பாண்டவர்களை ஜெயிப்பது என்பது மிகப்பெரிய காரியம். கடும்தவம் செய்தால்தான் இது சாத்தியமாகும். துரியோதனனுக்கு, 'தவம்' செய்தல் என்றால் என்ன' என்று சொல்லிக்கொடுக்க விதுரர் தீர்மானித்தார். துரியோதனனிடம் தனியறைக்குப் போய் பேசினார்.

• "துரியோதனா நீதான் உன் சகோதரர்களைக் காப்பாற்றுகிறாய் என்ற நினைப்பை முதலில் உதறி எறி. அவர்களை விட்டு விலகி வெளியே போ. தனித்து நில். நீயில்லாமலிருந்தாலும் உன் சகோதரர்கள் ஏதோ ஒருவிதமாக வாழ்வார்கள். அழிந்து போகமாட்டார்கள் என்பதை நீ முதலில் புரிந்து கொள்வாய். பிறகு, துரியோதனா, இந்தத் தனிமையிலிருப்பதை உன்னால் சந்தோஷமாக அனுபவிக்க முடியும். உன்னை நம்பித்தான் உன் குடும்பம் இருக்கிறது என்று நினைக்கின்ற உன் மனப்போக்கு தான் உன்னை சிக்கலில் மாட்டி விடுகிறது.

நீ முக்கியமல்ல. நீ முக்கியம் என்பது போல் மற்றவர்கள் நடிக்கிறார்கள். நீ சரிந்தவுடன் அவர்கள் முக்கியமாக முயற்சிக்கிறார்கள். எனவே உன்னை சுற்றியுள்ளவர்கள் அத்தனைபேரும் உன் இடத்திற்கு வர முயற்சிக்கிறார்கள் என்பதை புரிந்துகொள். உன்னுடைய சரிவு எப்போது வேண்டுமானாலும் ஏற்படும் என்பதையும் தெரிந்துகொள்.

எனவே, இது நிரந்தரமல்ல என்பது தெரிந்தபோது உனக்கும், இந்த குடும்பத்திலிருந்து ஒரு விடுதலை கிடைக்கும். விலகி நிற்க முடியும். அப்போது நீ எவ்வளவு முக்கியம் என்பது தெரிய வரும். உன்னுடைய உண்மையான பலம் என்ன என்பது புரிய வரும்.

ஒரு வகையில் சொல்ல வேண்டுமென்றால், துரியோதனா, நீ உன்னைப்பற்றி முதன்முதலாக யோசிக்க ஆரம்பிப்பாய்.

துரியோதனா, இதுவரை நீ யோசித்ததெல்லாம் யுவராஜன் என்றும், தொண்ணூற்றொம்பது தம்பிகளுக்கு அண்ணன் என்றும் அடுத்தது பட்டத்திற்கு வரவேண்டிய அரசன் என்றும் மட்டுமே யோசித்திருக்கிறாய். இவையெல்லாம் உனக்கு உன் சுற்றத்தாரால் சொல்லப்பட்டது. உண்மையில் நீ யார். உன் தகுதி என்ன என்பது உனக்குத் தெரியாதவரை நீ எதுவும் உருப்படியாய் செய்ய முடியாது. எனவே உன்னை நீ தெரிந்து கொள்ளத்தான் தனியாகிப் பயணப்படு என்கிறேன்."

"விதுரரே, தனியாகப் பயணப்படுவது என்றால் என்ன?"

வீடுவிலக்கி, சத்தமற்று, சில உடுப்புகள் கொண்ட பைதாங்கி, ஒரேயொரு ஆயுதம் தாங்கி, நல்ல சிறப்புகளுடன், ஒரு குதிரையேறி ஒவ்வொரு ஊராகி, ஒவ்வொரு மக்களாகப் பார்த்துக்கொண்டு போவது, சில இடங்களில் வழிமறித்து வம்பு செய்வார்கள். நீ அரசனல்ல, வழிப்போக்கன். அங்கும் பணிவாகப் பேச வேண்டும். நிதானமாக அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லவேண்டும். பதில் சொல்லாமல் போனால் உன்னை திருடன் என்று நினைத்துக் கொள்வார்கள். எனவே, எல்லா இடத்திலும் உன்னுடைய மிருதுவான, நியாயமான அமைதியான, ஆரவாரமற்ற போக்கு அவசியம்.

தனிமையில் வெகுதூரம் பயணம் செய்யும்போது இந்த தன்மை வருகிறது. இது தவத்தின் ஆரம்பம். எனவே க்ஷேத்ராடனம் என்பது மிக முக்கியம்.

இளம் வயதில் எவர் துணையுமின்றி குறைவான காசோடு, குறைவான சுகங்களோடு எல்லாவிதமான விஷயங்களுக்கும் ஈடுகொடுத்து பயணப்படுவது மிக நல்லது. தூக்கமும் குறைவாகும், புத்தி விசாலமாகும். மனிதர்களைப் பார்க்க பார்க்க, மனிதர்கள் பற்றிய கதைகள் கேட்க



கேட்க தன்னுடைய நிலைமை என்ன என்று ஒப்பிட்டு கேட்க, தன்னுடைய நிலைமை என்ன என்று ஒப்பிட்டு பார்க்கத் தோன்றும். ஒரு ஊருக்குள் நுழைந்ததும் பேச ஆரம்பிக்காமல், உள்ளுக்குள் இருந்து பேசுவதை நிறுத்திவிடு. அமைதியாக உட்கார்ந்து கொள்.

பல மகான்கள் வந்து போன இடம், அல்லது ஏதோ ஒரு மகான் அடங்கிய இடமாகத்தான் கோவில் இருக்க முடியும். அங்கு அமைதியாக உட்கார சூட்சும விஷயங்களின் நடமாட்டங்களை உன் மனம் உணர ஆரம்பிக்கும்.

"துரியோதனா, இது மட்டுமல்ல. தனியனாய் நீ க்ஷேத்திராடனம் போகும்போது ஒவ்வொரு பிரச்சினையையும் நீயே சமாளிக்கிறாய். நீ அரசகுமாரன் என்கிற அகந்தையை ஒதுக்கி வைத்துவிட்டு சாதாரண மனிதனாய் இருக்கிறாய். காடுகளுக்கு நடுவே, துஷ்ட மிருகங்களின் குறுக்கீடு எதிர்பார்த்து கவனமுடன் போகிறாய். உடம்பு முழுவதும் கண்ணாய், எப்போதும் விழிப்பாய் நீ இருக்கும்படி நேரிடுகிறது. தூங்கும் போது கூட மனம் விழித்திருக்கிறது.

ஒரு அரசகுமாரன் பிணம் போல் தூங்கக்கூடாது. சொடுக்கும் சத்தம் கேட்டதும் எழுந்திருக்க வேண்டும். எழுந்தவுடன் சூழலை புரிந்து கொள்ள வேண்டும். எழுந்தபிறகும் தூக்கம் உள்ளவன் மந்தன். அவனுக்கு கிரகிப்புத்தன்மை மிகக்குறைவாக இருக்கும்.

காட்டில் கொடிய விலங்குகளுக்கு நடுவே படுத்திருப்பவன் எப்படி மந்தனாக இருக்க முடியும்...எனவே இந்த பயணம் உனக்கு குறைவாக தூங்குவது எப்படி என்று கற்றுக்கொடுக்கும்.

துரியோதனா, அரண்மனையின் உணவு ரகங்கள் க்ஷேத்திராடனம் செய்யும்போது உனக்கு உண்ண கிடைக்காது. சில நாட்கள் இலைகள் மட்டுமே தின்று உயிர்வாழ வேண்டியிருக்கும்.

துரியோதனா, நான் அவ்விதம் உண்டபடி பல இடங்களுக்கு திரிந்திருக்கிறேன். உன்னில் எனக்குப் பிடித்தது உன் உடம்புதான் எவ்வளவு உண்டாலும் உனக்கு வயிறு பெருப்பதே இல்லை. நீ விருகோதரன், ஓநாய் போன்ற வயிறை உடையவன். உன்னாலும் அப்படி குறைந்த உணவோடு ஜீவிக்க இயலும். குறைந்த உணவும், குறைந்த தூக்கமும் உள்ளவனுக்கு வெற்றி நிச்சயம். இப்படி தனியே இருத்தல் உன் உள் மனதை உனக்கு காட்டும்."

"அது என்ன உள்மனது...?"

"துரியோதனா, நாகரிகம் காரணமாக நாம் நல்லவர்களாய், பண்பாளர்களாய் வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறோம். உண்மையில் உள்மனம் அப்படி இல்லை. நமக்குள் பொதிந்திருக்கும் எண்ணங்களை நாமே அறியாமல் இருப்பது தவறு. அது திடுமென்று வெளியாகி 'நானா இப்படி செய்தேன்' என்ற குழப்பத்தில் நம்மை ஆழ்த்திவிடும். எனவே, உள்ளே தோன்றும் ஆசைகளை, விகாரங்களை உற்றுக்கவனிப்பது நல்லது. தனித்திருக்கும்போது எளிதில் உற்று கவனிக்க முடியும்.

சுற்றத்தாரோடு இருக்கும்போது இடைவிடாத நாடகம் போட்டுக் கொண்டிருக்கிறோம். அரசனாய், சகோதரனாய், நண்பனாய், நல்ல

மாணவனாய் நடிக்கத் துவங்கி விடுகிறோம். இந்த நாடகத்தில் நாம் யாரென்பது மறந்து போகும். நாம் நல்லவர்கள். மற்றவருக்கு நல்லது செய்யவே பிறந்தவர்கள் என்கிற அகந்தை எழும். இது பொய்யென்பதை தனித்திருக்கும்போதுதான் கண்டுபிடிக்க முடியும்.

நம்மைப் போன்றவர்களிடம் இன்னொரு மமதை இருக்கிறது. நாம் கெட்டிக்காரர்கள் என்கிற மமதை. நம்மால் எதுவும் செய்ய முடியும் என்கிற மமதை. நமக்கு தோல்வியே கிடையாது என்கிற அகங்காரம். உண்மையில் வாழ்க்கை அப்படி இல்லை துரியோதனா, வெற்றியும், தோல்வியும் மாறி மாறி வருகின்றன.

வெறும் திறமையால் மட்டும் வாழ்க்கை ஓடி விடுவதில்லை. வேறு ஏதோ ஒரு ஆசீர்வாதம் தேவைப்படுகிறது. அந்த ஆசீர்வாதம் எங்கிருந்து வருகிறது என்பதை தனியாக இருந்தால்தான் புரிந்துகொள்ள முடியும். அப்பொழுதுதான் வெற்றி நம்மால் நிகழவில்லை என்பது புரியவரும்.

துரியோதனா. இந்த அறிவுரைகள் அலுப்பாக இருக்கும். உலகம் அறிவுரைகளில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. நெருப்பின் உபயோகத்திலிருந்து உலகத்தில் பல நாகரீகங்கள் நாம் அறிவுரைகளின் வழியாகத் ான் அறிந்துகொண்டோம். அறிவுரை சொல்ல மாட்டேன் என்பவரும், அறிவுரை கேட்கமாட்டேன் என்பவரும் மிகப்பெரிய நிர் மூடர்கள்.

அறிவுரையைக் கேட்டால் மட்டும் புரிந்து போய் விடுமா ... உள்ளுக்குள் வாங்கி புரிந்துகொள்வது என்பது வெகுசிலரால்தான் முடியும். நான் சொல்வதை புரிந்துகொள் துரியோதனா" என்று முடித்தார்.

துரியோதனனுக்கு புரியவில்லை.

அவன் கிளம்பும்போது அவன் மாமா சகுனி பேசிய வாசகங்களை மனதில் நினைத்திருந்தான். "தருமபுத்திரரும், விதுரரும் ஒரே அம்சம். எனவே எப்போதும் விதுரர் தருமபுத்திரர் பக்கம்தான். இதற்காக விதுரரை பகைத்துக் கொள்ளாதே. இதுதான் சாக்கு என்று அவர் உன்னைவிட்டு போய்விடுவார். தருமபுத்திரருக்கு அருகே போய் நின்று கொள்வார்.

விதுரர் ஒரு அற்புதமான வீரர். பிரம்மச்சாரிக்கு கண் பார்வை கூர்மை. தருமத்தை தவிர வேறு எந்த பாச உணர்வும் காட்டி அவரை மயக்க முடியாது. எனவே எப்போதும் பணிவாகவே பேசு. எது சொன்னாலும் ஆலோசித்து சொல்வதாகவே சொல். மறந்தும் வாக்கு கொடுக்காதே. அவர் சத்தியம் வாங்கினால் அது தருமபுத்திரனுக்கு உதவியாகவும், உனக்கு எதிரியாகவும்தான் இருக்கும்.

அவரைக் கூர்ந்து கவனித்தாயானால் அந்த உயரம், உடல் முறுக்கு, கைகளின் அசைவு, பேச்சுத்தோரணை ஆகியவை தருமபுத்திரனை போலவே இருக்கும். ஏன் என்று கேட்காதே...அது தேவ ரகசியம்.

விதுரர் பேச்சுக்கெல்லாம் தலையாட்டிவிட்டு என்னிடம் வந்து விடு. விதுரர் சொன்னது தவறு என்று உனக்கு நான் அழகாக சொல்லித் தருகிறேன்."

"எவ்வளவு அழகாக சொல்லித் தருகிறீர்கள் சித்தப்பா.." வணங்கி



விட்டு துரியோதனன் நகர்ந்தான்.

அடுத்த நாழிகையில் சகுனியின் வீட்டில் கிடந்தான்.

"தனியாய் க்ஷேத்திராடனம் செய்வது, பைத்தியத்தால்தான் முடியும். சாதுக்கள் கூட ஐந்தாறு பேராகத்தான் க்ஷேத்திராடனம் போவார்கள். குடும்பஸ்தர்கள் கிராமம் கிராமமாய் போவார்கள். வணிகர்கள் சிறுபடையோடு கிளம்புவார்கள். அவர்களுடன் ஆடல், பாடல் மகளிரும் போவார்கள்.

அரசன் ரஜ, கஜ, துரக, பதாதியோடு போகவேண்டும். அரசன் படைக்கு முன் ஒற்றர்கள் போகவேண்டும். ஒற்றர்கள் போய் தகவல் சொல்லாத இடத்திற்கு அரசன் போகவே கூடாது.

விதுரன் செத்தால் ஒரு நாள் துக்கம். ஒரு அரசன் செத்தால் எவ்வளவு பெரிய நஷ்டம். தனிமை தனக்குள் பேசவைத்து விடும். யாருமில்லை என்கிறபோது தனக்குத்தானே உரத்துப் பேசுகின்ற வழக்கம் வந்துவிடும். அந்தப்பழக்கம் அரசனுக்கு ஏற்படலாகாது. ஏற்படின் கெடுதல், அவமானம். அரசன் தனக்குத்தானே அவையில் பேசினால் மக்கள் சிரிக்கமாட்டார்களா...அரசனுக்கு பதிலாக சிந்திக்கத்தான் மந்திரிகள் இருக்கிறார்கள்.

சுற்றியுள்ள பல புத்திமான்கள் பேசப்பேச பிரச்சனையின் மையம் அரசனுக்கு எளிதில் பிடிபட்டு விடும். அரசன் தனி மனிதன் அல்ல. துரியோதனா...அவன் சமூகம். அவன் ஒருநாளும் உணவுக்கு ஏங்கக் கூடாது.

ஏதாவது உண்டுவிட்டு "மண்தரையில் உறங்கக்கூடாது. அது பொறுப்பற்றதனம். சுகத்தின் மீது நாட்டம் உள்ளவனுக்குத்தான் சொந்தம் கொண்டாடும் எண்ணங்கள் தோன்றும்.

என் நாடு, என் மனைவி, என் மக்கள், என் சொத்து என்கிற ஆசை ஒரு அரசனுக்கு இல்லையெனில், அவனால் யாரைக் காப்பாற்ற முடியும்...எப்படி காப்பாற்றத் தோன்றும்.

தும்பிக்கை இல்லாத யானை, நகமில்லாத புலி, கள்ளமில்லாத நரி, போர் வெறியில்லாத அரசன் வீண். அது சாபம், பிறப்புக்குற்றம்.

ஞானிகளின் சூட்சுமத்தைக் கண்டு என்ன செய்யப் போகிறாய்... அவ்வுலகில் இருப்பவர்க்கு நம்மைப்பற்றி அக்கறை இல்லை. நாம் ஏன் அவரைப்பற்றி கவலைப்பட வேண்டும்.

துரியோதனா, இப்போது பூமியில் இருக்கிறோம். பூமியில் உள்ளவர்களைப் பற்றி கவலைப்படுவோம்.

துரியோதனா, விதுரர் ஒரு தவறான பிறப்பு, பயந்த ஒரு வேலைக்காரிக்கும், பயமே இல்லாத காட்டு மிருகம் போன்ற ஒரு முனிவருக்கும் பிறந்தவர். அவர் மனப்பக்குவம் இப்படித்தானே இருக்கும்." சகுனி துரியோதனனுக்கு அருகே அமர்ந்து வாய்விட்டு சிரித்தான்.

"எல்லா அரண்மனையிலும், எல்லா வேலைக்காரிகளுக்கும் அரசன் மூலம்தான் குழந்தை பிறக்கும். அந்த குழந்தைகளை அரசகுலம் என்று ஒருவரும் சொல்வதில்லை. இது அதர்ம பிறப்பு.

உத்தமமான பிறப்பான நீ, ஒரு அதர்மனிடம் அறிவுரை கேட்க

வேண்டிய அவசியம் இல்லை. அரசனுக்கு சபை என்று ஒன்று எதற்கு இருக்கிறது...அரசனைப் போல அரசனுக்காய் சிந்திப்பதற்கு இருக்கிறது. அங்கே வந்து சிந்திக்கச் சொல்.

அரச சபையில் விட்டத்தைப் பார்த்து உட்கார்ந்து விட்டு உன்னைத் தனியே அழைத்துப்போய் எதற்கு பேசவேண்டும்?

துரியோதனா, நானா, அவரா...உனக்கு யார் தேவை என்பதை முடிவு செய்" சொல்லிவிட்டு சகுனி தனியே உட்கார்ந்து பாய்ச்சிகை ஆடினான். சகுனி பாய்ச்சிகை ஆடுவதை எழுந்து உட்கார்ந்து துரியோதனன் கவனித்தான்.

இரண்டு.

இரண்டு விழுந்தன.

தாயம்.

தாயம் விழுந்தது.

பன்னிரெண்டு.

பாய்ச்சிகைகள் இரண்டும் உருண்டு காட்டின.

துரியோதனன் வியந்து 'எட்டு' என்றான்.

பட்டுத்துணியில் எட்டு இருந்தது.

'ஆறு' என்றான்.

இரண்டு மூன்றுகள் சுட்டெரித்தன.

"எப்படி முடிகிறது மாமா."

"இவை சத்தியத்துக்கு கட்டுப்பட்டவை. புத்திக்கூர்மையாக இருந்தால், மனம் திடமாக இருந்தால் இரும்பையும் கண்ணால் வளைக்கலாம். விளக்கை மூச்சினால் ஏற்றலாம். கால் பெருவிரலில் கங்கையை பொங்க வைக்கலாம்.

துரியோதனா, புத்திமானே பலவான். அதிர்ஷ்டம் என்பது நம்பிக்கையற்றவன் வார்த்தை. நம்பிக்கையற்றவனுக்கு பயம்தான் மனைவி. பயம் மனைவியாக இருந்தால் பதட்டம்தான் குழந்தைகள்.

துரியோதனா, போர் என்று இறங்கி விட்டாய். ஒன்று நீ அல்லது உன் எதிரி. யாரேனும் ஒருவர் தான் ஜெயிக்க வேண்டும். யார் உயர்ந்தோர் என்பது தீர்மானமாக வேண்டும்.

உன்னைவிட அவனால் உயரமுடியாது என்று தெரிந்தால் விட்டுவிடு. அடிமையாய் வைத்துக்கொள். உயர்வான் என்று தெரிந்தால் கொன்றுவிடு. குடும்பத்தை சின்னாபின்னமாக்கு.

இந்த விதியே உன் எதிரிக்கும் பொருந்தும். எப்போதும் சாகத் தயாராக இரு. வெறுமே வாழ்ந்து என்ன பயன்?

துரியோதனா, உயிர் வாழ்தலா முக்கியம், உயர்வுற வாழ்வது தானடா முக்கியம்.

எது நீதி? எது நெறி?

நீ என்னை இங்கு கொன்றால் கொலை. போரில் கொன்றால் வீரம். வலிமைதான் ஆயுதம். வாய்மை இல்லை. வலிமையுள்ளவன் சொல்வதுதான் வாய்மை. அதுதான் சட்டம்.

துரியோதனா, மரணம் பற்றி அதிகம் சிந்திக்கும்போதுதான் நீதி, நெறி என்கிற பிதற்றல் வெளிவருகிறது. சாவதற்கு அஞ்சாதே. வாழ





"வாழ்வது என்பது என்ன?"

"மண், பெண், பொன் இவைகளற்று ஒருவன் வாழ்ந்தால் என்ன.. இறந்தால் என்ன..இந்த மூன்று வகை சுகங்களுக்கு ஆசைப்பட்டவனுக்கு விதிமுறைகள் ஏதுமில்லை. எப்படியாவது அடைய போராடுவதும், அடைந்ததை தக்கவைத்துக் கொள்வதும்தான் வாழ்க்கை. இதெல்லாம் இந்த பூமியில் இல்லையெனில் இப்போதே செத்துப் போகலாம்.

பிறந்த புழுக்களெல்லாம் போராடுகின்றன. தன் கூடு, தன் பேடு என்று பறவைகளும் ஆளுகை செய்கின்றன. மனிதன் எப்படி சும்மா யிருக்க முடியும்?

சிங்கம் சிறுநீர் கழித்து தன் எல்லையை நிர்ணயிக்கும். இன்னொரு சிங்கம் மீறினால் கடும் யுத்தம் வரும். மனிதன் வானத்திலிருந்து விழுந் தவன் அல்ல. மண்ணில் தோன்றியவன். இந்த மண்ணின் வன்முறைகள் அவனிடம் உண்டு. வன்முறையில்லாத உயிரினம் ஒன்று கூட பூமியில் இல்லை. எனவே, வன்முறையே நமக்கு வேதம். வன்முறையில் கொலை தான் தர்மம். கொடுமைப்படுத்தல்தான் விதி. கோபம்தான் ஒழுக்கம்.

விதுரன், வில்லை முதுகு சொறிந்து கொள்ளவே பயன்படுத்தி யிருக்கிறான். சரியான நேரத்தில் அவனைப் புறக்கணிக்க உனக்கு சொல்லித் தருகிறேன். இப்போதைக்கு எங்கு பார்த்தாலும் நன்கு கும்பிடு. குழைந்து வணங்கு. மதமுள்ள யானை போனால் சிங்கம் ஒதுங்கிக் கொள் ளும். எப்போது அதை தாக்கவேண்டும் என்று தெளிவாய்த் தெரியும். இப்போதைக்கு ஒதுங்கி போ". தாயம், எட்டு, எட்டிற்கு பிறகு பன்னி ரெண்டு மொத்தமாய் ஒரு வரிசை சொல்லி சகுனி உருட்டினான். அதே வரிசையில் பாய்ச்சிகைகள் புரண்டன. துரியோதனன் திகைத்தான். சகுனிக்கு அடிமையானான்.

நீதிநெறியை கேட்கக்கூட ஒரு கொடுப்பினை வேண்டும். புரிந்து கொள்ள இந்தக் கொடுப்பினை அதிகம் வேண்டும். புரிந்ததை செயலுக்கு கொண்டுவர பூர்வஜென்ம புண்ணியம் வேண்டும். வெறும் உழைப்பு மட்டும் ஒருவனை முன்னேற்றி விடுவதில்லை. விதி ஒரு மனிதனை வெவ்வேறு இடத்திற்கு அனுப்பி அவனை வெவ்வேறு விதமாக வார்ப் படம் செய்கிறது.

துரியோதனன் சகுனியால் கடையப்பட்டான். தருமபுத்திரர் விதுர ரால் செதுக்கப்பட்டார்.

"கௌரவர்கள் பொறாமை எனக்கு புரிகிறது தருமபுத்திரா, ஆத்திர மான, ஆபாசமான அவர்கள் பேச்சுக்கள் அவர்களின் மனோநிலையை எனக்குத் தெரிவித்து விட்டன.

நீ பொறுமையாய் இரு. அமைதியாக இரு. அழியும் உடல்களின் ஆவேசத்தை சிரித்தப்படி வேடிக்கை பார். உனக்கு எதிரே கூடிய அந்த நூறு பேரும் செத்துப்போகப் போகிறார்கள். உன்னை கொன்று விடு வேன் என்று சொன்ன அத்தனை பேரும் மரணமடையப் போகிறார்கள். உன் மீது கோபம் கொண்டு வேலெறிந்தவன் கை துண்டுபட்டு சாவான். உனக்கு கட்டுப்பட்ட அர்ஜுனன் அவர்களை அழிப்பான். உன் தாள் பணியும் பீமன் அவர்களை கதற அடிப்பான். நகுல, சகாதேவர்கள் நீ



சொன்னதை செய்வார்கள்.

தருமபுத்திரா, பொறுமை கோழைத்தனத்தின் வெளிப்பாடு அல்ல. அது தெளிவின் குழந்தை.

தருமபுத்திரா, பொறுமையற்றவனுக்கு அமைதி இல்லை. அமைதி இல்லாதவனுக்கு தெளிவில்லை. தெளிவில்லாதவன் எது செய்தாலும் குழப்பமாகும்.

தருமபுத்திரா, பொறுமையின் எல்லையில் ஒரு உக்கிரம் ஏற்படும். நீரைக் கடந்தால் உஷ்ணம் ஏற்படுவது போல் இந்தக்கோபம் வெளி யாகும். அமைதியான பூமியிலிருந்து எரிமலை வருவது போல இந்த விவேகத்திலிருந்து ஒரு வீரம் வெளிப்படும்.

போர் தவறில்லை, தருமபுத்திரா, அதற்கு காரணம் இருக்க வேண்டும். செய்துவிட்டு வருத்தப்படுவதை விட, சிந்தித்துவிட்டு செய் வது நல்லது.

உலகம் நல்லவர்களாலும், தீயவர்களாலும் இடைவிடாது உருட்டப்பட்டது. மகேந்திரமலை தேவர்களாலும், அசுரர்களாலும் அசைக்கப்பட்டது போல் உலகம் இயங்கியது. அமிர்தம் வேண்டும் என்று செயல்பட ஆலகாலம் வந்ததுபோல் அமைதி வேண்டும் என்று செயல் பட யுத்தம் வந்தது.

யுத்தத்திற்கான காரணங்கள் ஒவ்வொன்றாய் முளைத்தன. அரக்கு மாளிகை துரியோதனன் கட்டத் துவங்கினான். பீமனை மட்டும் ஒழித் தால் போதாது. பாண்டவர்கள் அனைவரையுமே சாகடிக்க வேண்டும் என்று விரும்பினான்.

ஆனால் அரக்கு மாளிகை கட்டத் துவங்கியதுமே வேலையாட்கள் மூலம் விதுரருக்கு செய்தி தெரிந்தது.

மேடான பகுதி, கடும் காற்று வீசுமிடம் அரக்கினால் ஆன செங்கல், நடுவே பெரிய ஓட்டை, புற்கள் போட்டு பிசைந்த களிமண், எளிதில் தீப்பிடிக்கும் மிருதுவான உத்திரங்கள். அணைக்க நீர் வேண்டு மென்றால்கூட வெகுதூரம் போகவேண்டும்.

மேலும் அரக்கு வழிந்து மேட்டிலிருந்து அருவியென வரும். அருகேகூட எவரும் போக முடியாதபடி தவிக்க வேண்டியிருக்கும்."

'என் சகோதரர்களான பஞ்சபாண்டவருக்கு என் அன்புப் பரிசு வேலையாட்களிடம் துரியோதனன் அடிக்கடி சொல்கிறானாம். குரலில் கபடம் வழிகிறது என்று ஒரு பெரியவர் சொன்னார்.

துரியோதனன் உஷ்ணமாக இருக்கிறான். அவன் தொட்ட பச்சை மூங்கில் சற்றுநேரம் கழித்து வெடித்துவிட்டது. நீளமாய் விரிசல் விட்டு விட்டது என்று வேலையாட்கள் சொன்னார்கள்.

துரியோதனனால் மது அருந்தாமல் சாப்பிட முடியவில்லை. பழங்கள் பிடிப்பதில்லை. பச்சை மாமிச வாசனை பிடித்திருக்கிறது. காலையிலேயே தொழுவத்திற்குப் போய், 'இந்த கன்று உண்பதற்கு நன் றாக இருக்கும்' என்று கைகாட்டுகிறான். உயிருள்ள கன்று உண்ணும் மாமிசமாக அவனுக்குப் படுகிறது. கொலைவெறியுள்ளவனுக்கே இது சாத்தியம்.

விதுரரின் மிகப்பெரிய பலம் வேலையாட்கள். விதுரர் நம்முடைய

ஜாதி, நம்முடைய இனம், நம்முடைய தலைவர் என்பது போல் வேலையாட்களுக்கு நடுவே ஒரு அபிப்ராயம் பரவியிருந்தது. எது வித்தியாசமாக நடந்தாலும் அவர்கள் விரைவாக ஓடிவந்து விதுரரிடம் சொன்னார்கள்.

விதுரர் அவர்களின் அன்பை, நன்றியை நன்கு உணர்ந்து கொண்டார். யார் வந்தாலும் உபசரித்து குடிக்க நீர் கொடுத்தார். மோர் கொடுத்தார். சொன்ன தகவலுக்கேற்ப சன்மானம் கொடுத்தார். அவர்களில் எவருக்கேனும் உடல்நிலை சரியில்லை என்றால் நேரில் போய் பார்த்தார். அவர்களின் வீடுகளுக்கு நடுவே போய் உட்கார்ந்து கொண்டார். அவர்கள் குழந்தைகளை வாரிக் கொஞ்சினார். அவர்களை எப்படி வளர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பெண்களை ஆதரவாக பார்த்தார். அவர்களை தனியே அழைத்துப்போய் அவர்களின் ரகசியமான பிரச்சினைகளை கேட்டறிந்தார். புருஷனுக்கு முன்னும், மகனுக்கு முன்னும், பெற்றவர்க்கு முன்னும் பெண்கள் பேசத்தயங்குவார்கள் என்பதால், "வாருங்கள் எல்லோரும் கோயிலுக்கு போகலாம்" என்று கூட்டிக்கொண்டு போய், ஆண்களை தனியே விட்டு, பெண்களின் அருகே நடந்து, அவர்களை வேறு பக்கம் அழைத்துப்போய், உட்கரார்ந்து கொண்டு, "என்ன நடக்கிறது சொல்லுங்கள்" என்று பிரியத்தோடு அன்போடு விசாரித்தார்.

பொய்யில்லாமல் பேசுகிறவரையும், நம்பிக்கையுள்ளவரையும் பெண்கள் பெரிதும் விரும்புகிறார்கள். ஆண்களிடம் அவர்களை கவரும் ஒரே விஷயம் நம்பிக்கைதான். வேறு எந்த விஷயத்தையும் அவர்கள் வியப்பாக பார்ப்பார்களே தவிர, மறுகணம் உதறி விடுவார்கள். தன்னை உள்ளங்கையில் வைத்து தாங்குவான் என்ற நம்பிக்கைதான் ஆணை அவர்கள் நேசிக்க காரணமாகிறது. திரும்பிப் பார்க்கும் விஷயமாக இருக்கிறது.

"உன் புருஷனை நான் கண்டித்து வைக்கிறேன். அது எப்படி அப்படி ஒரு வார்த்தை அவன் சொல்லலாம். உன் தாயைப் பற்றியும், தகப்பனைப் பற்றியும் அவன் பேசியது தவறு. அதற்கு அவனை நான் ம்ன்னிப்பு கேட்க வைக்கிறேன். ஆனால் தயவுசெய்து அவனை மன்னித்து விடு. மறுபடியும் அவனுடன் சந்தோஷமாக இரு" என்று விதுரர் அவளுக்கு வலியுறுத்தினார்.

சொன்ன வண்ணமே அவள் புருஷனை அவளுக்கு முன் நிறுத்தி மன்னிப்பு கேட்க வைத்தார். அவன் மன்னிப்பு கேட்பதை ஊர் முழுவதும் கேட்டது. அவள் சந்தோஷமானாள். புருஷனை மன்னித்தாள். வேகமாக அவனோடு மறுபடியும் நட்புகொண்டாள்.

"நீ யாரைக் காதலிக்கிறாய்...தேர்ப்பாகனையா....நல்லது. உன் தகப்பன் என்ன வேலை செய்கிறார்...அரண்மனைக் காவலரா... அரண்மனைக் காவலர் மகள் தேர்ப்பாகனை காதலிப்பது நல்லது தானே ...தாராளமாகக் காதலிக்கலாம். உன் தகப்பனிடம் பேசி உன் காதலனை அவரிடம் அழைத்துப்போகிறேன். இந்தப் பிரச்சினையை என்னிடம் விட்டுவிடு. இன்னும் ஒரு மூன்று நான்கு நாட்களுக்கு அவனைச் சந்திப்பதை தவிர்த்துவிடு. உன்னை சந்திப்பதற்காக அவன் ஏங்கட்டும். அவன் ஏக்கத்தில் நிறைய பேசுவான். பேசுகிறபோது அவனுடைய காதல்



எத்தகையது என்பதை நான் கண்டுபிடித்து விடுவேன். கண்டுபிடித்து உனக்கு சொல்கிறேன். அதற்கேற்றபடி நீ நடந்து கொள்."

எந்த உறவும் செய்து தராத ஒரு சௌகரியத்தை விதுரர் செய்து கொடுப்பார். வேலையாட்கள் அவர் மீது உயிராக இருந்தார்கள்.

"விதுரரே, இந்த வருடம் குளிர் மிகக் கடுமையாக இருக்குமென்று ஜோசியர்கள் சொல்லுகிறார்கள். சந்திரன் உச்சமடைவதாலும், புதன் அருகே வருவதாலும் கடும் குளிர்காற்று வீசுமென்றும், அது வெகுநாள் நீடிக்குமென்றும் பேசப்படுகிறது. துரியோதனன் குளிரிலிருந்து தடுப்பதற்காக அரக்கையும், களிமண் கலந்த புல்லிலும் கட்டிய மாளிகையை பாண்டவர்களுக்கு வழங்குகிறான். உள்ளே வெகுநிச்சயமாய் கதகதப்பாய் இருக்கிறது.

ஆனால் அதேசமயம் அந்த மாளிகை பாதுகாப்பானதா என்பது பற்றிய சந்தேகமும் வருகிறது. ஒரு சிறிய தீப்பந்தம் கூட எடுத்துப் போக முடியாது. மூடிவைத்த விளக்குகள் மட்டுமே உள்ளே போக முடியும்.

அந்த விளக்குகளும் தவறி விழுந்தால் தரையும், சுவரும், மேற்கூரையும் உடனே பற்றிக்கொள்ளும். இப்படி பாதுகாப்பே இல்லாத ஒரு மாளிகையை துரியோதனன் எதற்காக கட்டுகிறான். கதகதப்புக்கு மட்டும்தானா...என்று கேள்வி வருகிறது.

ஆனால் துரியோதனன் மாளிகை கட்டுவதை விதுரரால் தடுக்க முடியாது. துரியோதனன் தருமபுத்திரரை விருந்துக்கு அழைப்பதையும் தடைசெய்ய முடியாது. தருமபுத்திரர் அந்த மாளிகையில் வந்து தங்குவதையும் நிறுத்துவிட முடியாது. ஏன்...அந்த மாளிகை எப்படி கட்டப்படுகிறது என்பதை அருகே போய்கூட பார்க்க முடியாது.

'நான் எது செய்தாலும் ஏன் சித்தப்பா குறுக்கே வந்து நிற்கிறீர்கள்...' என்று துரியோதனன் கேட்பான், அல்லது சகுனியால் கேட்க வைக்கப் படுவான்.

விதுரர் ரகசியமாகவும் அந்த மாளிகைக்கு போக முடியாது. துரியோதனன் ஆங்காங்கே ஒற்றர்கள் வைத்திருப்பான்.

எனவே தனக்கும், இந்தப் பிரச்சினைக்கும் சம்பந்தமே இல்லாதது போல் நடந்து கொண்டால்தான் என்ன நடக்கிறது என்பதை அடிக்கடி தெரிந்து கொள்ள முடியும். தான் ஆர்வம் காட்டுகிறேன் என்று தெரிந்தால் துரியோதனன் திட்டத்தை மாற்றி விடுவான். எனவே இதுபற்றி எந்தக் கவலையும் படாமல் இந்த இடத்திலிருந்து இன்னும் சற்று விலகி, எவரோடும் தொடர்பு இல்லாது விரதம் அனுஷ்டிப்பது போல இன்னும் சற்று தனியே அமர்ந்து கொள்ள வேண்டும். அப்படி அமர்ந்து கொள்வதில் நன்மையும் இருக்கிறது. ஒற்றர்களை வைத்து 'என்ன நடக்கிறது' என்பதை வெகுவிரைவாக தெரிந்துகொள்ள முடியும். ஒற்றர்கள் இவருக்காக காத்திராது நேரடியாகவே வந்து பேச முடியும்.

எனவே தான் நேரில் போய் பார்த்து என்ன நடக்கிறது என்று கேள்விகேட்டு விஷயத்தை பரபரப்படையச் செய்வதை விட, தள்ளி நின்று ஆட்களை வைத்து மிகத் துல்லியமாய் நடப்பதைப் பற்றி தெரிந்து கொள்ளலாம் என்று விதுரர் எண்ணினார். அவருடைய ஒற்றர்களை விதவிதமான வேடத்தில் மாளிகைக்கு அனுப்பினார். மாளிகை சென்று

அவர் வீட்டுக்கு வந்ததும் சேற்றுக்கலவை கொண்டு வந்து காட்டப் பட்டது. காய்ந்துபோன இரண்டு விஷயங்களையும் தூக்கி நெருப்பில் போட குபீரென்று ஆள் உயரத்துக்கு நெருப்பு எரிந்தது. செங்கல்லுக்கு நடுவே உள்ள ஓட்டையில் பிராணவாயு உள்ளே போய் செங்கல்லை தகதகத்து எரிய வைத்தது. எனவே இந்த செங்கல் எரிப்பதற்கென்றே செய்யப்பட்டது என்பது உறுதியாகி விட்டது.

விதுரர் கவலையானார். 'சுரங்கம் வெட்டுபவனை கொண்டு வரச் சொல்' அழைத்து வரச் சொன்னார். அவன் அவனுடைய உடையில் வராமல் பாட்டுப் பாடுகிற கூட்டத்துக்கு நடுவே யாழும், மத்தளமும் தோளில் மாட்டிக்கொண்டு விதுரரைப் பார்க்க வந்தான்.

பாணர்கள் அவர்கள் வீட்டுத்தோட்டத்தில் உட்கார்ந்து பாட்டுப் பாட, விதுரர் சுரங்கம் வெட்டுபவனை தனியே அழைத்துக்கொண்டு போனார். விஷயம் தெரிவித்தார்.

பகலில் மாளிகையிலிருந்து விலகிப்போய் ஓய்வெடுத்த சுரங்கம் வெட்டுபவன் இரவு நேரம் விதுரர் ஆட்களுடன் மாளிகைக்குள் நுழைந்து தன்னந்தனியனாய் சுரங்கம் வெட்டத் துவங்கினான். விடியலில் வெளியேறி ஓய்வெடுத்தான். விதுரரின் வேலையாட்கள் அவனை கண் இமை போல் பாதுகாத்தனர்.

சரளைக்கற்கள் சேர்ந்த சிறிய குன்று என்பதால் வெட்டுதல் மிக எளிதாக முடிந்தது. குன்றின் அடிவாரத்தில் சுரங்கம் போய் முடிந்தது. ஒரு ஆற்றின் கரையை வெகுவேகமாய் அங்கிருந்து அடைய முடிந்தது. ஆற்றின் கரையில் பெரிய புதர்கள் நட்டு படகு ஒன்றை மறைத்தும் வைத்திருந்தார்கள்.

'வேலை முடிந்தது' என்று சுரங்கத் தொழிலாளி விதுரரிடம் போய் நின்று கைகூப்பினார். விதுரர் அவரைத் தழுவிக் கொண்டார். மிகப் பெரிய சன்மானம் கொடுத்தார். தெற்கே குடும்பத்தோடு வெகுதூரம் போய்விடும்படி வேண்டிக்கொண்டார். அவன் சம்மதம் தெரிவித்து விட்டு நகர்ந்து போனான்.

அரண்மனையில் பசு தொழுவத்தில் வேலை செய்யும் ஒரு வேலைக்காரியை விதுரர் பார்த்தார். அவளை அருகே வரச்சொன்னார். 'என் வீட்டில் சில நாட்கள் தங்கியிருந்து போக வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார். அவள் திகைத்தாள். அவளை மட்டுமல்லாது அவளுடைய மூன்று மகன்களையும் 'வரவேண்டும்' என்று விதுரர் தாழ்மையாக வேண்டிக் கொண்டார். அவர்களும் அதிசயப்பட்டார்கள். விருந்துக்கு வந்தார்கள்.

இவர்கள் நால்வரைத்தவிர இரட்டைப்பிறவிகளான இரண்டு வேலையாட்களையும் அவர் விருந்துக்கு அழைத்திருந்தார். அவர்கள் வந்ததும் கதவு சாத்தினார். அவர்களுக்கு நடுவே அமர்ந்து கைதூக்கி பேசத் துவங்கினார்.

"நான் உங்களை விருந்துக்கு அழைக்கவில்லை. சாவதற்காக அழைத்திருக்கிறேன். ஒரு நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்ய வேண்டுமென்று உங்களை கேட்டுக் கொள்வதற்காக இங்கே வரவழைத்திருக் கிறேன்.



பஞ்சபாண்டவர்களைக் கொல்ல கௌரவர்கள் திட்டமிட்டு இருக்கிறார்கள். பஞ்சபாண்டவர்கள் நாளை அல்லது இரண்டு நாள் பொறுத்து தங்கள் தாயோடு இந்த அரக்கு மாளிகையில் குடியேறி விடு வார்கள். அவர்கள் குடியேறிய சில நாட்களில் இந்த அரக்கு மாளிகை தீ வைத்து கொளுத்தப்படும். அதில் அவர்கள் இறந்து போவார்கள். ஆனால் அவர்கள் மரணமடையக் கூடாது. கௌரவர்கள் என்கிற அட்ட காசமான, அரக்கத்தனமான இந்த இராஜகுமாரர்களை ஓர் அளவில் எல்லையில் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால், இவர்களைச் சார்ந்துள்ள மற்ற அயோக்கியத்தனமான அரசர்களை வேரறுக்க வேண்டுமென்றால் பாண்டவர்கள் என்கிற இந்த பலம்மிக்க, நல்ல, எளிய, இனிய அரச குமாரர்கள் ஜெயிக்க வேண்டும். அவர்கள் உயிரோடு இருக்க வேண்டும். எனவே இந்த உலகம் தொடர்ந்து நல்லதை நிலைநாட்ட, தர்மத்தை பின்பற்ற நாம் உயிர்த்தியாகம் செய்ய வேண்டும்.

இல்லையெனில் உங்களைப் போன்ற வேலையாட்கள் கசை யாலடிக்கப்படுவார்கள். உங்களைப் போன்ற பெண்கள் பல அரசகுமாரர் களால் கற்பழிக்கப்படுவார்கள். பெண்களுக்கு மரியாதை இல்லாத ஒரு தேசமாக இது இருக்கும். மனிதர்களை மனிதர்கள் அடிமைகள் போல நடத்துவது அதிகமாகும். அரசன்தான் சகலமும் என்கிற மமதையில் ஆட்சியாளர்கள் இங்கு நடந்து கொண்டிருக்கிறார்கள்.

இவைகளை எதிர்க்க, இவர்களிடமிருந்து நல்லவர்களை நாம் தயார் செய்ய வேண்டும். நல்லவர்கள் தயாராகி விட்டார்கள். அவர் களுக்கு பாதுகாப்பாக நாம் இருக்க வேண்டும்.

அவர்களை பாதுகாக்க நான் அரக்கு மாளிகையிலிருந்து சுரங்கம் வெட்டியிருக்கிறேன். அவர்கள் தப்பித்துப் போய் விட்டார்கள் என்று இவர்கள் எண்ணக்கூடாது.

எனவே அந்த அரக்கு மாளிகையில் நீங்கள் போய் குடியிருந்து, நெருப்பு பற்றியதும் தனித்தனியாய் பிரிந்து நெருப்பில் வதைபட்டு இறக்க வேண்டும். உங்கள் எலும்பு துகள்களை வைத்து நீங்கள் இன்னாரென்று நான் சொல்ல, துரியோதனனும், மற்றவர்களும் பஞ்சபாண்டவர்கள் இறந்துவிட்டதாக சமாதானம் அடைவார்கள்.

இதற்கு நடுவே பஞ்சபாண்டவர்களை நான் வெகுதூரம் அழைத்துப் போய்விடுவேன். வேறு வழியில்லாமல் இந்த வேண்டுதலை உங்கள் முன் வைக்கிறேன். பிறகு உங்கள் விருப்பம்" என்று அமைதியாகச் சொன்னார்.

பெண் உட்பட அந்த ஐந்து வேலையாட்களும் உடனடியாய் சம்மதித்தார்கள். விதுரர் அவர்களுக்கு தினந்தோறும் விருந்து கொடுத்து உபசரித்தார்.

"உயிர்த்தியாகம் என்பது எல்லோருக்கும் செய்யக் கிடைப்ப தில்லை. வெகுசிலருக்கே இந்த அதிர்ஷ்டம் ஏற்படுகிறது. ஒரு குலத்திற் காகவும், குடும்பத்திற்காகவும் தியாகம் செய்த எவராயினும் உடனே அவர்கள் சத்திய லோகம் போகிறார்கள். உங்கள் மரணத்தை சமாதானப் படுத்த இதை நான் சொல்லவே இல்லை. நீங்கள் இன்றில்லையேனும் நாளை இறக்கப் போகிறீர்கள். ஏதோ ஒரு விதத்தில் மரணமடையப்

போகிறீர்கள். நோய்பட்டோ, உணவின்றியோ, யுத்தத்திலோ அல்லது கலவரத்திலோ மாட்டி உயிரிழக்கப் போகிறீர்கள்.

அப்படி அல்லாமல் தருமத்தைக் காப்பதற்காக, உத்தம உயிர்களுக்காக, பெரிய கலாச்சார வளர்ச்சிக்காக, அதர்மத்தை ஒழிப்பதற்காக வேதனைப்படும் மக்களை விரைந்து போய் காப்பதற்காக நீங்கள் உயிரிழக்கப் போகிறீர்கள். இது மிகப்பெருமையான விஷயம். மரணம் மிகத் திருப்தியாக இருக்கும். எல்லோரும் சாக பயந்து தான் சாகிறார்கள்.

இதோ, உங்கள் முன்னே நான் அமர்ந்திருக்கிறேன். எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்குமானால் இந்த கூட்டத்தில் வெகு நிச்சயமாய் நான் சேர்ந்து கொள்வேன். ஆனால் என் மரணம் இங்கு தேவைப்படவில்லை. எனவே சற்றும் மனம் கலங்காமல் உங்களை இழக்க நீங்கள் சித்தமாயிருங்கள்" என்று பலவகையில் சமாதானம் சொன்னார்.

அவர்கள், "உங்கள் கட்டளை ஒன்று போதும். எந்த சமாதானமும் தேவையில்லை. நீங்கள் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் இந்த வேலைக்கார குடும்பங்களின் கதி மிக இழிவாகப் போயிருக்கும். இன்று பரத கண்டம் முழுவதும் வேலைக்காரர்களுக்கு ஒரு மதிப்பு இருக்கிறதென்றால் அது உங்களால் ஏற்பட்டது.

அரசர்கள் கொடுமை செய்ய பயப்படுகிறார்கள் என்றால் நீங்கள் தட்டிக் கேட்பீர்கள் என்பதால்தான். நீங்கள் சொல்லிக் கொடுத்த நீதியும், பொறுமையும், அன்பும், கருணையும் எங்களை சந்துஷ்டியாக வைத்திருக்கின்றன. உங்களால் நாங்கள் பெரிதும் நலமாக இருக்கிறோம். உங்களால் காப்பாற்றப்பட்டிருக்கிறோம். உங்களுக்கு கடன்பட்டிருக்கிறோம். எனவே நீங்கள் வருத்தப்பட்டு பேச வேண்டாம். இந்த உயிர் உங்களுடையது" என்று அவரை அடிபணிந்தார்கள். விதுரர் அவர்களை ஆரத் தழுவிக் கொண்டார்.

தருமபுத்திரர் சகோதரருடன் அரக்கு மாளிகைக்கு போனதும் இவர்களைத் தனித்தனியே மாறுவேடம் அணியச்சொல்லி ஜனங்களோடு ஜனங்களாக அமர வைத்திருந்தார்.

கௌரவர்களும், பாண்டவர்களும் அரக்கு மாளிகையின் கத கதப்பை உணர்ந்தவாறு சூதாடியும், பேசியும், களித்தும், குடித்தும், உண்டும் பொழுது போக்கினார்கள்.

நல்ல மதுபானம் செய்த ஒரு நாள், துரியோதனன் அரக்கு மாளிகைக்கு தீ மூட்டினான். தீ பற்றியெரியும்பொழுது அந்த வேலைக்கார பெண்மணியும் அவளது மூன்று பிள்ளைகளும், விதுரர் தனியே அனுப்பிய இரண்டு இரட்டையரான வாலிபர்களும் மாளிகைக்குள் பாய்ந்தோடினார்கள். கதவை அடைத்து சாத்திக் கொண்டார்கள்.

தீ கொழுந்து விட்டெறிந்தது. உஷ்ண நாக்குகளை நாற்புறமும் வீசியது. மலையடிவாரத்திலிருந்து மேலே ஜனங்கள் வருவதற்குள் சகலமும் பஸ்பமாயின.

உள்ளேயிருந்த பஞ்சபாண்டவர்கள் சுரங்கத்தை எட்டி உதைத்து திறந்து பீமன் துணையோடு மலையின் அடிவாரம் போய், அடி வாரத்திலிருந்த படகில் ஏறி, நதியின் மூலம் எதிர்க்கரைக்கு உள்ளேயுள்ள காட்டுக்குள் நுழைந்து வெகுதூரம் பயணப்பட்டு விட்டார்கள்.



அவர்கள் காப்பாற்றப்பட்டதும், வேலையாட்களாக இருந்து உள்ளே மாளிகைக்குப் போன ஆறுபேரும் பஸ்பமானதும் விதுரருக்கு தெரிவிக்கப்பட்டது.

விதுரர் தூணில் சாய்ந்துகொண்டு விம்மி விம்மி அழுதார்.

"நீங்கள் செய்த ஏற்பாடு, நீங்கள் செய்த திட்டம். நீங்கள் எல்லாம் தெரிந்த ஞானி. இப்படியெல்லாம் நடக்கும் என்று முன்னமே எழுதி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்பவர். கடவுளுடைய வருகை ஏற்பட்டு விட்டது என்று எங்களுக்கு காட்டிக் கொடுத்தவர். உணர்ச்சிவசப்படுதலும், உள்ளம் உருகுதலும், உறைந்து போதலும் தவறு என்று எங்களுக்கு சுட்டிக்காட்டுபவர். 'எழுந்து நில், போர் செய்' என்று உற்சாகமூட்டியவர். நீங்களே இப்படி அழுகிறீர்களே விதுரரே" அவருடைய நெருங்கிய வேலையாட்கள் அவரிடம் வருத்தப்பட்டு பேசினார்கள்.

"என்ன செய்வது, எனக்கு வருத்தமாக இருக்கிறது. நான் அழுகிறேன். எவ்வளவு ஞானவானாக இருந்தாலும், எத்தனை தெளிவாக சிந்தித்தாலும் நம்மோடு பழகியவர்கள், நமக்கு அருகே அமர்ந்து உண்டவர்கள், நம்மைத் தொட்டுக் கிடந்தவர்கள், நம்முடைய பேச்சுக்கு சிரித்தவர்கள், நம்மைச் சிரிக்க வைத்தவர்கள் இறந்து போனார்கள், நம் கண்ணெதிரே மரித்துப் போனார்கள் என்கிறபோது அழாமலிருக்க முடியவில்லை.

இவர்களுக்கு மூன்று நாட்கள் நல்ல உணவு போட்டதைத் தவிர நான் வேறு என்ன உதவிசெய்வேன், இவர்களோடு நெருங்கிநின்று இந்த மூன்று நாட்கள் நீதிக்கதைகள் சொன்னது தவிர வேறு என்ன நன்மைகள் செய்தேன்...

ஆனால் பரத கண்டத்திற்கு இவர்கள் எவ்வளவு பெரிய நன்மையைச் செய்திருக்கிறார்கள்...'நான் நெருப்பில் விழ முடியாது. வேறு ஆள் பார்' என்று ஏதும் இவர்கள் ஒருவரும் சொல்லவில்லை.

இந்த பூமி புண்ணிய பூமி. தியாகிகள் நிறைந்த பூமி. இவர்கள் தியாகம் வெளியே தெரியாது. பேசப்படாது. இவர்கள் பெயர் பொன்னெழுத்தால் பொறிக்கப்படாது. சிலை வடிக்கப்பட மாட்டார்கள். ஆனால் இவர்களைப் போல லட்சோப லட்சம் ஆட்களால்தான் பரத கண்டம் இன்னும் உயிர்ப்பித்திருக்கிறது. இங்கு சனாதின தர்மம் செழித்திருக்கிறது.

ஆனால், ஒன்று தெரிந்து கொள்ளுங்கள். எந்த தியாகமும் வீண் போனதே இல்லை. எந்த தியாகமும் பரிசுபெறாமல் இருந்ததே இல்லை. இவர்களுடைய மறுபிறவி மகத்தானதாக இருக்கும்.

இறந்தவர்களுக்கு துரியோதனன் எள்ளும் தண்ணீரும் இறைத்து தர்ப்பணம் செய்தான். யாருமில்லாதபோது இறந்தவர்கள் எலும்புகளை காலால் எட்டி வாய்விட்டு சிரித்தான். இதை வேலைக்காரர்கள் மூலம் விதுரர் அறிந்துகொண்டார்.

துக்கப்பட்ட பீஷ்மரிடம் விதுரர் உண்மையைச் சொன்னார். சமாதானப்படுத்தினார்.

காலக்குதிரை புழுதி பறக்க பூமியை இழுத்துக்கொண்டு ஓடிற்று.

இறந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருந்த பாண்டவர்கள் துருபதன் நாட்டில் போட்டியில் கலந்துகொண்டு ஏகச்சக்கரப்பட்டினத்தில் அமைந்துள்ள, சுழலும் சக்கரத்துக்கு நடுவே மீனை அடித்து திரௌபதியை கைப்பிடித்தார்கள் என்றும், குந்தியின் வாக்கைத் தட்டாது ஐவருமே மணந்து கொண்டார்கள் என்றும் செய்திகள் வந்தன.

துரியோதனன் கோபமாகி துருபதனை எதிர்த்து படையோடு கிளம்பினான். தோல்வியோடு திரும்பினான். பாண்டவர்கள் முன்னிலும் வலுவாய் இருப்பதைக் கண்டுபிடித்து மனம் வெதும்பினான்.

திருதராஷ்டிரன் உத்தரவின் பேரில், விதுரர் பாண்டவரிடம் போய் அவர்களை சமாதானப்படுத்தினார். குறிப்பாய் பீமனை அமைதிப் படுத்தினார்.

"பீமா, உன்னுடைய கோபம் மிக நியாயமானது. துரியோதனனை மிகக் கடுமையாக தண்டிக்கத்தான் வேண்டும். ஆனால் அவன் தொடர்ந்து குற்றங்கள் செய்ய வேண்டும். அவனை மன்னித்து விடும்படி ஒருவர் கூட சொல்ல விடாமல் மிக பாதகமான செயல்களை தொடர்ந்து அவன் செய்ய வேண்டும். அப்படியிருப்பின்தான் கூட்டமாக கௌரவர்களை நீ அழிக்க முடியும். அழிப்பதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். துரியோதனன் பக்கமும் நியாயம் இருக்கிறது என்று எவரும் சொல்லி விடக்கூடாது. துரியோதனனை அழித்தே ஆக வேண்டும் என்று உலகம் முழுவதும் குரலெழுப்பும்போது உன்னால் வெகு சுலபமாக துரியோதனனை அழிக்க முடியும். ஊர்கொடுத்த உற்சாகத்தில் உபயோகமற்ற இந்த துரியோதன கூட்டத்தை அடித்து நொறுக்க முடியும். இப்போது அவசரப்பட்டாயெனில், உன்னால் அதில் நாலு பேரைக்கூட கொல்ல முடியாது. தடுத்து விடுவார்கள். நீயும் தயங்கி விடுவாய். செய்வது தவறோ என்று பயப்படுவாய்.

ஒரு அரக்கனது மரணம் போல துரியோதனனுடைய மரணம் கொண்டாடப்பட வேண்டும் பீமா. அதற்காக காத்திரு.

அவனை இப்படியே வளரவிட்டால் என்னை அழித்து விடுவானே என்று பயப்படுகிறாயா...நீ யார் என்று உனக்கு தெரியவில்லை பீமா... அதனால்தான் இந்த சந்தேகங்கள் எழுகின்றன. நீ துரியோதனனை அழிக்கவே பிறந்திருக்கிறாய். அகந்தையும், திமிரும், அடாது செய்தலும் நிறைந்த க்ஷத்திரியக் கூட்டத்தை அழித்து பூமியின் பாரத்தைக் குறைப்பதற்காகவே நீங்கள் பிறந்திருக்கிறீர்கள். இப்பொழுது அவன் மீது நீ படையெடுத்தால் கூட ஜனங்கள் கேலியாகப் பேசுவார்கள்.

க்ஷத்திரியர்களுக்குள் பங்காளிச் சண்டைகள் சகஜம்தானே ... ஒருவனை கொன்றால் மற்றொருவன் சுகமாக நாடாளலாம் அல்லவா... அதற்காகத்தானே துரியோதனன் கொன்றான். வேறு என்ன தவறு இருக்கிறது...இது இங்கே நடந்திருக்கிறதே...அங்கே நடந்திருக்கிறதே...இவர் இப்படி செய்திருக்கிறாரே. அவர் அப்படி செய்திருக்கிறாரே" என்று சாதாரண ஜனங்களே வேண்டுமென்றே துரியோதனன் பக்கம் போய் நின்று உனக்கு எதிராகப் பேசுவார்கள்.

எல்லா ஜனங்களும் தர்மம் அறிந்தவரல்ல பீமா...ஜனங்களில் அதிகம் பேர் முட்டாள்கள். அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு இரண்டாகப்



பிரிந்து நல்லவர் பக்கம் பாதியும், தீயவர் பக்கம் பாதியும் நின்று பேசுவார்கள். ஜனங்களை க்ஷத்திரியர்கள் ஒருக்காலும் இப்படி பிரிக்கக் கூடாது.

எல்லாம் கிடக்க, தருமபுத்திரருக்கே 'துரியோதனன் நம் சகோதரன் தானே ஏதோ தெரியாமல் செய்துவிட்டான். போகட்டும்' என்ற எண்ணம் தோன்றிவிடும். தருமபுத்திரருக்கு அவ்விதம் சிந்தனை எழும்பி விட்டால் அவரை மீறி எதுவும் செய்ய முடியாது. பாதி ஆத்திரத்தோடே காரியம் நிற்கும்.

ஆகவே, இப்பொழுது மனதை தேற்றிக்கொள். நடிக்கக் கற்றுக் கொள். உனக்கு துரியோதனன் மீது பொறாமை உண்டா...இல்லவே இல்லை. அவன் மீது வெறுப்பு உண்டா...சிறிதும் கிடையாது. 'அவன் மீது உனக்கு நட்பு உண்டா...அவன் என் சகோதரன். மிகுந்த நட்பு உண்டு' என்று சொல்லிக்கொண்டு இரு. வெறும் வெற்று சமாதானமாக இதை நான் சொல்லவில்லை. உங்கள் எதிர்காலம் பற்றி நிச்சயமாக தெரிந்துதான் இதை விவரித்துக் கூறினேன். நீங்கள் நான் சொல்லும் போது நாடு திரும்புங்கள்" என்று சொல்லிவிட்டு போனார்.

திருதராஷ்டிரனிடம் போய் பணிவாக நின்றார்.

"நமது குழந்தைகள் துருபத நாட்டிற்குப்போய் ஏகசக்கரப் பட்டணத்திலே அமைந்திருந்த சக்கரத்துக்கு நடுவே உள்ள மச்சத்தை அடித்து வீழ்த்தி துருபதன் மகளான திரௌபதியை மணந்துகொண்டு திரும்பியிருக்கிறார்கள்" என்று சொன்னார்.

விதுரர் நமது குழந்தைகள் என்று சொன்னதும், திருதராஷ்டிரன் கௌரவர்களை நினைத்துக்கொண்டு, 'கிருஷ்ணை என்கிற அந்த திரௌபதியை நகரத்துக்கு சர்வாலங்காரத்துடன் கூட்டிக்கொண்டு வாருங்கள்' என்று சொன்னான். வேலைக்காரர்கள் அந்த உத்தரவை ஏற்றுக்கொண்டு வெளியே புறப்பட்டார்கள்.

"அண்ணா நான் நமது குழந்தைகள் என்று குறிப்பிட்டது பாண்டவர்களை. பாண்டவர்கள் நமது குழந்தைகள்தானே" விதுரர் நைச்சியமாகப் பேச திருதராஷ்டிரனுக்கு தன்னுடைய பொறாமையை வெளியே காட்ட முடியவில்லை.

"ஆமாம் அவர்களும் நமது குழந்தைகள்தான். துருபதன் நமக்கு நண்பன். என் மருமகளை இங்கு அழைத்து வாருங்கள். என் உத்தரவின் படியே நல்ல வரவேற்பு கொடுங்கள்" என்று சமாளித்தார்.

விதுரர் போனதும் துரியோதனன் வந்து, "என் எதிரிகளை ஊர்வலமாக வரச் சொல்லியிருக்கிறீர்களே. இது நல்லதா" என்று குமுற, "வேறு வழியில்லை. தெரியாமல் உளறிவிட்டேன். இன்னொரு சமயம் கிடைக்கும்போது பாண்டவர்களை அழித்துக் கொள்ளலாம். இப்போது மௌனமாக இரு. இது சரியான காலமாக தெரியவில்லை" என்று கண் தெரியாத திருதராஷ்டிரன் தன் மகனுக்காக பரிந்து பேசினான்.

பாண்டவர்கள் நகருக்குள் பிரவேசித்தார்கள். எல்லாரும் எல்லாமும் மறந்து விட்டதுபோல நடித்தார்கள். 'பாண்டவ பிரஸ்தம்' என்கிற ஊரை, பாறைகள் மிகுந்த இடத்தை தருமபுத்திரர் வசிப்பதற்காக பிரித்துக் கொடுத்தார்கள்.

தருமபுத்திரர் மயனின் துணையோடு, அங்கு அற்புதமான மாளிகை கட்டி நீர்நிலைகள் ஏற்படுத்தி, ஆறு ஒன்றை திசைதிருப்பி செழுமையாக்கினார். அதற்கு 'இந்திரப்பிரஸ்தம்' என்று பெயரிட்டார்.

ஆண்டுகள் பல அமைதியாக நகர்ந்தன.

"நல்லவர்களான பாண்டவர்களுக்கு ஏன் இத்தனை துன்பம் வந்தது..." வேலையாட்கள் இரவுநேரம் விதுரரை சுற்றி உட்கார்ந்து கொண்டு கேள்வி கேட்டார்கள்.

"பாண்டவர்கள் நல்லவர்கள்தானா" விதுரர் எதிர்கேள்வி கேட்டார்.

"ஆமாம் ஐயா. அவர்கள் மிக மரியாதையுடன் வேலையாட்களிடம் பழகுகிறார்கள். பெண்களை அன்போடு நடத்துகிறார்கள். வயதானவர்களோடு தோழமையோடு பேசுகிறார்கள். கற்றோரிடம் பணிவாக நடந்து கொள்கிறார்கள். அதேசமயம் எதையும் திறம்பட செய்யும் வலிமை பெற்றிருக்கிறார்கள்.

"நல்லவர்க்கு வரும் சோதனைகள் எல்லாம் வலிமை கூட்டுவதற்காகவே வருகின்றன. பாண்டவர்கள் நெடுநாள் வனவாசம் போகப் போகிறார்கள். அப்படி நெடுநாள் வனவாசம் போகும்போது ஒரு பெண்ணையும் அழைத்துப் போகப்போகிறார்கள். அதாவது இப்போது திருமணம் செய்து கொண்டிருக்கிற திரௌபதியும் அவர்களோடு போக வேண்டியிருக்கும்.

ஒரு பெண்ணோடு வனாந்திரத்துக்குள் எப்படி போவது என்பதை தாயை தூக்கிக்கொண்டு போவதின் மூலம் உணர்ந்து கொண்டார்கள். அம்மாவை தோளில் வைத்து, மாற்றி, மாற்றி எப்படி தூக்கிக்கொண்டு ஓடினார்களோ அதேபோல் தங்கள் மனைவியை தூக்கிக்கொண்டு ஓடப் போகிறார்கள். அம்மாவைப்போல மனைவியை நடத்தப் போகிறார்கள். ஐந்து ஆண்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு பெண்ணை மனைவியாக அடைந்து, அந்தப்பெண்ணை தாயைப்போல உள்ளங்கையில் வைத்து பாதுகாக்க வேண்டும் என்றால் அவன் மனப்பக்குவம் எவ்வளவு உயர்ந்ததாக இருக்க வேண்டும் யோசித்து பார். அம்மாவை அலட்சியப்படுத்தவே இல்லை. நாம் மிக கவனமாக தாயைப் பாதுகாத்தோம். பாதுகாக்க வேண்டும் எல்லா தீமைகளிலிருந்தும் பாதுகாக்க வேண்டும் என்கிற ஒரு கடமை உணர்வு தாயின் மூலம் அவர்களுக்கு கிடைத்திருக்கிறது. அதை மனைவியின் தலையில் கொட்டுவார்கள். மனைவியின் தலையில் ஐந்து ஆண்களின் பௌருஷம் மிக்க காதல் வழியும்போது அவள் சக்தியைவிட மிக உயர்ந்த பதவியை அடைந்து விடுகிறாள். மிக பலம் பொருந்தியவளாய் ஆகி விடுகிறாள். அவளுடைய கனிவு, காதல் அவர்கள் மீது திரும்பி அவர்களைத் தாய்போல் அணைத்துக் கொண்டு அவர்களுடைய துன்ப காலத்தில் உற்சாகப்படுத்தும்."

"ஒரே பெண்ணை ஐந்து பேர் மனைவியாக வைத்துக் கொண்டிருக்கிறார்களே...சண்டை வந்துவிடாதா..."

"சண்டை வந்தால் அவர்கள் சகோதரர்கள் அல்ல. சகோதரர்கள் என்றால் அங்கே சண்டை வரக்கூடாது."

"இது அதர்மம் போல் உங்களுக்குத் தெரியவில்லையா...ஒருவன்



பல பெண்களை மணந்து கொள்ளலாம். ஒரு பெண் பலரை மணந்து கொள்வது தர்மமாகுமா..." ஒரு வயதான பெண்மணி விதுரரை கேள்வி கேட்டாள்.

"காரண, காரியமில்லாமல் எந்த தருமமும் பேசப்படுவது இல்லை. இங்கு காரண, காரியத்துக்காகவே, இந்த தர்ம மீறல் நடந்து கொண்டிருக்கிறது.

அழகிய இளமையான ஒரு பெண் இருக்கும்போது கூட சகோதரர்களுக்கு நடுவே சண்டை வரவில்லை. எதன் பொருட்டும், எந்த நாளும் என்கிறபோது அந்த சகோதரர்கள்தான் கௌரவர்களை எதிர்க்க முடியும். இப்படிப்பட்ட ஒற்றுமை உள்ளவர்கள்தான் அரசகுலத்தின் திமிரை வேரறுக்க முடியும். க்ஷத்திரியர்களின் அகம்பாவத்தை அடித்து நசுக்க முடியும்.

அரசுகட்டிலில் உட்கார்ந்து கொண்டிருக்கும் க்ஷத்திரியர்கள் திமிர் அளவுக்கதிகமாக போய் விட்டது. பரம்பரை பரம்பரையாய் அதர்மம் பெருகி, இவர்கள் வாழ்க்கை கேவலமாகி விட்டது. ஒவ்வொரு அரசனும் பல திருமணங்கள் செய்து பெண்களை வாழ ஒட்டாமல் புறக்கணித்து வீடுகளைச் சுற்றி சிறிய குடிசைகளில் அவர்களை எந்த மதிப்பும் தராமல் வைத்திருக்கிறார்கள். இப்படி தன் இளமை வீணாகிப் போய், தனித்துப் போய் - எந்த மரியாதையும் இல்லாமல் அழிந்துபோன பெண்கள் ஏராளம். அவர்களுடைய சாபமெல்லாம் அவர்களுடைய கோப மூச்செல்லாம் ஒன்று திரண்டு திரௌபதியாக்கி இருக்கிறது.

'ஆயிரம் பேரில் ஒருவராக என்னைத் திருமணம் செய்து கொண்டாயே, நான் ஐந்து வீரர்களுக்கு மனைவியாகிக் காட்டுகிறேன் பார்' என்று அந்த பெண்கள்தான் திரௌபதியாய் பிறந்திருக்கிறது.

ஒரு குலம் வளர்ச்சியடையும்போது எல்லை மீறாமல் அதன் பெரியவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனாலும் வளர, வளர எதுவும் எல்லை மீறும். க்ஷத்திரிய குலம் ஒரு உச்சக்கட்டத்திற்கு வந்து விட்டது. இனி அது அடிபட்டு கீழே சாய்வதுதான் சகலருக்கு நல்லது. இது பரிணாம விதி. இயற்கையின் ஒழுங்கு."

"இப்படி வேறு ஏதேனும் குலத்திற்கு நடந்திருக்கிறதா?"

"வேதகாலத்திலிருந்த அந்தண குலத்திற்கு இருந்த மரியாதை இப்போது இல்லை. ரிஷிகளுக்கும், முனிவர்களுக்கும் இருந்த சக்தி இப்போது இல்லை. அது உச்சகட்டத்திற்கு போய் தரையிறங்கி விட்டது. இது க்ஷத்திரியர்கள் காலம். அவர்கள் உச்சியில் இருக்கிறார்கள். அவர்கள் தரையில் இறங்க வேண்டிய அவசியம் வந்துவிட்டது."

"அடுத்தது வைசியர்கள் காலமா."

"இருக்கலாம்."

"அதேபோல நான்காவது வருணத்தின் காலமும் வருமா..."

"நிச்சயம் வரும்."

"விதுரரே இன்னும் ஒரு கேள்வி" வேறொருவன் கேட்டான்.

"கேளப்பா" விதுரர் அவன் பக்கம் திரும்பிக் கொண்டார்.

"நீங்கள் ஏன் கௌரவர்களுக்கு நல்லபுத்தி சொல்லக்கூடாது..."

"இடைவிடாது சொல்லிக்கொண்டுதான் இருக்கிறேன். ஆனால் அவர்கள் கேட்பவர்களாக இல்லை."

"எதனால் அவ்விதம் நேர்ந்தது."

"துரியோதனன் தன் காதுகளை சகுனிக்கு மட்டும் திறந்து வைத்திருக்கிறான். இனிக்க, இனிக்க நிஜமாகப் பேசுகிற சகுனியை சார்ந்து இருக்கிறான். 'இளவரசே, இளவரசே' என்று சகுனி அழைப்பதால் அவனுக்கு சகுனியை பிடித்துப் போயிற்று. 'மகனே' என்று நான் அழைப்பதால் என் மீது வெறுப்பு வருகிறது. இனிக்க பேசுகிறவர்களை மட்டும் துணையாகக் கொள்பவன் பிரிவை அடைவான். தனக்கு இதமாக பேசுகிறவர்களை மட்டும் நண்பனாக அடைபவன் நடுத்தெருவில் நிற்க வைக்கப்படுவான். சகுனியால் துரியோதனனைக் காப்பாற்ற முடியாது. வெகுசீக்கிரம் துரியோதனன் சிக்கலில் மாட்டிக் கொள்ளப் போகிறான்.

"கோடிக்கணக்கான பேர் சாகும்படியாக ஒரு யுத்தம் வரவேண்டும் என்று விரும்புவீர்களா, விதுரரே."

இது விதி. அப்படி இருப்பது உலகத்திற்கு நல்லது. அது மட்டுமில்லை. வன்முறை கூட்டம் பெருத்துப் போயிற்று. ஒவ்வொரு அரசனுக்கும் நூறு மனைவிகள். ஒவ்வொரு மனைவிக்கும் பத்து பிள்ளைகள். அரச குடும்பம் எவ்வளவு பெரிதாக விரிந்து விட்டது. அரச குடும்பம் இவ்வளவு பெரிதாக விரிந்து விட்டால் அவர்களுக்கு யார் வேலை செய்வது...எங்கிருந்து செல்வம் வருவது...ஜனங்களிடமிருந்து அடித்து பிடித்து ஒரு கூட்டம் மட்டும் சுகமாக வாழ, இன்னொரு கூட்டம் வேதனையில் தவிக்கின்ற ஒரு அபத்தமான நிலை ஏற்பட்டு விட்டது.

இப்படி விரிவடைந்த அரசகுலம் தனக்குள்ளேயே யார் பலசாலி என்பதை அடிக்கடி நிரூபிக்க வேண்டியிருக்கும். அப்படி நிரூபிப்பதில் அடிதடி ரகளை ஏற்படும். கொலைகள் மிக சர்வசாதாரணமாக விழும். ஒரு முறை கத்தியை நெஞ்சில் இறக்கி, கொலை செய்தவன், மறுமுறையும் அவ்விதம் செய்வதற்கு ஆசைப்படுவான். எல்லா இடத்திலும், எல்லா காலத்திலும் வன்முறையில் நாட்டமுள்ளவர்கள் முதல் கொலைக்குத்தான் காத்திருக்கிறார்கள். முதல் கொலை செய்தபிறகு பல நூறு கொலைகளுக்கு அவர்கள் தயாராகி விடுகிறார்கள். எப்பொழுது தயாராகிறார்களோ, அப்போது அவர்கள் மரணம் அவர்களுக்கு அருகே வந்து விட்டது. அவர்களிடமிருந்து நிம்மதி போய் விட்டது. அவர்கள் கொலைக்கான காரணத்தை கண்டுபிடிக்க துஷ்டத்தனமாக பேசுவார்கள். கேலி செய்வார்கள். வலிய வம்பிழுப்பார்கள். நான் வல்லவன் என்பதை இடைவிடாது பறைசாற்றிக் கொண்டிருப்பார்கள்.

"விதுரரே இன்னும் ஒரு கேள்வி" ஒரு வயதான மூதாட்டி நடுங்கும் குரலுடன் கேட்டாள்.

"கேளுங்கள் தாயே" விதுரர் அவள் பக்கம் திரும்பினார்.

"கடவுள் இன்னும் வரவில்லையே...வருவாரென்று வெகுநாள் முன்பு சொன்னீர்களே" விதுரர் எழுந்துபோய் அந்த மூதாட்டியை அணைத்துக் கொண்டார். நெற்றியில் முத்தமிட்டார்.






ஸ்ரீ அருணாசலேஸ்வரர்

# தீபத் திருநகர் திருவண்ணாமலையில் மாதாமாதம் பௌர்ணமி கிரிவலத்தில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்...



தாங்கள் கீழ்க்கண்ட எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகின்றீர்கள் என்பதை எங்களுக்கு தெரிவித்தால் அதன்படி நாங்கள் அன்னதானம் செய்து பிரசாதத்துடன் ஸ்ரீ அருணாசலேஸ்வரர், ஸ்ரீ உண்ணாமுலையம்மை படத்தை தங்களுக்கு அனுப்பி வைக்கின்றோம்.

❖பிறந்தநாள் ❖திருமணநாள் ❖முன்னோர்கள் திதி நாள் ❖வாழ்க்கையில் வளம்பெற ❖தொழிலில் முன்னேற்றம் பெற ❖நிரந்தர வேலை பெற ❖புதிதாக தொழில் தொடங்க ❖புதிதாக வீடு/மனை பெற ❖கணவன்-மனைவி வாழ்வில் சுகம் பெற ❖பிள்ளைகள் படிப்பில் நன்கு கவனம் செலுத்தி முன்னேற ❖பிள்ளை பாக்கியம் பெற ❖கல்யாண பாக்கியம் பெற ❖நோயிலிருந்து சுகம் பெற ❖மன அமைதி பெற

- பணம் அனுப்புபவர்கள் "ஆன்மீக அன்னதான அறக்கட்டளை" (Aanmeeka Annadhana Charitable Trust Chennai-4) என்ற பெயரில் Cheque / D.D / M.O. மூலம் அனுப்பி வைக்கலாம்.
- ரூ.500/- அனுப்புபவர்களுக்கு ஆன்மீகம் மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பப்படும்.
- ரூ.1000/- அனுப்புபவர்களுக்கு ஆன்மீகம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு இலவசமாக அனுப்பப்படும்.
- ரூ.2000/- அனுப்புபவர்களுக்கு ஆன்மீகம் மாத இதழ் நான்கு ஆண்டு இலவசமாக அனுப்பப்படும்.

Cheque / D.D / M.O அனுப்ப வேண்டிய முகவரி :

ஆன்மீக அன்னதான அறக்கட்டளை

AANMEEGA ANNADHANA CHARITABLE TRUST (Regd.)

31/1, Nadu Street, ( Opp. Kapaleeshwarar Koil ) Mylapore, Chennai - 600 004. Ph : 4958086

"கடவுள் நிச்சயம் வருவார். ஹஸ்தினாபுரம் வருவார். நீ இனி என் வீட்டில் தங்கி இரு. அவரை உனக்கு நான் அறிமுகப்படுத்துகிறேன். இருபது வருடங்களுக்கு முன்னும் நீ இந்த கேள்வியைத்தான் கேட்டாய் இப்போதும் அதைத்தான் கேட்கிறாய். இடையறாது நீ இதை மட்டுமே கேட்டுக் கொண்டிருக்கிறாய் என்று எனக்கு புரிந்துவிட்டது. வெகு நிச்சயமாய் உனக்கு கடவுளை நான் அறிமுகப்படுத்துவேன்" என்று கைகூப்பினார்.

"ஆனால் விதுரரே, எல்லாம் அடங்கிவிட்டது என்றல்லவா எனக்குத் தோன்றுகிறது. சகோதரர்களுக்கு நடுவே இருந்த பகை மறந்து இந்திரப்பிரஸ்தத்தை தருமரும், ஹஸ்தினாபுரத்தை துரியோதனனும் அமைதியாக ஆட்சிசெய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் போர் வரும். போர் வரும் என்று நீங்கள் சொல்வது புரியாத புதிராக இருக்கிறது."

விதுரர் அந்த கேள்விக்கு பதில் சொல்லவில்லை. கண்மூடி அமர்ந்திருந்தார். அப்பொழுது குதிரையிலிருந்து ஒருவன் இறங்கி வந்தான். அவன் விதுரருடைய ஒற்றன். விதுரருக்கு அருகே போய் கைகட்டி நின்றான்.

"உனக்கு தெரிந்ததை சத்தம் போட்டு சொல். நீ என்ன சொல்ல வந்தாயோ அதை உரக்க இந்த ஜனங்களுக்கு தெரிவி" என்று கட்டளையிட்டான்.

வந்தவன் தயங்கினான். அவர்கள் எல்லோரும் அந்த ஒற்றனையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"துரியோதனன் இன்னொரு மாளிகை கட்டத் துவங்கிவிட்டார். தருமபுத்திரரை அந்த மாளிகைக்கு வரவழைக்க வேண்டுமென்று விரும்புகின்றார்."

எல்லோரும் 'ஆ' வென்று கூச்சலிட்டார்கள். அமைதியானார்கள். ஆழ்ந்து யோசித்தார்கள். அங்குள்ள யாரும் அன்றிரவு தூங்கவில்லை.

"இந்த யுத்தத்தை தவிர்க்கவே முடியாதா" இன்னொரு கிழவி கேட்டாள்.

"இல்லை தவிர்க்கவே முடியாது. பல பெண்கள் விதவையாவார்கள். பல குழந்தைகள் தகப்பனில்லாது போவார்கள். பல வயதானவர்கள் தங்கள் பிள்ளைகளை இழப்பார்கள்."

"இது தேவைதானா" மீண்டும் அந்தப்பெண்மணியே கேட்டாள்.

"ஜனன உற்பத்தி வேகமாக நடைபெறுகிறபோது அதற்கேற்ற வண்ணம் மரண கணக்கும் அதிகமாக வேண்டும். ஆனால், இன்றைய ஜனங்கள் புத்திசாலிகள். ஜனன உற்பத்தியை அதிகரித்துவிட்டு எப்படி உயிர்வாழ்வது என்கிற விந்தையை நம் முன்னோர்கள் செய்து வைத்த வழிகளின்படி அறிந்துகொண்டு, மிக சாமர்த்தியமாக நடந்து கொள்கிறார்கள். நோயற்று வாழவும், நோயை எதிர்த்து போராடவும் கற்றுக் கொள்கிறார்கள். இயற்கையின் சீற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்ள அற்புதமான கோட்டைகள் கட்டிக்கொள்கிறார்கள். பூகம்பம் கூட மிகப் பெரிய சேதத்தை விளைவிப்பதில்லை. தப்பிப்பது எப்படி என்பது எல்லாருக்கும் தெரிந்துவிட்டது.



என்வே பூமியின் பாரத்தைக் குறைப்பதற்கு மனிதர்களை மனிதர்கள் வெட்டி சாய்ப்பதே வழியாக உள்ளது

"உண்மையில் இந்த யுத்தத்திற்கு காரணமானவர் யார் விதுரரே" ஒரு இளைஞன் துள்ளி எழுந்து நின்று கேட்டான்.

"நீங்கள்தான்" விதுரர் கூட்டத்தை கைகாட்டினார். கூட்டம் வாயடைத்து போயிற்று.

"அரசர்களை திருப்திப்படுத்த உங்கள் திறமை முழுவதும் நீங்கள் செயல்படுத்தியிருக்கிறீர்கள். அரசர்கள் உங்களால் பல்வேறுவித சௌகரியங்களை அனுபவிக்கிறார்கள். இந்த சௌகரியத்தின் உச்சகட்டத்தில் யுத்தம் செய்ய வேண்டும் என்ற ஆசை எழுந்து விடுகிறது."

"எனக்குப் புரியவில்லை நீங்கள் சொல்வது. நாங்கள் என்ன சௌகரியம் செய்துவிட்டோம். எங்கள் வேலைகளைத்தானே செய்து கொண்டிருக்கிறோம்."

"இல்லை. நீ வெறுமே சமைக்கவில்லை. மிக அற்புதமாக சமையல் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறாய். அரசனிடம் பரிசு வாங்க போட்டி போடுகிறாய். உன்னுடைய சமையல் அவனை, கூட மூன்று துண்டு கறி சாப்பிட வைக்கிறது. ஒரு நாளைக்கு மூன்று துண்டு கறி சாப்பிடுகிற கொழுப்பு உடம்பின் ஓரத்தில், புத்தியின் ஓரத்தில் பதுங்கி இருக்கிறது.

அவனுக்கு அற்புதமான தேர் செய்து கொடுத்து விட்டாய். அவன் உலகெங்கும் பரவி, 'இந்த தேசம் எனக்கு, இந்த தேசம் எனக்கு' என்று ஆசைப்பட ஆரம்பிக்கிறான். உலகத்தின் பரப்பைப் பார்த்து வியக்கிறான். மொத்தமும் தன் காலடியில் விழ வேண்டும் என்று நினைக்கிறான். இதேபோல ஆயிரம் தேர்கள் உன்னை மிரட்டி செய்துவிட்டால் அந்த ஆயிரம் தேர்களோடு படையெடுத்து எதிரி நாட்டை துவம்சம் செய்து தானே ஆட்சி செய்யலாம் என்று நினைக்கிறான். அவன் உட்கார்ந்திருக்கிற ஆசனம் நீ செய்தது. அதனுடைய சௌகரியம் அவனுக்குள் அலட்சியத்தை ஏற்படுத்துகிறது.

சாதாரண கல் ஆசனங்கள் இருந்து போய், மிக அகலமான பட்டு வைத்து தைத்த மெத்து மெத்தென்ற சிம்மாசனங்கள் வந்து விட்டன. அந்த சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும்போதே அகம்பாவம் தலைதூக்குகிறது. இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் அரசனுடைய அகம்பாவத்தை நீங்கள் வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

நீங்கள் அவரிடமிருந்து பரிசுபெற்று நலமாக வாழ வேண்டுமென்பதற்காகவே அரசாங்க அதிகாரிகளை அரசுசார்ந்தவர்களை உற்சாகப்படுத்திக்கொண்டு இருக்கிறீர்கள். இவர்கள் உங்களால் பல சௌகரியங்களை அனுபவித்துக்கொண்டு அந்த சௌகரியத்தை நிரந்தரமாக்க யுத்தத்திற்கு தயாராகிறார்கள். மிகப்பெரிய யுத்தம் வந்தால் அதற்கு காரணம் நீங்கள்தான்."

"யுத்தத்தை நிறுத்த முடியாதா."

"ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது."

"ஒருவேளை கடவுள் பிறந்ததே யுத்தத்திற்கு தானா."

"இருக்கலாம்."

"அப்படி பிறந்த கடவுள் ஒரே வீச்சில் ஏன் கௌரவர்களை கொன்று விடக்கூடாது, ஏன் பாண்டவர்களை விட்டு கௌசவர்களை அழிக்கவேண்டும்..."

"அது கடவுளுக்குத்தான் தெரியும். அதைக் கேட்பது நமது வேலை யில்லை."

"கடவுள் கௌரவர்கள் பக்கமா...பாண்டவர்கள் பக்கமா..."

"காத்திருந்து பார்."

"நீங்கள் யாரை கடவுள் என்று சுட்டிக்காட்டுகிறீர்கள், அவர் எங்கே பிறந்திருக்கிறார்...."

"யாரைப் பார்த்ததும் உன் மனதில் மகத்தான சந்தோஷம் கிளம்பு கிறதோ, யாரைப் பார்த்ததும் உன்னால் கைகூப்பி பேச முடியாமல் கண்களில் நீர் வழிகிறதோ, யாரைப் பார்த்ததும் கால்களில் விழுந்து வணங்க வேண்டுமென்று பதைபதைக்கிறாயோ, யாரைப் பார்த்ததும் திகைப்பு ஏற்படுகிறதோ, அவரே கடவுள். இது வரை நாடகமாடி, நாடக மாடி பலபேர் கால்களில் விழுந்து கும்பிட்டிருக் கிறாய். 'உங்களைப் போல் உண்டா' என்று புகழ்ந்திருக்கிறாய். ஆனால் உன்னை மீறி உன் நெஞ்சின் அடியிலிருந்து எவரை நோக்கி நீ வணங்க வேண்டுமென்று ஆசையோடு ஓடுகிறாயோ அங்கே கடவுள் வந்துவிட் டார் என்று தெரிந்து கொள்ள வேண்டும். உன் நாடகம் அன்றோடு முடிந்துவிட்டது என்பதை நீ புரிந்துகொள்வாய்."

"சரி யுத்தம் வரும் என்று தெரிந்துவிட்டது விதுரரே. நாங்கள் என்ன செய்ய வேண்டும்..."

"உங்கள் கடமையைச் செய்யுங்கள். கூரான அம்பு தயார் செய்யுங்கள். விரைவாக ஓடுகின்ற தேர் தயார்செய்யுங்கள். வில் தயார் செய்யுங்கள். கத்திகளுக்கு கூர் தீட்டுங்கள். நல்ல உணவுகளை இடைய றாது தயார்செய்து அரசர்களுக்கு கொடுத்துக்கொண்டு இருங்கள். குதிரை களை, பசுக்களை கவனமாக பேணுங்கள். நிறைய பால் தேவைப்படும், வளமான புரவிகள் தேவைப்படும். அலங்காரமான உடைகள் தேவைப் படும். நகைகள் தேவைப்படும். உண்பதற்கு நிறைய தட்டுக்கள் தேவைப் படும். இவையெல்லாமும் தேவைப்படுவதை போல பிணங்கள் எரிப்ப தற்கு நிறைய விறகுகளும் தேவைப்படும். எனவே நிறைய மரங்கள் வளர்த்து வாருங்கள், எளிதில் தீப்பற்றி 'திகுதிகு' வென்று எரியும் மரங்களை இப்போதே நட்டுவிடுங்கள். சில வருடங்கள் கழித்து அவைகளை வெட்டி நாம் சிதை அடுக்க வேண்டியிருக்கும்.

"என்ன சொல்கிறீர்கள் விதுரரே, சிதை அடுக்குவதற்கென்றே மரங்கள் வளர்க்கவேண்டுமா...கேட்பதற்கே வருத்தமாக இருக்கிறதே..."

"இது விதி. இதை புரிந்துகொண்டு கடமையைச் செய்பவன்தான் வீரன். விவேகன். உங்கள் வேலைகளைத் திறம்பட செய்யுங்கள். அந்த வேலையில், ஒரு உன்னதத்தை கொண்டு வர முயற்சி செய்யுங்கள். அந்த உன்னதம் இந்த யுத்தத்தை வெகு வேகமாக கொண்டு வரும். இன்றைக்கு இது போதும்" விதுரர் சபை கலைத்தார்.



மெல்ல எழுந்து எல்லோரும் தங்கள் இடத்திற்கு போனார்கள். விதுரரை ஒரு இளைஞன் பின்தொடர்ந்தான். அவர் வீட்டுப்படியேறி திரும்பினார். அந்த இளைஞனைப் பார்த்து சிரித்தார். அருகில் வந்து 'என்ன' என்று கேட்டார்.

"திரௌபதியை திருமணம் செய்து பஞ்சபாண்டவர்கள் ஊர்வல மாக வந்தபோது, அந்த ஊர்வலத்தில் யாதவ குல இளவரசன் கிருஷ்ண னும் வந்திருந்தார். கிருஷ்ணரைப் பார்த்ததும் நீங்கள் சொன்ன பரமானந்தம் எனக்குள் ஏற்பட்டது. அவரைப் பின்தொடர்ந்து, அவருடைய தேரை தொட்டுக்கொண்டே ஓட வேண்டும் என்று தோன்றி யது. நான் பஞ்சபாண்டவர்களையும், திரௌபதியையும், துரியோ தனனையும் மறந்து போனேன். கிருஷ்ணரையே பார்த்துக் கொண் டிருந்தேன். விதுரரே, தயவுசெய்து எனக்கு சொல்லுங்கள். இங்கு கடவு ளாக வந்திருப்பது கிருஷ்ணரா...கிருஷ்ணர் கடவுள்தானா..."

"ஆமாம். பரத கண்டம் செய்த பாக்கியம் கடவுள் கிருஷ்ணராக அவதரித்திருக்கிறார். நாம் எல்லோரும் செய்த பாக்கியம் கடவுள் நம்மிடையே தோன்றி இருக்கிறார்."

"எனக்கு உத்தரவு கொடுங்கள் விதுரரே" அந்த இளைஞன் கைகூப்பினான்.

"எதற்கு" விதுரர் ஆவலாகக் கேட்டார்.

"நான் கிருஷ்ணர் எங்கிருக்கிறாரோ அங்குபோய் நிற்கப் போகிறேன். அவருக்கருகே வாழப்போகிறேன். அவர் எங்கெல்லாம் போகிறாரோ, அங்கெல்லாம் பின்தொடர்ந்து போகப் போகிறேன். அவர் இருக்குமிடத்திலிருந்து சற்று தொலைவில் நின்று அவரையே பார்த்துக் கொண்டிருக்கப் போகிறேன். உங்கள் ஆசியும், அனுமதியும் தேவை."

விதுரர் முன்னேறி அவரைத் தழுவிக்கொண்டார். "எனக்குக் கிடைக்காத வாழ்வியல் உனக்குக் கிடைக்கட்டும். வா. வந்து சாப்பிட்டு விட்டுப் போ. இரவு நேரம் ஆயிற்று" என்று உள்ளே அழைத்தார். தனக்கு வைத்திருந்த உணவில் பாதியை அவனுக்குப் போட்டார். தானும் உண்டார்.

அவன் கைகழுவி, வாய் துடைத்து இடத்தை சுத்தம் செய்துவிட்டு அவரை விழுந்து நமஸ்கரித்து விட்டு வெளியேறினான். அந்த கிராமத்தை விட்டு வெகுதூரமிருக்கும் கிருஷ்ணருடைய ராஜ்ஜியத்திற்கு நடந்தே பயணப்பட்டான். சிறிதுநேரமே பார்த்த கிருஷ்ணரை திரும்ப திரும்ப மனதில் நினைத்துக் கொண்டிருந்தான். 'கிருஷ்ணா, கிருஷ்ணா, கிருஷ்ணா' என்று இடைவிடாது அவர் பெயரை உச்சரித்துக் கொண் டிருந்தார்.

காலக்குதிரை இடைவிடாது பூமித்தேரை புழுதிபட இழுத்துக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தது.

மாளிகை கட்டி முடிந்ததும், தருமபுத்திரரை ஆசைவார்த்தைகள் சொல்லி, துரியோதனன் சூதாடுவதற்கு அழைத்தான். தருமபுத்திரர் தம்பி களோடும், மனைவியோடும் ஹஸ்தினாபுரம் வந்து இறங்கினார். சூதாடத் துவங்கினார்.




மமதையுள்ள மனிதர்களை வேடிக்கை பார்ப்பது போன்ற சுவார்ஸ்யம் உலகத்தில் எதுவுமில்லை. எதுவும் நிரந்தரமல்ல என்பது தெரிந்தாலும், மரணம் பற்றி படித்திருந்தாலும் படித்ததை புரிந்து கொள்ளாமல் தான் மட்டுமே நிரந்தரம் என்கிற எண்ணத்தோடு மனிதர்கள் கொக்கரிப்பதை பார்க்கும்போது வியப்பாகத்தான் இருக்கிறது. அப்படி கொக்கரிப்பவர்கள் இளைஞர்களாக இருந்தால் வியப்போடு பரிதாபமும் வருகிறது. ஒருவேளை கொக்கரிப்பவர்கள் முதியோர்களாக இருந்தால் வியப்போடு லேசான கோபம் வருகிறது.

துரியோதனன் மட்டுமல்ல. திருதராஷ்டிரனும் எப்படியாவது பாண்டவர்களை ஒழித்துவிட வேண்டுமென்று ஆத்திரப்பட்டுக் கொண்டிருந்தான். எத்தனை நீதி சொன்னாலும் காதில் போட்டுக் கொள்ளமாட்டேன் என்பது போல், 'தான் பிடித்த முயலுக்கு மூணே கால்' என்கிற விதமாய் பேசினான். நடந்துகொண்டான்.

விதுரர் நீதி சொல்வதை நிறுத்திக் கொண்டார். 'சகுனியை வைத்துக்கொண்டு துரியோதனன் சூதாட அழைத்தானென்றால் அந்த அழைப்புக்கு பின்னே ஏதோ ஒரு சதித்திட்டம் இருக்கிறது என்றுதானே அர்த்தம். சகுனியை உடனே அப்புறப்படுத்த வேண்டும் என்று விதுரர் வேண்டியபோது திருதராஷ்டிரன், 'அவன் என் மனைவியின் உறவினர். அவனை எங்ஙனம் நான் அப்புறப்படுத்துவேன்...துரியோதனனுக்கு மிகவும் வேண்டியவனாக இருப்பதால் உனக்கு அவன் வேண்டாதவனாகி விட்டான்' என்று மெல்லிய ஆத்திரத்தோடு பேசினான்.

அண்ணா, நான் உனக்கு நல்லது சொல்ல முற்படுகிறேன் என்று தெரிந்தும், துரியோதனன் எதை விரும்புகிறானோ அதையே அவனுக்கு வாங்கிக் கொடுப்பது என்று தீர்மானித்திருக்கிறீர்கள். குழந்தைகள் விவரம் இல்லாமல், தங்கள் பலம் தெரியாமல் தங்கள் தேவை என்ன என்பது அறியாமல் ஏதாவது கேட்பார்கள். ஞானமுள்ள தகப்பன் குழந்தைகளுக்கு பொறுமையாக எடுத்துச் சொல்ல வேண்டும். அல்லது குழந்தையாக மாறி துரியோதனன் கேட்பதற்கு மேல் அவனைப்போன்றே பிடிவாதமாய் பாண்டவர்களை அழிப்பதில் குறியாக இருக்கிறீர்கள். இது உங்களுக்கு நல்லதல்ல. பாண்டவர்கள் உங்கள் புத்திரர்கள் தானே ...அதனை ஏன் மறந்து போனீர்கள்' என்று விதுரர் திருதராஷ்டிரனை கோபமாகிக் கேட்டார்.

திருதராஷ்டிரன் கையை நீட்டி விதுரரின் தையை 'பிடித்துக் கொண்டார்.



"நானும் அதே கேள்வியை உன்னிடம் கேட்கிறேன் விதுரா, கௌரவர்களும் உன் குழந்தைகள்தானே...ஏன் துரியோதனன் எது செய்தாலும் அதற்கு எதிர்புறமாகவே பேசுகிறாய். பாண்டவர்கள் மட்டுமே உயிரோடு இருக்க வேண்டும் என்ற எண்ணம் உன் பேச்சில் இருக்கிறது. பாண்டவர்கள் மட்டுமே சிறப்பாக ஆட்சி செய்வார்கள் என்ற எண்ணம் உன்னிடம் இருக்கிறது. நீ கௌரவர்களை மனிதர்களாகவே மதிக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். உனக்கு கௌரவர்கள் மீது என்ன கோபம் என்று எனக்குத் தெரியவில்லை. துரியோதனன் சற்று துடுக்கானவன். ஆனால் நல்லவன்.

தினம் அரண்மனை வேலைக்காரர்களை கூட்டி வைத்து துரியோதனனைப் பற்றி துஷ்பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறாய் என்பது என் ஒற்றர்கள் மூலம் தெரிய வந்தது. தயவுசெய்து இனி பேசுவதை நிறுத்து. இனி உன் அரண்மனை வாசலில் வேலைக்காரர்கள் குழுமினால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். நீ துரியோதனனுக்கு உதவி செய்யவில்லை என்றாலும் பரவாயில்லை அவனுக்கு உபத்திரவம் செய்யாமல் இரு. அவனுக்கு வேண்டியதை அவன் அறிந்த வழியில் அவன் போராடி பெற்றுக்கொள்ளட்டும்."

சூதாட்டம் தொடர்ந்தது.

பாய்ச்சிகைகள் உருண்டன.

செல்வங்கள் வைக்கப்பட்டன. நகைகள் வைக்கப்பட்டன. பல உலோகங்கள் வைக்கப்பட்டன. நவரத்தினக்கற்கள் வைக்கப்பட்டன. பிறகு மாடுகளும் கன்றுகளும் வைக்கப்பட்டன. பிறகு நான்கு வகை படைகள் வைக்கப்பட்டன. பிறகு வேலையாட்கள் வைக்கப்பட்டார்கள். பிறகு அரண்மனையின் நிலங்களும், அரசு அதிகாரங்களும் பணயமாக வைக்கப்பட்டன. எல்லாவற்றையும் சகுனி எளிதில் ஜெயித்தான்.

தருமபுத்திரர் போதும் என்று சொல்லாமல் வெறி பிடித்தவர் போல் தொடர்ந்து ஆடிக்கொண்டிருந்தார். தருமரின் பலவீனம் அது என்பதை துரியோதனன் மிகத் தெளிவாக கண்டுகொண்டு, அவரை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தான். 'இதோ ஜெயித்து விடலாம், இதோ ஜெயித்து விடலாம்' என்று அவனை சூதாட்டத்திற்கு இழுத்துக் கொண்டிருந்தான்.

தருமபுத்திரர் அவன் இழுத்த வழியெல்லாம் போனார். ஜெயிப்பதற்கு எதுவுமே இல்லை என்கிறபோது தம்பிகளை வைத்தார்.

தம்பிகளை அடிமையாகக் கொண்ட துரியோதனன் அவர்கள் தலைப்பாகையை பிடித்து தெருவில் வீசினான். 'வைப்பதற்கு இனி நிச்சயமாக எதுவுமில்லை' என்கிறபோது, 'திரௌபதி இருக்கிறாளே' என்று ஞாபகப்படுத்தினான்.

தருமர் பாய்ச்சிகையை கையில் எடுத்தார். உருட்டினார், இழந்தார்.

துரியோதனன் பூமி அதிர கொக்கரித்தான்.

விதுரர் மனம் துவண்டார். முகத்தில் அறைந்து கொண்டார்.

துரியோதனனின் ஒவ்வொரு செயலுக்கும் கௌரவர்கள் தனிக் கூட்டமாக நின்று வாய்விட்டு சிரித்தார்கள். உற்சாகப்படுத்தினார்கள்.

கை தட்டினார்கள். 'ஆஹா, ஆஹா' என்று துரியோதனனைப் புகழ்ந்தார்கள். வெற்றியை துணிகள் வீசியும், நகைகள் வீசியும் கொண்டாடினார்கள். வேண்டுமென்றே சபையை பதட்டம் நிறைந்ததாகச் செய்தார்கள். திரௌபதியை வென்றதும் அந்த சபையில் உள்ளவர்கள் வெறிபிடித்தது போலானார்கள். எல்லோருக்கும் திரௌபதியின் தோளில் கைவைக்க வேண்டும் என்ற ஆவேசம் பிறந்தது.

திரௌபதி அழகானவள் என்பதால் அல்ல. திரௌபதி எதிரியின் மனைவி. எதிரியை அவமானப்படுத்த எதிரியின் மனைவி மீது கை வைப்பது என்பது மனித இயல்பு. மனித அகங்காரத்தின் உச்சநிலை.

துரியோதனன் கட்டளைப்படி துச்சாதனன் திரௌபதியை சபைக்கு நடுவே இழுத்து வரப்போனான். அதற்கு முன்பே ஒரு வேலையாள் போய் திரௌபதியிடம் விஷயம் தெரிவித்துவிட்டு, திரௌபதி ஒற்றை ஆடையுடன் இருப்பதாக சபையில் வந்து தெரிவித்தான்.

மாதவிலக்கின்போதுதான் பெண்கள் ஒற்றை ஆடையுடன் இருப்பது வழக்கம். அந்நேரத்தில் அரசகுல பெண்கள் வெளியே வருவதற்கு விரும்புவதில்லை. ஆண்களைச் சந்திக்க ஆசைப்படுவதில்லை. பெரியவர்களையும், சாதுக்களையும் பார்ப்பதை தவிர்க்கவே அந்நேரம் முயற்சிப்பார்கள். சோர்வாகவும், களையிழந்தும் காணப்படுவதால் பெரியோர்கள் 'உடல்நலத்திற்கு ஏதேனும் கேடா' என்று பதறி விடுவார்கள் என்று அவ்விதம் சந்திப்பதை தவிர்த்தார்கள். அரண்மனையில் தனியே இருந்து உலக விஷயங்களை தோழிகளிடம் பேசி தெரிந்து கொள்வார்கள்.

அப்படி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தவளை துச்சாதனன் தலைமுடியைப் பிடித்து, அவள் அணிந்திருந்த ஒற்றை ஆடையுடன் சபைக்கு இழுத்து வந்தான்.

திரௌபதியின் கோலம் பரிதாபமாக இருந்தது. அவள் அலறல் சபையிலுள்ளோர் மார்பைத் துளைத்தது. ஆனால் சபை அசையாமல் வீற்றிருந்தது. விதுரர் மட்டும் எழுந்து கதறினார்.

"இங்கே என்ன நடக்க வேண்டுமோ, அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. எனக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது. இங்கு என்ன நடக்க வேண்டுமோ அதுதான் நடந்து கொண்டிருக்கிறது." பித்துப் பிடித்தவர் போல் கைகளை வீசிக்கொண்டு விதுரர் திரௌபதியின் அவமானத்தை தாங்கவொண்ணாமல் கதறினார்.

"அப்படியா, சித்தப்பா உங்களுக்கும் திரௌபதியை ஒற்றை ஆடையாய் பார்க்க ஆசையிருக்கிறதா...அதைத்தான் சொல்கிறீர்களா..." துரியோதனன் அவரை நோக்கி கேலியாய்ப் பேச, கௌரவர்கள் வாய்விட்டு கெக்கலித்து விதுரர் முகம் போன போக்கை பார்த்து மறுபடியும் கைகொட்டி சிரித்தார்கள். கை நீட்டி பேசினார்கள்.

கர்ணன் அதில் அதிகம் சிரித்தான். துரியோதனன் கேலியை மிகவும் ரசிப்பவன் போல இடதும் வலதும் புரண்டு சிரித்தான். சபை இந்த சிரிப்பை மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தது.

"முட்டாளே, கெட்டிக்காரத்தனமாய் பேசி விட்டதாய் நினைக்கிறாயா...உன் அழிவை நீயே தேடிக்கொள்கிறாய். இங்கே ஒரு கதை



சொல்லப்பட்டு வருகிறது.

பூமாதேவி பாரம் தாங்காமல் பிரம்மனிடம் முறையிட்டிருக்கிறாள். 'இங்கு முன்பு பிறந்த அரக்கர்கள் மறுபடியும் அரசகுமாரர்களாக உருவாகி, மக்களை தொந்தரவு செய்துகொண்டிருக்கிறார்கள். அரக்கன் வேறு ஒரு வடிவம் எடுத்து வந்திருக்கிறான். எனவே பரம்பொருளே நீ வர வேண்டுமென்று பிரம்மனும் பூமாதேவியும் மகாவிஷ்ணுவிடம் மண்டியிட்டு பூஜை செய்திருக்கிறார்கள். வரச்சொல்லி வரம் கேட்டிருக்கிறார்கள். மகாவிஷ்ணு இங்கு பிறந்திருக்கிறார். கடவுள் அவதாரம் எடுத்திருக்கிறார்.

உன்னுடைய காலம் முடியப்போகிறது துரியோதனா...நீ செய்கின்ற செய்கையால் உன்னுடைய சகோதரக் கூட்டம் மட்டுமல்ல, உன்னைச் சார்ந்த அரசர்கள் அத்தனை பேரும் இறக்கப் போகிறார்கள். க்ஷத்திரிய குலத்தின் நாசத்திற்காகவே நீ பிறந்திருக்கிறாய். வேதங்கள் சொன்ன தர்மத்தை அந்தணர்கள் மூலம் கேள்விப்பட்டு அவர்கள் சொன்ன தர்மத்தை பாதுகாத்தும், கடைப்பிடித்தும் வரவேண்டிய இந்த க்ஷத்திரிய குலம் தன் குலப் பெண்களையே அவமானப்படுத்த துவங்கிவிட்டது. தன் உறவுக்கார பெண்ணையே சபையில் ஒற்றை ஆடையில் நிற்க வைத்திருக்கிறது. இவள் உன் குடும்பத்துப் பெண், உனக்கு வெட்கமாக இல்லையா...ஏன் இப்படி செய்கிறாய்..." என்று சீறினார்.

"இந்தப்பெண்ணை நாங்கள் சூதில் ஜெயித்தோம். நீங்கள் ஏதேனும் குறை சொல்ல வேண்டியிருந்தால் இந்தப்பெண்ணின் கணவனைத்தான் 'சூதாடி தோற்றுவிட்டான்' என்று நீங்கள் குறை சொல்ல வேண்டுமே ஒழிய, ஜெயித்த எங்களை குறை சொல்லக் கூடாது" சகுனி அவரிடம் போய் பணிவாகப் பேசினான். பணிவில் கேலி இருந்தது.

அந்த கேலிக்கும் கௌரவர்கள் வாய்விட்டு சிரித்தார்கள். சகுனியைப் போல் நடித்துக் காட்டினார்கள். கர்ணன் எழுந்து சகுனியைப் பாராட்டும் வண்ணமாய் தழுவிக் கொண்டான். வெகு அருகே வந்து விதுரரைப் பார்த்து சிரித்தான். மறுபடியும் ஆசனத்திற்குப் போய் உட்கார்ந்து கொண்டான். கர்ணன் செய்கைக்கும் கௌரவர்கள் சிரித்தார்கள்.

"தருமனுக்கு உரிமை இருக்கிறது. எனவே தன் மனைவியை சூதாட்டத்தில் வைத்து இழந்தான். இப்போது அவள் எங்கள் உடமையாக இருப்பதால் எங்களுக்கு அவள் மீது உரிமை இருக்கிறது. எனவே, அவளை என் தொடையில் வந்து அமரச்சொல்லும்படி கேட்கிறேன்" துரியோதனன் வேட்டியை விலக்கி தொடையைக் காட்டினான். திரௌபதி முகம் பொத்திக் கொண்டு அழுதாள்.

"இது என்னுடைய நதி. எனக்கு உரிமை இருக்கிறது என்று சொல்லி இந்த நதியில் விஷம் கலப்பீர்களாடா பாவிகளே..நீங்கள் என்னுடைய பிரஜைகள் எனக்கு உரிமை இருக்கிறது என்று சொல்லி உன் மக்களை வெட்டிக் கொல்வாயாடா மூடனே...உனக்கு உரிமையிருப்பது காப்பாற்றத்தானே தவிர, காவல் காக்கத்தானே தவிர, அழிப்பதற்கு அல்ல. தவறு செய்தால் தண்டிப்பதைக் கூட நாகரீகமாய்ச் செய்கிற தேசமிது. நீதி விசாரணைக்குப் பிறகே தண்டனை வழங்க வேண்டும்.

அந்த நீதி விசாரணையில் இந்த வழக்கில் சம்பந்தப்படாதவர்கள் இருக்க வேண்டுமென்று பல வரைமுறைகள் வைத்திருந்து சாஸ்திரங்கள் சொன்ன தேசமிது. எல்லா வரைமுறைகளையும், எல்லா சாஸ்திரங்களை யும் புறக்கணித்துவிட்டு உறவுக்கார பெண்ணை பார்க்கக்கூடாத நேரத் திலே சபைக்கு அழைத்து இழுத்து வந்திருக்கிறாயே...வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறாயே...உன்னால் எப்படி தர்மத்தை காப்பாற்ற முடியும்...உன்னால் எப்படி மக்களைக் காப்பாற்ற முடியும்...மக்களையும், தருமத்தையும் காப்பாற்றாதவன் எப்படி அரசனாக இருக்க முடியும். நீ அரசனே இல்லை. நீ அரக்கன். நீ அழிவதற்காகவே பிறந்திருக்கிறவன்" என்று விதுரர் ஓலமிட்டார்.

துரியோதனன் கோபத்தோடு கீழே இறங்கி வந்து அவனை அடிப்ப தற்கு கை ஓங்கினான். துச்சாதனன் அடிக்காதபடி அவனை மடக்கித் தடுத்தான்.

"உன்னை ஒன்று கேட்கிறேன் விதுரா" கர்ணன் அருகே வந்தான். "இதே இடத்தில் பாண்டவர்கள் இருந்து துரியோதனன் மனைவியை அவர்கள் இழுத்து வந்தால் நீ அப்போது என்ன செய்வாய்...நல்லது. நல்லது என்று கொண்டாடுவாய். அது வீரம் என்று திசைதிருப்புவாய். விதுரா...உனக்கு எத்தனை நாக்கு கிழவா" என்று வாய்விட்டு சொன் னான்.

விதுரர் கோபமடைந்தார். கர்ணனை நோக்கி திரும்பினார்.

"நான் தர்மத்தை தவிர வேறு எதுவும் அறியாதவன்."

"ஆ...உன் தர்மம் என்ன என்று எனக்கு தெரியாதா..."

"என்ன...என் தர்மத்தில் என்ன குறை வந்துவிட்டது..."

"நீ ஒரு ஒழுக்கம் கெட்டவன்" கர்ணன் சீறினான்.

"யாருடைய ஒழுக்கத்தைப்பற்றி நீ பேசுகிறாய்" பதிலுக்கு விதுரர் சீறினார்.

"இரவானதும் வேலைக்காரப் பெண்களை சுற்றிவைத்துக்கொண்டு கும்மாளம் அடிக்கிறாயே தெரியாதா... இத்தோடு நிறுத்து. இல்லை யெனில் உன்னுடைய கதை சபையில் ஏறும்" விதுரரை உரத்த குரலில் கர்ணன் மடக்கினான்.

விதுரர் திகைத்தார். புருவம் நெரித்தார். கோபத்தோடு கர்ணனைப் பார்த்தார்.

"ஒரு தேரோட்டியின் மகனாக வளர்ந்த நீ உண்மையை அறிந்தவ னாக இல்லை. இந்த அரண்மனையில் வேலைக்காரர்களாக இருக்கிற அத்தனைபேரும் என் அன்புக்குக் கட்டுப்பட்டவர்கள். என் உடன்பிறவா சகோதரர்கள் என்னை தன்னுள் பார்க்கிறவர்கள். நான் அவர்களுள் என்னைப் பார்க்கிறேன். என் தாய் ஒரு வேலைக்காரி என்பதாலேயே இந்த வேலைக்காரர்களிடம் நான் பற்றும் பாசமும் கொண்டிருக்கிறேன். மற்றபடிக்கு என் மனதால் கூட நான் வேறு எந்த நினைப்பும் இவர்கள் மீது கொண்டதில்லை. இப்படி அடாது செய்கிறாயே, உன்னுடைய மரணமும் அடாது நடக்கும். இது நிச்சயம்" என்று கூவினார்.

கர்ணனுடைய மரணத்தை சொன்னதும் துரியோதனனுக்கு



கோபம் வந்துவிட்டது. கர்ணனை தேர்ப்பாகன் மகன் என்று சொன்ன தும் அவனுக்கு ஆத்திரம் வந்துவிட்டது.

"நீ யார்...நீ யார்...நீ யார்..." என்று துரியோதனன் ஆத்திரத்துடன் பேச ஆரம்பித்ததும் துச்சாதனன் துரியோதனன் என்ன சொல்லப்போகி றான் என்று புரிந்துகொண்டு, பாய்ந்து அவன் வாயைப் பொத்தி ஓரமாக இழுத்துப்போய், "இப்போது வேண்டாம். தயவுசெய்து வேண்டாம் விட்டு விடு" என்று கெஞ்சி அவனை சமாதானப்படுத்தினான்.

துரியோதனன் மறுபடியும் சபைக்கு வருவதற்குள் விதுரர் அந்த இடத்தைவிட்டு வெகுதூரம் போயிருந்தார். வீட்டுக்குப்போய் தலை யிலடித்துக்கொண்டு அழுதார். அங்கே அந்த கிழவி மெல்ல அவர் அருகே வந்து அவர் தலையை தடவிக்கொடுத்தாள்.

"கடவுள் பிறந்துவிட்டார் என்று சொல்கிறீர்கள். அப்படியும் இப்படியெல்லாம் நடக்கிறதே...இது எதனால் ஐயா..." நடுங்கும் குரலில் கேட்டாள்.

"தெரியவில்லை தாயே...எனக்கு எதுவுமே தெரியவில்லை...' எல்லா தர்மசாஸ்திரங்கள் அறிந்திருந்தும் நிதானமாக இருக்க வேண்டும் என்று புரிந்திருந்தும் என்னால் இந்தக் கண்றாவியைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. மனம் பதைத்துப் போகிறது. ஒரு உத்தமியை, ஒரு பத்தினியை, தெய்வம் போன்ற ஒரு திருமகளை சபைக்கு ஒற்றை ஆடை யில் இழுத்து வந்து அவமானப்படுத்துவது மனிதகுலத்திற்கே கேவலம். கலியுகம் பிறந்துவிட்டது என்று அர்த்தம். கடவுள் பிறந்தும் இது ஏன் நடக்கிறது என்று எனக்குப் புரியவில்லை.

ஆனால், நீ கேட்டபிறகு யோசித்தபோது ஒன்று புரிகிறது தாயே ...தண்டிப்பதற்கு உண்டான அநியாயங்கள் இந்த உலகத்தில் போத வில்லை. இன்னும் சற்று நடக்கட்டும் என்று கடவுளே தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறார் என்று தோன்றுகிறது. எனவே மௌனமாய், சாட்சி யாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதுதான் நல்லது. வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க எனக்கு வலுவில்லை. நான் இங்கு உறங்கு கிறேன். சற்று விசிறி விடுகிறாயா..."

அங்கேயே கூடத்தில் வெறும் தரையில், அவர் கால் நீட்டி படுத்துக் கொள்ள நூற்றிப் பன்னிரெண்டு வயதான அந்த கிழவி மெல்ல மயிலிற கால் விதுரருக்கு வீசினாள்.

"கிருஷ்ண கிருஷ்ணா...கிருஷ்ண கிருஷ்ணா...கிருஷ்ண கிருஷ்ணா என்று மெல்ல அவர் காதுக்கு மட்டும் தெரியும்படி முணுமுணுத்தாள்.

விதுரருக்கு உள்ளே ஒரு நாடகம் ஓடியது. திரௌபதியை துகிலுரியச் சொல்லி துரியோதனன் கூவுவது தெரிந்தது. துச்சாதனன் முயற்சிப்பது தெரிந்தது. கைகளால் புடவையைப் பிடித்துக்கொண்ட திரௌபதி மன்றாடுவது பார்க்க முடிந்தது. அலறுவது காதில் விழுந்தது. பாண்டவர்கள் தலைகுனிந்து விதி பற்றி குன்றி குலுங்கி அழுவதை உணர முடிந்தது. திடீரென்று அந்த இடம் பிரகாசமாயிற்று. புடவை இழுபட மேலும் வளர்ந்தது. மேலும் வளர்ந்தது. மேலும் வளர்ந்தது. 'கிருஷ்ணா, கிருஷ்ணா, கிருஷ்ணா, கிருஷ்ணா' என்று இந்த நூற்றிப்

பன்னிரெண்டு வயது கிழவி சொல்லிக்கொண்டிருப்பதும், திரௌபதி சொல்லிக் கொண்டிருப்பதும் ஒரேவிதமாய் காதில் ஒலித்தன.

திரௌபதியும் கிருஷ்ணா, கிருஷ்ணா என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறாள். அவள் சொல்லச் சொல்ல புடவைகள் வளர்ந்தன. எங்கிருந்தோ இடைவிடாது அவள் உடம்பை சுற்றிக் கொண்டன. துச்சாதனன் இழுத்து இழுத்து இளைப்பானான். தரையில் விழுந்தான். என்ன நடக்கிறது என்று தெரிந்தும் கண்டுகொள்ளாமல் இருந்த துரியோதனன் புடவைகள் வளர்வதை பார்த்து, கிருஷ்ணா என்ற அலறலைப் பார்த்து பயந்துபோய் போதும் சபை கலையட்டும் என்று உத்தரவிட்டான்.

விதுரர் படுத்தபடியே விசும்பி விசும்பி அழத்தொடங்கினார்.

'பரம்பொருளே, இந்த கிழவி கேட்டதையே நானும் கேட்கிறேன். 'இவ்வளவு பெரிய அநியாயம் நடக்கிறபோது நீர் எங்கேயிருந்தீர்..என்ன செய்து கொண்டிருந்தீர்..இங்கு நீர் வராத காரணம் என்ன...யார் உன்னை தடுக்கிறார்கள்' என்று கதறினார்.

"ஐயா, விதுரரே நீ சொல்வது மிகவும் சரி"

"என்ன சொல்லிவிட்டேன் தாயே."

"கடவுள் இங்கு வருவார் எங்கிருந்தாலும்."

"எங்கு தாயே..."

"கடவுள் ஹஸ்தினாபுரத்துக்கு நிச்சயம் வருவார். இந்த அட்டகாசங்கள் இன்னும் உச்சகட்டத்திற்கு போக வேண்டும். பாண்டவர்கள் வருத்தப்பட்டிருக்கிறார்கள் அல்லவா...இந்த விஷயத்தை நினைத்து கோபப்பட வேண்டும். கொதிக்க வேண்டும். கொதிப்பின் உச்சகட்டத்தில்தான் துரியோதனன் போன்ற அரக்கர்களின் அழிவு ஏற்படும். இல்லையெனில் சகோதர பாசம் தடுக்கும். சகோதர பாசங்கள் கிஞ்சித்தும் இல்லாத அளவுக்கு அட்டகாசங்கள் நடந்தால்தான் நல்லது. ஏதேனும் ஒரு கணத்தில் தருமபுத்திரனோ, அர்ஜுனனோ, பீமனோ இறங்கிவிடக் கூடாது. சரி, ஒழியட்டும் போ என்று இவர்களை விட்டு விடக் கூடாது. இவர்களைப் பூண்டோடு அழிக்க வேண்டுமெனில் சிறிதுகூட ஈவு இரக்கமில்லாத ஒரு மனோநிலைக்கு அந்த தர்மவீரர்கள் தள்ளப்பட வேண்டும்.

அப்படி தள்ளப்பட்ட பிறகு கடவுள் இங்கு வருவார். கடைசியாய் என்ன சொல்கிறாய் என்று கேட்பார் என்று தான் தோன்றுகிறது.

"இது எப்போது நடக்கும் தாயே..."

"இன்னும் சில காலம் நான் உயிரோடு இருக்க வேண்டும்..."

"புரியவில்லையே..."

"இன்னும் பதினாலு வருடங்கள் நான் உயிரோடு இருப்பேன் என்று எனக்கு தோன்றுகிறது. ஜோசியர்கள் அவ்விதம் சொல்கிறார்கள். என்னுடைய ஆயுசின் முடிவில் நான் கடவுளை பார்ப்பேன். கடவுளைப் பார்த்தபிறகு நான் இறந்துபோவேன். ஆகவே கடவுள் பதினான்கு வருடங்கள் கழித்துதான் வருவார். இப்பொழுது நீ அமைதியாக தூங்கு" அவள் விசிறி விட்டாள்.

தாயைப்போன்ற அந்த வேலைக்காரியின் கிருஷ்ண நாமம் காதுகளைக் குளிர வைக்க, கைவிசிறி உடம்பையும் மனசையும் குளிர்விக்க விதுரர் ஆழ்ந்து தூங்கினார்



தூக்கத்திற்குப் பிறகு மனது சமாதானமாகி, மறுபடியும் சந்துஷ்டியாகி அரண்மனை நோக்கிப் போனார்.

இழந்த ராஜ்ஜியங்களெல்லாம் பாண்டவர்களுக்கு மறுபடியும் கொடுக்கப்பட்டு அவர்கள் அரண்மனைக்கு அனுப்பப்பட்டார்கள்.

ஆனால் சகுனி விடுவதாக இல்லை. மறுபடியும் அவர்களை அழைத்தான். "ஒரே வாளில் இரண்டு கத்தி இருக்கக்கூடாது. ஒரே குளத்தில் இரண்டு சுறா இருக்கக்கூடாது. நீங்கள் இருவருமே வலிமை மிக்கவர்கள். நீங்கள் அருகருகே இருந்தால் மக்கள்தான் துன்பத்திற்கு ஆளாவார்கள். எனவே, எவரேனும் ஒருவர் இங்கு இருப்பது நல்லது. யார் இருப்பது...யார் இருக்கக்கூடாது என்பதை சூதாட்டம் தீர்மானம் செய்யட்டும். சூதில் நானும் வல்லவன். தருமனும் வல்லவன். ஆகவே இந்த முறை எதையும் பணயம் வைக்காமல், ஜெயித்தவர் நாடாள்வதும் ஜெயிக்காதவர் காட்டிற்கு போவதும் நடக்க வேண்டும். பதினான்கு வருடங்கள் காட்டிற்குப்போய், அடுத்த ஒரு வருடம் மறைந்திருந்து அந்த மறைந்திருந்த வருடம் கண்டுபிடிக்கப்பட்டால் மறுபடியும் பதினான்கு வருடங்கள் காட்டிற்கு போக வேண்டும் சம்மதமா" என்று கேட்டனுப்ப, தருமபுத்திரர் சகலமும் யோசித்துவிட்டு 'சம்மதம்' என்று சொன்னார்.

அர்ஜுனனும், பீமனும் தடுத்தார்கள். ஆனால் தருமபுத்திரர் இது நடந்தே ஆகவேண்டும் என்று புரிந்துகொண்டார். தம்பிகள் காடுகளில் தான் பலப்படுவார்கள் என்பதை அறிந்துகொண்டான். தனியே போய் உட்கார்ந்து கொண்டால்தான் அதிகம் பலம் பெருகும் என்பதை தெளிவாக அறிந்திருந்தார். எனவே 'தோற்பது உறுதி' என்று தெரிந்தே சூதாட்டத்தில் இறங்கினார். வாழ்க்கையை பணயம் வைத்தார். தாயம் உருட்டினார். இழந்தார்.

கௌரவர்கள் கூச்சலிட்டார்கள். 'காட்டிற்கு போ, காட்டிற்கு போ...' என்று கத்தினார்கள். அரக்கத்தனமாய் நடந்து கொண்டார்கள். ஆபாசமாய் பேசினார்கள். ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

பஞ்சபாண்டவர்கள் தேரில் காட்டிற்கு போனார்கள். காட்டின் ஆரம்பத்தில் தேர்விட்டு இறங்கி நடந்து, காட்டிற்குள் புகுந்து மறைந்தார்கள்.

ஹஸ்தினாபுரம் விழாக்கோலம் பூண்டது. அரசர்கள் குடிக்கத் துவங்கினரார்கள். ஆடத் துவங்கினார்கள். பாடத் துவங்கினார்கள். வேலையாட்களுக்கு இடைவிடாது கசையடி கிடைத்துக்கொண்டே இருந்தது. பெண்கள் சமையற்காரிகளாய், தாதிகளாய், போகப் பொருள்களாய், இரவு பகலாய் உபயோகப்படுத்தப்பட்டார்கள். அரசர்களின் வெற்றி குதூகலத்தில் குடிமக்கள் படாதபாடு பட்டார்கள். பாண்டவர்களுக்காய் வருத்தப்பட்டவர்களை தேர்ந்தெடுத்து கசையாலடித்து சிறையிலடைத்தார்கள். அவர்கள் சொத்துக்கள் பிடுங்கப்பட்டன. கௌரவர்களின் வெற்றியைக் கொண்டாடும்படி அரசாங்க உத்தரவு எல்லா நகரங்களுக்கும் போயிற்று. மக்கள் வயிறெரிந்து கொண்டே கொண்டாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

விதுரர் சில நாட்கள் கழித்து குதிரையேறி காட்டுக்குள் போனார். பாண்டவர்கள் போன பாதையை அறிந்து, அவர்களைத் தேடி சில

நாட்களில் அவர்களை அடைந்து குதிரையை விட்டு கீழிறங்கி, அவர்களை ஆரத்தழுவிக்கொண்டு, தன் அனுதாபத்தை தெரிவித்தார். தன் அக்கறையை காட்டினார். அவர்களோடு இருந்து விடட்டுமா...என்று கேட்டார். ஆனால் தருமபுத்திரர் மறுத்து விட்டார்.

"நீங்கள் வருவீர்கள் என்று எங்களுக்கு தெரியும். நடந்த எல்லா அவமானங்களும் நல்லதற்கே என்பதுதான் என்னுடைய முடிவு. நாங்கள் சற்று அலட்சியமாக இருந்தோம் சிறிய தேசத்தை ஆண்டு கொண்டு, எங்கள் வேலை, எங்கள் வீடு எங்கள் தேசமென்று சிறிய வட்டத்தில் ஆடிக்கொண்டிருந்தோம். விதி உசுப்பி, துரியோதனன் மூலம் எங்கள் வட்டத்தை பெரிதுபடுத்தி விட்டது. நாங்கள் தேச சஞ்சாரம் செய்யப் போகிறோம். தவம் செய்யப்போகிறோம். தனிமையிலிருந்து எங்களை பலப்படுத்திக் கொள்ளப் போகிறோம். கூச்சலிட்ட அந்த நூறு பேரும் குடித்துவிட்டு ஆடப்போகிறார்கள். ஏதேதோ செய்து கொண்டிருக்கப் போகிறார்கள். நாங்கள் செய்கின்ற தவத்தில் ஒரு குண்டுமணி அளவுகூட அவர்கள் செய்யப் போவதில்லை. இப்போது தவம் செய்பவர்களுக்கும், தவம் செய்யாதவர்களுக்கும் இடையேயான போட்டிதான் நடைபெறப்போகிறது. தவத்தின் வலிமையை நிரூபிக்கத்தான் எங்களுக்கு இந்த சோதனை நடந்திருக்கிறது. நான் இந்த விஷயத்தை சந்தோஷமாகவே எடுத்துக் கொள்ளப் போகிறேன். இதைத்தான் பீமனுக்கும், அர்ஜுனனுக்கும், நகுல, சகாதேவர்களுக்கும், திரௌபதிக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்களும் இதை வந்து சொன்னால் நன்றாக இருக்கும்" தருமர் சொன்ன இந்த ஆறுதலான வார்த்தைகளை விதுரர் ஆமோதித்தார். மறுபடியும் விதுரரும் அவர்களுக்கு இதமான வார்த்தைகள் சொல்லி, சகலமும் நல்லதற்காகவே நடந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லி எப்படி இது முடியும் என்று கோடிட்டுக் காட்டினார்.

அர்ஜுனன் செய்ய வேண்டிய தவத்தையும் பீமன் செய்ய வேண்டிய க்ஷேத்திராடனத்தையும், திரௌபதி செய்ய வேண்டிய பூஜைகளையும், நகுல சகாதேவர்கள் செய்ய வேண்டிய யாகங்களையும், தருமர் காக்க வேண்டிய விருப்பு வெறுப்பற்ற அமைதி பற்றியும் தனித்தனியே எடுத்துக் கூறினார்.

விதுரர் வருகை பஞ்சபாண்டவர்களை ஆனந்தமாக்கியது. பலம் பெருக்கியது. அவர்கள் துக்கம் முழுவதும் ஒரே வீச்சில் தூக்கி, துடைத்துப்போட்டு வனப்பிரதேசத்தை ரசிக்க ஆரம்பித்தார்கள். விதுரருக்கு விடைகொடுத்தார்கள்.

"கிருஷ்ணர் உங்களைத் தேடி வருவார். அப்படி வரும்போது அவருக்கு என் வணக்கத்தை தெரிவியுங்கள். அவர் நினைப்பாகவே நான் இருக்கிறேன் என்று தயவுசெய்து சொல்லுங்கள்" கைகூப்பி விதுரர் வேண்டிக் கொண்டார். அவர்கள் சரியென்று சொன்னார்கள்.

விதுரர் சொன்னதுபோல கிருஷ்ணர் வனத்தில் இருக்கும் பஞ்சபாண்டவர்களைத் தேடி வந்தார். ஆறுதல் சொன்னார்.

"தருமபுத்திரா, இந்த இடத்தில்தானே விதுரர் அமர்ந்திருந்தார். இந்த இடத்தை வலம் வந்து நமஸ்கரித்து, இதிலிருந்து மண் எடுத்து ஒரு சிமிழில் போட்டு உன் கழுத்தில் கட்டிக்கொள். நீ நினைக்க வேண்டிய தெய்வ விஷயம் விதுரரேயன்றி வேறு எவரும் இல்லை. எந்தக்



கஷ்டத்திலும் விதுரரை நினைத்தாயானால், நீ, செய்ய வேண்டியது என்ன என்று விதுரர் மிக எளிதாக உனக்கு வழிகாட்டுவார். எனவே உனக்கு தனியே பூஜையோ, யாகமோ, க்ஷேத்திராடனமோ, தபஸோ எதுவுமில்லை. நீ, இந்த நேரத்தில் இந்த இடத்தில் விதுரராக இருந்தால் என்ன செய்திருப்பார் என்று யோசித்தால் அந்த யோசிப்பு உனக்கு வந்துவிடும். பிறகு எல்லோரும் தூங்கும்போது நீ அமர்ந்து விதுரர் என்ன செய்வார் என்று யோசித்தால் விதுரர் அமைதியாய் வெறுமே அமர்ந்திருப்பார் என்று உனக்குப் புரிந்துவிடும். விதுரருடைய விளக்கங்கள் உனக்கு எளிதில் புரியும். எவர் எந்த கேள்வி கேட்டாலும் உனக்கு பதில் சொல்ல முடியும்" என்று அவருக்கு சூசகமாய் இன்னொரு விஷயம் சொல்லிவிட்டுப் போனார்.

விதுரருக்கு அந்த கிழவி சமைத்துப் போட்டாள். வருடங்கள் நகர்ந்தன. கிழவி மூப்படையவில்லை. உறுதியோடும், திறமையோடும் தெளிவோடும் விதுரர் வீட்டு வேலைகளை அழகாக் செய்து வந்தாள். நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம் விதுரரும், அவளும் கடவுள் பற்றி பேசினார்கள். அவளுடைய கிருஷ்ண ஜெபம் அதிகரித்தது. தூக்கமே இல்லாமல் அவள் கிருஷ்ண ஜெபம் செய்தாள். தூங்காமல் இருந்தாலும் அயர்சசியே இல்லாமலிருந்தாள். விதுரர் வீட்டுக்கு வந்தவர்கள் அவளைப் பார்த்து நமஸ்கரித்தார்கள். ஒரு பண்பட்ட யோகினியைப் போல அவள் காட்சியளித்தாள்.

கடவுளைக் காண வேண்டும் என்ற தாபம், உண்மையான ஏக்கம் அவளை நூலாக்கியது. சுடர் போல பிரகாசிக்க வைத்தது. கடவுள் இருக்கிறார் என்று நம்புபவர்கள்தான், வாழ வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். கரைந்து போக வேண்டும் என்று விரும்புவார்கள். அவள் கரைவதற்கு தன்னை தயாராக்கிக் கொண்டாள். எப்போது வாசலில் நிழலாடினாலும் 'கிருஷ்ணா' என்று கூவிக்கொண்டு எழுந்திருப்பாள். தினசரி சமையல் செய்யும்போது கிருஷ்ணருக்கு என்று சேர்த்து சமைப்பாள். 'கிருஷ்ணர் வரக்கூடும்' என்று பழங்கள் எடுத்து கூடத்தில் வைத்து, கிருஷ்ணன் வந்தால் உட்காருவதற்கு ஆசனம், படுப்பதற்கு கட்டில், உடுப்பதற்கு துணி என்றெல்லாம் சேமித்து வைத்தாள்.

விதுரரின் வீடு சுற்றி நந்தவனம் அமைத்தாள். முன்பக்கம் பூச்செடிகளும், இரண்டு பக்கமும் காய்களும், கனிகளும் வளர்த்தாள். பின்பக்கம் மிகப்பெரிய அடர்த்தியான துளசி வனம் பராமரித்தாள். அதில் நடுநாயகமாக கருந்துளசியை பயிரிட்டாள். உரமிட்டு வளர்த்தாள். தினசரி விளக்கேற்றி பூஜை செய்தாள். கிருஷ்ணர் வரப்போகிறார் எனவே செழிப்பாக வளருங்கள் என்று வேண்டிக்கொண்டாள். அந்த துளசிவனத்திற்கு நடுவே பலகை போட்டு அமர்ந்து இடைவிடாது கிருஷ்ணன் நாமம் சொன்னாள்.

அழகான முகமும், வெள்ளை வெளேரென்ற தலைமுடியும், சுருக்கம் விழுந்த கைகளும் வற்றிய மார்பும், கூனவில்லாத நிமிர்ந்த முதுகும் உறுதியான கால்களும், கால்களில் தண்டையும், நெற்றியில் நிரந்தர கன்னியாய் இருக்கிறேன் என்று கூறும் செந்தூர திலகமும் தீட்டி அவள் மிக அழகாக இருந்தாள். வயதான கோலத்திலும் வசீகரமாய

காட்சி அளித்தாள். விதுரர் அவளை, 'கிருஷ்ண துளசி' என்று பெயரிட்டு அழைத்தார.

"என் வீட்டை தேவலோகம் போல் மாற்றி விட்டாயே தாயே..." என்று கைகூப்பினார். கிருஷ்ணரைப்பற்றி அவளுக்கு பாடல்கள் எழுதிக் கொடுத்தார். அந்தப் பாடல்களை 'ஒற்றைத் தம்பூர்' வைத்து, அவள் இடையறாது மீட்டி பாடி வந்தாள். எந்நேரமும் நீர் தெளித்து, கோலமிட்டு, தீபதூபப் புகையோடும், நறுமண வாசனைகளோடும் அந்த வீடு விருந்தினருக்கு தயாராக இருந்தது. கடவுள் வருவார் என்று அந்த வீடு நிச்சயம் நம்பியது.

விதுரரும், அவளும் இடைவிடாது மந்திரஜெபம் செய்ய அந்த வீடு சுதர்சன சக்கரம் போல விளங்கியது. யார் உள்ளே நுழைந்தாலும், அந்த வீட்டிற்குள் ஒரு அதிர்வு கண்டு கைகூப்பி பணிவாக நடந்தார்கள். பணிவாகப் பேசினார்கள்.

விதுரருக்கும் அவள் இடையறாது சேவை செய்தாள். கடவுளின் தொண்டருக்கு தொண்டு செய்தல் மிகப்பெரிய பாக்கியம் என்று கருதினாள். விதுரருக்கு தூங்கும்போது கால் பிடித்து விட்டாள். நகம் வெட்டி விட்டாள். குளிக்கும்போது முதுகு தேய்த்து விட்டாள். என்ன உணவு தேவையோ அதைப்பார்த்து பார்த்து சமைத்து பக்குவமாகப் பரிமாறினாள். துணிகளை துவைத்தாள். உலர்த்தி மடித்து அவர் அறைக்குள் வைத்தாள்.

கௌரவர்கள் இதை கேலி செய்தார்கள். ஆனால் விதுரர் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. கௌரவர்களின் மரணம் அவர் கண்ணுக்கு தெரிந்துவிட்டது. 'இறந்தவன் கேலி செய்தால் உயிரோடு இருப்பவன் எப்படி கோபம் கொள்வான். கௌரவர்களை அவர் இறந்தவர்களாகவே பார்த்தார்.

ஒருநாள் காலை விதுரரால் எழுந்திருக்க முடியவில்லை. எழுந்தால் தலைசுற்றியது. தடுமாறி சுவரில் இடித்துக் கொண்டார். 'கிருஷ்ண துளசி' பாய்ந்து ஓடிவந்தாள். முதுகைப்பற்றி மெல்ல வாசலுக்கு கொண்டு வந்தாள். காலைக்கடன்களுக்கு உதவி செய்தாள். அரிசிக்கஞ்சி கொடுத்தாள். பழங்கள் எடுத்து வைத்தாள். ஆனாலும் விதுரருக்கு சோர்வு போகவில்லை.

'திடீரென்று ஏன் இப்படி சக்தி செலவு ஏற்படுகிறது, எதனால் உடம்பிலிருந்து வேகமாக ஒரு சக்தி வெளியே போகிறது' புரியாமல் விதுரர் தவித்தார். கண்மூடி மௌனமானார். ஒரு பிரச்சினையை நோக்கி போய்க்கொண்டிருப்பது புரிந்தது. அந்தப் பிரச்சனை தன்னுடைய மூல சக்தியான எமதர்மராஜனே என்பதும் புரிந்தது. தர்மரை பலப்படுத்த வேண்டி ஒரு யட்சனுடைய வடிவில், ஒரு குளக்கரையில் எமதர்மராஜன் 'சூட்சுமமாக நின்றிருந்தார். தருமர் அங்கு போய் நின்றார். அந்த குளத்தில் நீர் அருந்திய நகுல, சகாதேவர்களும், அர்ஜுனனும், பீமனும் இறந்து கிடந்தார்கள். தருமர் நீர் குடிக்க குனிந்தார். அப்போது அசரீரியாய் ஒரு குரல் ஒலித்தது.

"கேள்விகளுக்கு பதில் சொல்லிவிட்டு நீ நீர் அருந்தலாம். இல்லையெனில் உன் தம்பிகள் போல நீயும் இறப்பாய்" என்று அந்த குரல்





அதிகாரமாய் ஒலித்தது.

"கேளுங்கள் பதில் சொல்கிறேன்" தருமர் கை உதறிக் கொண்டார். உடம்பில் துடைத்துக் கொண்டார். கைகூப்பி எதிரே குரல் வந்த திக்கை நோக்கி நமஸ்கரித்தார். மனதிற்குள் விதுரரைப்பற்றி யோசித்தார். 'உங்கள் உதவி வேண்டும் சித்தப்பா' என்று கெஞ்சினார். விதுரர் இங்கே வலுவிழக்க தருமபுத்திரர் அங்கே வலுவானார். கிருஷ்ண துளசி விசிறி விட்டுக்கொண்டிருந்தாள்.

"கிருஷ்ணதுளசி, என்னுடைய வலக்கையைப் பற்றிக்கொள். உனக்கு ஒரு காட்சி காண்பிக்கிறேன்" என்று விதுரர் சொன்னார்.

வெளியே மேகங்கள் திரள ஜனங்கள் மழைவரும் என்று அவரவர் வீட்டுக்குள் அடைந்தார்கள். திண்ணையில் கிருஷ்ணதுளசி தன் வலக்கையில் விதுரரின் வலக்கையை பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

அவளுக்கும் ஒரு காட்சி தெரிந்தது. யட்சன் கேள்வி கேட்கத் துவங்கினான்.

"பூமியைக் காட்டிலும் கனமானது எது."

"தாய். தாய்தான் பூமியைக்காட்டிலும் கனமானவள்."

"ஆகாயத்தைக் காட்டிலும் உயரமானது எது."

"தந்தை."

"காற்றைவிட வேகமுள்ளது எது."

"மனம்."

"புல்லைக்காட்டிலும் அதிகமானது எது."

"கவலை."

"எது தூங்கும்போது கண்களை மூடாமல் இருக்கின்றது?"

"மீன்."

"எது பிறந்ததும் அசைவதில்லை."

"முட்டை."

"எதற்கு இதயம் இல்லை?"

"கல்லுக்கு இதயம் இல்லை."

"எது வேகத்தால் வளர்ச்சியுறுகிறது?"

"நதி"

"தேசாந்தரம் போகிறவனுக்கு யார் தோழன்?"

"வித்தை."

"வீட்டிலிருப்பவனுக்கு யார் தோழன்?"

"மனைவி."

"நோயாளனுக்கு யார் தோழன்?"

"மருத்துவன்."

"மரணமடைகின்றவனுக்கு யார் தோழன்?"

"தானம்."

"எல்லா உயிர்களுக்கும் யார் அதிதி?"

"அக்னி."



"எந்த அறம் நிலையானது?"

"மோட்சத்துக்கு ஏதுவான அறம்."

"எது அமிர்தம்?"

"பால்."

"எவன் ஒருவனாகச் சஞ்சரிக்கின்றான்?"

"சூரியன்."

"பிறந்தவன் எவன் மறுபடியும் பிறக்கின்றான்?"

"சந்திரன்."

"பனிக்கு எது மருந்து?"

"அக்னி."

"எல்லாவற்றையும் அடக்கக்கூடிய பாத்திரம் எது?"

"பூமி."

"தருமம் எதில் முக்கியமாக நிலைபெறுகின்றது?"

"முயற்சியில்."

"புகழ் முக்கியமாக எதில் நிலைபெறுகின்றது?"

"தானத்தில்."

சுகம் எதில் முக்கியமாக நிலைபெறுகின்றது?

'நல்லொழுக்கத்தில்.'

"சுவர்க்கம் எதில் முக்கியமாக நிலைபெறுகின்றது?"

"சத்தியத்தில்."

"மனிதனுக்கு ஆத்மா எது?"

"புதல்வன்."

"தெய்வத்தால் ஏற்படுத்தப்பட்ட துணை யார்?"

"மனைவி."

"மனிதனுக்கு பிழைப்புக்குச் சாதனம் எது?"

"மழை."

"மனிதனுக்கு முக்கியமான கதி எது?"

"தருமம்."

"செல்வத்தைக் கொடுப்பவற்றுள் முக்கியமானது எது?"

"சாமர்த்தியம்."

"பொருள்களுள் எது உத்தமமானது?"

"கலையறிவு."

"லாபங்களுள் உத்தமமானது எது?"

"நோயின்மை."

"சுகங்களுள் உத்தமமானது எது?"

"திருப்தி."

"எவர்களோடு ஏற்பட்ட நட்பு குறைவடையாது?"

"சாதுக்களோடு ஏற்பட்ட நட்பு குறைவடையாது."

"எதை விட்டால் மனிதன் மற்றவர்களுக்கு பிரியமுள்ளவனாகிறான்?"

"கர்வத்தை."

"எதை விட்டால் துயரததை அடைவதில்லை?"

"கோபத்தை விட்டவன் துயரமடைவதில்லை."

"எதை விட்டால் பொருள் உள்ளவனாகின்றான்?"

"காமத்தை விட்டவன் பொருள் உள்ளவனாகிறான்."

"எதை விட்டால் சுகியாகின்றான்?"

"உலோபத்தை விட்டால் சுகமாகிறான்."

"எதனால் உலகம் மூடப்பட்டிருக்கிறது?"

"அஞ்ஞானத்தால்."

"எதனால் உலகம் பிரகாசிப்பதில்லை?"

"தமோ குணத்தால்."

"எதனால் மனிதன் சுவர்க்கமடைவதில்லை?"

"பற்று. பற்றினால் மனிதன் சுவர்க்கமடைவதில்லை."

"எது சிறந்த பொறுமை?"

"சுகதுக்கங்களைப் பொறுத்துக் கொண்டிருத்தல்."

"எது தவம்?"

"மனதை அடக்குதல்."

"எது நாணம்?"

"செய்யத்தகாத காரியங்களைச் செய்யாதிருத்தல்."

"எது ஞானம்?"

"உண்மைப் பொருளையறிதலே ஞானம்."

"எது சமம்?"

"சித்தத்தில் அமைதியாக இருப்பதே சமம்."

"எது சிறந்த கருணை?"

"எல்லோருக்கும் சுகத்தை விரும்புதல்."

"மனிதர்களால் வெல்ல முடியாத பகைவன் யார்?"

"கோபம்."

"எது முடிவில்லாத நோய்?"

"பேராசை."

"எப்படி இருப்பவன் சாது?"

"எல்லா உயிர்களிடத்தும் இதமாக இருப்பவன்."

"எப்படி இருப்பவன் அசாது?"

"தயையற்றவன்."

"எது மோகம்?"

"தருமத்தை அறியாமை."

"எது மானம்?"

"நான் எனும் அகங்காரம்."

"எது சோகம்?"

"அஞ்ஞானம்."

"பிறப்புக்கு காரணம் யாது?"



"ஆசை."

"யார் பிராமணன்?"

"எவன் ஒழுக்கத்தில் சிறந்தவனோ அவனே பிராமணன்."

"இன்சொல் சொல்கின்றவன் எதை அடைகிறான்?"

"எல்லோருக்கும் அன்பனாகிறான்."

"ஆராய்ந்து காரியம் செய்பவன் எதை அடைகிறான்?"

"வெற்றியை அடைகிறான்."

"அநேகர்களை நண்பர்களாகச் செய்து கொள்பவன் எதை அடைகின்றான்?"

"சுகத்தை அடைகின்றான்."

"தருமத்தில் பற்றுள்ளவன் எதை அடைகின்றான்?"

"நல்ல கதியை."

"எவன் மகிழ்ச்சியை அடைகின்றான்?"

"எந்த மனிதன் கடனில்லாதவனாகவும் அயலூர் பிழைப்புக்கே போகாதவனாகவும் பகலில் ஐந்தாவது காலத்திலோ ஆறாவது காலத்திலோ கீரையையாவது தன் வீட்டில் சமைத்து உண்பவனாகவும் இருப்பானோ அவன் மகிழ்ச்சியடைகின்றான்."

"எது ஆச்சரியம்?"

"தினந்தோறும் இறப்பவர்களைக் கண்டு அது நமக்கில்லையென்று எண்ணியிருக்கின்றார்களே...மனிதர்கள்...அதுதான் ஆச்சரியம்."

"எது இங்கே தினசரி நடக்கும் காரியம்?"

"பூமியானது சமையல் செய்யும் பாண்டம். ஆகாயம் அதற்கு மேல் மூடி. காலமானது சராசரங்களையெல்லாம் அதில் இட்டு இரவு பகலாகிய விறகை வைத்து சூரியனாகிய நெருப்பை மூட்டி மாதம் ருதுக்களாகின்ற கரண்டிகளால் கிளறிப் பக்குவம் செய்கின்ற விஷயம்தான் இடையறாது இங்கே நடந்து கொண்டிருக்கிறது."

"சரி நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் நீ நன்கு விடையளித்தாய் தருமபுத்திரா. நீ நீர் அருந்தலாம். வேண்டுமென்றால் உன் தம்பிகள் எவரேனும் ஒருவரை நீ உயிரோடு அழைத்துப் போகலாம். நீ யாரை அழைத்துப்போக விரும்புகிறாய்.

"என் தம்பிகளில் நகுலனை பிழைக்க வைக்க நான் விரும்புகின்றேன்."

"அப்படியா, வில்லில் சிறந்த அர்ஜுனன் இருக்க, உனக்கு பிடித்த பீமன் இருக்க, நகுலனை நீ ஏன் தேர்ந்தெடுத்தாய்" யட்சன் ஆச்சரியத்தோடு விளம்பினான்.

"என் தாய்க்கு நான் மகனாக இருக்கிறேன். என்னுடைய சிற்றன்னைக்கு ஒரு மகன் தேவையல்லவா...எனவே சிற்றன்னை நல்ல கதிக்கு போகும் வகையில் நகுலன் எழுந்து நிற்கட்டும்" என்று தருமர் வேண்டினார்.

யட்சன் மறைந்து அங்கு தர்மதேவதையாக எமதர்மன் தோன்றினான். தருமரை ஆரத்தழுவிக் கொண்டான்.

இங்கே விதுரர் நடுங்கினார். கைகூப்பினார். கண்ணில் நீர் சொரிய

நின்றார். பரவசமாக சகலமும் பார்த்த சந்தோஷத்தில் வாய்விட்டு அலறினார். கிருஷ்ணதுளசி அவரை மெல்ல அணைத்து படுக்க வைத்தாள். அவளும் இந்த அற்புத காட்சியைக் கண்டு கண்ணீல் நீர் வழிய நின்றாள்.

தான் சாதாரண மனிதரின் வீட்டில் வெறும் வேலையாளாக இல்லை. ஏதோ ஒரு காரியத்திற்காக இருக்கிறோம். ஏதோ ஒரு நல்லதற்காக இங்கே வளர்கிறோம். என்று புரிந்து கொண்டாள். விதுரரை வணங்கி தன் வேலைகளை கவனிக்கப் போனாள்.

தருமதேவதையான தகப்பனால் தழுவப்பட்ட தருமபுத்திரர் மிகுந்த பலம் பெற்றார். ஆழ்ந்த அமைதியோடு இருந்தார். அந்த அமைதி விதுரரையும் மெல்ல தழுவிக்கொண்டது. தருமர் விரும்பியவண்ணம் சகல தம்பிகளும் எழுந்தார்கள். எமனை வணங்கினார்கள்.

பஞ்சபாண்டவர்கள் தங்கள் வனவாசத்தை முழுவதும் பயனாக்கிக் கொண்டார்கள். அர்ஜுனன் தெற்கே குமரிமுனை வரை நடந்து வந்து பல க்ஷேத்திரங்களை தரிசித்து ஆங்காங்கே தவம் செய்து பல அஸ்திரங்களை தன் தவவலிமையால் அடைந்தான். பீமன் வடக்கே போய் ஹனுமரை தரிசித்து, அவரைத் தழுவி புது பலம் பெற்று வந்தான். நகுல, சகாதேவர்கள் வானத்தைப் பார்த்தும், மிருகங்களைப் பார்த்தும் நிறைய விஷயங்களை கற்றுக்கொண்டார்கள். திரௌபதி தன் கோபத்தை ஒரு கட்டுக்கு கொண்டு வந்து அதேநேரம் அந்த கோபம் அணையாமல் சுடருடன் இருக்கும்படியாய் செய்து கொண்டாள்.

அவர்கள் வனவாசம் முடிதது விராட தேசத்திற்கு போனார்கள். அங்கு போய் தனித்தனியே திரிந்து சாதாரண வேலையாட்களாக தங்களை அடையாளம் காட்டிக்கொண்டார்கள். பெருக்குகிற பணிப்பெண்ணாக திரௌபதி தன்னை பின்னிக்கொள்ள, சமைக்கிறவனாய் பீமன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள, நடனமாடுபவனும், ஒப்பனை செய்கிறவனுமாய் அர்ஜுனன் தன்னை மாற்றிக் கொள்ள, குதிரை ஓட்டுபவனாய் நகுலன் உருவெடுக்க, சகாதேவன் மாட்டுத் தொழுவத்தை கவனிக்கின்ற இடையனாய் வேஷம் தரிக்க, தருமபுத்திரர் அரசனுக்கு அருகேயிருந்து வெற்றிலை மடித்துக் கொடுத்து, விசிறி, சிரிக்க விஷயங்கள் பேசி, சிந்திக்க பல விவரங்கள் சொல்லி கூடவே வருகின்ற ஒரு சாதாரண ஆளாய் தன்னை மாற்றிக்கொண்டு வாழத் துவங்கினார்.

'தனது பணியாளின் சுக துக்கத்தை எவன் ஒருவன் அறிகிறானோ, எவருக்கு தெரிந்திருக்கிறதோ அவன் வெகுநிச்சயம் வெற்றியடைவான். பணியாட்கள் சாதாரணமானவர்கள் இல்லை. ஒரு அரசாங்கத்தில் முக்கியமான அச்சாணிகள். அவர்களை பகைத்துக்கொண்டால் அரசாங்கம் சீர்கெடும். ஒரு பணியாளின் சுகதுக்கங்கள் ஆட்சி செய்பவனுக்கு தெரிந்திருக்க வேண்டும். அரசன் சுகபோகத்திற்காக மட்டும் பிறந்தவன் அல்ல. அவனுக்கு பணியாளின் வேதனை, தெரிந்திருக்க வேண்டும். அவனுடைய சுகபோகம் என்ன என்பதை அவன் கவனித்து அந்த பணியாளுக்கு வழங்க வேண்டியது அரசனுடைய கடமை. ஒரு பணியாளுடைய வேதனை என்னவென்பதை, பணியாளாய் இருந்தால் தான் ஒரு அரசனுக்கு புரியும்' என்று விதுரர் என்றோ சொன்னது ஞாபகம் வந்தது.

மனிதத்தன்மை மிகுந்த அந்த பஞ்சபாண்டவர்கள் தங்களை சாதாரண வேலைக்காரர்களாக உருமாற்றி அந்த வாழ்க்கையின் ருசியை



உணரத் துவங்கினார்கள். எந்த அரசன் சாதாரண மக்களை புரிந்து கொள்கிறானோ எந்த ஆட்சியாளன் சாதாரண மக்களின் தன்மையை நேரடியாக தெரிந்துகொள்கிறானோ அவன் ஆட்சி வெகுநிலையாய் நெடுநாள் இருக்கும்.

விராட தேசத்தில் பாண்டவர்கள் இருப்பது தெரிந்துகொண்டு துரியோதனன் படைதிரட்டி அவர்களை மிரட்டுவதற்காகப் போனான். ஆனால் போவதற்குள் விரத்காலம் முடிந்துவிட்டது. அர்ஜுனனால் கடுமையாகத் தாக்கப்பட்டு ஊர் திரும்பினான். 'இனி என்ன செய்வது' என்று தெரியாமல் மருகினான். 'யார் வேண்டுமானாலும் அருகில் வரட்டும். விதுரரை மட்டும் அண்ட விடாதே' என்று எச்சரித்திருந்தான்.

நல்லது சொல்பவர்களை அண்டவிடாதே என்று சொன்ன அரசன் வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை. துரியோதனின் முடிவு விதுரரை விலக்கியதிலிருந்து ஆரம்பித்தது.

விதுரர் அரண்மனைக்கு போகாமல் வீட்டிலேயே இருந்தார். அவரும், கிருஷ்ண துளசியும் 'கடவுள் வரும் நேரம் வந்துவிட்டது' என்று பேசிப்பேசி சந்தோஷப்பட்டார்கள். வீட்டை நன்கு அலங்கரித்தார்கள். எந்த நேரமும் கடவுள் வரக்கூடும் என்று சுத்தமாய் வைத்திருந்தார்கள். கடவுள் வருகைக்காய் காத்திருந்தார்கள்.

'பாண்டவர்கள் வனவாசம் முடிந்தது இனி அவர்கள் தேசத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டியதுதானே..' மக்கள் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். அது அரசவையில் எதிரொலித்தது. பீஷ்மரும் அதை வலியுறுத்தினார். 'எவர் சொன்னாலும் தர முடியாது' என்று துரியோதனன் கொக்கரித்தான். அப்படியானால் யுத்தம் நிச்சயம் என்று தருமபுத்திரர் சொல்ல, 'அதற்கும் தயார்' என்று சொன்னான்.

அர்ஜுனன் துவாரகைக்கு ஓடுவதை தெரிந்துகொண்டு தானும் தேரேறி விரட்டினான். கிருஷ்ணரைச் சந்தித்தான். அரசன் என்கிற கர்வத்தில் தலைமாட்டில் அமர்ந்தான். எழுந்ததும் கிருஷ்ணர் காலுக்கடியே இருந்த அர்ஜுனனை பார்த்து 'என்ன வேண்டும்' என்று கேட்டார்.. 'நான்தான் முதலில் வந்தேன்' என்று துரியோதனன் சொல்ல, 'நான் அர்ஜுனனைத்தான் முதலில் பார்த்தேன்' என்று கிருஷ்ணர் சொன்னார். 'என்ன வேண்டும் சொல் அர்ஜுனா' என்று மறுபடியும் கேட்டார். அர்ஜுனன் யுத்தம் பற்றி சொல்ல, 'நான் ஒரு பக்கம், என் சைன்யம் ஒரு பக்கம் இரண்டில் எது வேண்டும் சொல்' அர்ஜுனனை பார்த்து கண்ணன் பிரியத்துடன் கேட்டார்.

துரியோதனன் பயந்தான். 'எவ்வளவு பெரிய சேனை கிருஷ்ணருடையது. அந்த சேனையை அர்ஜுனன் கேட்டால் தான் தோற்பது திண்ணம்' என்று பதறினான். 'பாதி பாதியாக கேட்கலாமே' என்று யோசனை வந்தது. ஆனால் அர்ஜுனன் 'எனக்கு உன் சேனை வேண்டாம். நீ வேண்டும்' என்று சொல்ல துரியோதனன் சந்தோஷமானான். கிருஷ்ணனுடைய சேனையை தனக்கு உதவிசெய்யுமாறு கேட்டுக் கொண்டு ஊருக்கு வந்தான். ஜெயித்து விட்டதாய் கொக்கரித்தான்.

கடவுளைத் தெரிந்தவர்கள் அமைதியாய் இருப்பார்கள். கடவுளைத் தெரிந்தவர்களைப் பார்த்து கடவுள் அறியாதவர்கள் முட்டாள் என்று நினைப்பார்கள். செல்வத்தின் மீதும் பெரும் கூட்டத்தின் மீதும் நம்பிக்கையுள்ளவர்கள். கடவுள் அருகே இருப்பதை அறிய

மாட்டார்கள். துரியோதனனுடைய முட்டாள்தனத்தைப் பார்த்து விதுரர் தலையிலடித்துக் கொண்டார்.

போர் நிச்சயம் என்று தெரிந்துவிட்டது. எல்லா பக்கமும் அதற்கான ஆயத்தங்கள் நடந்துகொண்டிருந்தன. வேலையாட்கள் மிரட்டப்பட்டார்கள். தூதுவர்கள் துரத்தியடிக்கப்பட்டார்கள். குதிரைகளின் குளம்படிகள் ஓயாமல் நகரத்தில் கேட்டுக்கொண்டிருந்தன. இரவு பகலாய் உணவுகள் தயாராகி கொண்டிருந்தன. போருக்கான ஆயுதங்கள் செய்வதற்கு கொல்லர்களையும், கருமார்களையும் துரியோதனன் பலவந்தமாக கட்டுப்படுத்தினான். மறுத்தவர்களை சவுக்கால் விளாசினான்.

போரில் இறங்காத பெரிய தொழில் கூட்டமொன்று போரில் மாட்டிக்கொண்டு தவித்தது. போர் வருவதற்கு முன்பே போரின் வேதனையை அனுபவித்தது. உண்மையில் உறங்காமல் உழைத்து உழைத்து வாடியது.

தருமரிடமிருந்து தூதுவனாக கிருஷ்ணர் வருகிறார் என்ற செய்தி ஹஸ்தினாபுரம் முழுவதும் பரவியது. ஜனங்கள் குதூகலித்தார்கள். அரண்மனை தயாராகியது. மறுபடியும் வேலையாட்கள் துன்புறுத்தப்பட்டார்கள். உடனடியாக பெரிய கோபுரங்களையும், அலங்கார வாயில்களையும் வைக்க வேண்டுமென்று விரட்டப்பட்டார்கள். உண்ணாமல், உறங்காமல் நாள்கணக்கில், மாசக்கணக்கில் குடும்பம் குடும்பமாக உழைக்கும்படியாக சிறிய குழந்தைகள் சேர்ந்து உழைக்கும்படியாக கட்டாயப்படுத்தப்பட்டார்கள். ஒருநாள் காலை நேரம் கிருஷ்ணர் தலைநகரம் வந்தார். எந்த அலங்காரங்களையும் கண்டு மகிழாமல் விரைவாக அரண்மனை நோக்கி வந்தார். ஒரு அலங்காரத்திற்குப் பின்னால் இருக்கின்ற அழுகை கிருஷ்ணருக்கு தெளிவாகத் தெரிந்தது.

அரண்மனை வாசலில் கிருஷ்ணரை விதுரர் கட்டித் தழுவி வரவேற்றார்.

பீஷ்மர் நமஸ்கரித்தார். சபையிலிருந்த பெரியோர்கள் அனைவரும் எழுந்து நின்று வாசலுக்கு வந்து மரியாதை செய்தார்கள். துரியோதனனும் வந்திருந்தார்.

கிருஷ்ணர் நேரே திருதராஷ்டிரரிடம் போய் முகமன் சொல்லி நமஸ்கரித்தார். குசலம் விசாரித்தார். காந்தாரியை வணங்கினார். மெல்ல துரியோதனன் அழைக்க அவன் அரண்மனைக்கு போனார்.

அங்கு அவன் பால், பழம் கொடுத்து உபசரிக்க, வேண்டாமென்று மறுத்துவிட்டார்.

"எனக்கு விருந்தாளியாக வந்துவிட்டு நான் கொடுப்பதை உண்ண மறுத்தால் என்ன அர்த்தம்...பாண்டவர்கள் பக்கம் நீங்கள் என்றல்லவா ஆகிறது..."

"இல்லை. நான் இப்பொழுது பாண்டவர்களின் தூதனாக வந்திருக்கிறேன். உனக்கு பாண்டவர்கள் எதிரிகள். எனக்கு பாண்டவர்கள் நண்பர்கள். நண்பர்களின் எதிரி எனக்கும் எதிரியல்லவா. பாண்டவர்களை நண்பர்கள் என்று சொல். நான் உடனே பால்பழம் எடுத்துக்கொள்கிறேன். நீயும் எனக்கு நண்பன் என்று உடனே நானும் சொல்கிறேன். ஆனால் பாண்டவர்களை நீ எதிரியாகக் கருதும் பட்சத்தில் உன்னை நான் எதிரியாகக் கருதவேண்டிய அவஸ்யம் ஏற்பட்டு விடுகிறது. எதிரியின் வீட்டில் பால் பழம் எடுத்துக்கொள்ள முடியாது"



என்று சொல்லி கிருஷ்ணர் வெளியே வந்தார்.

துரியோதனன் கோபமானான். வெளியே காட்டிக் கொள்ளாமல் அமைதியாக இருந்தான்.

துரோணரின் கைப்பற்றி கிருஷ்ணர் தெருவில் நடந்தார். மக்கள் அவரைப் பார்த்துவிட்டு சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். குறிப்பாய் வேலையாட்கள் துண்டுகள், துணிகளை விசிறி அவரை வரவேற்றார்கள். அவர்கள் அனைவருக்கும் கிருஷ்ணர் கைகூப்பி நமஸ்காரம் செய்தார். குழந்தைகளைத் தடவினார். பெண்களுக்கு அருகேபோய் குசலம் விசாரித்தார். கிழவர்களைக் கட்டிக்கொண்டார். வாலிபர்களைத் தட்டிக் கொடுத்தார். இளம்பெண்களின் அழகைக் கேலி செய்து ஆரவாரிக்க வைத்தார். ஊர் குதூகலமாகியது.

கிருஷ்ணரின் பெருமையை உணர்ந்து துரியோதனனுக்கு பொறாமை ஏற்பட்டது, மக்கள் முட்டாள்கள் என்று கோபம் ஏற்பட்டது. கிருஷ்ணருக்கு கிடைக்கும் வரவேற்பை வயிறெரிந்தபடி பார்த்துக் கொண்டிருந்தான்.

துரோணரோடு நடந்து கொண்டிருந்த கிருஷ்ணர் இது யார் வீடு என்று ஒரு வீட்டைச் சுட்டிக் காட்டி கேட்டார்.

'அது என்னுடைய வீடு" என்று துரோணர் சொன்னார்.

"அப்படியா" என்று சொல்லிவிட்டு கிருஷ்ணர் மேலே நடந்தார்.

பீஷ்மர் வீட்டு வாசலில் நின்று பூரணகும்பத்தோடு வரவேற்க பீஷ்மரின் கைகளை கிருஷ்ணர் கோர்த்துக் கொண்டார்.

வீட்டுப்படியில் நின்று இது யார் வீடு என்று கேட்டார்.

"இது என் வீடு. உள்ளே வா கிருஷ்ணா" என்று பீஷ்மர் சொன்னார்.

"அப்படியா...உங்கள் வீடா...நான் பிறகு வருகிறேன்" என்று மேலும் தொடர்ந்து நடந்தார்.

மக்கள் இரண்டுபுறமும் நின்று கைகள் வீசி ஆர்ப்பரித்தார்கள்.

கிருஷ்ணர் சகலரையும் உற்று உற்று பார்த்தபடி போனார்.

விதுரர் எதிரே ஓடிவந்து கிருஷ்ணர் காலில் விழுந்து நமஸ்கரித்து கட்டித் தழுவிக்கொண்டு தன் வீட்டிற்கு அழைத்துப் போனார்.

"விதுரரே, இது யார் வீடு" என்று கிருஷ்ணர் கேட்டார்.

"கிருஷ்ணரே, இது கடவுளாகிய உங்கள் வீடு. இது கடவுள் வீடு. இது உன்னுடைய வீடு, கிருஷ்ணா வா" என்று நா தழுதழுக்க விதுரர் கூப்பிட்டார்.

"என் வீடா...அப்படியானால் வருகிறேன்" என்று உள்ளே கால் வைத்தார்.

கிருஷ்ணர் கால் வைத்த அந்த க்ஷணம் அந்த வீட்டின் அதிர்வுகள் மாறின. உக்கிரமாயின. ஏற்கனவே எரிந்து கொண்டிருந்த தீபம் போல வெப்பம் கொண்ட அந்த வீடு கிருஷ்ணர் படியில்கால் வைத்ததும் திடீரென்று ஒரு எரிமலை உஷ்ணம் பரவியது.

அந்த உஷ்ணம் தாங்காமல் உள்ளே கிருஷ்ணரை எதிர்பார்த்துக் கொண்டிருந்த கிருஷ்ணதுளசி மயங்கி விழுந்தாள்.

கடவுளின் வருகை தாங்காமல் கட்டை போல் கிடந்தாள். அவள்

உடம்பு தடதடத்து சட்டென்று அடங்கியது.

"கிருஷ்ணதுளசி, இங்கு கிருஷ்ணர் வந்திருக்கிறார். ஏதேனும் எடுத்து வா" என்று சொல்ல கிருஷ்ணதுளசி அசையாது கிடந்தாள்.

அவள் இல்லை போயிருக்கிறது என்று நினைத்துக் கொண்டு விதுரர் தானே ஓடிப்போய் கால் அலம்ப தண்ணீர் கொண்டுவந்து கிருஷ்ணர் கால்களைக் கழுவி துண்டால் துடைத்து உள்ளே அழைத்து வந்து ஆசனம் அமைத்து அங்கு கிருஷ்ணதுளசி தயாராக வைத்திருந்த எளிய உணவுகளை அவருக்கு பரிமாறினார்.

மிக ஆனந்தமாய் கிருஷ்ணர் ருசித்து சாப்பிட்டார். இறங்கி வீடு சுற்றிப்பார்த்தார். துளசி வனங்களுக்கு நடுவே உலவினார். துளசிகளைத் தடவிக் கொடுத்தார்.

"மிக நல்ல வளர்ப்பு, மிக நல்ல வளர்ப்பு" என்று பாராட்டினார்.

ஆனால் இவை எதையும் பார்க்காமல் கிருஷ்ணதுளசி பல்கிட்டி நாக்கு இறுக்கி புருவத்திற்கு நடுவே ஒளி பெரிதாக மூச்சுவிட முடியாமல் நெஞ்சுக்குள் தேக்கி உணர்வற்ற கட்டை போல உயிரற்ற பிணம் போல கிடந்தாள். இது ஒரு யோக நிலை.

கிருஷ்ணர் விதுரரோடு துரியோதனன் அரண்மனைக்கு போனார். சபை கூடியிருந்தது. பாண்டவர்களுக்காக ஐந்து ஊர்களாக...ஐந்து கிராமங்களாவது கொடு. குறைந்தபட்சம் ஐந்து வீடுகளாவது கொடு என்று கிருஷ்ணர் வேண்டினார்.

ஊசிமுனை நிலம் கூட தரமாட்டேன் என்று துரியோதனன் உரக்கச் சொன்னான்.

'அப்படியானால், துரியோதனா போர் செய்ய வருகிறேன் என்று சத்தியம் செய்து கொடு' என்று கிருஷ்ணர் கைநீட்டினார்.

"நீ இடையன், உன்னைத் தொட்டு நான் சத்தியம் செய்ய மாட்டேன் என்று தூணில் அறைந்து "போருக்கு நிச்சயம் வருவேன்" என்று துரியோ தனன் சத்தியம் செய்தான்.

விதுரர் கிருஷ்ணருக்கு ஏற்பட்ட அவமானம் பார்த்து துடித்தார். "யாரைப் பார்த்து இடையன் என்கிறாய் துரியோதனா. இவர் கடவுள். கடவுளின் அவதாரம். கிருஷ்ணர் யாரென்று உலகம் முழுக்க தெரிந்திருக்க, உன் மரமண்டைக்கு மட்டும் தெரியவில்லையே ஏன் இப்படி இருக்கிறாய் ஏன் தறிகெட்டு அலைகிறாய்" என்று சீறினார்.

துரியோதனன் சபைமுன் சித்தப்பா பேசிய வார்த்தைகளக் கேட்டு கோபமானான். தன்னுடைய கௌரவத்திற்கு எதிராக இவர் எப்பொழுதும் செயல்படுகிறார் என்று எண்ணினான். மேடையில் ஏறி நின்றான். அவரைச் சுட்டிக்காட்டி பேசினான்.

"நீங்கள் யார்? உங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம். நீங்கள் அரசகுலத்தோராய் அங்கீகரித்தது பீஷ்மரின் கருணை. உங்களை நாங்கள் அரசகுலத்தோராய் அங்கீகரித்திருக்கவே கூடாது. பீஷ்மர் அப்படி அங்கீகரித்து விட்டார் என்பதாலேயே நீங்கள் நீதிபோதனை செய்ய முற்படுகிறீர்கள். நீங்கள் அரசகுலப் பெண்மணிக்குப் பிறந்தவரா -இல்லையே. நீங்கள் ஒரு சாதாரண வேலைக்காரிக்குப் பிறந்தவர். நீங்கள் தாஸியின் மகன். தாதியின் பிள்ளை. எனவே உங்கள் புத்தி எப்பொழு



துமே கஞ்சியிலும், வேலைக்காரியின் விசிறலிலும்தான் இருக்குமேதவிர உங்களுக்கு உயர்வாக சிந்திக்கத் தெரியாது.

இடையனை இடையன் என்று சொல்லாமல் இளவரசன் என்றா சொல்வது. உங்களைப் போன்ற வேலைக்காரியின் மகனுக்கு அந்த இடையன் பெரிய கடவுளாக இருப்பான். என்னைப் போன்ற அரசகுமாரனுக்கு அவன் இடையன்தான் என்பதை மறுபடியும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்."

"விதுரர் சபை அதிரக் கூவினார்."

"நீ கடவுளை மட்டுமல்லாமல் நீ என் தாயையும் நிந்தித்து பேசுகிறாய் துரியோதனா. இதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது." "மறுபடியும் சொல்கிறேன். விதுரா, நீ தாதியின் மகன். இங்குள்ள வேலைக்காரிகள் அனைவரையும் நாங்கள் அனுபவித்துப் பழக்கப்பட்டவர்கள். உங்கள் தாயையும் என்னுடைய அரசகுலத்தோர் அனுபவித்திருப்பார்கள். ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் அனுபவித்திருப்பார்கள். ஆகவே உன் தாயை இழிவுபடுத்தாமல் கொண்டாட முடியாது என்பதைப் புரிந்துகொள்" என்று சொன்னான்.

விதுரர் கோபமானார்.

"உனக்காக இதுவரைநான் பேசிவந்தேன். வாதாடி வந்தேன். போர் செய்யவும் துணையாக இருந்தேன். இனி உனக்காக நான் பேசப் போவதுமில்லை. உனக்கு புத்தி சொல்லப்போவதும் இல்லை. உனக்காக போர் செய்யப் போவதுமில்லை. இதோ என் வில். உடைத்து எறிகிறேன்.

நான் பாண்டவர்கள் பக்கம் போனால் உண்ட சோற்றிற்கு துரோகம் செய்தவனாவேன். எனவே நான் பாண்டவர் பக்கம் போகாமல் உன் பக்கமும் நிற்காமல் என்னுடைய வில்லை முறித்துப் போடுகிறேன்" என்று சொல்லி அவர் வில்லை உடைத்துப் போட்டார். வெளியேறினார்.

சபை கலைந்தது.

கிருஷ்ணர் வாய்விட்டுச் சிரித்தார். தேரிலேறி அஸ்வத்தாமனை நோக்கி போனார்.

விதுரர் வீடு திரும்பினார்.

திண்ணையில் அமர்ந்து, என்ன நடக்கப்போகிறது...இனி செய்ய வேண்டியது என்ன என்று விதிர்த்து போய் யோசித்தார்.

கிருஷ்ணதுளசி மயக்கம் நீங்கி வாசலுக்கு வந்தாள்.

"எங்கு போய்விட்டாய் தாயே....கிருஷ்ணர் இங்கு வந்தபோது உபசாரம் எதுவும் செய்யாமல் கை கால் கழுவவும் செய்யாமல், மாற்றுடை கொடுக்கவுமில்லாமல், ஆசனம் எடுத்துப் போடவுமில்லாமல் பரிமாறவுமில்லாமல் எங்கே போய்விட்டாய்" என்று விதுரர் கேட்டார்.

கிருஷ்ணதுளசி தனக்கு ஏற்பட்ட யோக நிலையைச் சொன்னாள்.

"நல்லது, அது கிருஷ்ணரின் விருப்பம். கிருஷ்ணர் உனக்கு வேறு ஏதோ கொடுக்கக் காத்திருக்கிறார் என்று நினைக்கிறேன். ஊர்மக்கள் அனைவரும் கிருஷ்ணரைப் பார்த்து விட்டு ஆனந்தித்து கோஷமிட்டார்கள். நீ மட்டும்தான் கிருஷ்ணரைப் பார்க்கவில்லை. நான் இப்போது அரண்மனைக்குப் போவதாக இல்லை. கிருஷ்ணர் அரண்மனையில் இல்லை. வேறு எங்கோ போய்விட்டதாகத் தெரிகிறது. நீ என்ன

செய்யப் போகிறாய் கிருஷ்ணதுளசி? இத்தனை நாள் தவமிருந்து கிருஷ்ணரைப் பார்க்காமலிருக்கப் போகிறாயா...."விதுரரே கேட்டார்.

கிருஷ்ணதுளசி தலைகுனிந்து கொண்டாள்.

"அதுதான் கிருஷ்ணரின் விருப்பமாக இருந்தால் நான் என்ன செய்ய முடியும். பார்க்க வேண்டுமென்று அவன் விரும்பினால் நான் பார்க்கிறேன். தன்னைக் காட்டவேண்டும் என்று அவன் விரும்பினால் அவன், தன்னைக் காட்டட்டும். நான் இனி ஆசைப்படப் போவதில்லை. ஈசனோடாயினும் ஆசையற்று இருக்கவே நான் ஆசைப்படுகிறேன்" அவள் மெல்ல அழுதாள்.

"என் தாயே,. ஏதோ நல்லது நடக்கப் போகிறது. மனம் தளராதே." அவள் தலையை உச்சிமுகர்ந்து விதுரர் வீட்டுக்குள் போனார்.

வெளியே பறையறிவிப்பு கேட்டது.

"வேலையாட்கள் அத்தனை பேரும் துரியோதனன் அரசவைக்கு உடனே வந்து கூட வேண்டும். ஆண் பெண் அத்தனை பேரும் வர வேண்டும். வராதவர்கள் கழுத்தில் சுருக்கிட்டு கொல்லப்படுவார்கள்."

கிருஷ்ணதுளசி, துரியோதனன் அரசவை நோக்கி போனாள். பெரிய வேலையாட்கள் கூட்டம் அங்கு கூடிற்று.




"கிருஷ்ணர் உயிரோடு இருக்கும்வரை பாண்டவர்களை கொல்ல முடியாது. பாண்டவர்களின் பாதி பலத்தை பிடுங்க வேண்டுமென்றால் கிருஷ்ணரை கொல்வதும் முக்கியம். கிருஷ்ணரை அவருடைய ஊரிலோ வேறிடத்திலோ கொல்ல முடியாது. இங்கே நம்மிடத்தில் வந்திருக்கும்பொழுது அவரைக் கொல்வது மிக எளிது. எனவே கிருஷ்ணரைக் கொல்வதற்குண்டான ஏற்பாடுகளை உடனடியாக செய்து விடுங்கள்; "சகுனி துரியோதனனை அவசரப்படுத்தினான்."

துரியோதனனும் மற்றவர்களும் ஆழ்ந்து சித்தித்தார்கள். வழக்கம் போல கிருஷ்ணனுக்கு ஒரு தனி நாற்காலி போடப்படும். எந்த நாற்காலிக் குக் கீழே மிகப்பெரிய பள்ளம் தோண்டப்படும் ஒரு குறிப்பிட்ட நேரத் தில் இந்த நாற்காலி நகர்ந்து கிருஷ்ணன் பாதாளத்தில்வீழ்வான். அப் பொழுது அங்கே ஆட்கள் நெருங்கி அவனை அடித்து, நொறுக்கிக் கொல்வார்கள். அத்தோடு கிருஷ்ணன் கதை முடிந்து போகும் என்று அவர்கள் திட்டமிட்டார்கள்.

உடனடியாக அரசசபையில் கிருஷ்ணன் உட்காருமிடத்தில் ஒரு சதுர வடிவான பள்ளம் தோண்ட வேண்டுமென்று அந்த பள்ளம் தோண்டியது வெளியே தெரியக்கூடாதென்றும் அவர்கள் கட்டளையிட் டார்கள் கிருஷ்ணன் கெட்டிக்காரன், மண்வாசனை வைத்து இங்கே



ஏதேனும் மாற்றம் நடந்திருக்கிறதா என்று கேட்பான். எனவே ஒரு மண் துகள் கூட விடக்கூடாது, ஒரு மண்வாசனையும் வரக்கூடாது, ஆனால் உடனடியாக கிட்டத்தட்ட பத்து ஆள் ஆழத்திற்கு ஒரு பள்ளம் தோண்ட வேண்டுமென்று சொன்னார்கள்.

நாற்காலியை அப்புறப்படுத்தினார்கள். தரையை இடித்தார்கள். ஆயிரக்கணக்கான ஆட்களை வரிசையாக நிற்கவைத்து மண்ணை கொத்தி எடுத்து வெளியே போட்டார்கள். வெளியே கொட்டிய மண்ணை பெண்களை வைத்து அப்புறப்படுத்தினார்கள். நிறைய பெண் களை விசிறிகள் கொடுத்து மண்வாசனையை வெளியே போகும்படி இடைவிடாது விசிறச் சொன்னார்கள்.

உண்ண உணவும், குடிக்க நீரும் கூட இன்றி அவர்கள் வேலை யாட்களை பிரம்பால் அடித்து வேலைவாங்கினார்கள். தளர்ந்தவர்களை கடுமையாக அடித்து தண்டித்தார்கள்.

கிழவர்களைக்கூட வயதுபாராமல் கன்னத்தில் அடித்து துன்புறுத்தினார்கள். பெருக்கு, பெருக்கு என்று எட்டி உதைத்தார்கள். விசிறுவதை நிறுத்தினால் பிய்த்து விடுவேன் என்று பிரம்பால் பின்னால் அடித்தார்கள்.

மிகப்பெரிய பள்ளம், ஆயிரக்கணக்கான வேலையாட்களால் அன்று விரைவாக தோண்டப்பட்டது.

கிருஷ்ணதுளசிக்கு மண்வாசனையை விசிறியால் வெளியே அனுப் பும் வேலை தரப்பட்டது.

துரியோதனன் வந்து சுற்றிப் பார்த்தான். தீப்பந்தத்தை வைத்து பள்ளம் எவ்வளவு ஆழமென்று எட்டிப் பார்த்தான். "தரை தெரிய வில்லையே, எங்கு தரை இருக்கிறது?" என்று கூர்மையாக் கண்களை இடுக்கிக்கொண்டு தேடினான்.

"யாரையாவது தள்ளினால்தான் தரை இருக்கின்ற இடம் தெரியும்" துச்சாதனன் சொல்ல துரியோதனன் சட்டென்று திரும்பினான்.

சற்று தொலைவே இருந்த கிருஷ்ணதுளசி அருகே போனான். வீசிக் கொண்டிருந்த விசிறியை பிடுங்கிப் போட்டான். தரதரவென்று இழுத்து வந்தான். கழுத்தைப் பிடித்து பள்ளத்தில் தள்ளினான்.

கிருஷ்ணதுளசி கால்கள் அகட்டி, தலைகீழாய் போய் புரண்டு பொதேலென்று பள்ளத்தில் விழுந்தாள். சேறு மேலே தெறித்தது. அதிர்ச்சியில் மயங்கினாள்.

அவள் உடையை வைத்துக்கொண்டு, வெண்ணிற தலைமுடியை அடையாளம் வைத்துக்கொண்டு பள்ளம் எவ்வளவு ஆழம் என்று துரியோதனன் புரிந்துகொண்டான்.

அவர்கள் வெளியேறினார்கள். மூங்கிலை வைத்து பள்ளத்தை மூடச் சொன்னார்கள். மேலே பாய் பரப்பச் சொன்னார்கள். பாய்மீது கம்பளம் விரித்தார்கள். கம்பளம் மீது ஆசனம் அமைத்தார்கள்.

கிருஷ்ணதுளசி கீழே மயங்கிக் கிடந்தாள். விழுந்த அதிர்ச்சியில் சுருண்டு கிடந்தாள். ஆனால் இதேபோல நேற்றும் இருந்தது. அவளுக்கு நினைவு நிதானமாய் திரும்பியது. அவள் உடலில் காயமில்லை. அவளால் எழுந்து உட்கார முடிந்தது. உணர்ச்சியற்ற கட்டை போல் கிடக்க அவளுக்குத் தெரிந்ததால் விழும்போதே உடம்பை கட்டையாக்கிக்

கொண்டாள். அதனால் காயம் ஏதும் படாமல் தப்பிக்க முடிந்தது.

கிருஷ்ணதுளசி சேற்றிலிருந்து தெளிந்த நீரெடுத்து இரண்டு கை குடித்தாள். ஒரு மூலையில் போய் அமர்ந்து கொண்டாள். கிருஷ்ண, கிருஷ்ணா, கிருஷ்ண கிருஷ்ணா, கிருஷ்ண கிருஷ்ணா என்று ஜபம் செய்யத் துவங்கினாள்.

விதுரருக்கு அவர் பள்ளத்தில் தள்ளப்பட்டது சொல்லப்பட்டது. திடுக்கிட்டு எழுந்தார். சட்டென்று அவர் மனதின் மூலையில் ஏதோ மின்னிற்று. அவள் அங்கேயே இருக்கட்டும் என்று யாரோ சொல்லியது போல் இருந்தது. அவர் அமைதியானார். கடவுள் காப்பாற்றுவார். கிருஷ்ணதுளசிக்கு ஒரு ஆபத்தும் நேராது. கவலைவேண்டாம். நீங்கள் போங்கள் என்று வந்தவர்களை ஆசுவாசப்படுத்தினார். கிருஷ்ண துளசிக்கு ஏதோ மிகப்பெரிய வரம் ஒன்று தரப்படப் போகிறது என்று தெரிந்து புன்னகை செய்தார்.

அசுவத்தாமனும் கிருஷ்ணரும் எதிரும் புதிருமாக உட்கார்ந்து பேசினார்கள். துரியோதனன், வெகுதூரத்தில் ஒளிந்து இருந்து அதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

துரியோதனன் தூரத்திலிருந்து பார்ப்பதை கிருஷ்ணர் உணர்ந்தார். தன் கையிலிருந்த மோதிரத்தை கீழே போட்டார். அசுவத்தாமன் குனிந்து அதை எடுத்துக் கொடுத்தான்.

"மேலே சந்திரன் எவ்வளவு அழகாக இருக்கிறான் பார்" என்று அசுவத்தாமனுக்குக் காட்டினார்.

அசுவத்தாமன் மேலே பார்த்துவிட்டு அது என்ன நட்சத்திரம் என்று அருகே இருக்கும் நட்சத்திரத்தைக் கேட்டு கையிலிருந்த மோதிரத்தை கிருஷ்ணரிடம் கொடுத்தான்.

தொலைவிலிருந்து பார்த்த துரியோதனனுக்கு பூமியின் மீதும் வானத்தின்மீதும் சத்தியம் செய்து நான் உனக்கு ஆதரவாக இருக்கிறேன் என்று கையடித்து அசுவத்தாமன் சொல்கிறான் என்பதாய் பட்டது. அவன் அசுவத்தாமனை நம்பக்கூடாது என்று தீர்மானித்தான்.

அழிவு வரும்போது புத்தி விபரீதமாகத்தான் யோசிக்கும் என்பதற்கு துரியோதனன் சாட்சியாக இருந்தான்.

இப்படியாக நண்பர்களைத் தன்னிடமிருந்து பிரிக்கும் கிருஷ்ணரைக் கொன்றே தீர வேண்டுமென்று உறுதியானான்:

மறுநாள் நைச்சியமாகப் பேசி கிருஷ்ணரை வரவழைத்தான். கிருஷ்ணர் அரண்மனைக்குள் கால் வைத்ததும் சகலமும் தெரிந்து கொண்டார். பள்ளம் உணர்ந்தார். பள்ளத்தின் அடியிலிருக்கும் பெண்ணையும் உணர்ந்தார்.

பேசப்பேச வசனங்கள் சூடாகி வார்த்தைகள் தடித்தன. கிருஷ்ணர் எச்சரித்தார்.

"உன்னுடைய துடுக்குத்தனமான வார்த்தைகளை வைத்தே நான் உன்னைத் தண்டிக்கலாம். அவ்விதம் செய்வதற்கு நான் விரும்பவில்லை. உன்னுடைய முடிவு பீமனின் கையால்தான் ஏற்பட வேண்டும். நீ மட்டும் மடிந்தால் போதாது. உன் க்ஷத்திரியகுலத்தில் பல தலைகள் உருள வேண்டும். உன்னை இப்போது கொல்லாமல் விடுகிறேன். நீ கூட்டத்



முல்லை



தீபாவளி திருநாளில்
உங்கள் கைகளில்
நமது இதயம் கவர்ந்த அவதார எழுத்தாளர்
பாலகுமாரன்
எழுதும்
"குங்குமத்தேர்"

தோடு அழியப்போகிறாய். அழிகின்ற இடத்துக்கு அந்த அகம்பாவத்திற்கு உன் கூட்டம் வெகுநாள் முன்பே வந்துவிட்டது. துரியோதனா, அடிக்கடி இடதுகை பக்கம் கைநீட்டியும் இடதுபக்கம் சாய்ந்தும் இடது பக்கம் திரும்பியும் பேசுகிறவன் விபரீதமான போக்குகளைக் கொண்டவன். அவனால் அமைதியாக தூங்க முடியாது. ஆரோக்கியமாக வாழமுடியாது. உன் மூச்சுக்காற்று தவறான திசையில் போய்க்கொண்டிருக்கிறது. இது விரைவில் உனக்கு மரணத்தைக் கொண்டு வந்து தரும்" என்று கிருஷ்ணர் உரத்து சொன்னார்.

தூதுவன் என்கிற முறையில் கெஞ்சி கேட்கிறேன், ஏதேனும் பாண்டவர்களுக்குக் கொடு என்று கைகூப்பினார்.

கடவுள் கை கூப்பி கேட்பதை அங்குள்ள எல்லா வேலை யாட்களும் பார்த்தார்கள். விதுரரும் பார்த்தார். கண்ணீர்விட்டு அழுதார்.

கர்ணன் கூட சற்று மனம் கலங்கினான். பீஷ்மர் பதைபதைத்து. பேச்சு வரவொண்ணாது நாக்கு ஒட்டி உலர்ந்து கிடந்தார். துரோணர் பதிலுக்கு கை கூப்பினார். அசுவத்தாமன் கைகட்டி தலைகுனிந்து கொண் டான்.

துரியோதனன் மட்டும் பாம்பு போல சீறி முடியாது என்று அவரை நோக்கி கர்ஜித்தான். தரையில் கால் உதைத்தான். தொடை தட்டினான். மார்பு தட்டினான். சிங்கம் போல பிளிறினான். அவர் முன்பு கர்ஜனை செய்து முஷ்டி மடித்து பலம் காட்டினான்.

"இடையனே, அந்த பெட்டைகளைப் போருக்கு வரச்சொல். அங்கு அவர்களை ஒரு கை பார்க்கிறேன். இங்கு வீண்பேச்சு பேசாதே" என்று உரத்து சொன்னான்.

"சரி. அப்போது போர்தான் முடிவு என்று நீயே சொல்லிவிட்டாய். யுத்தகளத்தில் சந்திப்போம்" என்று கிருஷ்ணன் எழுந்திருக்க சகுனி சைகை செய்ய துச்சாதனன் கம்பைப் பிடுங்கினான்.

மூடிய பள்ளம் திறந்து கொண்டது. சிம்மாசனம் கீழிறங்கியது.

கிருஷ்ணர் புரிந்துகொண்டார். கோபமானார். கால் ஊன்றி மிகப் பெரிய விஸ்வரூபம் எடுத்தார். வானம் நடுங்கியது. பூமி குலுங்கியது.

கிருஷ்ணதுளசி கீழே அமர்ந்துகொண்டு ஜெபித்துக் கொண்டிருந் தாள். ஒரு நிலநடுக்கம் உணர்ந்தாள். கண்திறந்தாள். அவள் எதிரே அவள் உயரத்தை விட அதிகமான ஒரு கால் கட்டை விரல் தெரிந்தது. நீல வண்ணமான அந்தக் கட்டைவிரல் கிருஷ்ணனுடையது என்று மனம் சொல்லியது. அவள் எக்கி அந்தக் கால் கட்டைவிரலைத் தழுவிக்கொண் டாள். 'கிருஷ்ணா, கிருஷ்ணா, கிருஷ்ணா என்று அலறினாள். முத்தமிட் டாள். பற்றி ஏற முயற்சித்தாள். கூர்ந்து பார்த்தாள். வெகு உயரே, வெகு உயரே மயிற்பீலி தெரிந்தது. கண்ணைப் பறிக்கும் ஒளியுடனூடே மரகதமணி தெரிந்தது.

வானம் முழுவதும் நீலமயம் போல் நீல உடம்பு தெரிந்தது. அந்த நீலத்தைச் சுற்றியுள்ள மேகம் போல மஞ்சள் ஆடை தெரிந்தது. மிகப் பெரிய சங்கநாதம் காதில் கேட்டது. பேரியங்கள் முழங்கின. காண்டா மணி ஒலித்தது. சகல சக்கரங்களும் அவளுக்குள் பொங்கிப் பிரவாகமாய் மிக உச்சகட்டத்தில் சுழல அவள் வாய்விட்டலறினாள். கை உயர்த்தி



கால் அகட்டி உயரே பார்த்து கிருஷ்ணா என்று கதறினாள். அரசவை பார்த்த விஸ்வரூப தரிசனத்தை அந்தக்கிழவியும் பார்த்தாள். வெகு அருகே பார்த்தாள். விக்கி விக்கி அழுதாள். கடவுள் என்கிற விஷயம் அவளுக்குள் ஊடுருவி அவளை மெய்மறக்கச் செய்தது. நெஞ்சில் தங்கி யது. ஆத்மாவில் கரைந்தது.

"உன்னை நான் சாதாரணமாகப் பார்க்கக்கூடாது என்று முதல் சந்திப்பிலேயே விஸ்வரூபத்தோடு காண வந்துவிட்டாயா. எனக்கு வெறுமே தரிசனம் தரக்கூடாது என்று நினைத்து அடிமுடி தெரியாத ஆண்டவனாக எனக்குக் காட்சி கொடுத்திருக்கிறாயா, கிருஷ்ணா, நீ குழலூதுவாய். பாட்டுப் பாடுவாய், வேலை இழுத்து ஆடுவாய், ஆடு மேய்ப்பாய், வெண்ணை தின்பாய், தயிர் குடிப்பாய் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர இப்படி ஒரு உயரத்தில் இருப்பாய் என்று நான் கேள்விப்பட்டதில்லையே. இவ்விதம் யாரும் எனக்கு சொல்லவில்லையே."

கடவுள் என்றால் இப்படி எல்லாம் கடந்த ஒரு உருவம் என்பது எனக்குத் தெரியவில்லையே. கண்ணா...இதுவா நீ...இதுவா நீ" என்று கதறினாள்.

வெளியே உள்ள அனைவரும் பயந்தார்கள். கண் சுருக்கிக் கொண் டார்கள். ஒளியும் ஒலியும் தாங்காமல் உடம்பைச் சுருக்கிக் கொண் டார்கள்.

துரியோதனன் பயந்துபோய் காதுபொத்திக் கொண்டான். கண் மூடிக்கொண்டான். கர்ணன் சிறிதளவு கண்விழித்து அந்த விஸ்வ ரூபத்தைப் பார்த்தான். கண்ணில்லாத திருதராஷ்டிரனுக்கும் அந்த காட்சி கிடைத்தது. காந்தாரியும் பார்த்தாள்.

மற்ற எல்லா வேலைக்காரர்களும் துரோணரும், பீஷ்மரும், விதுர ரும் இன்னும் பிறரும் பரர்த்தார்கள். கைகூப்பினார்கள். அழுதார்கள். கடவுள் பஞ்சபாண்டவர்கள் பக்கம் என்பதை தெளிவாக உணர்ந்து கொண்டார்கள்.

"கிருஷ்ணா, உன்னை கோபியர்கள் பார்த்தவண்ணம் நான் பார்க்க வேண்டாமா. உனக்காக துளசி வளர்த்து வைத்திருக்கிறேன்...உனக்காக பூக்கள் பறித்து வைத்திருக்கிறேன். உனக்காக பழத்தோட்டம் செய்திருக் கிறேனே. உனக்காக காய்கள் பயிரிட்டிருக்கிறேனே. இதெல்லாம் உனக்கு வேண்டாமா. நீ சாதாரணமாக என் முன் வரமாட்டாயா. இவ்வளவு பெரிய விஸ்வரூபத்தைக் காட்டியிருக்கிறாயேகண்ணா. நான் உன்னைப் புரிந்துகொண்டேன். ஆனாலும் இன்னும் புரியும் வண்ணம் எளிமையாக வரக்கூடாதா?"

கிழவி கெஞ்ச கிருஷ்ணர் சாதாரணமானார். பள்ளத்தின் அடியில ஆறடி உயர ஆஜானுபாகு அழகனாக நின்றார்.

சுவரில் சாய்ந்து கிடக்கும் கிருஷ்ண துளசியை அருகே அழைத்து முகவாய் நிமிர்த்தி நெற்றியில் முத்தமிட்டார். ஆரத் தழுவிக் கொண்டார். "இதுவும் நானே" என்றார்.

கிருஷ்ணதுளசி விம்மி அழுதாள் தழுவிக்கொண்டாள். காலில்

முகம் புதைத்தாள். முழங்காலில் முத்தமிட்டாள். எழுந்து வயிறில் முகம் பதித்தாள். மார்புற தழுவிக்கொண்டாள். கன்னத்தோடு கன்னம் இழைத்தாள். கழுத்தைக் கட்டிக்கொண்டு விம்மினாள். இதுபோதும் இதுபோதும் என்றாள்.

கீழே ஏணி இறங்கியது. கிருஷ்ணர் ஏணியில் கால் வைத்து மேலேறினார். வா என்று அவளை நோக்கி கைநீட்டினார்.

'வேண்டாம். எனக்கு நீ என்ன கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுத்துவிட்டாய். நான் என்ன பெறவேண்டுமோ அதைப் பெற்றுவிட்டேன். இனி மேலே வந்து என்ன செய்யப்போகிறேன். இங்கேயே இருந்து விடுகிறேன். உன்னைப் பார்த்துவிட்டேன். உன் விஸ்வரூப தரிசனத்தை உன் அருகே நின்று உன் கட்டைவிரல் தழுவி பார்த்து விட்டேன். இந்த பாக்கியம் வேறு எவருக்கும் கிடைக்கவில்லை. இந்த வேலைக்காரிக்கு கிடைத்திருக்கிறது. இந்த கிருஷ்ணதுளசிக்கு கிடைத்திருக்கிறது. கிருஷ்ணா, மிக்க நன்றி. நான் மேலே வந்து வேறு எதையும் பார்க்க விரும்பவில்லை. உன்னைப் பார்த்த கண்கள் வேறு எதுவும் பார்க்காமல் இங்கேயே இருக்கட்டும். நீ போய் மண்சரித்து விடு. அது போதும்" என்றாள்.

கிருஷ்ணர் மேலேறினார். திரும்பி அந்த பள்ளம் பார்த்தார். பள்ளத்தை மூடச்சொல்கிறார் என்று நினைத்து அங்குள்ள வேலைக்காரர்கள் அவசரம் அவசரமாய் பள்ளத்தை மண்ணால் நிரப்பினார்கள்.

கீழே கிருஷ்ணதுளசி சம்மணமிட்டு அமர்ந்து கொண்டிருந்தாள். கிருஷ்ணா, கிருஷ்ணா, கிருஷ்ணா என்று ஜபித்துக் கொண்டிருந்தாள்.

அந்த இடம் மூடப்பட்டது. பாறைகள் அடுக்கப்பட்டன. கிருஷ்ண துளசி உள்ளே வேறு ஒரு தவத்தில் ஆழ்ந்து ஈடுபட்டாள்.

விதுரர் அவளை நோக்கி கைகூப்பினார். கிருஷ்ணரைப் பார்த்தார். கிருஷ்ணர் விதுரரைப் பார்த்தார்.

விதுரர் மெல்ல அரண்மனை விட்டு வெளியேறினார். தன் வீட்டிற்கு போனார். வீடு சுற்றி நடந்தார். கிருஷ்ணதுளசியை நினைத்துக் கொண்டார்.

மெல்ல ஹஸ்தினாபுரத்தை விட்டு தெற்கு நோக்கி தீர்த்த யாத்திரைக்காக நடக்கத் துவங்கினார்.

அந்த தனியான, திருமணமாகாத வேலைக்காரியின் மகனாகிய விதுரரின் அரசவாழ்க்கை அத்தோடு முடிந்து போயிற்று. அந்த வீடு மட்டும் கடவுள் வீடாய் வெகு காலம் இருந்தது. பிறகு கோயிலாயிற்று.

அந்தக்கோயில் மட்டுமல்ல. எல்லா கோயிலிலும், கிருஷ்ணர் இருக்கின்ற எல்லா இடங்களிலும் கிருஷ்ணதுளசியும் இருப்பாள். ஒரு மூலையில் வேலைக்காரியைப் போல் அமைதியாய் நின்று கிருஷ்ண ஜபம் செய்து கொண்டிருப்பாள்.

கிருஷ்ணதுளசியைப் பார்த்து பக்தி செய்வதன் பலம் தெரிந்து கொண்டு விதுரர், தன் மனதை பக்திமயமாக பற்றினார். இடையறாது மனதுள் கிருஷ்ண தரிசனம் கண்டு களித்து வனத்தில் திரிந்துகொண்




## COOKING MADE EASY

சமையல் நாயகி **திருமதி மல்லிகா பத்ரிநாத்** எழுதிய

கீழ்க்கண்ட சமையல் புத்தகங்கள் ( தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ) கிடைக்கும்.

| | |
|---|---|
| 200 வகை அறுசுவை மதிய உணவு | - ரூ.70/- |
| 200 இன்சுவை இனிப்புகள் | - ரூ.80/- |
| 100 டிபன் வகைகள் | - ரூ.45/- |
| 100 சுவையான சிற்றுண்டிகள் | - ரூ.45/- |
| 100 பிரியாணி கலவை சாதங்கள் | - ரூ.45/- |
| 100 மசாலா குருமா வகைகள் | - ரூ.45/- |
| 100 வகை மிக்சர் முறுக்குகள் | - ரூ.45/- |
| 100 சூப்பு, குளிர்பானங்கள் | - ரூ.45/- |

**திருமதி ரமணிசந்திரன்** எழுதிய

73 நாவல்களும் ராணி சமையல் (ரூ.50/-) மற்றும் அசைவ சமையல் (ரூ.30/-) புத்தகங்களும் கிடைக்கும்.

சீரடி சாய்பாபாவின் ஸ்ரீ சாய்சத்சரிதம், சுப்ரபாதம், நாமாவளிகள் புத்தகங்களும், கேசட்டுகளும் கிடைக்கும்.

பாண்டிச்சேரி அன்னை, விவேகானந்தர், ரமண மகரிஷி புத்தகங்கள் மற்றும் வீட்டில் பூஜைக்கு உதவும் எல்லா ஆன்மீக புத்தகங்களும், கேசட்டுகளும் கிடைக்கும்.

புத்தகங்களை கூரியர் / VPP மூலம் அனுப்பலாம். அனுப்பும் செலவு தனி.

**கார்த்திக் புத்தக நிலையம்**

**(KARTHIC BOOK SHOPPE)**

50, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை - 600 004.

போன் : 4958186


டிருந்தார்.

பக்தியால் ஏற்பட்ட சக்தியையும் தருமரிடம் கொடுத்து வந்தவிதமாகவே பூமிவிட்டு ஸ்வர்க்கம் போனார். விதுரநீதியை தருமபுத்திரர் தன் வாழ்க்கையாக்கினார். தன் தேசத்து வேதமாக்கினார்.

(முற்றும்)

**இந்த கதை எழுத உதவிய நூல்கள்: தெய்வத்திரு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் எழுதிய மகாபாரதம், சொல்லின் செல்வன் P.N.பரசுராமன் எழுதிய விதுர நீதி, சுவாமி சித்பவானந்தர் எழுதிய மகாபாரதம்.**

பிலிமாலயா அச்சகத்தில் அச்சிட்டு, 63, மல்லன் பொன்னப்ப தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005
என்ற முகவரியிலிருந்து வெளியிடுபவரும், ஆசிரியரும் நா.மனோகரன்.
தொலைபேசி : 8594742 ஃபேக்ஸ் : 91-044-8594561 P.B.No: 411.